Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.



©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 26-10-2012 Issued : 26-10-2012

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 23, 2012—தொகுதி 26—எண் 2

Monday the 23rd April, 2012—Volume 26—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

23–4–2012

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. இரங்கற்குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு 503-504

2. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 504-545

3. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 546-547

4. அறிக்கைகள் அளித்தல்—

மனுக்கள் குழு 547

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி* 547-706

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

* மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 548,560-566
570,574,575
587,590-594
596,598,615
621-624,
626-628
631-632,
635,638 639,
642, 644-650
679-703

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

பக்கங்கள்

(அ) கோரிக்கை எண் *12*—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் *13*—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

*மாண்புமிகு திரு. இரா. காமராஜ்	553,561,567, 571-572, 585,586,588, 589,594,595, 617-620 636,637, 643, 662-679
திரு. ஆர். சுந்தர்ராஜன்	561-562 564-566 569-577
*மாண்புமிகு திரு. செ. தாமோதரன்	567
மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி	568, 569 572, 573
திரு. வி.சி. சந்திரகுமார்	548,553, 568,569
*மாண்புமிகு திரு கே. செங்கோட்டையன்	569, 639
மாண்புமிகு திருமதி பா. வளர்மதி	574,575
*திரு. எம். ரெங்கசாமி	577-584
*திரு. ஆர். ராமமூர்த்தி	584-592 594-598
செல்வி கே. பாலபாரதி	559, 592

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

திரு. சு. குணசேகரன்	593,701-702
*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	596-597 632-634 644, 674 703-704,
திரு. இரா. குமரகுரு	599-614
*திரு. டி. இராமச்சந்திரன்	614-616 618-624
*திரு. பி.வி. கதிரவன்	624-630
*திரு. க. பாலகிருஷ்ணன்	630, 648
*திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	551-552,554, 634-638,640
திரு. ம. குணசேகரன்	639-640
மாண்புமிகு திருமதி எஸ்.கோகுல இந்திரா	640,654
திரு. எல். வெங்கடேசன்	551, 559 641-647, 649-651
*திருமதி எல். ஜெயசுதா	651-657
*திரு. க. பாண்டியராஜன்	552, 560 654,702
*திரு. கே. பொன்னுசாமி	658-662
திரு. எம். ஆறுமுகம்	549-550 556,701

பக்கங்கள்

6. அறிவிப்பு—

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல் 658

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 706-707

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 11,

2012 ஏப்ரல் 23, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி.** ஜெயக்குமார் *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
> *எழுவாரை எல்லாம் பொறுத்து."*

உணவுப் பொருட்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல உறுதுணையாக உள்ளனர்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. மா.வெ. நாராயணசாமி அவர்கள் 20–4–2012 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. மா.வெ. நாராயணசாமி அவர்கள் 1971 முதல் 1976 வரை திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 23

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

தனி வட்டாட்சியர் அலுவலகம்

***6134 திரு. எஸ். அப்துல் ரஹீம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகராட்சிப் பகுதியில் தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.*

திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தருகின்ற விதமாக இன்றைக்கு பல்வேறு திட்டங்களை வாரி வழங்கி, மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன்.*

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடிக்கு புதிதாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் வேண்டும் என்ற கோரிக்கை இன்றைக்கு இந்த வினாக்கள்–விடைகளிலே வந்திருக்கின்றது. சுமார் 3 இலட்சத்து 12 ஆயிரம் வாக்காளர்களைப் பெற்று, 4 இலட்சத்து 63 ஆயிரம் பொதுமக்கள் வசிக்கின்ற ஆவடி தொகுதி தனித் தொகுதியாக இப்போதுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் பூந்தமல்லி தொகுதியில் இருந்த ஆவடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் இரண்டு வட்டங்களாக, ஒன்று, அம்பத்தூர் வட்டமாகவும், இன்னொன்று பூந்தமல்லி வட்டமாகவும் இருக்கின்றன. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்களின் நலன் கருதி, வாக்காளர்கள் அதிகமாகக் கொண்ட இந்த ஆவடி தொகுதிக்கு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் என்று உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு குறைந்தபட்சம் 250 சதுர கிலோ மீட்டர் வேண்டும். அதிகபட்சமாக 2 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் வேண்டும். அதைப்போல, குறைந்தபட்சம் 30 வருவாய் கிராமங்கள் தேவை. அதைப்போல குறைந்தபட்சம் 1 இலட்சமும், அதிகபட்சமாக 5 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள்தொகையும் இருக்க வேண்டும். ஆனால் ஆவடி வட்டத்தைப் பொறுத்தவரையிலும் பரப்பளவு 85 சதுர கிலோ மீட்டர் மட்டும்தான் இருக்கிறது. வருவாய் கிராமங்கள் 22 மட்டும்தான் இருக்கின்றன. மக்கள் தொகை 3 இலட்சத்து 76 ஆயிரத்து 910 பேர் இருக்கிறார்கள். ஆகவேதான் தற்பொழுது அதற்கு வாய்ப்பில்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதிலே வைத்து, 4 இலட்சத்திற்கு மேலே இருக்கின்ற சில பகுதிகள் இருக்கின்றன என்பதை மனதிலே கொண்டு, மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பூந்தமல்லி வட்டத்தைப் பிரிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.

திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது அரக்கோணம் தொகுதி தனித் தொகுதியாகும். இத்தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்கள் சுமார் 2 இலட்சம் பேருக்கு மேல் வசித்து வருகிறார்கள்.

அரக்கோணம் தொகுதியில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் தனி வட்டாட்சியரிடம் மனு கொடுக்க வேண்டுமென்றால் 50 கிலோ மீட்டர் தூரம் உள்ள வாலாஜாவிற்குச் சென்று மனு கொடுக்க வேண்டிய நிலை இருக்கின்றது. அரக்கோணம் தொகுதியிலே சுமார் 61 வருவாய்க் கிராமங்களும், நகராட்சியும், பேரூராட்சிகளெல்லாம் இருக்கின்றன. எனவே, தாயுள்ளங்கொண்ட அம்மா அவர்களுடைய அரசிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் கருதி, அரக்கோணத்தில் ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அரக்கோணத்திலிருக்கின்ற வாலாஜாவிற்குச் சென்று வர வேண்டியிருக்கிறது; 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது; ஆகவே, ஏழையெளிய மக்கள் அங்கே சென்று வருவது அவ்வளவு சுலபமான காரியமில்லை என்று குறிப்பிட்டார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் துறை ஆய்வு

2012 ஏப்ரல் 23]

நடைபெறுகிறபோது, எந்தெந்தப் பகுதிகள் தொலைதூரமாக இருக்கின்றன; மக்கட்தொகை எப்படியிருக்கிறது என்பதை ஆய்வு செய்யவேண்டுமென்று இந்தத் துறையைப் பணித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.

திரு. கே.பி. கந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிகப் பெரிய தொகுதி சோழிங்கநல்லூர் தொகுதி. அதற்கு இடம் ஒதுக்கப்பட்டு, பணமும் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியாக ஒதுக்கப்பட்ட இடத்தில் எப்போது கட்டடம் கட்டித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தொகை ஒதுக்கிய உடனேயே, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். மதிப்பீடுகள் தயாரித்து டெண்டர்கள் வைத்ததற்குப் பிறகு, அந்தப் பணிகள் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழுதடைந்து அடிப்படை வசதிகள் இல்லாமல் இயங்கி வருகிறது. அதற்கு ஒரு புதிய கட்டடம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே 100 ஆண்டுக் காலமாக வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன.

[2012 ஏப்ரல் 23

நிதிநிலைக்கேற்ப ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்தையும் புதிதாகப் பொலிவோடு கட்டித் தருவதற்கு மனித நேயமிக்கத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டில் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2009 ஆம் ஆண்டு ஆம்பூர் தாலுகா புதியதாக உருவாக்கப்பட்டது. அரசு மருத்துவமனைக்குச் சொந்தமான ஒரு பழைய கட்டடத்தில் தாலுகா அலுவலகம் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் தற்போது இயங்கி வருகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கி வருகிற இடம் அரசு சுகாதார நிலையத்திற்கு உட்பட்டிருக்கிற இடம் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வருவாய்த் துறை மூலமாக, நத்தம் நிலம் ஏதாவது மையத்திலே இருக்குமேயானால், எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், முதலிலே நிலத்தை ஆர்ஜிதம் செய்து முடித்து விடுகிறோம். அதற்குப் பிறகு புதிதாக அந்த இடத்தில் அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு ஆய்வில் எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியினுடைய, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியப் பகுதிக்குட்பட்ட வருவாய்க் கிராமங்கள் அனைத்தும் கடந்த முறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பெருந்துறை வட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தன.

2012 ஏப்ரல் 23]

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வருவாய்க் கிராமங்கள் அனைத்தும் பிரிக்கப்பட்டு, அவினாசி வட்டத்தோடு இணைக்கப்பட்டுவிட்டன. ஊத்துக்குளி பகுதியின் கடைக்கோடியிலிருந்து செல்பவர்கள் 50 கிலோ மீட்டர் தொலைதூரத்திற்கு, அந்தப் பகுதிகளுக்குச் சென்று தங்களுடைய பணிகளைப் பார்க்கக்கூடிய இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மண்ணைச் சார்ந்தவர்; அவருக்கு நன்றாக இதைப் பற்றி தெரியும். ஆகவே, அந்த வரைமுறைகளைப் பொறுத்தவரை, அதாவது அதனுடைய பரப்பளவு, மக்கட்தொகை, வருவாய்க் கிராமங்கள் அனைத்தும் விதிகளுக்குட்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, ஒன்று ஊத்துக்குளி பகுதியினை பெருந்துறை வட்டத்தோடு இணைக்க வேண்டும் அல்லது ஊத்துக்குளி பகுதியைப் பொறுத்தவரை, ஒரு தனி வட்டம் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலிருந்த ஊத்துக்குளி பகுதி இப்போது திருப்பூர் மாவட்டத்திலே இணைக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும் அவினாசிக்கு சென்றுவரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் அறிவேன். 'இறைவனிடத்திலே கையேந்துங்கள், அவர் இல்லையென்று சொல்லுவதில்லை' என்று குறிப்பிடுவதைப்போல, நீங்கள் அன்றைக்கு கோரிக்கை வைத்த உடனேயே, அம்மா அவர்கள் பெருந்துறையில் தொழிற்கல்வியை உருவாக்குவதற்கு அனுமதி தந்தார்கள். அதைப்போல உங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் செல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 23

142—

மின் கட்டணப் பிரிவு

***2363—திரு. ப. மோகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் மின் கட்டணப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் புதிய மின் கட்டண அலுவலகம் தொடங்குவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை சிறிது சீரானவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலைப் பகுதியில் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கும், மின்சாரத்தில் ஏற்படுகிற குறைகளைத் தெரிவிப்பதற்கும் துறையினுடைய அலுவலர்களைச் சந்திக்க வேண்டும் என்றால் சுமார் 30 கிலோ மீட்டர் சென்றால்தான் அதிகாரிகளைப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, கல்வராயன் மலைப் பகுதி, வெள்ளிமலையில் ஒரு மின் பிரிவு அலுவலகத்தை அம்மா அவர்களுடைய அரசு அமைத்திட வேண்டும் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு மின் கட்டணப் பிரிவு அலுவலகத்தைத் தொடங்க வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதலாக செலவு ஏற்படும். தொடர் செலவினம் மற்றும் தொடரா செலவினம் என்று அந்தச் செலவு அதிகமாக உள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால், ஒரு புதிய அலுவலகம் அமைக்கப்படுகின்றபொழுது அதற்குரிய கட்டமைப்பு வசதிகள் மட்டுமல்லாமல், அங்கே தேவையான பணியாளர்களையும், புதிய பதவிப் பொறுப்புகளையும் நாம் உருவாக்க வேண்டும். புதிய பதவிப் பொறுப்புகளை உருவாக்குகிறபோது அதற்கும் தொடர் செலவினம் ஏற்படுகிறது. இப்பொழுது நான் சொல்கின்றபொழுதுகூட 'தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை சிறிது சீரானவுடன்' என்றுதான் சொல்லியிருக்கிறேன். முழுவதும் சீரானவுடன் என்று சொல்லவில்லை. ஓரளவு சீரானவுடன்கூட அதைச் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கின்றேன். இருந்தாலும்கூட அந்தப் பகுதியிலே நமது மாண்புமிகு கொறடா அவர்களுடைய வேண்டுகோளின்படி அந்தப் பகுதி மலைப் பகுதியாக இருப்பதாலும், 30 கிலோ மீட்டர் தூரம் சென்று வரக்கூடிய அதிகபட்ச தூரம் இருப்பதால், மலைப் பகுதி என்பதால் அதிலே விதிவிலக்கு அளித்து அந்தப் பகுதிக்குச் சிறப்பு முன்னுரிமை கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதல் பெற்று, அந்தப் பகுதியிலே புதியதாக மின் கட்டண அலுவலகம் அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதியிலே அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அங்கே மின் கட்டண அலுவலகம் அமைக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட திருவெறும்பூர் பகுதியினுடைய மின்சார வாரிய அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கட்டட உரிமையாளர் கட்டடத்தைக் காலி செய்யக் கோரியுள்ளார். ஏற்கெனவே, கூத்தைப்பார் பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பேரூராட்சி சமுதாயக் கூடம் மின் வாரிய அலுவலகத்திற்காக வழங்கப்பட்டது. ஆனால், கடந்த ஓராண்டுக் காலமாக டி.வி. பெட்டிகள் உள்ளே வைக்கப்பட்டு, கட்டடம் சீல் வைக்கப்பட்டுள்ளது. எனவே மின்சார வாரியத்தினுடைய அலுவலகம் அந்தக் கட்டடத்தில் இயங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மின்சார வாரிய பிரிவு அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை தற்போது மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதால், அந்த நிதிநிலைமை ஓரளவு சீரடைந்தவுடன், படிப்படியாக வாடகைக் கட்டடத்திலே இயங்குகிற அனைத்து அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நிதி நிலைமைக்கு ஏற்ப அவர்களுடைய தொகுதியிலும் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற மின்சார வாரிய பிரிவு அலுவலகத்திற்கு கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான கேள்வி. மின் கட்டணம் இரண்டு

2012 ஏப்ரல் 23]

மாதங்களுக்கு ஒரு முறை வசூலிக்கப்படுகிறது. அதை மாதம் ஒரு முறை வசூலிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணத்தை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கட்டுவதற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டு இருக்கிறது. மாதந்தோறும் கட்டுவதிலே பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளும், பணியாளர் பற்றாக்குறைப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை என்ற முறை இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிறது. இதற்குப் பெரிய அளவிலே பொதுமக்கள் மத்தியிலே பாதிப்பும், எதிர்ப்பும் வரவில்லை. ஆகவே, இப்பொழுது தொடர்ந்து கொண்டிருக்கின்ற கட்டணம் வசூலிக்கின்ற நடைமுறையே தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண வசூல் முறையில், இப்பொழுது ஒரு சிறு மாற்றம் செய்திருக்கின்றார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, 15 ஆம் தேதி என்று ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே எல்லோரும் 15 ஆம் தேதி மின் கட்டணம் கட்டிவிடுவார்கள். அப்படி காலக்கெடு மீறினால், அபராதம் கட்ட வேண்டும். ஆனால், இப்போது என்ன செய்கிறார்கள் என்றால் எப்போது அங்கே ரீடிங் எடுக்கின்றார்களோ, அதிலிருந்து 10 நாட்கள் என்று குறிப்பிட்டு சொல்லிவிட்டு போய்விடுகிறார்கள். பல இடங்களில் அவர்கள் ரீடிங் எடுக்கின்ற நாளே பலருக்கும் தெரிவது இல்லை. கிட்டதட்ட நூற்றுக்கு 90 சதவிகிதம் பேர் அபராதத்தோடு இன்றைக்கு மின் கட்டணத்தைக் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே பழைய முறையிலேயே, 15 ஆம் தேதி என்ற ஒரு இலக்கை நிர்ணயித்து, அதற்குள்ளாக

கட்ட வேண்டும் என்ற காலக்கெடுவை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னும் ஒரு கேள்வி. மின் கட்டணம் கட்டுவது கணினிமயமாக்கப்பட்டு, தமிழகத்தில் எந்த மூலையிலிருந்தும் யாரும் மின் கட்டணத்தைக் கட்டலாம் என்ற ஒரு வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் கட்டுவதற்கு பல்வேறு முறைகளை இப்பொழுது நமது தமிழ்நாடு மின்சார வாரியம் அனுமதித்து இருக்கிறது. அந்தவகையிலே அனுமதிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலமாக மின் கட்டணத்தைச் செலுத்தலாம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய முறையிலே 15 ஆம் தேதி என்று குறிப்பிட்டிருந்தது என்று சொன்னார்கள். அந்த முறையிலே பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக, அந்த முறையை மாற்றி அமைத்து சீரமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தற்போது உள்ள முறை கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதிலே ஒரு சிரமமும் இல்லை. ஏனென்று சொன்னால், அந்த இடத்திலே இருக்கின்ற கணக்கீட்டாளர் வந்து கணக்கெடுத்தவுடன் அதிலிருந்து 15 நாட்கள் என்று சொல்கிறார். ஆகவே, முதல் மாதத்தில் மட்டும்தான் 10 நாட்கள். முதல் முறை கணக்கெடுக்கின்றபோதுதான் அந்தக் குழப்பம் ஏற்பட்டது. ஆனால், அதற்குப் பின் தொடர்ந்து ஒவ்வொரு முறையும் எந்தத் தேதியிலே கணக்கெடுத்தார்களோ அதே தேதியில்தான் தொடர்ந்து கணக்கீட்டாளர் கணக்கெடுக்கின்றார். ஆகவே, ஒவ்வொரு மின் இணைப்பாளருக்கும் ஒரே தேதி வராதே தவிர, ஒவ்வொரு முறையும் எந்தத் தேதியில் கட்டவேண்டும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, இதில் எந்தவிதக் குழப்பமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வில்லுக்குறி பகுதியிலே ஒரு மின் கட்டண அலுவலகம் கட்டித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன சொல்கின்றார் என்பது கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உங்களுக்குள்ளேயே பேசிக் கொள்ளாதீர்கள். எங்களுக்குக் காதில் கேட்கின்ற மாதிரி பேசுங்கள். உங்களுடைய கேள்வியை repeat செய்யுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வில்லுக்குறி பகுதியிலே ஒரு மின் கட்டண அலுவலகம் கட்டித் தர மூன்வருவீர்களா என்பதோடு, மின் கட்டணம் கட்ட 15 ஆம் தேதி என்று குறிப்பிடுகின்றீர்கள். மின் கட்டணம் கட்டுகின்றபோது system கோளாறு காரணமாக கட்ட முடியாமல் போய்விடுகின்றது. அதற்கும் fine கட்ட வேண்டுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மின் கட்டண அலுவலகம் கட்டுவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின், நிதிநிலைக்கு ஏற்ப கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 ஏப்ரல் 23

மின் கூட்டணம் செலுத்துவதில் இப்போது பின்பற்றக்கூடிய முறையில் எந்தக் குழப்பமும் இல்லை என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையானது கிட்டதிட்ட 6 மாத காலமாக முறைப்படி, சீராக சென்றுகொண்டிருக்கின்றது. முதல் முறையாக எந்தத் தேதியில் கணக்கெடுக்கின்றார்கள் என்பது ஒவ்வொரு பயனீட்டாளருக்கும் நன்றாகத் தெரியும். உதாரணத்திற்காக, இந்த மாதம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வீட்டிலே 10 ஆம் தேதி கணக்கெடுக்கின்றார்கள் என்றால் ஒவ்வொரு முறையும் அப்படித்தான் கணக்கெடுப்பார்கள். இன்னும் ஒரு பயனீட்டாளருக்கு 20 ஆம் தேதி கணக்கெடுக்கின்றார்கள் என்றால், அவருக்கும் அடுத்த முறை கணக்கெடுக்கும் தேதி 20 ஆம் தேதியாகத்தான் தொடர்ந்து இருக்கும். இதிலே ஓரிரு நாட்கள் வேண்டுமானால் வித்தியாசப்படலாமே தவிர, இதிலே பயனீட்டாளர்களுக்கு எந்தவிதக் குழப்பமும் இல்லை. இந்த முறையானது சீரான நடைமுறையிலே சென்றுகொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். உங்களுக்கு எத்தனையோ முறை கூறியுள்ளேன். வினாக்கள்–விடைகள் நேரத்தில் விவாதம் கிடையாது. நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் வேறு ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், அவருடைய அறையிலே சென்று கேளுங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

143—

பட்டயப் படிப்பு

***2981—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 23]

(அ) நாகர்கோவில், கோணத்திலுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் காற்றாலை மின் உற்பத்தி தொழில்நுட்பம் என்ற பட்டயப் படிப்பைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில், கோணத்திலுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் காற்றாலை மின் உற்பத்தி தொழில்நுட்பம் என்ற பட்டயப் படிப்பைத் துவக்குவது பற்றி, மரபுசாரா எரிசக்தி (Renewable Energy Source) என்ற கருத்தியல் பாடம், இரண்டாம் ஆண்டு இயந்திரவியல் பட்டய மாணவர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டாயப் பாடமாக பயிற்றுவிக்க புதிய பாடத் திட்டத்தில் ('L' Scheme) வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழகத்திலேயே கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில்தான் அதிகமான காற்றாலை மின் உற்பத்தி நடைபெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அங்குள்ள தொழிலாளர்களைப் பார்க்கும்போது, அவர்கள் தொழில் இல்லாமல் சென்னை, மும்பை, டில்லி போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கும்பொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமான கல்லூரிகள் இருப்பதால் காற்றாலை மின் உற்பத்தி என்ற தொழில்நுட்ப பட்டயப் படிப்பை கன்னியாகுமரி மாவட்டத்திலேயே தொடங்கித் தந்தால் படித்த இளைஞர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு

கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். இப்போது பார்க்கப் போனால் வட இந்தியர்கள்தான் காற்றாலை தொழில்நுட்பப் பயிற்சியைப் படித்துவிட்டு இங்கு வந்து வேலை செய்கிறார்கள். ஆகவே, நாகர்கோவில், கோணத்திலுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் காற்றாலை மின் உற்பத்தி தொழில்நுட்பம் என்ற பட்டயப் படிப்பைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இதுவரையில் பட்டயப் படிப்பில் இதற்கென்று தனியாக ஒரு பாடப் பிரிவு கிடையாது. இந்த முறை, அதாவது பாலிடெக்னிக் கல்லூரியைப் பொறுத்தவரையில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்தப் பாடத் திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது. இதனுடைய தேவையை அறிந்து காற்றாலையில் மின் உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்பம் வேண்டும், அந்தத் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் வேண்டுமென்ற காரணத்தின் அடிப்படையில், தற்போதுதான் இந்த முறை, 'L' scheme அதாவது, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பாடத் திட்டத்தை மாற்றியமைக்கும் முறை கொண்டுவரப்பட்டு, அந்தப் பாடத் திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு இயந்திரவியல் (மெக்கானிக்கல்) படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டில் இதை ஒரு பாடத் திட்டமாக அறிவித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்தைத்தான் நானும் சொல்ல விரும்பினேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவதாகச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் நன்றி சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தத் திட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா, பாடப் பிரிவைப் பற்றியதாக இருந்தாலும், திருவண்ணாமலை மாவட்டத்திலே பல தனியார் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருந்தாலும், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர் போன்ற சட்டமன்றத் தொகுதிகளிலே ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடலாம். திரு. பாபு முருகவேல், நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். நான் வாய்ப்புத் தரும்போது, அதைப் பயன்படுத்தி, காற்றாலை சம்பந்தப்பட்ட தொழிற்படிப்பை அங்கே கொடுக்க முடியுமா என்று கேட்டிருந்தால், அது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இருந்திருக்கும். சம்பந்தமே இல்லாமல், நீங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாமல், வேறு கேள்வி கேட்டால் அது தவறு. இனிமேல் இந்தப் பழக்கத்தை விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[2012 ஏப்ரல் 23

2011–2012 ஆம் ஆண்டில் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, நாகலாபுரத்தில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைப்பதற்கு உத்தரவு பிறப்பித்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மார்க்கண்டேயன், நீங்களும் அதேமாதிரி சம்பந்தமில்லாமல் கேட்கிறீர்களே! உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகரித்துவரும் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாசற்ற மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில் காற்றாலை மற்றும் சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியது மிக மிக அவசியம். ஆனால், சூரிய சக்தி மற்றும் காற்றாலையில் மின்சாரம் உற்பத்தி செய்யும்போது அதிகமான செலவினங்கள் ஏற்படுகின்றன. எனவே, இந்தியாவின் தேவைக்கேற்ப நம்முடைய தொழில்நுட்பத்தைக்கொண்டு எப்படி ராக்கெட்டுகளெல்லாம் தயாரிக்கின்றோமோ, அதேபோன்று, சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தியைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்குண்டான தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிப்பதற்கு, குறிப்பாக அண்ணா பொறியியல் பல்கலைக்கழகத்திலே தனியாக ஒரு ஆராய்ச்சி மையம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதில் Diploma level-ல்தான் இந்தப் பாடத் திட்டம் இருக்கிறது. இந்தப் பட்டயப் படிப்பு பிரிவில் படித்தவர்களில் குறைந்த அளவில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுநாள்வரை, Research – ஆராய்ச்சி, M.E. படிக்கிற research-ல் இருக்கக்கூடிய அளவில் அந்தப் பட்டப் படிப்பு என்பதில் பெரிய அளவில் பாடத் திட்டமாக வைத்திருக்கிறார்கள். அண்ணா பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில் M.E. படிக்கிற மாணவர்களுக்கு இதை ஒரு

2012 ஏப்ரல் 23]

தனிப் பாடத் திட்டமாக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொழில்நுட்பம் வளர்ந்துவருகிற வேளையில் இந்தக் காற்றாலையில் அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அதில் சிறப்பான முறையில் குறைந்த செலவில் மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்தியாவில் தமிழகம்தான் காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடத்தில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தற்போது மின்சாரத்தின் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தினால் இதன் நுணுக்கங்களை சிறந்தமுறையில் படிப்பதற்கு அண்ணா பல்கலைக்கழகம் உறுதுணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு, இப்போது டாக்டர் கிருஷ்ணசாமி எழுப்பிய sub–question is relevant. அதாவது Non–conventional energy-யான Wind Power, Solar Power–based திட்டங்கள் அந்த மாவட்டத்தில் இருந்தால்கூட, அண்ணா பல்கலைக்கழகத்தில் அதற்காக ஒரு Research Centre ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டதில் ஒரு relevancy இருக்கிறது. அதை admit செய்கிறேன். Relevancy இல்லாமல் திடீரென்று இந்த opportunity–ஐ மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாமல் பயன்படுத்துவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

144—

ஆராய்ச்சி மையம்

***5506—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 ஏப்ரல் 23

(அ) பெரியகுளம் பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் பகுதியிலே வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், வெற்றிலையிலிருந்து வாழை இலைக்குப் போகக்கூடாது.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிலை ஒரு மங்கலகரமான பொருள். தமிழ்க் கலாச்சாரத்தோடு இணைந்த ஒரு பொருள். இன்னும் சொல்லப்போனால் திருவிழாக்களிலிருந்து குடும்ப நிகழ்ச்சி வரை அனைவரும் பயன்படுத்தி வரக்கூடிய, மருத்துவக் குணம் நிறைந்த ஒரு மகத்தான விவசாயப் பொருள். பொருளாதார ரீதியில் அது தமிழ்நாட்டில் பல இலட்சக்கணக்கான விவசாயிகளோடும், விவசாயத் தொழிலாளிகளுடைய வாழ்வோடும் இணைந்ததாக இருக்கிறது. சமீபத்தில் இந்த வெற்றிலை வேர்ப் பூச்சிகளின் மூலமாக ஏற்படுகிற வாடல் நோய், சருகல் நோய் போன்ற நோய்கள் கடுமையான அளவுக்கு தாக்குதலுக்கு உள்ளாகி, இவற்றுக்கான உரிய மருந்துகள் இல்லாமல் இருக்கின்றது. அதற்கான மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்த வெற்றிலை என்பது இன்றைக்கு தமிழ்நாட்டின் கணிசமான பகுதிகளில் இருக்கிறது. குறிப்பாக, என்னுடைய பெரியகுளம் தொகுதி, போடிநாயக்கனூர் தொகுதி, சோழவந்தான் தொகுதி, இங்கெல்லாம் ஏராளமான, நூற்றுக்கணக்கான கிராமங்கள் வெற்றிலை விவசாயத்தை சார்ந்திருக்கின்றன. இந்த வெற்றிலைக்கு ஏற்கெனவே திருச்சியிலே சிறுகமணியில் ஓர் ஆராய்ச்சி மையம் இருந்தது. அது பல்கலைக்கழகத்தோடு இணைந்துவிட்டது. இப்பொழுது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

2012 ஏப்ரல் 23]

திரு. ஏ. லாசர்: வந்துவிடுகிறேன். இப்போது எந்த இடத்திலும் அது இல்லை. வெற்றிலை என்பது பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வோடு இணைந்திருக்கக்கூடியது. குறிப்பாக என்னுடைய தொகுதியில், வடுகவட்டி, ஜெயமங்கலம், மேல்மங்கலம், பெரியகுளம், ஜி.கல்லுபட்டி போன்ற கிராமங்களில் வெற்றிலை பயிரிடப்படுகின்றது. இந்த வெற்றிலைக்கு ஓர் ஆராய்ச்சி மையத்தை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டிலே இந்த ஆராய்ச்சி மையம் இப்போது இல்லாமல் இருப்பது பொருத்தமாக இருக்காது. தமிழ்நாட்டிலிருந்து பக்கத்து மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளாகவும் இது இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்கான ஓர் ஆராய்ச்சி மையத்தை உருவாக்க வேண்டும், என்னுடைய பெரியகுளம் தொகுதியில், தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. அங்கே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெற்றிலைக்கான ஓர் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், சிறுகமலையில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தில் வெற்றிலைக்கான ஆராய்ச்சிகள் 1983 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையிலே, புதிய இரகங்கள் வெளியிடப்பட்டு வந்தன. தமிழகத்தில் சுமார் 3,000 எக்டேர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில் தேனி மாவட்டத்தில் 215 எக்டேர் பரப்பளவில் மட்டுமே வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வெற்றிலையைத் தாக்கும் நோய்களுக்கான ஆராய்ச்சி திடல்கள் மற்றும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வாடல் நோயைப் பொறுத்தவரையில் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அங்கு தபேதாருக்கு என்ன வேலை? வெளியேறவும்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: வாடல் நோயைப் பொறுத்தவரையில், அங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள வடுகப்பட்டியில் 200 எக்டேர் பரப்பளவில் வெற்றிலை பயிர் செய்யப்படுவதால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அவ்வப்போது தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, பெரியகுளத்தில் வெற்றிலை பயிருக்காக தனியாக ஆராய்ச்சி நிலையம் துவங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள் உரையாற்றிடும்போது 'வெற்றி இலை' ஒரு மங்கலகரமான பொருள் என்று சொன்னார்கள். (சிரிப்பு) அதற்கு லாசர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தின்போது, no point of order. அனுமதி இல்லை. (குறுக்கீடு) இன்னும் அவர் முடிக்கவில்லை. அவருக்கு ஒரு துணைக் கேள்வி உண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிலை மங்கலகரமான பொருள்தான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழ் மக்களுடைய கலாச்சாரத்தோடு இணைந்தது. அதை அவரவர்களுடைய விருப்பத்திற்கு நாம் எடுத்துக்கொள்கிறோம். அதில் ஒன்றும் தவறு இல்லை, அது ஒன்று.

அடுத்து, அமைச்சர் அவர்கள் அந்த ஆய்வு மையம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இருக்கும் என்று சொன்னால், மகிழ்ச்சி. ஆனால், அந்த விவசாயிகள் மத்தியிலே அது போதுமானதாக

2012 ஏப்ரல் 23]

இல்லை. இந்த வாடல் நோய்க்கான, அந்தக் கிருமிகளை அழிப்பதற்கான மருந்து இல்லை என்று என்னிடம் புகார் இருக்கிறது. ஏனென்று சொன்னால், கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் விமர்சனத்திற்காக சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், ஒரு நிமிடம் பொறுங்கள். Research Centre வேண்டும் என்பதுதான் உங்கள் கேள்வி. இருக்கிறது என்கிறார் அமைச்சர். அதற்குப் பிறகும் Infrastructure, அது இது என்று பேசிக் கொண்டிருக்கக் கூடாது, அது முறையல்ல. அடுத்தது, உங்களுக்கு என்ன வேண்டும்? அதை மட்டும் கேள்வியாக நீங்கள் கேளுங்கள்.

திரு. ஏ. லாசர்: அது சிறப்பாகச் செயல்பட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Very good. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் அமைந்துள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் குறிப்பாக உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற வெற்றிலையைத் தாக்குகின்ற வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற நோய்களுக்கும் அங்கு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, சிறப்பாக வெற்றிலையைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் புத்திரகவுண்டன்பாளையம் என்ற இடம் இருக்கிறது. அங்கே ஆமணக்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு Research Centre இருக்கிறது. அந்த இடத்திலேயே மஞ்சள், கரும்பு மற்றும் மக்காச்சோளம் Research Centre அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், இதற்குத் தனிக் கேள்வி போடவும். நான் ஏற்கெனவே வெற்றிலையைப் பற்றி மட்டும் கேளுங்கள் என்று சொன்னேன். அதற்குப் பிறகும் மரவள்ளிக் கிழங்கு, ஆமணக்கு என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் அதிகப்படியாக வெற்றிலை உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. வெற்றிலை, நோய்களால் தாக்கப்படாமல் இருந்தால் ஒரு முறை வைத்தால், சுமார் 15 வருடம், 20 வருடங்கள்கூட இருக்கும். இந்தத் தண்டு நோய், இலை நோய்கள் தாக்குவதால் 4, 5 வருடங்களில் அது அழியக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு அங்கே ஒரு ஆராய்ச்சி மையம் அமைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்திலேயே வெற்றிலைக்கான ஆராய்ச்சி மையம் இருப்பதனால், அங்கேயே வெற்றிலைக்கான ஆராய்ச்சி முழுவதும் செய்யவிருப்பதனால் அதற்கு ஒரு தனி ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும்கூட நம்முடைய வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நம் துறையின் மூலமாக செயல்படுகின்ற பல நிலையங்களில் இதுபோன்ற ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நமது உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திலே வெற்றிலை நோய்கள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

2012 ஏப்ரல் 23]

அம்மா அவர்களின் நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பல பகுதிகளில் தமிழர்களின் கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கது. வெற்றிலை விவசாயம் நலிவடைந்து வருகிறது. வெற்றிலை விவசாயத்தை நலமுடன் செயலாக்க சோழவந்தான் தொகுதியில், வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து வெற்றிலை ஆராய்ச்சி மையத்தைப் பற்றிய அதே கேள்வியைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். பெரியகுளம் பகுதியிலும், மற்ற பகுதியிலும் போதுமான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு இருப்பதனால், புதிதாக ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி வெற்றிலையைப் பற்றியது அல்ல. ஆராய்ச்சி மையத்தைப் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அந்தக் கேள்வி வெற்றிலை ஆராய்ச்சி மையத்தைப் பற்றியதுதானே?

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆராய்ச்சி மையத்தைப் பற்றியதுதான். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா என்பதைக் கேட்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அந்தக் கேள்வி வெற்றிலை ஆராய்ச்சி மையத்தைப் பற்றியதுதானே? எதைப் பற்றிய ஆராய்ச்சி மையம்?

[2012 ஏப்ரல் 23

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலை ஆராய்ச்சி மையம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிலை பயிர் அடிக்கடி நோயால் பாதிக்கப்படுகிற காரணத்தினால்தான், பல இடங்களிலே சாகுபடி செய்கிற விவசாயிகள் ஆராய்ச்சி மையம் வேண்டுமென்று கேட்கிறார்கள். எனவே, வெற்றிலைக்கு அடிக்கடி வருகிற நோயைத் தடுப்பதற்கு ஏதாவது சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைப் பயிர்களில் வெற்றிலை ஒரு முக்கியமான பயிராகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 3,000 எக்டேர் பரப்பளவில்தான் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. கிட்டத்தட்ட 67,000 டன் வெற்றிலையும் உற்பத்தி செய்யப்படுகிறது. பரவலாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு சில இடங்களில்தான், இந்தச் சாகுபடி முறை இருக்கிறது. இருந்தாலும் இந்தப் பரப்பளவுக்குத் தகுந்தாற்போல்தான் பெரியகுளத்தில் ஆராய்ச்சி மையம் அமைத்திருக்கிறோம். அதுவே போதுமானதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தேவை ஏற்படின் அதற்கான புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இதைப்பற்றி எடுத்துச்சொல்லி அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள். என்ன? இவ்வளவு நேரம் ஆராய்ச்சி செய்து, என்ன ஆராய்ச்சி செய்யலாம் என்று கேட்கப்போகிறீர்களா?

2012 ஏப்ரல் 23]

திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெற்றி இலை. வெற்றி இலையால் மாண்புமிகு அம்மா அவர்களை ஆட்சியில் அமர வைத்த இலை, வெற்று இலை. அந்த வெற்றிலைக்காகத்தான், பாரதி

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்,
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்"

என்று பாடுகிறான். ஆக, வெற்றிலை என்பது தமிழ் மூலிகையோடு ஒன்றுபட்ட இலை. அதே நேரத்திலே தமிழர்களுடைய கலாச்சாரத்திலே அவர்கள் எடுக்கக்கூடிய எல்லா விழாக்களிலும் ஏற்புடையது இந்த வெற்றிலை ஆகும். அந்த வெற்றிலையை மருந்தாக உட்கொள்கிறபொழுதுகூட, இரசாயன மாற்றங்கள் இல்லாத அளவிற்குப் பார்த்துக்கொள்ளக்கூடிய இலை, அந்த வெற்றிலையாகும். சமீப காலத்திலே அந்த வெற்றிலையைப் பயன்படுத்தக்கூடிய அல்லது உண்ணக்கூடிய பழக்கம் குறைந்துபோய் இருக்கிறது. இந்திய நாட்டில் ஆப்பிளுக்கு என்று விழா எடுக்கப்படுகிறது. எத்தனையோ மாநிலங்களில் விளையக்கூடிய பொருட்களுக்கெல்லாம் ஒரு விழா நடத்தி அந்தப் பொருட்களை பிரபலப்படுத்துகிறார்கள். எனவே, வெற்றிலையைப் பிரபலப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கிருஷ்ணசாமி, ஏற்கெனவே நீங்கள் பேசிவிட்டீர்களே? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றிலையை தமிழகத்தில் மங்கலகரமான பொருளாகப் பயன்படுத்துகிறோம். அதனுடைய மருத்துவ குணங்கள் என்ன என்பது இதுவரையிலும் எந்த ஆராய்ச்சியிலும் வெளிப்படுத்தப்படவில்லை.**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், தயவு செய்து உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன கருத்து வெற்றிலை விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையிலே இருப்பதால், அவர் கூறிய கருத்து அவைக் குறிப்பிலே ஏறாது. டாக்டர், தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பாட்டி சொன்ன வைத்தியம் என்னவென்றால், வெற்றிலையோடு இரண்டு உப்புக் கற்களைச் சேர்த்து மென்று விழுங்கினால், வயிற்றுப் பொருமல் சரியாகும் என்பதுதான் இயற்கை வைத்தியர்களுடைய கண்டுபிடிப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன கருத்தையொட்டி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதிலைச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகையிலையை வாயில்போட்டு மென்றால்தான் அவர் சொன்ன வியாதிகளெல்லாம் வருமேயொழிய, வெற்றிலையினால் அந்த வியாதிகளெல்லாம் வருவதற்கு வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன கருத்து அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடுகள்) பேரவை முன்னவருடைய பதில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள்.

திரு. அ. சவுந்தராசன்: வெற்றிலை மருத்துவ குணம் கொண்ட ஒரு மூலிகை என்பதுதான் அனுபவ வைத்தியம். டாக்டர் சொல்வதைப்போல, அதுகுறித்து ஆய்வு நடத்தி, இன்னும் என்னென்ன சிறப்புகள் அதிலே இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அரசு முன்வருவது நல்லது. புற்று நோய் என்பது

2012 ஏப்ரல் 23]

புகையிலையைப் போடுவதாலும், இப்போது புதிதுபுதிதாக வரக்கூடிய ஏராளமான போதைப் பொருட்களைப் போட்டு வாயில் குதப்புவதனாலும், வாயில் அடக்கி வைத்துக்கொள்வதாலும் ஏற்படுவது என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

145—

பயணியர் மாளிகை

***1726—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகையைப் புதுப்பித்துக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

2012-2013 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ், அந்தியூரில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் வளாகத்தில் புதிய பயணியர் மாளிகை கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியிலுள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகைக் கட்டடத்தைப் புதுப்பித்துக்

கட்டித் தர நிதியை ஒதுக்கித் தந்த, தலைநகரத்தில் தலைசிறந்த உரையாற்றி, தமிழகத்தை தலைநிமிரச் செய்த தன்னிகரில்லா தலைவி எங்கள் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினை சமர்ப்பித்து, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். எங்களுடைய வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு பயணியர் மாளிகை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, அதைப் புதுப்பித்துக் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே இருக்கின்ற பயணியர் மாளிகை பழுதடைந்துள்ளது என்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டு 7 புதிய பயணியர் மாளிகைக் கட்டுவதற்காக ஆணையிட்டு, இத்துறையின் மானியக் கோரிக்கையிலே புதிய அறிவிப்புகள் மூலமாக அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல், அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் ஒரு தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. கொல்லம், குற்றாலம் செல்லும் மிகப் பெரிய நெடுஞ்சாலை. திருநெல்வேலியிலிருந்து அனைத்து பயணிகளும் அந்த வழியாகச்

2012 ஏப்ரல் 23]

செல்கிறார்கள். ஆகவே, ஆலங்குளத்தைத் தலைமையிடமாக வைத்து அங்கு ஒரு பயணிகள் தங்கும் விடுதி கட்ட மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் பயணியர் விடுதி கட்டப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் அந்தந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமோ அந்த முன்னுரிமையின் அடிப்படையிலே இந்த பயணியர் விடுதி கட்டப்படுகின்றது. அந்த முறையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கருத்து ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.

திரு. தா. மலரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோயம்புத்தூர் வடக்கு தொகுதிக்கு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே செய்யப்படாத ஒரு வேலையை அங்கே போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும், அந்த மக்கள் நல்லமுறையிலே சென்று வருவதற்கும் 7 கோடி ரூபாய் செலவில், டெக்ஸ்டூல் நிறுவனம் அருகே உள்ள மேம்பாலத்தை விரிவுபடுத்தி, இருவழி மேம்பாலமாக அமைத்துக் கொடுத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.

திரு. பா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது உத்திரமேரூர் தொகுதியில்

[2012 ஏப்ரல் 23

பயணியர் விடுதி பழுதடைந்துள்ளது. அதைச் சரி செய்து தருமாறு கேட்டு வாலாஜாபாத்தில் புதிதாக ஒரு பயணியர் மாளிகையைக் கட்டித் தர மாண்புமிகு அம்மாவின் நல்லரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பயணியர் விடுதி பழுதடைந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அது புதுப்பித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓர் ஆண்டுக் காலத்திற்குள் கோவில்பட்டியிலே அருள்மிகு செண்பகவள்ளியம்மன் கோயில் ஆலயத்திற்கு அருமையாக குடமுழுக்கு விழா நடத்தினார்கள்.

அதேபோல, ஒரு கோடி ரூபாய் செலவில் நேற்றையதினம் கோவில்பட்டியிலே புதுப்பொலிவுடன் போக்குவரத்துப் பணிமனை ஒன்றைத் தொடங்கினார்கள். நகரின் மையப் பகுதியிலே உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகை பன்னெடுங்காலமாகப் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றது. அதனைச் சீர் செய்து, புதுப்பொலிவுடன் செயல்பட வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவில்பட்டியிலே இருக்கின்ற பயணியர் மாளிகை புதுப்பிக்கப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூதுகுளத்தூரில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான, கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முந்தைய, ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட பயணியர் விடுதி பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. எனவே, புதிய பயணியர் விடுதி ஒன்று கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய நிதிநிலைக்கேற்ப பகுதி–2 திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பயணியர் விடுதிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பத்தரபள்ளி அணை பணி 2002–2003–ல் தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அந்தப் பணிகளைத் தொடங்கி, முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பணி தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டதாக இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சி எல்லாவற்றையும் நிறைவேற்றி வருகிறது. திருமங்கலத்தில் ஒரு நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதியும், கல்லுப்பட்டியில் ஒரு நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதியும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தென் மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் வந்தபொழுது திருமங்கலம் பயணியர் விடுதியைப் பார்த்திருக்கிறார்கள். அங்கு அடிப்படை வசதிகளான படுக்கைகள் மற்றும் சோபாக்கள் போன்றவை இல்லை. அங்கு அமைச்சர்களுடன் வரக்கூடிய உதவியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்குவதற்கென்று பயணியர் விடுதிக்குப் பின்னால் கட்டப்பட்டுள்ள அருமையான அறை பழுதடைந்த நிலையில் இருக்கின்றது. எனவே, அதனைப் பழுதுநீக்கம் செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், கல்லுப்பட்டியிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதியையும் பழுது நீக்கம் செய்து, அதனைப் புதுப்பொலிவுடன் விளங்கச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் மற்றும் கல்லுப்பட்டியிலுள்ள பயணியர் விடுதிகள் பழுதடைந்துள்ளதாகவும், அவற்றைப் பழுது நீக்கம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பழுதுபார்க்கும் பணிகளை நிறைவேற்றித் தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

146—

வெள்ளக் கால்வாய்த் திட்டம்

***69 திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியில் அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அவினாசி அத்திக்கடவு திட்டத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படுமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற நிதி ஆண்டிலேயே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்கான ஆய்வுப் பணிகள் நிறைவடைந்து, 1,862 கோடி ரூபாய்க்கு அறிக்கை தயார் செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தை வெள்ள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தவுள்ளதால், வழிகாட்டுதலின்படி இத்திட்டத்திற்கு விரைவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 23

இந்த ஆண்டு மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு நிதியை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசின் நிதியிலிருந்து இந்தப் பணியைத் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணிகள் விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் எனக்கு பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது கேள்வியைத் தொடங்குகிறேன்.

அவினாசி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, அத்திக்கடவு அவினாசி வெள்ளக் கால்வாய் திட்டம், கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மிகப் பெரிய திட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்ததற்காக, அவினாசி தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், அவினாசி அத்திக்கடவு திட்டத்தில், கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள குளம் குட்டைகளில் நீர் நிரப்புவதற்காக, அவினாசி அத்திக்கடவு உபரி நீர் கால்வாய் திட்டத்தைச் செயல்படுத்தினால், மேட்டுப்பாளையம், அவினாசி, கோவை வடக்கு, திருப்பூர் வடக்கு, சூலூர், பவானிசாகர், பெருந்துறை ஆகிய வட்டங்கள் விவசாயத்திற்கும் மற்றும் பொது மக்கள் குடி தண்ணீர் தேவைக்கும் பயன்பெறும். இத்திட்டத்தை நிறைவேற்றினால் மேற்கூறிய 8 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளடங்கிய 538 குட்டைகள், 71 ஏரிகள் பயன்பெறும். 148 கிராமங்களில் வசித்துவரும் சுமார் 20 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். எனவே, இக்கோரிக்கையை நிறைவேற்றக் கோரி அப்பகுதி மக்கள் 50 ஆண்டுக் காலமாக போராடி வருகிறார்கள். இத்திட்டத்தை தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2012 ஏப்ரல் 23]

அறிவிப்பார்கள் என்று அவினாசி தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புவதோடு .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருப்பசாமி, உட்காருங்கள் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், வற்றாத ஜீவநதியான தாமிரபரணி ஆறு ஓடுகிறது. இவ்வாற்றில் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற வெள்ள நீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. எனவே, இங்கு ஓர் தடுப்பணையோ அல்லது வெள்ள நீர் கால்வாயோ அமைத்து, வறட்சிப் பகுதியான மேலநீலிதநல்லூர் ஒன்றியப் பகுதி பயன்பெறும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்க விரும்புகிறேன். இதன்மூலம் எனது தொகுதி மட்டுமல்லாது, கோவில்பட்டி மற்றும் திருநெல்வேலி தொகுதியும் பயன்பெறும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அப்பகுதியில் நீர் வரத்து அதிகமாக இருப்பின் அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, தடுப்பணை கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி–அத்திக்கடவு வெள்ளக் கால்வாய்த் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய நிதி இல்லாவிட்டாலும்கூட, மாநில அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவித்ததற்கு, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 23

இத்திட்டம் கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் பெருந்துறை வரை பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் மற்றும் குளம்–குட்டைகளை நிரப்புவதற்கான ஒரு அருமையான திட்டம். எனவே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெறாமலேயே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால், வறட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் பயன்பெறுவார்கள் என்ற அடிப்படையில், இத்திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு ரூ.1,862 கோடி. இருந்தாலும், இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு இந்த வருடம் நிதியை ஒதுக்காவிட்டாலும், மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கி, திட்டப் பணிகளைத் துவங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

147—

ஆய்வுக் கூடம்

***5289 திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூர் தொகுதி, காரணை பெரிச்சானூர் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012 ஏப்ரல் 23]

திருக்கோவிலூர் தொகுதி, காரணை பெரிச்சானூர் மேல்நிலைப் பள்ளிக்கு, நபார்டு வங்கி திட்டத்தில் ஆய்வுக் கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித் தர, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பள்ளி, 15–6–2009 ஆம் ஆண்டிலே மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது. அந்தப் பள்ளியில் 728 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அறிவியல் ஆய்வுக் கூடத்தைப் பொறுத்தவரையிலே, அந்த உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு ஆய்வுக் கூடம் மட்டும்தான் இருக்கிறது. அந்த ஆய்வுக் கூடம்தான் இப்பொழுதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய 4 பாடப் பிரிவுகளுக்கும் ஒரு ஆய்வுக் கூடம்தான் இருக்கிறது. எனவே, மேலும் 3 ஆய்வுக் கூடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அங்கு நான்கரை ஏக்கர் பரப்பளவு கொண்ட விளையாட்டு மைதானம் இருக்கிறது. சுமார் 1,000 மீட்டர் சுற்றளவுக் கொண்ட சுற்றுச் சுவர் அங்கே தேவை. இருந்தாலும், S.S.A. திட்டத்தின்கீழ் தற்போது 60 மீட்டர் வரை சுற்றுச் சுவர் போடப்படுகிறது. எனவே, அந்தத் திட்டத்தைத் துரிதமாக செய்து முடிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளிகளுக்கான கட்டமைப்பு வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்த நிதியாண்டில் 48 சதவிகித நிதியை

அதிகமாக வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாகத் தமிழகத்தை ஆட்சி செய்தபோது, 2002 ஆம் ஆண்டிலேயே கல்வித் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகத்தான், நபார்டு வங்கியின்மூலம் கட்டடங்கள் மற்றும் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

இந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், இப்போது மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், வருகின்ற கல்வியாண்டில், நபார்டு வங்கித் திட்டத்தில், அவர் கேட்டிருக்கின்றபடி கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

148—

கூடுதல் கட்டடம்

***6788—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்பகோணம் மாவட்ட அரசு மருத்துவமனை 402 படுக்கை வசதிகள் கொண்ட தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருவதோடு, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் புதிய படுக்கை வசதிகள் கொண்ட கட்டடங்கள் அங்கு கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. எனவே, புதிய கட்டடங்கள் கட்ட தற்போது அவசியம் எழுவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை பொதுக் கணக்குக் குழுவினுடைய உறுப்பினராக இருந்த காரணத்தினாலே, இந்தக் கோரிக்கை குறித்து நான் எனது கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே இருந்த கட்டடங்கள் ஏறக்குறைய 140 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்த நிலையில், அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று பொதுப் பணித் துறையால் அறிவுறுத்தப்பட்டு, அதை மூடி வைத்திருந்தார்கள். அதை தற்போது இடித்துவிட்டு, கூடுதல் கட்டடம் கட்டித் தருவதோடு, அறுவை சிகிச்சை அரங்கமும் கட்டித் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வருங்காலத்தில் எடுத்துச் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை வளாகத்தில் 100 ஆண்டுகளுக்கு மேல், பழமைவாய்ந்த கட்டடம் ஒன்று இருக்கிறது. அந்தக் கட்டடத்தை இடிப்பதற்குப் பொதுப் பணித் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அக்கட்டடம் இடிக்கப்பட்ட பின்னர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தேவையென்றால், உரிய கருத்துரு இணை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, தமிழக அரசின் நிதி இருப்பினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 23

149—

மாணவர் விடுதி

***6226—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை தொகுதியிலுள்ள கீழ்குப்பம் கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கீழ்குப்பம் கிராமத்திலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஊத்தங்கரையில் ஒரு பள்ளி மாணவர் விடுதியும் மற்றும் ஒரு பள்ளி மாணவியர் விடுதியும் செயல்பட்டு வருகின்றன. அரசு விதிமுறைகளின்படி, விடுதிகளுக்கிடையே 8 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். எனவே, ஊத்தங்கரை தொகுதி, கீழ்குப்பம் கிராமத்தில் மாணவர் விடுதி அமைக்கும் சாத்தியக் கூறுகள் தற்சமயம் இல்லை. இருப்பினும், தேவையிருப்பின் நம்முடைய பொற்கால முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தேவையான இடங்களில் விடுதிகள் கட்டித் தரப்படும் என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளை என்னுடைய சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குப்பம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 410 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். ஆகவே, அவர்களின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு ஒரு விடுதி அமைத்துக் கொடுத்தால், அம்மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தவுடன், கிழக்குப்பத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கல்லாவியில் ஒரு ஆதி திராவிடர் நலத் துறை மாணவர் விடுதியை ஆரம்பித்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதை எடுத்துச் சென்று, விடுதி ஆரம்பிக்க வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[2012 ஏப்ரல் 23

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், நிறைய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அது உங்களுக்கே தெரியும். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது துறைக்கு நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. துறையிலிருந்து பதில் பெற்றவுடன், அதை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும். (குறுக்கீடு) Please sit down. துறையின் நடவடிக்கையில் இருக்கிறது. பதில் வந்தவுடன், நான் அதை எடுத்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சார்ந்த தமிழர், சட்டீஸ்கர் மாநிலத்தில் மாவட்ட ஆட்சியராக இருக்கிற அலெக்ஸ் பால் மேனன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள், காலையில்தான் என் அறையில் வந்து இதுகுறித்து என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பி இருக்கிறேன். Please sit down.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடிசா மாநிலத்தில் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே பிரச்சினை குறித்துதானே? காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) காலையில் நீங்கள் கொடுத்தவுடன், நடவடிக்கைக்கு துறைக்கு அனுப்பி இருக்கிறேன். துறையிடமிருந்து பதில் வந்தவுடன், அதை நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: சட்டீஸ்கர் மாநிலத்தில் நமது தமிழர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து காலையில்தானே நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்? உட்காருங்கள்.

2012 ஏப்ரல் 23]

செல்வி கே. பாலபாரதி: நேற்றுதான் கடத்தினார்கள். இன்றைக்குத்தான் அதுகுறித்து அறிவிப்புக் கொடுக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, தொட்டு வணங்கி, 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012–2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 23

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.17,93,86,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 12, திரு. வி.சி. சந்திரகுமார்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1588, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3143, திரு. சி.எச். சேகர்.

2012 ஏப்ரல் 23]

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1320, திரு. அ. கணேஷ்குமார்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2916, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1375, திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1829, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் முக்கிய பங்களிப்பு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2089, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறையின் பலதரப்பட்ட சொசைட்டிகளில் உள்ள தொகுப்பூதிய, மதிப்பூதிய ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2133, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2226, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், ஈச்சம்பட்டு கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க வேண்டியது குறித்தும் சின்ன வெங்கடசமுத்திரம், பாட்டூர், இந்திரா நகர் பகுதிகளில் பகுதிநேர ரேஷன் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2289, திரு. எல். வெங்கடேசன்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் இணையதள வசதி Core Banking, ATM வசதிகளுடனான வாடிக்கையாளர் சேவைக்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2454, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2644, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தல்களை ஆண், பெண் விகிதாச்சாரம், மாற்றுத் திறனாளிகள் இட ஒதுக்கீடு போன்ற அம்சங்களுடன் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2759, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வங்கிகளின் அனைத்து விதமான கடன் திட்டங்களுக்கான வட்டி விகிதத்தைக் குறைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2925, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2944, திரு. இரா. அண்ணாதுரை.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் கூட்டுறவுத் துறைமூலம் உணவு விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3205, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3217, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகரில் சித்தம்மநாயக்கன்பட்டி, நெடுங்குளம், விருதுநகர் நகராட்சி 24 வார்டு ஆகிய இடங்களில் பொது விநியோகக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு) துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,93,86,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2012 ஏப்ரல் 23]

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 13– உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை), மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,995,22,86,000/-, மூலதனக் கணக்கில் ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 13, திரு. வி.சி. சந்திரகுமார்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3144, திரு. சி.எச். சேகர்.*

திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1322, திரு. அ. கணேஷ்குமார்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2873, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3033, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 219, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிதாக அரசு நியாய விலைக் கடைகளை, கன்னியாகுமரி மாவட்ட குளச்சல் நகர பிரண்ட்ஸ் காலனியிலும், ரீத்தாபுரம் பேரூராட்சி சலைட் நகரிலும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 630, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் கூடுதலாக நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 903, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம், விளவங்கோடு, கல்குளம் வட்ட வழங்கல் அலுவலகங்களில் பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1392, திரு. கு. நல்லதம்பி.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளில் பெரும்பாலான வற்றில் மண்ணெண்ணெய்யின் அளவு மிகவும் குறைவாகவே (80 சதவிகிதம்) உள்ளதைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கு. நல்லதம்பி] [2012 ஏப்ரல் 23

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1589*, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் தொகுதியில் உள்ள பெரிய நெசலூர் நியாய விலைக் கடையையும், புலியூர் நியாய விலைக் கடையையும் இரண்டாகப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடைகளாக உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/ ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1828*, திரு. எம். ஆறுமுகம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நியாய விலைக் கடைகளை 200 குடும்ப அட்டைகள் என்ற வீதத்தில் பிரித்து செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1843, திரு. இரா. அண்ணாதுரை.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் ரேஷன் கடைகளில் போதிய அளவு விற்பனையாளர்கள் இல்லாமல் ஒருவரை இரண்டு கடைகளுக்கு அனுப்புவதால் பயனாளிகள் பாதிப்பு அடைவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1884, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1928, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, 15–வது வார்டில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2065, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவுப் பொருட்களை பாக்கெட்டில் முன்கூட்டியே அடைத்து வைத்து விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 ஏப்ரல் 23

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2222, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் உடனடியாக கூடுதல் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2270, திரு. ப. பார்த்தசாரதி.

திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சி, 127–வது வட்டத்தில் திருவீதி அம்மன் கோவில் தெருவில் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2290, திரு. எல். வெங்கடேசன்.

2012 ஏப்ரல் 23]

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2382, திருமதி ர. சுபா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2544, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ரேஷன் கடைகளிலும் குறைந்த விலையில் மளிகைப் பொருட்கள் வழங்கவும், ஆன்லைன் வர்த்தகத்தைத் தடை செய்யவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2610, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

திரு. எஸ். ஜான் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அதிகமான ரேஷன் பொருட்கள் கேரள மாநிலத்திற்குக் கடத்தப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3190, திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3216, திரு. க. பாண்டியராஜன்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரேஷன் கடைகளில் மண்ணெண்ணெய் வழங்குவதில் ஏற்பட்டுள்ள கடுமையான தட்டுப்பாடு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவுசெய்து கொள்ள

@ 207 முதல் 247 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவரும், எனது நண்பருமான, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கையில், இன்றையதினம் எனது மதுரை மத்திய தொகுதியிலுள்ள மதுரை நகர்ப்புற கூட்டுறவு வங்கி மிகவும்

@@ 207 முதல் 294 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஆர். சுந்தர்ராஜன்] [2012 ஏப்ரல் 23

பழமையானதாகும். சுமார் பத்து ஆண்டுக்காலமாக மூடப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். போதுமான அளவு கடன் வசூல் செய்யப்பட்டுள்ளதாக தகவல் உள்ளது. எனவே, மீண்டும் அந்த மதுரை நகர்ப்புற கூட்டுறவு வங்கியை திறக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பல . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகர கூட்டுறவு வங்கியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். அந்த வங்கி 1906 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அவ்வாறு தொடங்கப்பட்ட வங்கி மதுரை மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டிருந்தது. இந்தக் காலகட்டத்தில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடந்த அந்த நேரத்தில், நடைபெற்ற மிகப் பெரிய முறைகேடுகளினால்தான் இன்றைக்கு மிகப் பெரிய பாதிப்புக்கு அந்த வங்கி தள்ளப்பட்டிருக்கிறது எனபதை இங்கே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–10

அதுமட்டுமல்ல, அந்த வங்கியில் ஏறத்தாழ 58.98 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இந்திய ரிசர்வ் வங்கி 7–1–2005 அன்று இந்த வங்கியினுடைய உரிமத்தை ரத்து செய்துவிட்டது. கலைக்கப்பட்ட நாளில் 1,018 கடன்தாரர்களிடமிருந்து மொத்தம் 56.56 கோடி ரூபாய் வசூலிக்க வேண்டிய நிலுவை இருந்தது. வங்கியின் 30,576 வைப்பீடுத்தாரர்களுக்கு ரூ.51.67 கோடி ரூபாய் திரும்ப வழங்க வேண்டிய சூழ்நிலை, அதுமட்டுமல்ல, அந்த நேரத்தில் இந்த டெப்பாசிட்தாரர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் பணம் கொடுக்க வேண்டிய கால சூழ்நிலை. இந்த வங்கியில் அன்றைக்கு இருந்த அரசு அதிகாரிகள், அன்றைக்கு இருந்த அரசுத் துறைச் செயலாளர்கள், Deposit Insurance and Credit Guarantee Corporation மூலம்—மாண்புமிகு

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

பேரவைத் தலைவர் அவர்களே, 1996 முதல் 2001 வரை, ஆட்சியில் இருந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை கடன் வழங்கியதில் நடைபெற்ற முறைகேடுகள் காரணமாக ரூ.58.98 கோடி நட்டம் ஏற்பட்டது. இதன்காரணமாக இந்திய ரிசர்வ் வங்கி இதன் உரிமையை இரத்து செய்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 7–1–2005–ல் இந்த வங்கி கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட நாளில் 1,018 கடன்தாரர்களுக்கு, அங்கே அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது, வங்கியிலிருந்து வாங்கிய கடன்தாரர்கள் 1,018 பேர். இந்த வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூ.56.56 கோடியாகும். இந்தத் தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருந்தது. அந்தச் சூழ்நிலையில் இதை அறிந்த நம்முடைய டெபாசிட்தாரர்கள் இந்த வங்கியில் செலுத்திய பணம், டெபாசிட் வேண்டுமென்று எல்லோரும் வேண்டுகோள் வைத்ததற்கிணங்க ஏறத்தாழ 30,576 வைப்பீடுதாரர்களில், அவர்களுடைய தொகை ரூ.51.67 கோடியை திரும்ப வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில் Deposit Insurance and Credit Guarantee Corporation, மும்பையிலிருந்து ஏறத்தாழ ரூ.25.04 கோடி பெற்று, வங்கி கடன்தாரர்களிடமிருந்து ரூ.7.82 கோடி வசூல் செய்தும், ஆக மொத்தம் ரூ.32.86 கோடி, அதிகபட்சத் தொகையாக ஒரு இலட்சம் வரையிலும் டெபாசிட்தாரர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சம் வழங்கியது போக அதற்கும் மேலே வைப்பீடு செய்துள்ள 2,845 வைப்பீடுதாரர்களுக்கும் ரூ.18.75 கோடி பட்டுவாடா செய்ய வேண்டி நிலுவையில் உள்ளது. மேலும் 527 கடன்தாரர்களிடமிருந்து இதுவரை வர வேண்டியது ரூ.42.47 கோடி வசூல் செய்ய வேண்டி நிலுவையில் உள்ளது. நாளது தேதியில் வங்கியின் கையிருப்பு ரூ.23.75 கோடி. வங்கியின் பணியாளர்களின் எண்ணிக்கை 205 பேர். அந்த 205 பேருக்கும் கொடுக்க வேண்டிய பணிக்கொடை ஒரு கோடி ரூபாய். ஒரு ஆண்டிற்கான சம்பளப் பாக்கி 2 கோடி ரூபாய். ஆக மொத்தம் 3 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் வைப்பீடு செய்துள்ளவர்களும், கடன் பெற்றவர்களும் நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள். கடன் டெபாசிட்தாரர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே கொடுத்தவர்களும் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். அதேநேரத்திலே இந்த Deposit Insurance and Credit Guarantee Corporation, மும்பையும் உயர்

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

நீதிமன்றத்திற்குச் சென்றதால் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் என்ன தீர்ப்பு வருகிறது என்பதைப் பார்த்த பிறகுதான், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: இதிலே 10 நிமிடங்கள் போய்விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் நேரம்தான் குறைந்தது.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: நீங்கள்தான் எனக்குப் பேச நேரம் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் பல வீட்டு வசதிச் சங்கங்கள், வீட்டு அடமானக் கடன் கொடுத்து வசூல் செய்ய முடியாமல் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அரசின் நிதிநிலை அறிக்கையில் அசலைச் செலுத்துபவர்களுக்கு வட்டியில் 50 சதவிகிதம் தள்ளுபடி என அறிவிக்கப்பட்டு, தள்ளுபடியில் பாதியை அரசு ஏற்றுக்கொள்ளும் என அரசு அறிவித்துள்ள நிலையில் பாதியைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் பல சங்கங்கள் உள்ளதால் கடன் தொகையின் முழு வட்டியையும் தள்ளுபடி செய்திட அரசு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், 2010 ஆம் ஆண்டு விவசாயிகள், பண்ணை சாராக் கடனாகப் பெற்ற கடன்களுக்கு தீர்வு காணப்படும் என்று அறிக்கைமூலம் வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், தற்போது வாங்கிய கடனுக்கு வட்டி, அபராத வட்டி, வட்டிக்கு வட்டி என, ரூபாய் நான்கரை இலட்சம் பெற்ற கடன் ஒன்பது இலட்சமாக மாறியுள்ளது. தற்போது அதை உடனடியாக செலுத்த வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது. செலுத்தாத விவசாயிகளின் சொத்துக்களை ஜப்தி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இதை அரசு பரிசீலித்து . . . (குறுக்கீடு)

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல ஜப்தி நடவடிக்கைகள் நாங்கள் இன்னும் எடுக்கவில்லை. இது அரசுத் துறை அல்ல. இது ஒரு கூட்டுறவுத் துறை. அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்களுடைய நன்மைக்காக அவர்களாக சேர்ந்து அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்காக அந்த வங்கியை நடத்தி வருகிறார்கள். எனவே, அந்த வங்கியின் வரவு–செலவுகளை வைத்துதான் அந்த வங்கி இயங்க வேண்டியிருக்கிறது. எனவே, அதுபற்றி இப்போது துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தவறாகும். யார்மீதும் இதுவரை ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் விவசாயிகளின் நிலை கேள்விக்குறியாக உள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 10 முதல் 15 ஆயிரம் விற்ற மஞ்சள் ரூபாய் 3,000 என மிகக் குறைவான நிலைமையை எட்டியுள்ளது. தற்போது மத்திய அரசு மஞ்சளுக்கு கொள்முதல் விலையை 4,092 ரூபாய் என நிர்ணயித்துள்ளது. தற்போது ** தமிழ்நாட்டில் பெருமளவு உற்பத்தியாகும் மஞ்சளுக்கு விவசாயிகளின் நன்மை கருதி 2,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறோம். நெல், கரும்பு இரண்டுக்கும் ஊக்கத்தொகை தருவதுபோல் மஞ்சளுக்கும் ஊக்கத்தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழகத்தில் பெரும்பாலான ரேஷன் கடைகள் மதியத்திற்குப் பின் பூட்டப்பட்டுள்ளன. இந்த நிலையை மாற்றி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை கடையைத் திறந்து வைக்க . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார். ரேஷன் கடை என்பது ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு நேரங்களை வைத்து திறக்கப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கை, வேலை ஆதாரம் அதை வைத்து, எத்தனை மணிக்கு வேலைக்குப் போகிறார்கள், எப்போது திரும்பி வருவார்கள், அவர்களுக்கு எப்போது தேவை என்பதை அறிந்து ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு ஏரியாவுக்கும் கடைகள் 8 மணி நேரம், சில இடங்களில் 9 மணிக்கு திறக்கப்பட்டு 1 மணி வரை நடத்துவார்கள். ஒரு மணி நேரம் சாப்பாட்டிற்கு ஒதுக்கிக் கொடுத்து விட்டு, திரும்ப தொடர்ந்து 5 மணி வரைக்கும் கடை நடக்கிறது. சில இடங்களில் 11 மணிக்கு ஆரம்பிப்பார்கள். இரவு 7 மணி வரை கடை நடத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதிரி தவறான கருத்தை இங்கே பதிவு செய்யக்கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்து, இதுமாதிரி தவறு எங்கேயாவது நடக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்வாரானால் நிச்சயமாக துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். குறுக்கீடு வராமல் பேசுங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கடையில் 1,000 குடும்ப அட்டைதாரர்கள் இருந்தால் அந்தக் குடும்ப அட்டைகளுக்கு உரிய ரேஷன் பொருட்கள் வழங்க வேண்டும். அரிசி இருந்தால் சீனி இல்லை. கோதுமை இருந்தால் பாமாயில் இல்லை. துவரம் பருப்பு இருந்தால் உளுத்தம் பருப்பு இல்லை. இதுபோன்ற குறைகளைக் களைய கூட்டுறவுத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை அவையிலே பதிவு செய்கிறார்கள். மண்ணெண்ணெய் இருந்தால் சர்க்கரை இல்லை, சர்க்கரை இருந்தால் அரிசி இல்லை என்கிற நிலை எந்த இடத்தில் இருக்கிறதோ அந்த இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அந்தமாதிரி தமிழகத்தில் எங்குமே இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கு பார்த்தாலும் முறையாக, சரியாகக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். எந்தக் கடை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். அந்தமாதிரி கடைகள் இருந்தால் குறிப்பிட்டுக் கொடுங்கள். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார். (குறுக்கீடு) நீங்கள் குறுக்கீடு வராமல் பேசினால் உங்களுக்கு நான் அதிக நேரம் தர முடியும். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மற்ற விளைபொருளுக்கும் கரும்புக்கும் அப்படித்தான் நாம் விலை நிர்ணயம் செய்கிறோம். அதைத்தான் இன்றைக்கு தொழிற்சாலைகள் எல்லாம் கொடுத்து வருகின்றன. நெல்லுக்கு மட்டும் நாம் ஊக்கத்தொகை வழங்குகிறோம். மற்ற எந்த உணவுப் பொருளுக்கும் நாம் ஊக்கத்தொகை வழங்குவதில்லை.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். சற்றுப் பொறுங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** அதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பொதுவாக இந்த அவையிலே வந்து ** பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிட்டு ஒரு அரசினுடைய செயல்பாட்டினை குறை சொல்வது போல் அமைந்திருக்கிறது. தயவுசெய்து அதை ஆதாரத்தோடு ** சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ** ஆதாரம் கொடுத்தால் அந்த ஆதாரத்தின்மூலம் ** நீங்கள் சொல்லும் ஆலோசனையும் வலுப்பெறும். அப்படியில்லாமல் பொத்தாம் பொதுவாக ** சொன்னீர்கள் என்றால், it is vague. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்? நீங்கள் காலையில் என்னிடம் பத்திரிகை செய்தியைக் காட்டினீர்களா? இல்லை, உங்களுக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா? (குறுக்கீடு) இல்லாவிட்டால் நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா? நீங்கள் கொறடா என்ற அடிப்படையில் பொறுப்பேற்றுக்கொண்டு, அது சம்பந்தமாக ஆதாரம் கொடுத்தீர்கள் என்றால், அது குறிப்பில் இருக்கும். இல்லாவிட்டால் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பாயிண்ட் சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதற்குள் போக முடியாது. (குறுக்கீடு) ஒரு நிமிடம், இரண்டு விஷயம்** ஆதாரம் கொடுங்கள், கொடுத்தால் அது அவைக் குறிப்பில் இருக்கும். நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். மற்றது ** நடவடிக்கைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்போது **

திரு. வி.சி. சந்திரகுமார்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ** நீங்கள் அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு ** சொன்னால் சிறப்பாக இருக்கும். ஒரு கருத்தைச் சொல்வதில் தவறு இல்லை. **ஆனால் ஆதாரம் இல்லாமல் பொத்தாம் பொதுவாகச் சொல்கின்றபோதுதான் உங்களுடைய கருத்து வலுவிழந்து போய்விடுகிறது. வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொன்னேன். உங்கள் கருத்து வலுவிழந்து போய்விடுகிறது. பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக எடுக்க முடியாது. உண்மையிலேயே ** நல்ல எண்ணத்தில்தான் என்று சொன்னால் அது சம்பந்தமாக ** கடிதங்கள் பெற்று அதைத் தரவேண்டும் என்று சொன்னால், அதற்கு கடிதம் பெற்று வந்து கொடுத்தால் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் பொதுவாகச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை வேண்டும். அனைத்து ரேஷன் கடைகளுக்கும் அரசே சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ரேஷன் கடைப் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் பணிச் சுமை, காலதாமதம் போன்றவை ஏற்படுகின்றன. அதிக அளவில் போதிய பணியாளர்களைச் சேர்க்க வேண்டும். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் நியமனம் குறித்து, துறை ரீதியாக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதி விரைவில் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: கூட்டுறவுத் துறையின்மூலம் ரேஷன் கடைப் பணியாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். இதனால் நிருவாக அலுவலர்கள், தணிக்கையாளர்கள் அனைவரும் பாதுகாப்புடன் பணிக்கு வருவார்கள் என்பது எனது கோரிக்கையாகும். கூட்டுறவுச் சங்கங்களை நிருவாகம் செய்யும், தனி அலுவலர்கள் பணிச் சுமை காரணமாக அனைத்து வேலை நாட்களிலும் அலுவலகத்தில் பணியில் இருப்பதில்லை. ஒவ்வொரு சங்கத்திற்கும் தனித் தனியாக பணியிடம் தோ்வு செய்ய வேண்டும். (குறுக்கீடு)

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வங்கியில் பணி நேரத்தில் ஆள் இல்லை என்றும், இந்த இடத்தில் ஆள் இல்லை, இங்கு பணியாற்றாமல் விட்டுவிட்டார்கள், இதனால் இந்த இந்தப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று எழுதிக்கொடுக்கட்டும், சொல்லட்டும் நாங்கள் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். அதுபோல், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, பணியாளர்களுக்கு மரியாதை கொடுக்கும் அரசு, அவர்களிடம் வேலைகளை வாங்குவதிலும் இந்த அரசு முன்மாதிரியாக இருக்கிறது என்பதையும், இதனால் இந்தக் கூட்டுறவுத் துறை எவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்பதையும் எனது பதிலுரையில் நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் முதல் பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் வரை தணிக்கை காலம் காலமாக அரசின் நிதித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு தணிக்கையாளர்களால் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது தனியார் தணிக்கை நிறுவனங்கள் மூலம் அதிக செலவில் தணிக்கை செய்வதாக அறிகிறேன். இவற்றை நீக்கி, அரசே தணிக்கை செய்ய முன்வரவேண்டும். கூட்டுறவு சங்கப் பணியாளர்கள், கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள், தொடக்க வேளாண்மைச் சங்கப் பணியாளர்களை அதிக அளவில் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் தேர்வு செய்து கூட்டுறவுத் துறைமூலம் நடைபெறும் அனைத்துப் பணிகளிலும் நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஆலைப் பணியாளர்கள் தமிழக அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வேண்டும் என்று கேட்டு போராடி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை தமிழக அரசு கருணை உள்ளத்தோடு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மட்டுமாவது அவர்கள் பெறும் ரேஷன் பொருட்களை அவர்கள் இல்லத்திற்கே சென்று அரசு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வீட்டில் சென்று ரேஷன் பொருட்களை வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தவர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என 24 இலட்சம்

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

பயனாளிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.2,800 கோடி செலவு ஆகிறது. இதுதவிர, வயது முதிர்ந்தோர் பயன்பெறும் ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையில் மாதம் 4 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது அல்லது அவர்கள் சத்துணவு மையங்களில் மதிய உணவு பெற்றுக்கொள்ளும் நிலையிலே இரண்டு கிலோ அரிசி வழங்கப்படுகிறது. ஏழையெளிய மக்களின் நலன்மீது அக்கறைகொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் பல திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே 15 நிமிடங்கள் எடுத்துவிட்டீர்கள். உணவு பாதுகாப்புச் சட்டம் . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவரை மனதில் வைத்துக்கொண்டு ரேஷன் பொருட்களை வீட்டில் கொண்டுபோய் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது சுய சிந்தனையில் உருவாக்கப்பட்ட அத்தத் திட்டமானது அவர்களுக்கு ரூ.1,000/– கொடுக்கக்கூடியது. விதவைகள், வயது முதிர்ந்தவர்களுக்கு அந்த நிதியினை வங்கியின் மூலமாக அவர்கள் வீட்டிற்கே சென்று வங்கியின் உதவியாளர் ஸ்மார்ட் கார்டு மூலமாக கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்தில் ஸ்மார்ட் கார்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கொடுக்கவிருக்கிறார்கள். ஸ்மார்ட்

2012 ஏப்ரல் 23] [திரு. கே.பி. முனுசாமி]

கார்டு மூலம் ஒரு கோடு போட்டால் போதும், ரூ.1,000/– பணம் அவர்கள் வீட்டிற்கே வரும் அவ்வளவுதான். அதுவும் ரூ.1,000/– எடுத்துவிட்டால் அந்தப் பணத்தினை அவர்களது பேரன் எடுத்துச்சென்றுவிடுவான் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதனையும் சிந்தித்து— எவ்வளவு பெரிய சிந்தனை பாருங்கள்—ஒரு வயதான தாயை, வயதானவர்களை, பேரன்மார்கள், பேத்திமார்கள் ஏமாற்றிவிடுவார்கள், அவர்கள் காசை எடுத்துச் சென்றுவிடுவார்கள் என்று, அவர்களுக்கு எவ்வளவு தேவையோ அதை மட்டும் அதாவது அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ரூ.100 அல்லது ரூ.200 வேண்டும் என்று சொன்னால் அதனை மட்டும் அந்த ஸ்மார்ட் கார்டு போட்டு எடுத்துவிட்டு மீதம் ரூ.800 அவர்கள் கணக்கிலேயே வங்கியில் இருக்கும். அதுபோன்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு வங்கி உதவியாளர்கள்மூலம் அவர்களின் வீட்டிற்கே சென்று கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிமூலம் கிடைத்தாலும் எங்களுக்கு சந்தோஷம்தான். உணவு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது மத்திய அரசு. ஆனால், அமலில்படுத்தியது மாநில அரசு. 5-8-2011 முதல் அமலுக்கு கொண்டுவரப்பட்டது. 1954 ஆம் ஆண்டு ஏற்படுத்திய அந்தச் சட்டத்தை தற்போதும் பயன்படுத்த வேண்டும் என்றால் அது சரியாக வருமா என்பதை மாநில அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். அன்றைய காலகட்டத்தில் இயற்கை உரங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு அறுவடைக்கும் 6 மாத காலமானது. இன்றைய காலத்தில் அனைத்திற்கும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதால் 90 நாட்களில் அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள். (குறுக்கிடு) உரையை முடியுங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: உணவை அண்ணா நகரில் உள்ள அன்னை தெரசா மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் தயாரித்து, தின்பண்டங்களை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் விற்பனை செய்கின்றார்கள். அனைத்திலும் உணவு பாதுகாப்புத் தரச் சட்டம் பின்பற்றப்படவில்லை. ஆனால், சுழல் நிதி பெறுகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜன், உங்கள் கட்சியின் சார்பிலே 2 பேர் பேசுகின்றீர்கள். ஒவ்வொருவருக்கும் தலா 10, 10 நிமிடங்கள். அதைத்தான் நான் சொன்னேன். நீங்கள் ஒருவர் மட்டும் என்றால் 20 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்றேன். நீங்கள் இரண்டுபேரும் 10, 10 நிமிடங்கள் என்று சொன்னால், எல்லாக் குறுக்கீடுகளையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் நீங்கள் 10 நிமிடங்களுக்கு மேலாகத்தான் பேசியிருக்கிறீர்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை அவைக்குச் சொல்லியிருக்கிறார். அன்னை தெரசா வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்திருக்கின்ற பெண்கள் கண்காட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதிலே உணவுப் பொருள்களும் இடம் பெற்றிருக்கின்றன. உணவுப் பாதுகாப்புச் சட்டம் அதிலே பின்பற்றப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆக, இவர் எதை ஆதரிக்கின்றார் என்பதைச் சொல்ல வேண்டும். பெண்கள் சுயமாகச் செய்து விற்பனை செய்யக்கூடிய அந்தப் பொருள்களுக்காக ஒரு கண்காட்சி நடத்தி, அவர்களை ஊக்குவிப்பது தவறு என்று சொல்கிறாரா என்பதை இங்கே விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜன். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மூலமாக இப்போது

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

இயற்கை உரங்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காக, அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது மண்புழு உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜன், அமைச்சர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: தவறு என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சமூக நலத் துறை அமைச்சர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: அதைத் தவறு என்று சொல்லவில்லை. அதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்குத்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பிரச்சினை? சொல்லுங்கள். உங்கள் மனதிற்குள் போட்டு பிரச்சினையை அடக்கி வைத்திருந்தால் உடம்பு ஆரோக்கியமாக இருக்காது. இரத்த அழுத்தம் சர்க்கரை நோய் எல்லாமே வரும். பிரச்சினையை வெளியிலே சொல்லி விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சொந்தக் காலிலே நிற்க வேண்டுமென்பதற்காகத் தொடங்கப்பட்ட திட்டம் இந்தத் திட்டம். அவர்கள் மிகவும் சிரமப்பட்டு, அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்ற ஊக்கத்தின் அடிப்படையிலே சுயமாக தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே பிரச்சினை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாக சொல்லிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்? அதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பிரச்சினை என்பதை வெளியிலே சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொல்லுங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: அந்த உணவின் தரத்தினை ஆய்வு செய்ய பி.எஸ்ஸி. அல்லது எம்.எஸ்ஸி. . . .

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை உட்காருங்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: எனது தொகுதிப் பிரச்சினைகளை அளிக்கின்றேன்.

எனது மத்திய தொகுதிக்குட்பட்ட 22 வார்டுகளிலும் சீரான குடிநீர் வசதி, சாலை வசதி பாதாளச் சாக்கடை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி பேவர் பிளாக் சாலை அமைத்தது போல் கூடலழகர் பெருமாள் கோயிலைச் சுற்றியும் பேவர் பிளாக் சாலை சுற்றுலாத் துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக அமைத்து அழகுபடுத்த வேண்டும்.

டவுன் ஹால் ரோடு பெருமாள் தெப்பத்தைத் தூர் வாரி நிரந்தரமாகத் தண்ணீர் நிரப்ப வேண்டும்.

பெரியார் பேருந்து நிலையப் பகுதிகளின் போக்குவரத்து நெரிசல் தீர பெரியார் பேருந்து நிலையம், அரசு விரைவுப் பேருந்து நிலையம், காம்ப்ளக்ஸ் பேருந்து நிலையம் மூன்றையும் ஒருங்கிணைத்து போக்குவரத்து நெரிசல் தீர ஏற்பாடு செய்து தர வேண்டும்.

அடுக்குமாடி மேம்பாலம் பெரியார் பேருந்து நிலையப் பகுதியில் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும். அதனால் போக்குவரத்து நெரிசல் தீரும்.

எனது மதுரை மத்திய தொகுதியில் உள்ள அனுப்பானடி கால்வாய் கி.மீ. 0.0 புட்டுத்தோப்பு முதல் 0.4 யானைக்கால் பாலம் வரை தூர் வாரி சுத்தம் செய்து தடுப்புகள் கட்டப்பட வேண்டும். இதே போன்று, கிருதுமால் நதி வாய்க்காலைத் தூர் வாரி, சுத்தம் செய்து தடுப்புகள் கட்டப்பட வேண்டும். இதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து இப்பணியை உடனடியாகச் செய்ய வேண்டும்.

அனைத்து புறம்போக்கு இடங்களில் குடியிருந்துவரும் மக்களுக்கும் திடீர் நகர், ஹிராநகர், ஊரணிப் பிள்ளையார் கோயில் பகுதிகள், செல்லூர் பகுதிகள், மஹபூப்பாளையம், ஹரிஜன் காலனி பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடியிருப்புப் பட்டா வழங்க ஏற்பாடு செய்து தர வேண்டும்.

2012 ஏப்ரல் 23] [திரு. ஆர். சுந்தர்ராஜன்]

கடந்த ஆட்சியாளர்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட கோமாஸ்பாளையம் பகுதி மக்களுக்கு, அரசு கருணை உள்ளத்தோடு வீடு கட்டித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

***திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதத்தின் பொன்மாதா, எங்களின் குல மாதா, தமிழர்தம் உரிமையை மீட்டெடுக்க புறப்பட்ட புறநானூற்று தாய், கொடியோர் கூட்டம் அடியோடு வீழ்ந்திட வித்திட்ட புரட்சித் தாய், எழுச்சிமிகு தமிழகத்தை எழுப்பியே திருவேன் என சங்கநாதம் ஒலித்து நிற்கும் எம் சிங்க நிகர்த் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். ஏழைகளின் இதய சிம்மாசனத்தில் நீங்கா இடம் பெற்றுள்ள எங்கள் இதய தெய்வமே!

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எளியவனான என்னை, இரண்டாம் முறையாக 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய எங்களது இதய தெய்வம், தமிழர் நெஞ்சமெல்லாம் கொலு வீற்றிருக்கும் குலமகளாம் தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தாயே, தங்களின் ஆட்சியின் மாட்சியைக் கண்டு இன்றைக்கு தமிழகமே தங்களை வியந்து போற்றுகிறது அம்மா! 11 மாத ஆட்சிக்காலத்திற்குள் தாங்கள் தந்திட்ட எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களையும், சமூகப் பாதுகாப்பிற்கான பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் கண்டு பாரத நாடே தங்களின் தலைமையை ஏற்க இன்றைக்கு ஆவலாக நிற்கின்றது அம்மா!

மைனாரிட்டி கருணாநிதியினுடைய குடும்ப ஆட்சி நடத்தி, ஊழலில் ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்து, வாரிசுகளின் முடி சூடலுக்காக தமிழர்தம் வரலாற்று உரிமைகளை தாரைவார்த்தவர்களின் அலங்கோல ஆட்சியால், ஆடம்பர ஆட்சியால், அதிகார துஷ்பிரயோக ஆட்சியால் உருக்குலைந்து போன தமிழகத்தை அம்மா உங்களின் பேராற்றலால், நுண்மதி

[திரு. எம். ரெங்கசாமி] [2012 ஏப்ரல் 23

ஆளுமையால், நிருவாகத் திறமையால், தாயுள்ள சிந்தனையால் இன்றைக்கு ஒப்பற்ற மாநிலமாக, இந்தியாவின் முன்னோடி மாநிலமாக உயர்த்தியிருக்கின்றீர்கள் அம்மா! 7 கோடி தமிழர்கள் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்கள் அம்மா!

முற்பகல் 11–35

'தானே' புயலால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து புயல் நிவாரணப் பணிகளை புயலைவிட வேகமாக செயலாற்றி கடலூர், விழுப்புரம் மாவட்ட மக்களின் துயர் துடைத்த தாயே! மத்திய அரசு கேட்ட புயல் நிவாரணத் தொகையை கிள்ளிக் கொடுத்தபோதும், மாநில அரசின் பங்காக நிதியை அள்ளிக் கொடுத்த வள்ளலே! வணங்குகிறேன் அம்மா! 12 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டான இவ்வாண்டு இரண்டு இலட்சம் கோடி இலட்சிய இலக்கை வைத்து, அதற்காக இந்த ஆண்டு ரூ.28,000 கோடியை நிதியாகத் தந்திருக்கின்றது மாண்புமிகு அம்மாவினுடைய அரசு.

புதுவாழ்வுத் திட்டம் மேலும் 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, வரும் நிதியாண்டில் ரூ.350 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த உள்ளதை மக்கள் நன்றியோடு வரவேற்கின்றார்கள் தாயே! அதைப்போல், கிராமப்புற மக்களுடைய ஏழ்மை நிலையை இதுவரை பார்த்துக்கொண்டிருந்த ஆட்சியாளர்களைப்போல அல்லாமல், இன்றைக்கு நகர்ப்புற ஏழ்மை நிலைகளைப் போக்கிட தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் என்ற புதிய திட்டத்தை உருவாக்கி வரவு செலவுத் திட்டத்தில் ரூ.250 கோடி நிதியொதுக்கீடு செய்து, நகர்ப்புறத்தில் வாழும் வறியோர்களின் வாழ்க்கையில் வசந்தத்தை உருவாக்கிய அற்புதமானத் திட்டம் தந்த அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல், வீட்டுமனை இல்லாத ஏழைகளுக்கு இந்த ஆண்டு ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பு திக்கற்றோருக்கு திசைகாட்டும் ஒளியாய் அமைந்துள்ளது அம்மா! நீதித் துறைக்கு ரூ.736.15 கோடி நிதியொதுக்கீடு செய்திருப்பது நீதித் துறை பரிபாலனத்தின்மீது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது அம்மா!

இரண்டாம் பசுமைப் புரட்சி என்னும் தாரக மந்திரத்தோடு, விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்னும் காந்தியடிகளின்

2012 ஏப்ரல் 23] [திரு. எம். ரெங்கசாமி]

சிந்தனைக்கு ஒப்ப வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, தாய் உள்ளத்தோடு எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.3,804.96 கோடி நிதியொதுக்கீடு செய்து, கடந்த ஆண்டு 105 இலட்சம் டன் உற்பத்தி என்ற சாதனை அளவை எட்டிய மாண்புமிகு அம்மாவின் அரசு வரும் ஆண்டில் 120 இலட்சம் டன் வேளாண்மை உற்பத்தியினை இலக்காக நிர்ணயித்திருப்பது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற ஓர் உன்னதமான திட்டமாகும் அம்மா!

அதைப்போல், நெல், பயிர் போன்ற விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கெல்லாம் கொள்முதல் விலையை உயர்த்தியதோடு, எத்தனால் உற்பத்தியினை அதிகரிப்பதன்மூலம் கரும்பு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைத்திட திட்டம் வகுத்துள்ளதை விவசாயிகள் இன்றைக்கு நன்றிப் பெருக்கோடு வரவேற்கின்றார்கள் அம்மா!

தமிழ்ப் புத்தாண்டை சித்திரை முதல் நாளில் கொண்டாடி வந்த தமிழர்களின் பாரம்பரியம் மிக்க உணர்வுகளைப் புண்படுத்தி, மிதித்து சிதைத்தவர்களின் குணக்கேடான கொள்கை முடிவுகளைத் தூக்கியெறிந்து, உலகத்தில் உள்ள 10 கோடி தமிழர்களின் நெஞ்சிலே பால்வார்க்கும் வண்ணம், தமிழர் புத்தாண்டு தினத்தை சித்திரை முதல் நாளிலேயே மீட்டெடுத்துத் தந்த தமிழர்களுடைய தலைமகளே, நன்றி மலர்களை தமிழ் உலகம் காணிக்கையாக்குகிறது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

புதுப்பொலிவோடு தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழாவினை அறுசுவை உணவோடு விவசாயிகள் தங்கள் இடத்திலேயே கொண்டாடிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளின் வேதனையைத் தீர்க்க வந்த அரசினுடைய நல்லாட்சி, வேளாண்மைத் திட்டங்களை, சலுகைகளைப் பயன்படுத்தும் வழிமுறைகளை, பலன் பெறும் விதிமுறைகளை, புதிய தொழில்நுட்ப அணுகுமுறைகளை அறிந்துகொள்ள ஏதுவாக அரசைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி அரசு என்ற புதிய பரிமாணத்தை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வேளாண் பெருமக்கள் வணங்கி, பாராட்டுகின்றார்கள் அம்மா!

பள்ளிக் கல்வித் துறையில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு புதிய அளவாக ரூ.14,552.82 கோடி நிதியொதுக்கீடு

[திரு. எம். ரெங்கசாமி] [2012 ஏப்ரல் 23

செய்து, வண்ண பென்சில், புத்தகப் பை, ஜியாமெட்ரிக் பாக்ஸ், உலக வரைபடம், 4 ஜோடி சீருடைகள், காலணி, இடைநிற்றலைத் தடுக்க ஊக்கத் தொகை வைப்பீடு, பஸ் பாஸ், விலையில்லா மிதிவண்டி, விலையில்லா மடிக் கணினி என அனைத்தையும் மாணவர்களின் பெற்றோர்களைப் போல, பார்த்துப் பார்த்து வழங்கிய எங்கள் அன்னையே! எல்லாவற்றையும் கொடுத்த நீங்கள் நோட்டுப் புத்தகத்தை மட்டும் கொடுக்கின்ற சுமையை ஏன் பெற்றோர்களுக்குத் தரவேண்டும் என்று அதையும் இந்த ஆண்டு முதல் நானே தாயாக வழங்குகின்றேன் என்று சொல்லி ஆணையிட்டு வழங்குகின்ற அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் கலைமகளின் மறு உருவாக, கல்விக்கோர் பொற்கால ஆட்சியாக இவ்வாட்சியை மாணவர் சமுதாயம் போற்றி வணங்குகின்றது அம்மா!

முற்பகல் 11–40

தஞ்சை மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியாக விளங்குகின்ற திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டி பகுதியிலே, காய்ந்த பூமியில் பெய்த மழையாக அரசு பொறியியல் கல்லூரி ஒன்று இந்த ஆண்டு முதல் செயல்பட ஆணை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கருணை தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாகவும், இந்த எளிய தொண்டனின் சார்பாகவும், கோடானுகோடி நன்றி மலர்களை தங்களுடைய பாத மலர்களில் காணிக்கையாக்குகின்றோம், தாயே!

தமிழகத்தில் தொழில் துறையில் புதிய அணுகுமுறை, சட்டம்–ஒழுங்கு சீரிய முறையில் நிருவகிக்கும் பாங்கு, சாலைக் கட்டமைப்பு வசதிகள், வீடற்றோரின் வீட்டுக் கனவை நினைவாக்கும் வீட்டு வசதி வாரியத் திட்டங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள், சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள், தொழிலாளர் நலத் திட்டங்கள், மீனவர் நலத் திட்டங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், இலங்கை தமிழர்கள் நலன், சிறுபான்மையினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் நலன், திருநங்கைகள் நலன், மாற்றுத் திறனாளிகள் நலன், நெசவாளர்கள் நலன் ஆகிய சிறப்புத் திட்டங்களால் உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை மொத்தத்தில் தமிழ் மக்களுடைய வாழ்க்கையை உயர்த்த வந்த அட்சய பாத்திரமாக, கற்பக தருவாக, காமதேனுவாக, அமுதசுரபியாக மக்கள் போற்றிப் பாராட்டுகின்றார்கள் அம்மா!

2012 ஏப்ரல் 23] [திரு. எம். ரெங்கசாமி]

ஆனால், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அதிரடியான மக்கள் நலத் திட்டங்கள், அவற்றை நிறைவேற்றுகின்ற ஆட்சி நிருவாகத்தைப் பார்த்து தங்களுடைய அரசியல் எதிர்காலமே சிதறப் போவதை, நிர்மூலமாகப் போவதை எண்ணி பதறிப்போய், கதிகலங்கிப் போய், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிரிக் கட்சியாக இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினுடைய திட்டங்களை, 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்ற வகையில் வெற்று வார்த்தைகளால் மனசாட்சியை மறைத்து, தங்கள் மனதில் தெளிவாகத் தெரிந்த உண்மைகளை மறைத்து, இங்கே குறை சொல்ல வேண்டும் என்பதற்காக எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் தாயே!

தங்களுடைய தேர்தல் வாக்குறுதிகள் அத்தனையையும் நிறைவேற்றுகின்ற வகையில், விலையில்லா அரிசி 1.85 கோடி குடும்பங்களுக்கு வழங்கியும், சமூகப் பாதுகாப்பு வழங்கிடும் அடிப்படையில் இரட்டிப்பாக்கப்பட்ட ரூ.500–லிருந்து ரூ.1,000 ஆக முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகளுக்கான மாத உதவித் தொகையை வழங்கியும், ஏழையெளிய திருமணமாகாத பெண்களுக்கு தாலிக்கு 4 கிராம் தங்கம், 10 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் ரூ.25,000/–, பட்டம், பட்டயம் படித்திருந்தால் ரூ.50,000/– என்ற திருமண நிதி உதவித் திட்டம்; மகப்பேறு கால உதவியை ரூ.6,000/–லிருந்து ரூ.12,000/–ஆக உயர்த்தி வழங்குகின்ற திட்டம்; இல்லத்தரசிகள் இன்பம் பெற்றிட 1.85 கோடி குடும்பத்தினருக்கு மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்குகின்ற திட்டம்; ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட கறவை பசு மாடுகள் வழங்குகின்ற திட்டம்; மிகவும் வறியோர் வாழ்வில் ஒளிபெற நான்கு ஆடுகள் வழங்குகின்ற திட்டம்; சூரிய சக்தியுடன் ஒளிபெறும் பசுமை வீடு வழங்குகின்ற திட்டம்; விலையில்லா மடிக் கணினி வழங்கி கல்விப் புரட்சியினை உருவாக்குகின்ற தொலைநோக்குத் திட்டம்; மீனவர்கள் மீன்பிடி தடைக்கால உதவித் தொகையாக ரூ.1,000–த்தை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்குகின்ற திட்டம். அதைப்போல, தமிழக முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

[2012 ஏப்ரல் 23

திரு. எம். ரெங்கசாமி: புதிய அதிகரிக்கப்பட்ட உதவித் தொகை 4 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற உன்னதத் திட்டம். இப்படிப்பட்ட அற்புதமான திட்டங்கள் எல்லாம் இந்திய துணைக் கண்டத்தில், எந்த மாநிலத்திலும் நிறைவேற்றப்படாத திட்டங்களையெல்லாம் பார்த்து இன்றைக்கு தமிழகத்தை மீட்க வந்தவராக, வாழ்வில் ஒளியேற்ற வந்தவராக தங்களை மக்கள் எண்ணுகிறார்கள். நடந்து முடிந்த சங்கரன்கோவில் இடைத்தேர்தலிலே சவாலுக்கு அழைத்தவர்களை எல்லாம் சந்தியில் நிற்க வைத்து, இடைத்தேர்தல் மாமன்னன் என்று தனக்குத்தானே பட்டம் சூட்டிக் கொண்டவர்களை எல்லாம் மண்ணைக் கவ்வ வைத்து, எதிர்த்து போட்டியிட்ட அனைவரது காப்புத் தொகையையும் (மேசையைத் தட்டும் ஒலி) கனவுத் தொகையாகத் தீர்ப்பளித்து, 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல இன்றைக்கு தமிழக மக்களுடைய எண்ணத்தை அந்த இடைத்தேர்தல் பிரதிபலித்துக்காட்டியிருக்கிறது அம்மா!

முற்பகல் 11.45

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை என்பது ஓர் உணர்வுபூர்வமான துறை. 'தனி மனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற முண்டாசுக் கவிஞன் பாரதியின் வரிகளுக்கு உயிரளிக்கின்ற வகையில் இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே முன்னோடி மாநிலமாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக 4,900 கோடி ரூபாய் உணவு மானியம் வழங்கி, 1.85 கோடி குடும்பங்களுக்கு விலையில்லா அரிசி வழங்குகின்ற ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் மக்கள் நலன் காக்கும் அரசு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் உலகிற்கு ஓர் உதாரணமாக விளங்குகின்றீர்கள் அம்மா. 10 பிள்ளை பெற்றவருக்கு தலைச்சன் பிள்ளை பெற்றவர் மருத்துவ ஆலோசனை சொன்ன கதையாக தமிழகத்திலே இன்றைக்கு உணவுப் பாதுகாப்பை நூறு சதவீதம் நிறைவேற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு மத்திய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரிலே தமிழகத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கின்ற உணவு வழங்குகின்ற திட்டங்களுக்கு இடையூறாக இருப்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்து, வன்மையாகக் கண்டித்து இருக்கின்ற

2012 ஏப்ரல் 23] [திரு. எம். ரெங்கசாமி]

மாண்புமிகு அம்மாவினுடைய நடவடிக்கையை தமிழக மக்கள் நன்றியோடு வரவேற்கின்றார்கள் தாயே!

இன்றைக்குத் தமிழகத்திலே நேரடிக் கொள்முதல் நிலையங்களை எப்போதையும்விட அதிக அளவில் திறந்து, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை முழுமையாகக் கொள்முதல் செய்து ஒவ்வொரு, விவசாயியினுடைய வாழ்வில் மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தீர்கள் தாயே! அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் சார்பாக விவசாயிகளுடைய பயிர்க் கடன் தொகையை 4,000 கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பது விவசாயிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல் கடந்தகால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1996 லிருந்து 2001 வரையான ஆட்சிக் காலத்தில் முறைகேடாக தேர்தல் நடத்தி, அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள், அவர்களாக முறைகேடாகப் பணி நியமனம் மூலமாகவும், அதேபோல அங்கே இஷ்டத்திற்குச் சம்பளத்தை உயர்த்தி தீர்மானங்களைப் போட்டும், ஒட்டுமொத்தமாகக் கூட்டுறவுத் துறையை நாசப்படுத்தியவர்கள் கடந்த கால மைனாரிட்டி ஆட்சியாளர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொண்டு, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கூட்டுறவுத் துறை சிறப்பாக நிருவாகம் செய்யப்படுகிறது என்பதை மக்கள் போற்றி வரவேற்கின்றார்கள் என்பதை இங்கே தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சாவூரில் தேர்தல் வாக்குறுதி அளித்தவாறு பல் மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர பணிவுடன் வேண்டுகிறேன்.

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தை மீண்டும் புத்துயிரூட்டி, கருணாநிதியின் மைனாரிட்டி ஆட்சியில் காழ்ப்புணர்ச்சியோடு புறக்கணிக்கப்பட்டுள்ள தமிழ் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள்

சிறக்க ஒரு பெருந்தொகையை வைப்பீட்டுத் தொகையாக வங்கியில் செலுத்தி அதன் வட்டியின் வாயிலாக நிருவாகம் சிறக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

***திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை சம்பந்தமாக பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு, கூட்டுறவைப் பொறுத்தவரையில், உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, நுகர்வோர் பாதுகாப்பு என்று மூன்று அம்சங்களை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு உள்ளடக்கி இருப்பதாக நான் அறிகிறேன். இதிலே என்னுடைய கருத்தை மூன்று விதமாகப் பதிவு செய்வது உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிற வரவேற்கத்தக்க அம்சங்கள், பொதுமக்களின் தேவைகளைப்பற்றி அரசுக்கு என்னுடைய அன்பான வேண்டுகோள், நீக்க வேண்டிய குறைபாடுகள் சம்பந்தமாக பொது பட்ஜெட்டின்போது நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு ஆக்கபூர்வமான விமர்சனம் என்று மூன்றுவித அடிப்படையிலே என்னுடைய கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வரவேற்கத்தக்க அம்சங்களில் நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கும் இந்தியாவிலே இரண்டு விதமான விநியோக முறைகள் இருக்கின்றன. ஒன்று Targeted Public Distribution System மற்றொன்று Universal Public Distribution System, இலக்குடன்கூடிய பொது விநியோகம், எல்லோருக்குமான பொது விநியோகம். எல்லோருக்குமான பொது விநியோகத்தில் கையாளுகிற, அனுஷ்டிக்கிற ஒரு சில மாநிலங்களில் இன்றைக்கும் தமிழகம் ஒரு மாநிலமாக இருக்கிறது என்பது வரவேற்கத்தக்கது என்று நான் சொல்கிறேன்.

அடுத்து, மத்திய அரசு உருவாக்கி வருகிற, உத்தேசித்திருக்கிற உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்பது குறைபாடுகள் அடங்கிய ஒரு சட்டமாக இருக்கிறது. அது சம்பந்தமாக ஏராளமான

2012 ஏப்ரல் 23] [திரு. ஆர். ராமமூர்த்தி]

விவாதங்களும், விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், உத்தேசிக்கிற அந்த உணவுப் பாதுகாப்புச் சட்டம் உசிதமானது அல்ல. தமிழ்நாட்டிற்கு எந்த வகையிலும் அதனால் பயன் இருக்காது என்று தமிழக அரசு அந்த உணவு பாதுகாப்புச் சட்ட அமலாக்கத்திலிருந்து விதிவிலக்கு கோருவதாக நான் பத்திரிகைகளில் படித்தேன். அது உண்மையென்று சொன்னால், அது வரவேற்கத்தக்கது என்று கருதுகிறேன். ஆனால் மத்திய அரசினுடைய . . . (குறுக்கீடு)

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றார்கள், தொடர்ந்து எதிர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அது தமிழக மக்களுடைய நலனுக்கு எதிரான திட்டமாக இருக்கிறது, மசோதாவாக இருக்கிறது என்பதனை ஆணித் தரமாகக் கூறி, அதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்ப்பை தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 14 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியை விலையில்லாமல் வழங்கி, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிலே நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருவது தமிழ்நாடு அரசு மட்டும்தான் என்றும், ஒரே முதலமைச்சரும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு கொண்டு வருகிற புதிய பொது விநியோகத் திட்டம் இருக்கிறதே, அதில் கிராமங்களுக்கு 75 சதவிகிதம், நகரத்திலே வாழ்கிற மக்களுக்கு 50 சதவிகிதம் என ஒரு குளறுபடி உள்ளது. அதிலே பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் குளறுபடி இருக்கிறது. எனவே, எங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையில் நாங்கள்

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

அத்தனை பேருக்கும் உணவு அளிக்கின்றோம். தமிழகத்திற்கே உணவுப் பாதுகாப்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, தமிழ்நாட்டிற்கு மத்திய அரசினுடைய உணவுப் பாதுகாப்பு மசோதா தேவையில்லை என ஆரம்பத்திலிருந்தே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆனால் மத்திய அரசின் உலகமயமாக்கல் கொள்கையின் விளைவாக அனைத்தும் தனியார்மயமாக்கல் என்கிற திசையில் செல்கிறபோது, தமிழகத்திலுள்ள 33 ஆயிரத்து 222 நியாய விலைக் கடைகளில் ஒரு கடைகூட தனியார்வசம் விடப்படவில்லை என்பது வரவேற்கத்தக்க அம்சமாக நான் பார்க்கிறேன்.

அடுத்து அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் மத்திய அரசு வழங்க வேண்டிய அரிசிக்கு மூன்று ரூபாய் விலை நிர்ணயம் செய்தாலும்கூட, அதை விலை கொடுத்து வாங்கி அதை விலையில்லாத அரிசியாக வழங்குவதை ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக நான் பார்க்கிறேன்.

அடுத்து மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டில், 52,700 கிலோ லிட்டர் என்று ஏப்ரல் மாதம் 2003 ல் ஒதுக்கிய ஒதுக்கீட்டை 39,429 என்று குறைத்ததை எதிர்த்து நம்முடைய தமிழக அரசு மாநில உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது என்கிற விஷயத்தை நாங்கள் வரவேற்கிறோம். இது வரவேற்கத்தக்க அம்சங்களில் நான் சொல்ல வேண்டிய ஒரு விஷயம்.

வேண்டுகோளாக நான் ஒன்றை வைக்க விரும்புகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில், உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள திருநாவலூர் கூட்டுறவு சொசைட்டியில் விவசாயிகளின் அடகு வைக்கப்பட்டிருந்த நகைகள் 1750 பவுனுக்குமேல் திருடு

2012 ஏப்ரல் 23] [திரு. ஆர். ராமமூர்த்தி]

போய்விட்டன. 2010 மார்ச் மாதத்தில் முதல் தகவல் அறிக்கை மட்டும் ரகசியமாக திராவிட முன்னேற்றக் கழக அரசால் பதியப்பட்டதேயொழிய, இன்றைக்கும் திருடர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த ஆட்சியிலும் அது நீடிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சம்பவம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே நடந்தது. அது நடந்ததனுடைய விளைவாக, இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட துணைக் கண்காணிப்பாளரிடம் இதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இப்போது அது தொடர் நடவடிக்கையில் இருக்கிறது. அதிவிரைவில் அதில் தவறு செய்தவர் யார் என்று கண்டறிந்து அவர்மீது உறுதியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் வருத்தமாகச் சொல்லக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த நகைகளுடைய மதிப்பு மூன்று கோடி ரூபாய்க்குமேல் இருக்கும். நகைகளை இழந்த விவசாயிகளை மற்றவர்கள் பார்த்து எள்ளி நகையாடுகிற ஒரு சூழ்நிலையிலே அந்த விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஈரோட்டிலே நில குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒன்று இருக்கிறது. 3,250 உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைக் கலைப்பது என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அப்படிக் கலைக்கும்பட்சத்தில் அங்கு சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு அந்த நிலத்தை பட்டா செய்து தர வேண்டும் என்பது என்னுடைய அடுத்த வேண்டுகோள்.

[திரு. ஆர். ராமமூர்த்தி] [2012 ஏப்ரல் 23

முற்பகல் 11–55

அடுத்து, 500 குடும்ப அட்டைகள் இருந்தால் முழுநேர நியாய விலைக் கடைகளும், 150 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் கொடுக்கப்படும் என்ற அரசின் கொள்கை பாராட்டுக்குரியது. ஆனால் நடைமுறையில், அவ்வாறு கடைகளை உருவாக்குவதிலும், பிரிப்பதிலும் போதிய முன்னேற்றம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அதைச் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து அரிசியோ மற்ற உணவு... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 குடும்ப அட்டைகள் இருந்தால் ஒரு முழுநேர நியாய விலைக் கடையும், 150 குடும்ப அட்டைகள் இருந்தால், ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லிவிட்டு, அதிலே பல இடங்களில் நடைமுறையில் இல்லை என்ற கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். பல இடங்களில் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. எங்கே இதுபோன்ற குறைபாடு உள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினால், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களுக்கு எனது வேண்டுகோள் என்னவென்று சொன்னால், விமர்சனங்களிலே இரண்டு வகைகள் உண்டு. ஒன்று பொதுவான விமர்சனம். மற்றொன்று குறிப்பான விமர்சனம். பொதுவான விமர்சனத்தை, எங்களுக்குக் கிடைக்கின்ற தகவல்கள் மற்றும் பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையில்தான் நாங்கள் பேச முடியும். குறிப்பான விமர்சனம் என்று பார்க்கும்போது குறிப்பிட்ட அமைச்சரையோ, அதிகாரிகளையோ நாங்கள் குற்றம் சாட்டுகிறோம் என்று சொன்னால் அதற்கு

2012 ஏப்ரல் 23] [திரு. ஆர். ராமமூர்த்தி]

ஆதாரம் கேட்பது சரி, நியாயம். ஆனால், எங்களுக்குக் கிடைக்கின்ற தகவலை மாமன்றத்தில் சொல்லி, அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டுவந்து குறைகளைக் களைய வேண்டும் என்பதுதான் நோக்கமேயொழிய, குற்றச்சாட்டு என்று தயவுசெய்து எடுத்துக்கொள்ள வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அந்த அடிப்படையிலேதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்வதாகச் சொல்லவில்லை. எந்தப் பகுதியில் 150 குடும்ப அட்டைகளுக்குமேல் இருக்கின்றன, எந்தப் பகுதியில் 500 குடும்ப அட்டைகளுக்குமேல் இருக்கின்றன என்று இடங்களைக் குறிப்பிட்டு கோரிக்கை வைத்தால், அந்த இடங்களிலெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக அங்காடிகளைத் திறக்கும் என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதேபோன்று, நியாயவிலைக் கடைகளில் அரிசி மற்றும் உணவுப் பொருட்களை வழங்கும்போது எடை போட்டுக் கொடுப்பதற்கு பதிலாக பாக்கெட்டுகளாகக் கொடுத்தால் எடைக் குறைவையும் தவிர்க்க முடியும்; நேரத்தையும் மிச்சம் பிடிக்க முடியும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, நியாயவிலைக் கடைகளில் வேலை செய்கின்ற பெண் ஊழியர்கள் எடை போடுகின்றபோது அவர்களே மேலே இருக்கின்ற மூட்டைகளை இறக்கிப் பிரித்து எடைபோட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட வேலைகளில் பெண் ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டாம் என்று விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 500 குடும்ப அட்டைகளுக்குமேல் இருந்தால் அந்தக் கடையில் கட்டுனர் (packer) பதவியிலே ஒருவர் இருக்கிறார். இதை நடத்துவது கூட்டுறவுச் சங்கங்கள்தான், அரசு நிறுவனம் அல்ல. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்றபோது ஏதாவது ஒரு நியாய விலைக் கடையில் இது போன்ற நிலைமை இருக்குமானால், இதுபோன்ற நிலைமை எங்கேயாவது இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால், அந்த இடத்தில் அவர்களுக்கு அதுபோன்ற பணிகள் தவிர்க்கப்படும்; அவர்களுக்கு வேறு பணிகள் கொடுத்து, அல்லது அந்த இடத்தில் வேறு ஒருவரைப் பணியிலமர்த்தி நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) பத்து நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்றபோதெல்லாம் குறுக்கீடுகள் வந்துவிடுகின்றன. அடுத்து, ஊழியர் பற்றாக்குறை காரணமாக ஒரே ஊழியர் பல கடைகளுக்கு பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதைத் தவிர்த்தால் பொதுமக்களுக்கு நலம் என்று நான் கருதுகின்றேன். அதேபோன்று, பொது விநியோகத் திட்டத்தில், அரிசி, கடலைப் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் போன்றவை விநியோகிக்கப்படுகின்றன என்பது நல்ல அம்சம். இதில் நான் வருத்தத்தோடு சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்று சொன்னால்—நான் கொள்கை விளக்கக் குறிப்பில் பார்த்தேன்—இதற்கே ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் மானியம் என்று அரசு அறிவித்திருக்கிறது. இது கூடுதல் செலவினம்தான் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அதேசமயத்தில், உயர்ந்து வருகின்ற விலைவாசியை எதிர்கொள்கின்ற நிலையிலே மக்கள் இல்லாத சூழ்நிலையில் அதன் அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. ஆர். ராமமூர்த்தி]

அடுத்து, நியாய விலைக் கடைகளில் எளிதாகக் கிடைக்க வேண்டிய பொருட்களைக்கூட குறித்த நேரத்திலே வாங்கவில்லை என்று சொன்னால் அரிதாகப் போய்விடும் என்று பொதுமக்கள் ஒரே நேரத்திலே நியாய விலைக் கடைகளை முற்றுகையிடுகின்ற, முண்டியடித்து நிற்கின்ற ஒரு சங்கடமான சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் தவிர்க்கப்பட வேண்டிய வாய்ச் சண்டை, சட்டம்–ஒழுங்கு பிரச்சினை வருகிறது. எனவே, பகுதிவாரியாகப் பிரித்து அறிவிக்க வேண்டுமென்று–(குறுக்கீடு)

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், அமைச்சர்கள் அடிக்கு ஒரு முறை குறுக்கிடுகிறார்கள், நாங்கள் எப்படி பேச முடியும் என்று. தவறான கருத்துகளை எல்லாம் பதிவு செய்யும்போது இந்த மன்றத்திலே என்ன நிலைமை ஏற்படும்? அவர் நல்ல அனுபவம் வாய்ந்தவர். நிறைய கருத்துகளுக்குச் சொந்தக்காரர். இந்த மாமன்றத்தில் உண்மையான கருத்துகள் எதுவோ அவைதான் பதிவாக வேண்டும். தவறான கருத்துகள் பதியக்கூடாது என்பதற்காகத்தான் அமைச்சர்கள் குறுக்கிடுகிறோமேயொழிய வேறல்ல. இப்போதுகூட பாருங்கள். எந்த நேரத்தில், எங்கு அதுமாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறது? இதுவரைக்கும் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை. ஒரே நேரத்தில் சில நூகர்வோர்கள் வருவார்கள். இது இயற்கைதானே! சாதாரணமாக ஒரு கடையிலே போய்ப் பார்க்கும்போது முதலில் ஒரு 10 நாட்கள் தனியார் கடைகளில்கூடத்தான் அப்படி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். நீங்கள் உங்களுடைய மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். ஏற்கெனவே நீங்களே சொன்னீர்கள். இந்தியாவிலேயே பொது விநியோகத் திட்டத்தில் தமிழக அரசுதான், அதுவும் மாண்புமிகு அம்மாவின் அரசு வந்த பிறகுதான் பொதுமக்களுக்கு நியாயமாகவும், நேர்மையாகவும் பொருட்கள் கொடுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: தவறாக எண்ண வேண்டாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விலையில்லா அரிசி போன்ற நல்ல திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கக்கூடியது நம்முடைய கூட்டுறவுத் துறை என்று தெரிவித்தார். ஆனால், ஊழியர்கள் எவ்வளவு பற்றாக்குறையாக இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை. 4 கடைகளை ஒரே ஊழியர் பார்த்தால், 4 கிராம மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சிரமத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இதுசம்பந்தமாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? அதை மட்டும் சொல்லிவிடுங்கள், போதும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் முதலிலேயே சொன்னோம். அதிவிரைவிலே பணியாளர்களை எடுக்கப் போகிறோம். ஒரு பக்கம் அம்மாவினுடைய அரசு அவர்களை எடுக்கப் போகிறது. இந்த மாதிரி சிரமங்கள் ஏற்படக் கூடாது என்பதற்காக அம்மாவின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்துகொண்டு இருக்கிறது. இன்னும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார். ஒருவரே நான்கைந்து கடைகளைத் திறக்க வேண்டியுள்ளது என்று. இங்கே அதிகமான உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்களென்றால், பகுதிநேரக் கடைகள் கேட்கிறார்கள். இதை நடத்துவது குறித்து நான் ஏற்கெனவே சொன்னேன். ஒரு சங்கம்தான் நடத்துகிறது. எனவே ஒருவர்தான் ஒரு கடையைத் திறக்க வேண்டும். அந்தப் பணியாளர்தான் அந்தப் பகுதிநேரக் கடையையும் திறக்க வேண்டும். அப்படித் திறக்கின்றபோது இங்கே 3 நாள், அங்கே 3 நாள் என்று போகும்போது, அவர் அடுத்த கடையைப்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

பார்க்கும்போது ஒரு கடை அடைக்கப்பட்டிருக்கும். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், இந்தப் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் அதிவிரைவில் நடக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பகுதிநேரக் கடைகளுக்கு வாரத்தில் அங்கே 3 நாள், இங்கே 3 நாள் என்று பிரித்துக்கொண்டு விநியோகம் செய்கிறார்கள் என்று சொன்னார். அதில் தவறில்லை. ஆனால், ஒரு பணியாளரே ஒன்றுக்கும் மேற்பட்ட கடைகளுக்கு in charge என்று போடப்படுகிறது. அதை நீங்கள் பணி நியமனம் செய்கிற காலத்தில் நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக, இப்பொழுதே வேறு துறைகளிலிருந்து பணியாளர்களை deputation–ல் போட்டு அந்தக் கடைகளுக்கு நிரந்தரமாக, ஒரு நபருக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் நியமனம் செய்தால் இந்தத் திட்டம் இன்னும் மிகச் சிறப்பாக அமையும் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுதும் ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார். எந்த ரேஷன் கடையில் எந்த ஊரில், இந்த மாதிரி நடக்கிறதென்று எங்களிடம் எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் என்னிடம் வந்து, இந்தக் கடையில் இந்த மாதிரி இல்லை என்று சொல்லியிருந்தால், உடனே நாங்கள் கேட்டு அதன்மீது நடவடிக்கை எடுத்திருப்போமே? அம்மா அவர்கள் அதற்குத்தானே எங்களை இங்கு உட்கார வைத்திருக்கிறார்கள்? அதனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு, இந்தச் சங்கத்தில், இந்தக் கடையை, இந்தக் கிராமத்தில் திறக்கவில்லை, இவர் 4 கடைகளைத் திறக்கிறார், அப்படியென்று சொன்னால் உடனே நடவடிக்கை

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

எடுப்பதற்கு அம்மா அவர்களின் அரசு உத்தரவிட்டிருக்கிறது. இருந்தாலும், நாங்கள் இங்கே சொல்லிக்கொள்வது என்னவென்றால், அதிவிரைவிலே பணியாளர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ராமமூர்த்தி, உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, உட்காருங்கள். முன்னரே உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ராமமூர்த்தி, பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள். இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்போது முடியும்? திரு. ராமமூர்த்தி, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் 12 விவசாயக் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. அந்தக் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் தங்களுடைய வேதனையின் காரணமாக வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். அரசு அதிகாரிகள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக வியாபாரிகளிடம் கொள்முதல் செய்கிற ஒரு தவறான அணுகுமுறை எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. இதில் என்ன விஷயம் என்று சொன்னால், விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, அரசு நிர்ணயம் செய்கிற கொள்முதல் விலைக்கு விற்று அங்கே இலாபம் அடைகிற ஏற்பாடு வியாபாரிகளுக்கு இருக்கிறதேயொழிய, விவசாயிகளுக்கு இல்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்கிறேன். அடுத்து, கூட்டுறவு . . . (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப் பற்றி குறிப்பிட்டார்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

அவருடைய விழுப்புரம் மாவட்டத்தில் 12 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன. அது இல்லாத இடங்களில் முறைகேடுகள் நடக்கின்றன, வியாபாரிகள் நெல்லைக் கொண்டு வருகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, எந்த இடத்தில் நெல் விளைச்சல் இருக்கிறதோ, அங்கே நெல்லை, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலே, விவசாயிகள் விற்க வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, அந்த இடங்களிலேயெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திட வேண்டுமென ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான், தமிழகத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் கிட்டத்தட்ட 25 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் ஆகும் என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் எந்த இடத்தில், எந்த ஊரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்த இடத்திலே உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வியாபாரிகள் அங்கே கூட்டு சேர்ந்துகொண்டு, அதனை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்கிறார்கள். அந்த மாதிரி இருந்தால் எந்த இடம் என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, சீக்கிரம் உரையை நிறைவு செய்யுங்கள். புதிய Subject–க்குப் போகாதீர்கள், நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: அடுத்து, கூட்டுறவு விற்பனை நிலையங்களிலே விவசாயிகள் தானியங்களை விற்கிறபோது பணப் பட்டுவாடா செய்வதில் 30 நாட்கள்கூட ஆகிறது. அதிலே வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், விற்ற விவசாயிகள் பணம் வேண்டுமென்று மறியல் செய்தால் நியாயம். ஆனால்,

[திரு. ஆர். ராமமூர்த்தி] [2012 ஏப்ரல் 23

வியாபாரிகள் வாங்கிய நெல்லுக்குப் பணம் தர மாட்டோம் என்று மறியல் செய்த ஒரு நிகழ்ச்சி செஞ்சியிலே, எங்கள் மாவட்டத்திலே நடந்தது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தொடர்ந்து ஒரு தவறான கருத்தை வலியுறுத்திக்கொண்டே வருகிறார். கூட்டுறவுத் துறை முகவராகத்தான் செயல்படுகிறது. கூட்டுறவுத் துறையின் மூலமாக Civil Supplies Corporation-க்கு வாங்கிக் கொடுக்கப்படுகிறது. எனவே, நெல் கொள்முதல் நிலையங்களுக்கு போனவுடன், நெல்லை Civil Supplies Corporation-க்கு அனுப்பி, அங்கிருந்து வருகின்ற பணத்தை வங்கிகளில் வாங்கிய கடன்களுக்காக அதை வரவு செய்து கொண்டு, மீதி இருக்கிற பணத்தை, நம்முடைய விவசாயிகளுக்குக் கொடுப்பதுதான் நடைமுறையில் உள்ளது. எனவே, இதில் விவசாயிகள் மறியல் செய்வதற்கு வாய்ப்பே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள், தாங்கள் விற்ற நெல்லுக்கு வியாபாரிகள் பணம் கொடுக்கவில்லை என்றும் விவசாயிகள் மறியல் செய்தார்கள் என்றும் சொன்னார்கள். அதாவது, இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுவதன் நோக்கமே, விவசாயிகள் நேரடியாக நெல்லைக் கொண்டு வந்து அந்த நிலையங்களில் கொடுத்து, அரசினுடைய நெல் கொள்முதல் விலையோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் தருகிற ஆதரவு விலையையும் சேர்த்து விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காகத்தான். அந்த வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றை விவசாயிகள் சரியான முறையில்

2012 ஏப்ரல் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் ஏன் வியாபாரிகளிடம் நெல்லைக் கொண்டு சென்று விற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் எங்களுடைய கேள்வி? தயவு செய்து, விவசாயிகள் நெல்லை நேரடியாக, அவர்களே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று கொடுக்க வேண்டும். அங்கே வாங்க மறுத்தால் மாண்புமிகு உறுப்பினர் அதைச் சொல்லலாம். எவ்வளவு நெல்லைக் கொண்டு சென்றாலும் வாங்குவதற்கு தயார் நிலையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இருக்கின்றன என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, அமைச்சர்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லி, உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: இருக்கின்ற குறைபாடுகளைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன் என்பதை தயவு செய்து . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: புதிய Subject–க்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி, உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: அடுத்து, பண்ணைசாராத் கடன். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) திரு. குமரகுரு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அமைச்சர்களிடத்திலே விளக்கம் கேட்டு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) அவர் கேட்டதற்கு விளக்கம்தானே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்? (குறுக்கீடு) அவர் பேச ஆரம்பித்து 10 நிமிடத்திற்கு மேல், 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) 21 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) 21 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. 21 நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்னும் 8 உறுப்பினர்கள் பேசவேண்டும். மாண்புமிகு அமைச்சர்கள் இருவர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) திரு. ராமமூர்த்தி நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–10

திரு. ஆர். ராமமூர்த்தி: கூட்டுறவுச் சங்கத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நிரம்ப நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) திரு. குமரகுரு, ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத் தேர்தல் சம்பந்தமாக இப்பொழுது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு வருகிற 6 8 2012 அன்று வர இருக்கிறது. அதனுடைய தீர்ப்புக்குப் பிறகு அதன்மீது ஆய்வு செய்து, நிச்சயமாக தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கூடுதல் தகவல். விவசாயிகள் நலனில் அக்கறைகொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், விவசாயிகள் கொண்டுவரும் நெல் முழுவதையும் தொய்வின்றி கொள்முதல் செய்ய ஆணையிட்டுள்ளார்கள். நடப்பு கொள்முதல் பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் 1,381 கொள்முதல் நிலையங்களும், பிற மாவட்டங்களில் 266 கொள்முதல் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தவிர இடைத்தரகர்கள் வியாபாரிகள்மூலம் நெல் கொள்முதல் செய்வது முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டுமென்று அறிவுரைகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டு, கொள்முதல் பணி கண்காணிக்கப்படுகிறது. மேலும், இடைத்தரகர்கள் கொண்டுவரும் நெல்லை கொள்முதல் செய்வது தவிர்க்கப்பட அவர்களது நிலங்களின் சிட்டா, அடங்கல் நகல்கள்

2012 ஏப்ரல் 23] *[திரு. இரா. காமராஜ்]*

கோரப்பட வேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. விவசாயிகள் நேரடியாக தங்களது நெல்லை விற்பனை செய்வதற்கேற்ப விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 13 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 7,967 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுட்டெரித்த சூரியனை, வெட்டி எறிந்த தாயே! தன் குடும்பத்தை கொழுக்க வைத்த கொள்ளைக் கூட்டத்திற்கு புத்தி புகட்டிய புரட்சித் தலைவி, மாண்புமிகு அம்மா, உங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வானம் போற்றும், வானுறை தேவர்கள் போற்றும், வையகம் போற்றும், தமிழக மக்களின் உள்ளம் போற்றும் எங்கள் தாய், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா நிறைந்திருக்கும் இத்திருத்தலம் நான் வணங்கும் திருக்கோயில். தமிழக மக்களின் உள்ளமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் கழகத்தின் காவல் தெய்வம், எங்களின் இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடைக்கல் என்கிற சிறிய கிராமத்தில் சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த என்மீது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வை பட்டதால் மாபெரும் இயக்கமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகச் செயலாளராகவும், உளுந்தூர்பேட்டை ஒன்றியக் கழக துணைச் செயலாளராகவும், ஒன்றியச் செயலாளராகவும், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளராகவும், பல்வேறு பொறுப்புகளில் அமர்த்தி அழகு பார்த்து, திருநாவலூர் சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டாவது முறையாக சட்டமன்றத் தேர்தலில் உளுந்தூர்பேட்டை தொகுதி வேட்பாளராக போட்டியிட வாய்ப்பளித்து, வாக்கு சேகரிக்க உளுந்தூர்பேட்டைக்கு சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து என்னை 54,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையில் உரையாற்ற ஒரு நல்வாய்ப்பினை

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, நானும் எனது குடும்பமும் காலமெல்லாம் நன்றி மறவாதவர்களாய் இருப்போம் என அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறை, உணவுத் துறை மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி கலந்த பணிவான வணக்கத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகிறேன்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற வாக்கியத்திற்கு ஏற்ப, ஏழை எளிய விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்டு வேளாண்மைத் துறையின் இரண்டாம் பசுமைப் புரட்சியைத் தமிழகத்தில் நிகழ்த்திக் காட்டி விவசாய உற்பத்தியிலும், விவசாயிகளின் நலனிலும் பெரிதும் அக்கறைகொண்டு நலிவுற்று வரும் விவசாயத் தொழிலில் ஒரு மறுமலர்ச்சி உருவாக்கி தொலைநோக்குச் சிந்தனையுடன் தீட்டியுள்ள திட்டங்கள் வரலாற்றுப் பதிவுகள்.

கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏழையெளிய விவசாயிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 3,000 கோடி ரூபாய் பயிர்க்கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் விவசாயிகளின் நலன் கருதி, 3,280.42 கோடி ரூபாய் பயிர்க்கடனை வழங்கியது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. 2012–2013 ஆம் ஆண்டில் பயிர்க்கடன் இலக்கு கடந்த ஆண்டைவிட ரூ.720 கோடி கூடுதலாக்கி ரூ.4,000 கோடி நிர்ணயம் செய்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் தொடர்ந்து உயர்ந்திட அயராது உழைத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு விவசாயிகள் சார்பாக கோடானுகோடி நன்றி.

பிற்பகல் 12–15

ஏழையெளிய விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, வணிக வங்கிகளுக்கு இணையாக விவசாய மக்களுக்கு விரைவான சேவை அளிக்க அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

கடன் சங்கங்களில் மின்னணு வங்கி சேவை (e–Banking) தொடங்கப்பட்டது. இதன்மூலமாக நடைமுறையில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக கிராமப்புற விவசாய மக்களும் அந்தந்தப் பகுதியிலேயே பணப் பரிமாற்றம் செய்வதற்காக உன்னத திட்டத்தை ஏற்படுத்திய மக்கள் போற்றும் மாபெரும் சக்தி மாண்புமிகு அம்மா அவர்கள்.

தமிழகத்து தாய்மார்களின் வாழ்வும், அவர்களின் வாழ்க்கைத் தரமும் வளர்ந்திட கனவிலும், நனவிலும் பாடுபட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களால், கூட்டுறவுத் துறை மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 2012–2013 ஆம் ஆண்டில் ரூபாய் 500 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்ற நிலையில், ஏழையெளிய விவசாயிகளின் இல்லத்தில் ஒளியேற்றிடும் வகையில், விளைபொருட்களைப் பாதுகாக்கவும், அவற்றைச் சந்தையில் சாதகமான விலை கிடைக்கும்வரை தேக்கி வைத்திருக்க ஏதுவாகவும், தானிய ஈட்டுக் கடனை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டு வருகின்றார்கள்.

2012–2013 ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டு, ஏழை விவசாயிகளின் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் புரிந்து பல திட்டங்களை ஏழை விவசாயிகளுக்காக இரவு, பகல் என்றும் பாராமல் செயலாற்றி வரும் எங்கள் குடும்ப அன்னையே, உங்களுக்குக் கோடானுகோடி நன்றி.

ஏழை விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, உச்சகட்ட பயிர் சாகுபடி காலங்களில் விவசாயக் கூலியாட்களின் தேவை அதிகரிப்பதால், ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுகின்றது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார். ஏழை விவசாயிகள் திக்கின்றி தவிக்கும்போதெல்லாம் சீரிய திட்டமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசில் வேளாண்மை சேவை மையங்கள் தொடங்கப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக சிறு மற்றும்

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

குறு விவசாயிகள் நியாயமான வாடகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளையும் பெற்று பயன்படுத்தி வருகின்றனர். எனவே, வேளாண் சேவை மையங்கள் மூலமாக ஏழையெளிய விவசாயிகள் பயன் பெறுவதோடு மட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறைக்கும் வருவாய் ஈட்டித் தந்துள்ளது மாண்புமிகு அம்மாவின் மகத்தான அரசு.

பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, 33,222 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள், இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலத்திலும் செய்யாத மாபெரும் சாதனைகளைப் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, நடப்பு நிதியாண்டில் 4,900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டில் இருக்கின்ற 1 கோடியே 85 இலட்சத்து 59 ஆயிரத்து 784 குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியை வழங்கிய ஏழைகளின் அட்சய பாத்திரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஏழையெளிய மக்களின் நலனில் அக்கறை கொண்டு விலைக் கட்டுப்பாட்டு நிதியத்தின்மூலம், மிளகாய் வற்றல், புளி ஆகியவற்றை வாங்கி அடக்க விலையிலேயே விற்பனை செய்து, வெளிச் சந்தையில் விலையைக் கட்டுப்படுத்த ஏழைகளின் விடிவெள்ளி மாண்புமிகு அம்மா அவர்கள், ரூபாய் 50 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், நாள்தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருந்தன. என்ன செய்தி என்று சொன்னால், இரயில்கள், கண்டெய்னர்கள் மற்றும் லாரிகள் மூலமாகவும் அண்டை மாநிலங்களுக்கு அரிசியைக் கடத்திக் கொண்டிருந்ததாக செய்திகள் வந்து கொண்டிருந்தன. அப்போது, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே கேட்டபோது, அரிசி கடத்துபவர்கள்மீது நாங்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்மூலமாக கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் ஆட்சிக் காலத்திலே, அந்தக் கடத்தலில் ஈடுபட்ட எவர்மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், அவர்கள் நடவடிக்கை

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

எடுத்தது எவர்மீது என்று சொன்னால், அங்கே இருக்கின்ற டிரைவர்கள், கிளீனர்கள்மீதுதான் நடவடிக்கைகளை எடுத்தார்களே தவிர, அரிசியைக் கடத்தியவர்கள்மீது எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்ற 10 மாதங்களில் ரேஷன் அரிசி மற்றும் வேறு உணவுப் பொருட்கள் எதையாவது கடத்தினார்கள் என்றால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றங்களைத் தடுக்கின்ற வகையிலே அம்மாவின் அரசு சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகத்து மொழிகளிலேயே மூத்த மொழி தமிழ் மொழி; உலகத்து மக்களுக்கு நாகரிகம் சொல்லித் தந்தது தமிழ் மொழி; உலக மக்களுக்குப் பொதுமறை தந்தது தமிழ் மொழி; மாபெரும் காப்பியங்கள் தந்தது தமிழ் மொழி; எத்தனை எத்தனையோ பெருமைகள் பல கொண்டுள்ள தமிழன் நித்திரைகூட இன்றி உழைத்து, உழைத்து பொருள்கள் சேர்த்து; நிம்மதியாய், உண்பதற்கும், கொண்டாடுவதற்கும், சித்திரையில் ஏற்படுத்தப்பட்ட தினம் தமிழ்ப் புத்தாண்டு தினம். அதை தைக்கு மாற்றியவராம் மைனாரிட்டி மைந்தன். தமிழக வரலாற்றுப் பிழை ஏற்படுத்த துணிந்த அவரைத் தமிழ்த் தாய் என்றும் மன்னிக்க மாட்டார். மீண்டும், தமிழ்ப் புத்தாண்டு தினத்தை சித்திரைக்கு மாற்றி, சித்திரை மாதம் முழுவதும் உழவர் பெருவிழாவாக அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் கொண்டாடுவதோடு ஏழையெளிய விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையின் மூலமாக வேளாண்மை இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் முறைகளை விளக்கி, அறுசுவை உணவுகளை வழங்கியும், கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் உழவர்களைப் பெருமைப்படுத்திய தமிழகத்தின் வீரத் தாய், மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றி.

மாண்புமிகு அம்மா, ஏழ்மை தேடும் வெளிச்சமே; எனக்குத் தெரிந்த கலங்கரை விளக்கமே; தன்னம்பிக்கைத் துளிரே; தமிழகத்தின் உயிரே; மக்கள் விரும்பிய மாற்றமே; இந்தியா தேடும் இதயமே; சொன்னதைச் செய்யும், செய்ததைச் சொல்லும் மாண்புமிகு அம்மா, நீரின்றி அமையாது உலகு. அம்மா, இனி நீங்கள் இன்றி இருக்காது இந்திய திருநாடு.

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

பிற்பகல் 12–20

வரலாறு சொல்லும் சரித்திரப் புயலே! மக்கள் உங்கள்மேல் வைத்த நம்பிக்கைக்கு அந்த சங்கரன்கோவிலே சாட்சியாய் நிற்கிறது. மைனாரிட்டி மக்களை ஆண்டபோது நாம் எதிர்க்கட்சி, மெஜாரிட்டியாய் நாம் ஆளும்போது அது வெறும் உதிரிக்கட்சி. தலைவர் கண்டெடுத்த தங்கப் புதையலே! அணு உலை பிரச்சினையில் தாங்கள் தலையிட்ட பின்பே, அது ஆக்க உலையாய் மாறியது. தமிழகத்திற்கே நீங்கள்தான் இன்று சத்து; அம்மா! நாளை நீங்கள்தான் இந்தியாவின் சொத்து. தேடக் கிடைக்காத அரிய பொக்கிஷமே! உண்ண மறந்தீர்கள்; உறக்கம் தொலைத்தீர்கள்; மொத்தத்தில் தமிழக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்தீர்கள். தமிழகத்தில் உயிர்த்திருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும், நலத் திட்டங்கள் சென்றடைய கர்ப்பத்தில் இருக்கும் சிசு முதல் கடைசிக் காலத்தில் இருக்கும் வயோதிகன்வரை அனைவருக்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என வியக்கின்றது அறிவுசார் வல்லுநர் கூட்டம், விழி பிதுங்கி நிற்கிறது எதிரிகள் கூட்டம்.

அன்னையரெல்லாம் போற்றும் அன்னையே! அன்னை சந்தியா ஈன்றெடுத்த சாதனைத் தலைவியே! பேறு காலத்தில் உதவித் தொகை; பெண் குழந்தை பிறந்தால் வைப்புத் தொகை; கற்கும் வயதில் ஊக்கத் தொகை; கல்யாண வயதில் தங்க நகை; இப்படி நிலையானத் திட்டங்களில் தெரிகிறது அம்மா உங்கள் தொலைநோக்குப் பார்வை.

படிக்கும் ஏழை மாணவர்களுக்கு நான்கு செட் சீருடை; மாணவியர்க்கு சல்வார் கமீஸ்; குறைந்த அளவு தொலைவில் கலைக் கல்லூரிகள்; தங்கள் அறிவுத் திறமையை மேம்படுத்திக்கொள்ள அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மடிக் கணினி என அறிவுசார்ந்த விஷயங்கள், இதில் அம்மாவின் உள்ளம் தெரிகிறது.

பிறந்த வீட்டுப் பெண்ணின் கஷ்டம் ஒரு தாய்க்குத்தான் தெரியும். அதை உணர்ந்து, பெண்கள் கஷ்டப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் வசதி; கிராமப்புற ஏழை குடும்பங்களுக்கு ஆடு, மாடு கொடுத்து அதை வைத்து அவர்கள் பிழைத்துக்கொள்ள அம்மா கொண்டு வந்துள்ள திட்டம் தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுத்ததுபோல, இத்திட்டத்தில் அம்மாவின் பாச உள்ளம் தெரிகிறது.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. இரா. குமரகுரு: வாழ்கின்றபோதெல்லாம் உழைத்து உழைத்து உள்ளத்திலும், உடம்பிலும் மனிதனுக்குத் தெம்பிருக்கும். ஆனால், உழைத்து, உழைத்து ஓடாய்த் தேய்ந்த மனிதன், வயதானவுடன் உழைக்கத் தெம்பில்லாமல், காப்பாற்ற ஆளுமின்றி வாடும் வயதான காலத்தில், அவன் வாழ்விற்கு வழிகாட்டும் விதத்தில் வயதான ஏழை மக்கள் பயன்பெற மாதம் ஆயிரம் ரூபாய். இதில் அம்மாவின் கருணை உள்ளம் தெரிகிறது.

இலங்கையில் வாழும் அன்பு ஈழத்தமிழர்கள் படும் துன்பத்தைக் கண்ணுற்ற அம்மா கருணை உள்ளம் கொண்டு அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி கண்டு உலகளவில் பகிரங்கமாகக் கண்டனமும், பொருளாதாரத் தடையும் கொண்டு வர குரல் கொடுத்தபோது அம்மாவின் வீர உள்ளம் தெரிகிறது.

அது வெறும் பேச்சளவில் நின்றுவிடவில்லை. நம் தமிழகத்தை தாய் வீடாய் நினைத்து அகதிகளாய் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கை அகதிகளுக்கும் மாதா மாதம் ஆயிரம் ரூபாய் நிதியுதவி! இப்படியெல்லாம் செய்ய அம்மா உங்களையன்றி வேறு யாரால் முடியும்?

திருமணத்திற்குத் தாலி வாங்கக்கூட தவிக்கும் ஏழைப் பெண்களுக்குத் தாலிக்குத் தங்கம் தருகிறார் தங்கத் தாரகை எங்கள் அம்மா. இது உங்களால் மட்டுமின்றி வேறெவராலும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. அவர்களுக்கு திருமணத்திற்கு நிதியுதவி, பேறுகால உதவி, வயதான முதியவர்களுக்கென முதியோர் இல்லங்கள், குழந்தை பாதுகாப்பு இல்லங்கள், அவர்களுக்குத் தரமான உணவு தரும் சத்துணவுத் திட்டம், அம்மாவின் ஆட்சியில் எங்கு பார்த்தாலும் ஆனந்தத் தாண்டவம்.

திருநங்கையர்களுக்கு சுய உதவித் திட்டம், அதில் சலுகைகள், பெண்களுக்கு சுகாதாரமும், சுத்தமும் வரவேண்டும். சுகாதாரமின்மையால் வரும் நோய்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அம்மா கொண்டு வந்துள்ள அனைத்து ஏழை பெண்களுக்குமே இலவச சானிடரி நாப்கின் திட்டம். இதில் கிராமப்புற ஏழைப் பெண்களும் சிறந்த நிலையில் வாழவேண்டுமென அவர்களுக்காக இரங்கும் அம்மாவின் இரக்க உள்ளம் தெரிகிறது.

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

சட்டமன்றத் தேர்தலில் அம்மாவின்மீது வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாக என்னை வெற்றிபெறச் செய்த உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களுக்கு பற்பல நலத் திட்டங்கள்! பல ஆண்டுகளாய் எதிர்பார்த்த பாதாளச் சாக்கடைத் திட்டம்; தவித்த வாய்க்குத் தண்ணீர் தந்திட கூட்டுக் குடிநீர்த் திட்டம்; அடுக்கடுக்கான பிரச்சினைகளின் அவலத்தை தாய்மார்கள் பதிவு செய்திட உளுந்தூர்பேட்டையில் அனைத்து மகளிர் காவல் நிலையம்; ஒடுக்கப்பட்ட மக்களின் ஒதுக்கப்பட்ட பகுதியாம் சேந்தநாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம்; இப்படி மக்களின் உண்மையான தேவை அறிந்து போடப்பட்ட திட்டங்களில் தெரிகிறது அம்மா உங்களின் தெளிவான தொலைநோக்குப் பார்வை.

இத்தோடு முடிவதல்ல திட்டங்கள், இன்னும் கிடைத்திடும் பற்பல ஏற்றங்கள் என நம்பிக்கை வைத்து எனக்கு வாக்களித்த வாக்காளர் பெருமக்களுக்கும், எனக்கு வாய்ப்பு தந்து வாக்குகளையும் பெற்றுத் தந்த எனது தொகுதி மக்களுக்கும், பற்பல திட்டங்களையும் தந்திருக்கும் அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை நெகிழ்ச்சியுடன் காணிக்கையாக்குகின்றேன்.

ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே, கூடிவாழ்ந்தால் கோடி நன்மையே என எங்களையெல்லாம் அரவணைத்துச் செல்லும் தாயே! அறிவுசார் திட்டங்கள் வகுக்கும் அற்புத விளக்கே, அறிவுசுடரே, ஆனந்தக் கடலே, அணையா விளக்கே, ரவுடிகளின ராஜ்ஜியம் அழித்து கலியுகக் கர்ணனாய் வாழ்ந்த புரட்சித் தலைவர் பாதையிலே புனித ஆட்சி செய்யும் தாயே! உங்கள் கருணைப் பார்வை உள்ளவரை காலமெல்லாம் எங்களுக்கு வெற்றியே, தாயே நீங்கள் வாழவேண்டும் பல நூறு ஆண்டுகள், தமிழகம் வளம்பெற வேண்டும் ஏற்றம்கொண்டு, இல்லை என்ற சொல்லே இல்லையென்ற நிலை வேண்டும், இந்திய மக்களின் உள்ளமெல்லாம் உங்களால் குளிர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். எங்களின் கண்ணில் தெரியும் கடவுளே, உம்மை வணங்குகின்றேன். வாய்ப்பிற்கு நவில்கின்றேன் நன்றி! அம்மா நீங்கள் வாழவேண்டும் இன்னும் நூறு ஆண்டுகள் என வாழ்த்துகிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எனது தொகுதியில் ஏழை, எளிய விவசாய மக்கள் அதிக அளவில்

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

வசித்து வருகின்றனர். ஆதலால் எந்தவித வளர்ச்சியும் அடையாத மிகவும் பின்தங்கிய தொகுதியாக உள்ளது. படித்த ஏழை, எளிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளிப்படும் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்க பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு புதிய தொழிற்சாலை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனை தேசிய நான்குவழி நெடுஞ்சாலை 45 மற்றும் 68–க்கு மையப் பகுதியாக உள்ளது. இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் சாலை விபத்துகளின்போது சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனைக்கு வரும்போது, விபத்து சிகிச்சைக்குத் தேவையான அதிநவீன உபகரணங்கள், கருவிகள், நரம்பியல் மற்றும் எலும்பியல் பிரிவு மருத்துவ நிபுணர்கள் இல்லாததால் மேல்சிகிச்சைக்காக விழுப்புரம் அல்லது பாண்டிச்சேரி செல்ல நேரிடும்போது பல உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே, உளுந்தூர்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் அதிநவீன அவசர விபத்து சிகிச்சைக்கான உபகரணங்களை அமைத்து, நரம்பியல் மற்றும் எலும்பியல் பிரிவு மருத்துவ நிபுணர்களையும் நியமனம் செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பிடாகம் ஊராட்சி, சுமார் 15,000–க்கும் மேற்பட்ட மக்களையும், 20–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களையும், 15 வார்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. எனவே, இப்பகுதி வளர்ச்சியடைய எலவனாசூர்கோட்டையை பேரூராட்சியாகத் தரம் உயர்த்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,950 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் மாணவிகளுக்குப் போதிய இட வசதியில்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். ஆதலால், உ. கிரனூர் ஏரியில் நீர்ப்பிடிப்பு இல்லாத இடத்தில் உளுந்தூர்பேட்டை அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய இட ஒதுக்கீடு செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

எனது தொகுதிக்குட்பட்ட, எலவனாசூர்கோட்டை, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் சுமார் 40–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இதனால் இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் சாலை விபத்து மற்றும் பிரசவ காலங்களில் போதிய படுக்கை மற்றும் இட வசதியில்லாததால் வெளியூர் செல்ல நேரிடும்போது உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. எனவே, எலவனாசூர்கோட்டை ஆரம்ப சுகதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூரைச் சுற்றிலும் சுமார் 5,000 ஏக்கர் விளைநிலங்களில் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களின் விளைபொருள்களைப் பாதுகாக்கவும், உரிய விலை கிடைக்காமலும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, விவசாயிகளின் நலனைக் கருதி திருநாவலூரில் புதிய ஒழுங்குமுறை வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டுமாய் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூரைச் சுற்றிலும் சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஏழை, எளிய விவசாயிகள் குடிசைப் பகுதியில், வறுமைக்கோட்டிற்கு மிகவும் கீழ் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் தீ விபத்து ஏற்படும்போது சுமார் 15 கி.மீ. தூரம் இருந்து உளுந்தூர்பேட்டை மற்றும் திருவெண்ணெய்நல்லூர் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்பு வாகனங்கள் வருவதற்குள்ளாக தீ விபத்தினால் அப்பகுதியில் உள்ள வீடுகள் முழுவதும் எரிந்து சேதமடைந்து விடுகின்றன. எனவே, திருநாவலூரை மையமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட ஆசனூர் கிராமம் நான்கு வழிச்சாலையான தேசிய நெடுஞ்சாலை 45–ல் உள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள சுமார் 20–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் இப்பகுதியில் சாலை விபத்து மற்றும் உடல் நலக் குறைவு ஏற்படும்போது சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டைக்குச் செல்ல நேரிடும்போது பல உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே, ஆசனூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

எனது தொகுதிக்குட்பட்ட உ. நெமிலி முதல் ரிஷிவந்தியம் செல்லும் நெடுஞ்சாலையின் குறுக்கே உ. நெமிலி கிராமத்திற்கு அருகிலுள்ள தரைப்பாலத்தில் மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது உ. நெமிலி மற்றும் அடுத்தடுத்துள்ள கிராமங்களுக்குச் செல்ல முடியாமல் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, உ. நெமிலி கிராமத்திற்கு அருகிலுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாகத் தரம் உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமச் சாலையில் கெடிலம் ஆற்றின் குறுக்கே பெரும்பட்டு கிராமத்திற்கு அருகிலுள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பெரியசெவலை கிராமத்திற்கு அருகிலுள்ள ராகவன் வாய்க்காலுக்குக் குறுக்கே மக்கள் பயன்பாட்டிலுள்ள சாலைகளின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், பே. குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சுமார் 3 கி.மீ. தூரம் நான்கு வழிச்சாலையான தேசிய நெடுஞ்சாலை 45-ஐக் கடந்து சென்று, பேரங்கியூர் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பொது மக்களின் நலனுக்காக, வாழும் வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள் பே. குச்சிப்பாளையம் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பரிந்தல் நியாய விலைக் கடையில் இருந்து பிரித்து பரிந்தல் மேட்டுக் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், குணமங்கலம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து குணமங்கலம் முஸ்லிம் தெருவில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், எலவனாசூர்கோட்டை கடை எண் 1 நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து ரஹிமான் தர்க்கா பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

திருநாவலூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொரட்டூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கொ. குச்சிப்பாளையம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், நாச்சியார்பேட்டை நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து நாச்சியார்பேட்டை மேடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் வேலூர் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து வாணியங்குப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், பிள்ளையார்குப்பம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து பரமநத்தம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், உடையானந்தல் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து வைப்பாளையம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட திருமுண்டீஸ்வரம் கிராம நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து சாராயமேடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும், கண்ணராம்பட்டு கிராம நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து கண்ணராம்பட்டு காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கவும் கேட்டுக்கொள்கிறேன். மேற்கூறிய குக்கிராமங்களில் பொது மக்களின் நலனுக்காக சிறப்பு ஆணை வழங்கி பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,350 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் மாணவிகள் சுமார் 650 பேர் பயின்று வருகின்றனர். ஆதலால், மாணவிகளுக்காக தனியாக திருநாவலூரில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை பணிமனையிலிருந்து திருப்பதிக்குப் புதிய பேருந்தும், விழுப்புரம் பணிமனையிலிருந்து கெடிலம், சேந்தமங்கலம், சேந்தநாடு, தொப்பையான்குளம், முத்தாண்டிக்குப்பம் வழியாக நெய்வேலி வரை புதிய பேருந்தும், பண்ருட்டி பணிமனையிலிருந்து கெடிலம், மாரனோடை, பெரும்பட்டு வழியாக களமருதூர் வரை புதிய பேருந்தும் இயக்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

மேலும் உளுந்தூர்பேட்டை பணிமனையிலிருந்து களமருதூர், பிள்ளையார்குப்பம், வேலூர், பெரும்பாக்கம் வழியாக பரிக்கல் வரை புதிய பேருந்து இயக்கவும், உளுந்தூர்பேட்டை முதல் சேந்தநாடு, எலவத்தடி, முத்தாண்டிக்குப்பம் வழியாக நெய்வேலி வரை புதிய பேருந்து இயக்கவும், விழுப்புரத்திலிருந்து மடப்பட்டு, பரிக்கல், பெரும்பாக்கம் வழியாக அயன்வேலூர் வரை புதிய பேருந்து இயக்கவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதிக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்குப் பேருந்து வசதிகளை ஏற்படுத்த உளுந்தூர்பேட்டை பணிமனைக்குக் கூடுதலாக 5 புதிய நகரப் பேருந்துகளை வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உ. கீரனூர் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மாண்புமிகு அம்மா ஆட்சிக் காலத்தில் சுமார் 17 வருடங்களுக்கு முன்பு குடமுழுக்கு செய்யப்பட்டது. எனவே, மிகவும் பிரசித்தி பெற்ற இத்திருக்கோயிலில் ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாயும், மிகவும் பழமைவாய்ந்த பிரசித்தி பெற்ற உளுந்தூர்பேட்டை அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், அருள்மிகு ஆதிகேசவபெருமாள் திருக்கோயில்களில் ராஜகோபுரம் அமைத்து குடமுழுக்கு செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை ஒன்றியம் எ. சாத்தனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து அஜிஸ் நகர் பகுதியைத் தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியம், சேந்தமங்கலம் ஊராட்சியில் சுமார் 8,500 மக்கள் உள்ளனர். இந்த ஊராட்சியில் மட்டும் சுமார் 15-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. எனவே, இந்த ஊராட்சியை மூன்று ஊராட்சிகளாகப் பிரித்து, மாரனோடை ஊராட்சி மற்றும் வண்டிப்பாளையம் ஊராட்சிகளாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் சித்தாணங்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து மாமந்தூர் ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. குமரகுரு] [2012 ஏப்ரல் 23

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் ஆமூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, துலங்கம்பட்டு ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம் டி. கொளத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து கொண்டசமுத்திரம் ஊராட்சியாக அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக உளுந்தூர்பேட்டை வட்டம், விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் வகையில் வேளாண்மை தானிய ஈட்டுக் கடன், வேளாண்மை விளைபொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலமாக நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கு ஏதுவாக உளுந்தூர்பேட்டையில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்கு மற்றும் அலுவலகம், விளைபொருள் விற்பனைத் தளம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருப்பெயர், செங்குறிச்சி, அரசூர் போன்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருப்பெயர், ஒரத்தூர், திருநாவலூர், பெரியசெவலை போன்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நவீன அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, அதிகப்படியான நிதியை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்கள் எனது தொகுதிக்குட்பட்ட ஆசனூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கிளியூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், செங்குறிச்சி அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், பாதூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட அதையூர், சிக்காடு, பாண்டூர், கிளாப்பாளையம், பிள்ளையார்குப்பம், சுருவேப்பிலைபாளையம்,

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. குமரகுரு]

இலுப்பையூர், பு. கிள்ளனூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசினர் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் நகர கூட்டுறவு வங்கி தொடங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட எலவனாசூர்கோட்டையைச் சுற்றிலும் சுமார் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதிக்கு சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தியாகதுருகம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வருவதால் மின் இழப்பு ஏற்பட்டு, இப்பகுதி முழுவதும் சுற்றியுள்ள கிராமங்களிலும் குறை மின்னழுத்தம் ஏற்படுகின்றது. இதனால், பொதுமக்களும், விவசாயிகளும் சரிவர மின்சாரம் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பொது மக்களின் நலனைக் கருதி, எலவனாசூர்கோட்டையில் 110/22–11 K.V. (16 M.V.A.) மின்திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் காவல் நிலையம் சுமார் 88 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இதனால், காவல் நிலையத்திற்குட்பட்ட கிராமங்களில் பிரச்சினை ஏற்படும்போது உடனடியாகச் சென்று தீர்வு காண முடியவில்லை. எனவே, பொது மக்களின் நலன் கருதி திருநாவலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து, களமருதூரை மையமாகக் கொண்டு, புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் சுமார் 103 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. ஆனால், காவல் நிலையத்திற்குட்பட்ட கிராமங்களுக்குப் பிரச்சினை ஏற்படும்போது உடனடியாகச் சென்று தீர்க்கமுடியவில்லை. எனவே, திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து அரசூரை மையமாகக் கொண்டு புதிய புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் உணவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு மானியத்திற்கு கடந்த 2011–2012 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு 4,500 கோடி ரூபாய். 2012–2013 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு 4,900 கோடி ரூபாய். கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு உணவு மானியத்திற்கு 400 கோடி ரூபாய் கூடுதலாக இந்த அரசு ஒதுக்கீடு செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கூட்டுறவு நிறுவனங்கள்மூலம் வழங்கப்படும் பயிர்க் கடன் இலக்கை 4,000 கோடி ரூபாயாக இந்த அரசு உயர்த்தியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் பயிர் செய்வதற்கான விதைகளையும், இயற்கை உரங்களையும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக இலவசமாக விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், குறிப்பாக என்னுடைய தளி தொகுதியில், பச்சம்பபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் DAP உரத் தட்டுப்பாடு உள்ளது. ஆகவே, விவசாயிகளுக்கு DAP உரங்கள் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் போதுமான அளவிற்கு இப்போது உர கையிருப்பு இருக்கிறது. இதற்குக் காரணம், DAP உரம் பற்றி மத்திய அரசு இப்பொழுது அறிவித்த புதிய கொள்கையினால் மத்திய அரசில் அமைச்சராக யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அங்கே உரத் துறை அமைச்சராக இருப்பவர் மு.க. அழகிரி. அவர் அங்கே போனதே இல்லை. அந்தக் காலத்திலே DAP உரம் பற்றாக்குறை இருந்ததால், மாண்புமிகு அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டிலே 130.50 கோடி ரூபாய் கொடுத்து, நம்முடைய விவசாயிகளுக்கு DAP உரம் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே, எந்த வட்டியும் இல்லாமல் கொடுத்தார்கள். இன்றைக்கு இங்கேயிருக்கிற உங்கள் இயக்கத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர், திரு. குணசேகரன் அவர்களுக்கே தெரியும். அங்கே இருந்த அவர்களுடைய தொழிலாளர் நண்பர்கள் இவ்வளவு உரம் இருக்கிறது, இதை ஒவ்வொரு இடத்திற்கும் கொண்டு போகும்போது, இதனுடைய செலவு அதிகமாகுமே, அதனால் எங்களுடைய சங்கத்திற்கு இழப்பு ஏற்படுமே என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்த இடத்தை ஆய்வு செய்து, அங்கு குறை இருக்குமானால், அது நிச்சயமாகக் களையப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மத்திய அரசினுடைய உணவுப் பாதுகாப்பு மசோதாவை

[திரு. டி. இராமச்சந்திரன்] [2012 ஏப்ரல் 23

மாநில அரசு ஆதரிக்கவில்லை என்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மசோதாவிலே அரிசி மற்றும் கோதுமைக்குப் பதிலாக பணம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசு அதை எதிர்ப்பது வரவேற்கக்கூடியது.

அதேபோல, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை, விலைவாசி உயர்வுக்கு மிக முக்கிய காரணமாக உள்ளது. ஏனென்றால், இன்றைக்கு கள்ளச் சந்தையிலே உணவுப் பொருள்களைப் பதுக்கும் போர்வழிகளை ஊக்குவிக்கும் வகையில், Online Trading என்று சொல்லக்கூடிய முன்வர்த்தக பேரத்தைத் தடைச் செய்யாமல் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே, Online Trading என்ற முன்வர்த்தக பேரத்தைக் கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, மத்திய அரசு, மாநிலங்களுக்குக் கொடுக்கும் மானியத்தைக் குறைப்பதைத் தன்னுடைய கொள்கையாக கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, விவசாயிகளுக்கு வழங்குகின்ற பல்வேறு மானியங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், உணவு மானியமும் குறைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு வர வேண்டிய நிதி மானியங்களும் குறைக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு மண்ணெண்ணெய்க்கு உரிய ஒதுக்கீடு என்பது வழங்கப்படவில்லை. அதனால் இன்றைக்கு மலைக் கிராமங்களிலே, ஒரு குடும்ப அட்டைக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய்க்குப் பதிலாக, 2 லிட்டர் மண்ணெண்ணெய்தான் வழங்கப்படுகிறது. ஆகவே, மாநில அரசு மத்திய அரசை நிர்பந்தித்து, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டைப் பெற வேண்டும். தேவைப்பட்டால், இந்த மாமன்றத்திலேயே மத்திய அரசை எதிர்ப்பதற்கான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏற்கெனவே மண்ணெண்ணெய் பற்றிய கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறோம். மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, மண்ணெண்ணெய் விநியோகத்தைச் சீராக நிர்ணயிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதனை அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். தற்போது தமிழ்நாட்டின் மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 65,140 கிலோ லிட்டர் ஆகும். ஆனால், மத்திய அரசு, தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்திற்கு, ஏப்ரல் 2010 முதல், மே 2011 வரையிலான காலத்தில், மாதம் ஒன்றுக்கு 52,806 கிலோ லிட்டர் வழங்கியது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், ஜூன் 2011 முதல், மார்ச் 2012 வரையிலான காலத்தில், அதை 44,572 கிலோ லிட்டராகக் குறைத்தது. தற்போது, ஏப்ரல் 2012 முதல், ஜூன் 2012 வரையிலான காலத்திற்கு, மாதம் ஒன்றுக்கு அதை 39,429 கிலோ லிட்டராகக் குறைத்திருக்கிறது. இந்த ஒதுக்கீடு அளவு நம்முடைய தமிழ்நாட்டின் தேவையில், 60.53 சதவிகிதம்தான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–30

இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, குடும்ப அட்டைகளில் எரிவாயு உருளை விவரம் முத்திரையிடப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, ஜூன் 2011 முதல் போர்க்கால அடிப்படையில், ஒரு உருளை, இரண்டு உருளை என்று விவரங்கள் பதிவு செய்யப்பட்டன. இதன்மூலம், ஜூன் 2011 முதல், பிப்ரவரி 2012 வரையிலான காலத்தில், 1,560 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டது. மத்திய அரசு, எரிவாயு உருளை இணைப்பு வழங்குவதற்கு குடும்ப அட்டையைத் தவிர்த்து, பிற ஆவணங்களின் அடிப்படையிலும் இணைப்புகள் வழங்குவதால், பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இருப்பினும், எண்ணெய் நிறுவனங்களான, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை, 1–4–2011 நிலவரப்படி, 129 இலட்சம் வீட்டு உபயோக எரிவாயு இணைப்புகளை

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

இம்மாநிலத்தில் விடுவித்துள்ளன. இவற்றுள், 93 இலட்சம் இணைப்புகள் குடும்ப அட்டை எண் விவரம் குறிப்பிடப்பட்டும், 36 இலட்சம் இணைப்புகள் குடும்ப அட்டை எண் விவரம் குறிப்பிடப்படாமலும் வழங்கப்பட்டுள்ளன. எண்ணெய் நிறுவனங்களோ அல்லது அவற்றின் முகவர்களோ, மாதந்தோறும் விடுவிக்கும் இணைப்புகளின் விவரங்களை மாநில அரசுக்குத் தெரிவிக்கவேண்டியது கட்டாயமாக்கப்படவில்லை. எனவே, ஒரு உருளை, இரண்டு உருளைகள் வைத்திருப்பவர்களைக் கண்டறிந்து, குடும்ப அட்டைகளில் முத்திரையிடுவதன்மூலம், மண்ணெண்ணெய் சேமிப்பை உறுதி செய்ய இயலவில்லை.

இருப்பினும், போலி அட்டைகள், வணிக நோக்குடன் பயன்படுத்தப்படும் எரிவாயு உருளைகளைப் பறிமுதல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு உருளை விநியோகம் தமிழகத்திலே சீராக நடந்து கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு நிமிடங்கள்கூடப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதுபோன்று கேள்வி கேட்டதால், நீண்ட பதிலினை அமைச்சர் கொடுத்திருக்கிறார்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு அமைச்சர், அந்த விளக்கத்தை அவரது பதிலுரையில் சொல்லட்டுமே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழக அரசு மானிய விலையிலே உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில், கோதுமை போன்றவற்றை வழங்குவது நல்ல அம்சம்; பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால், உளுத்தம் பருப்பு என்பது, 35 முதல் 40 விழுக்காடு அளவிற்குத்தான் இப்போது வழங்கப்படுகிறது. அதேபோல, துவரம் பருப்பு 50 முதல் 60 விழுக்காடு அளவிற்குத்தான் வழங்கப்படுகிறது. பாமாயில் 70 முதல் 80 விழுக்காடு அளவிற்குத்தான் வழங்கப்படுகிறது.

2012 ஏப்ரல் 23] *[திரு. டி. இராமச்சந்திரன்]*

குறிப்பாக, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட நாகதூதை பகுதிநேர நியாய விலைக் கடையில் கடந்த சில நாட்களாக துவரம் பருப்பே வழங்கப்படுவதில்லை. ஆகவே, அதுபோன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கிட நம்முடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதை, 'மிக நீண்ட விளக்கம்' என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் என்னிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 52 ஆயிரம் கிலோ லிட்டருக்கும் மேலாகக் கொடுக்கப்பட்ட மண்ணெண்ணெய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே, அது 39,429 கிலோ லிட்டராகக் குறைக்கப்பட்டு விட்டது என்பதனை நான் இந்த அவையிலே சொல்லியாக வேண்டும் என்பதற்காக நான் அதனைக் குறிப்பிட்டேன். அது திட்டமிட்டே குறைக்கப்பட்டது என்பதனையும், அதற்கு தி.மு.க. வினுடைய தலைவரும், மத்திய அரசிலே அங்கம் வகிக்கிறவர்களும்தான் காரணம் என்பதனையும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அதனையே மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், பருப்பு வகைகள் வழங்கப்படுவதைக் குறிப்பிட்டு, அவர் பகுதியில் குறைவாக வழங்கப்பட்டு வருகிறது என்றும், சில இடங்களில் அது வழங்கப்படுவதில்லை என்றும் அவருடைய கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 31–3–2012 வரை மட்டுமே மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள், நம்முடைய தமிழக மக்களின் நலன் கருதி, மானிய விலையில் பருப்பு வகைகளைத் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தியதன் அடிப்படையில், மைய அரசு இத்திட்டத்தை 30–6–2012 வரை நீட்டித்திருக்கிறது. மாண்புமிகு

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

அம்மா அவர்கள், இத்திட்டத்தின்கீழ் மேலும் ஆறு மாத காலத்திற்கு, 30–9–2012 வரை பருப்பு வகைகளை மானிய விலையில் விநியோகம் செய்ய ஆணையிட்டுள்ளார்கள். தற்போது தேவையான அளவு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு, நியாய விலை அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1–4–2012 முதல் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஒரு மாதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படாமல் விடுபட்டுப்போனால், அவர்கள் விவரம் தனியாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, அடுத்த மாதத்தில் முன்னுரிமை அடிப்படையில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு அம்மா அவர்கள், சிறப்புப் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளுக்கு 1,053 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கி, பொதுமக்கள் அனைவருக்கும் சீரான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தை உறுதி செய்துள்ளார்கள் என்பதனையும் இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், வேறு பொருளைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரிகின்ற ஊழியர்கள், அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுமென்று கடந்த 19 நாட்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அதனால், கரும்பு விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு தாய் உள்ளத்தோடு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. டி. இராமச்சந்திரன்]

அதேபோல, இந்த அரசு பதவி ஏற்ற 9 மாத காலத்திற்குள் ரேஷன் அரிசிக் கடத்தலைத் தடுத்திருப்பது வரவேற்கக்கூடியது. இந்த 9 மாத காலத்திற்குள் 24,133 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதிலே 193 பேர் கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. அதேபோல, முழுமையாக ரேஷன் அரிசிக் கடத்தலைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மொத்தமுள்ள 33,222 நியாய விலைக் கடைகளையும், உணவுத் துறையின்கீழ் அல்லது தனியார் துறையின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளையும் ஒரே துறையின்கீழ் கொண்டு வர வேண்டும்.

அதேபோல, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் விற்பனையாளர் ஒருவருக்கு மாதம் 20,000/– ரூபாய் எனவும், கூட்டுறவுத் துறையின்கீழ் பணிபுரியும் விற்பனையாளர் ஒருவருக்கு மாதம் 9,000/– ரூபாய் எனவும் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த ஊதிய முரண்பாடுகளைக் களைந்து, அனைவருக்கும் சம ஊதியம், சம வேலை என்ற அடிப்படையிலே அனைவருக்கும் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

அதேபோல, நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்களாகப் பணியாற்றுபவர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து, அவர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், நியாய விலைக் கடைகளில் உள்ளவர்களுக்கும் இது வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். கூட்டுறவுத் துறை என்பது ஒரு தனித் துறை. கூட்டுறவுத் துறை, மக்களால்,

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

அவர்களுடைய பகுதிகளில், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, அந்தப் பகுதி மக்களின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக்கும் சாத்தியக்கூறு தற்போது இல்லை. எனவே, அது வேறு; இது வேறு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின் சட்ட விதிகளுக்கு உட்பட்டுத்தான் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதன் அடிப்படையில்தான், அந்தப் பணியாளர்கள் பணியாற்றுவார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (சுறுக்கீடு) நிறைய விளக்கம் வாங்கிவிட்டார்.

திரு. டி. இராமச்சந்திரன்: அதேபோல, பகுதிநேர நியாயவிலைக் கடைகளில் ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி, வண்டி வாடகை போன்றவற்றை அதை நடத்தும் சங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு தமிழக அரசு மாதந்தோறும் விலையில்லா அரிசி 30 கிலோ, மானிய விலையில் ரேஷன் பொருட்கள் வழங்குகிறது. எனவே, ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி, வண்டி வாடகை போன்றவற்றை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நல்ல அறிவிப்பினை, இந்த அவையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மானியமாகக் கொடுக்கிறது. விளிம்புத் தொகையாகக் கொடுக்கிறது. 2011–2012 ஆம் நிதியாண்டில், 120 கோடி ரூபாயை ஒவ்வொரு கடைகளுக்கும், உணவுப் பொருட்கள் நகர்வு செய்வதற்கும், ஏற்றுக் கூலி, இறக்குக் கூலி, வண்டி வாடகை போன்ற பணிகளுக்காக இந்த அரசு வழங்கியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், நீங்கள் பேசுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்குப் பணம் வழங்குவதில் முறைகேடுகள் நடப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, விவசாயிகளுக்கு வங்கிகள் மூலமாக அந்தப் பணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வீட்டு வசதிக் கடன்கள் மற்றும் பண்ணைச் சாரா கடன்கள் பெற்றவர்களுடைய வட்டி, அபராத வட்டி போன்றவற்றை தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும்.

அதேபோல, கூட்டுறவு அமைப்புகளுக்கு, தனி அலுவலர்களைத் தொடர்ந்து நியமனம் செய்யாமல், ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்த வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் நகைக் கடனுக்கான வட்டி 12% ஆக உள்ளது. அதை மாற்றி, பிற வங்கிகளைப் போன்று 7% வட்டியில் நகைக் கடன் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற நகைக் கடனிற்கு வட்டியைக் குறைத்து வழங்க வேண்டுமென்று சொல்கிறார். கூட்டுறவு நிறுவனங்கள், மக்களிடத்திலிருந்து பெறுகின்ற டெப்பாசிட், இரண்டாவது மாவட்ட மத்திய வங்கியிலிருந்து பெறப்படுகின்ற கடன், மறு நிதிக் கடன், இவற்றை வைத்துதான் நகைக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இன்னும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக, கூட்டுறவுத் துறையின் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிற கடனுடைய வட்டி விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதை நான் ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

எங்கும் இந்த அளவுக்கில்லை. இன்றைக்கு தனியார் வங்கியில் வட்டி குறைவு என்று சொல்கிறார்களே தவிர, அது விளம்பரத்திற்காக சொல்வதாகும். கூட்டுறவு வங்கியின் மூலமாக வழங்கப்படுகின்ற நகை ஈட்டுக் கடனுடைய வட்டி விகிதம்தான் குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், நன்றி சொல்லி உரையை முடித்து விடுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்கள் மாநிலம் முழுவதும் திறக்கப்பட வேண்டும். நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். "கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற ஒரு பழமொழி உண்டு. கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இருந்தால், அந்த நாடு சிறப்பாக இருக்கும் என்பதற்கிணங்க, இங்கே தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம், ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூட்டுறவுத் துறைக்காக நிதியை உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருப்பதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் பசுமைப் புரட்சியை உண்டாக்கி, விவசாயத்தைப் பெருக்குகின்ற வகையில், நல்ல திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. பி.வி. கதிரவன்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்ற அன்றே அவர் தேர்தல் வாக்குறுதியாக கொடுத்திருந்த விலையில்லா அரிசி 1,85,00,000 குடும்ப அட்டைகளுக்குக் கொடுத்தது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்று என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாநில அளவில், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியும், மாவட்ட அளவில் 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், கிராமப்புறங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் 4,534 இருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மையின் மூலமாக இடுபொருட்களும், உரங்களும், விதைகளும் மற்றும் இப்போதெல்லாம் வேளாண்மைக் கருவிகளும் கொடுத்து வருவதை நாங்கள் பாராட்டுகிறோம்.

தமிழகத்தில் 33,222 நியாயவிலைக் கடைகள் உள்ளன. கடந்த 11 மாதங்களிலே, எனது உசிலம்பட்டி தொகுதியிலே பத்து பகுதிநேரக் கடைகளை ஒதுக்கித் தந்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆண்டு 2011-2012-ல் பயிர்க் கடனாக ரூ.3,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்தும்கூட, ரூ.3280.42 கோடி வழங்கப்பட்டிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த ஆண்டு தமிழக அரசு ரூ.4,000 கோடி ஒதுக்கியிருப்பதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மகளிர் தொழில் செய்வதற்காக, சிறு, குறு தொழில் செய்வதற்காக நமது கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் பத்து இலட்சம் ரூபாய் கொடுத்து வருவதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு, வட்டியில்லா பயிர்க் கடன்களை, இங்கே விவசாயிகளுக்குத் துரிதமாகக் கொடுத்து, அதை வசூல்செய்து, மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு நல்ல அரசாக, ஒரு சிறந்த அரசாக இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2012 ஏப்ரல் 23

வேளாண்மைப் பாதுகாப்பு மையங்களில் மண் மற்றும் பாசன நீரினை பரிசோதனை செய்து, கிட்டத்தட்ட 190 வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலே அதைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இது அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் பயனடையக்கூடிய திட்டமாகும். இதை தமிழகம் முழுவதும் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பரவலாக, விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்திற்கு ஆட்கள் கிடைக்காத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே விவசாயப் பணிக்குப் பயன்படுத்துகின்ற இயந்திரங்களை வாடகைக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கும் நடைமுறையை அறிமுகப்படுத்தியிருப்பதை நாங்கள் பாராட்டுகின்றோம்.

பிற்பகல் 12–45

Urban Bank என்ற மிகவும் பிரசித்தி பெற்ற, நகர வங்கி மதுரை மாநகரிலே முக்கியமான பகுதியிலே இருந்து வந்தது. அதிலே சில ஊழல்கள் நடந்தன என்பதற்காக, அது கடந்த 6, 7 ஆண்டுக் காலமாக மூடக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 204 பேர் அதிலே பணிபுரிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தற்போது பணியற்று இருக்கிறார்கள். சொல்லப்போனால் அந்த வங்கிக்கு 46 கோடி ரூபாய் மக்களிடமிருந்து வர வேண்டியதிருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கம் 42 கோடி ரூபாய் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. ஆனால், அப்படிப் பார்த்தாலும் நான்கு கோடி ரூபாய் வருவாய் உள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய சுந்தர்ராஜன் அவர்களும் இதே கருத்தைத்தான் சொன்னார்கள். Madurai Urban Bank என்பது 100 ஆண்டுக்காலம் பழமையானது. இந்தப் பழமையான வங்கி, கருணாநிதி 1996 லிருந்து 2001 வரை ஆட்சியில் இருந்தபோது, அப்போது தேர்தல் மூலமாக, முறைகேடாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு முறைகேடாக, தகுதியற்றவர்களுக்கு அந்த வங்கியிலிருந்து கடன் வழங்கப்பட்டது. இப்படி வழங்கப்பட்டதன் காரணமாக பல கோடி ரூபாய் நிலுவை.

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

சாதாரண, 2,000 ரூபாய் பெறாதவர்களுக்குக்கூட ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று கொடுத்து ஏறத்தாழ 56.56 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, அந்தக் கடனைத் திரும்பப் பெற முடியாமல் மிக மோசமான நிலை ஏற்பட்டதனால் அன்றைக்கு ரிசர்வ் வங்கி, இதன் உரிமையை இரத்து செய்து இன்றைக்கு டெபாசிட்தாரர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம் கொடுக்கப்பட்டுவிட்டது. அதேநேரத்தில், 205 பேர் அங்கே வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன் சொன்னார். அவர்கள் எல்லாம் அன்றைக்கே, அவர்களாகவே வேறு பணிக்குப் போய்விட்டார்கள்; வேண்டாம் என்றே போய்விட்டார்கள். இப்போது அங்கு பணியாளர்கள் இல்லை. அரசு, கூட்டுறவுத் துறையின் மூலமாக 4 பேர் இருக்கிறார்கள். இப்போது வழக்கு உயர் நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே, அந்த வழக்கினுடைய விவரங்கள் அறிந்த பிறகு, வழக்கினுடைய முடிவு அறிந்த பிறகு நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, ரிசர்வ் வங்கியின் விதிகளுக்குட்பட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த Urban Bank–ஐத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதை விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நெல் கொள்முதல் நிலையம் தமிழகத்தில் 1–10–2002–ல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் இந்த நேரடி கொள்முதல் நிலையம் இல்லையென்றால் உண்மையிலேயே விவசாயிகள் மிகவும் பாதித்துவிடுவார்கள். மதுரை மாவட்டத்தில்கூட, 44 நிலையங்கள்மூலம் நேரடி கொள்முதல் நடந்து வருகிறது. குறிப்பாக என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் 6 கொள்முதல் கடைகள் இன்னும் நடந்து வருகின்றன. ஆனால், ஒவ்வொரு கொள்முதல் கடையிலும், 25 லோடு, 30 லோடு நெல் இன்னும் இருந்து வருகிறது. அதையும் விரைவில் எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2012 ஏப்ரல் 23

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மருந்துக் கடைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கத்தகுந்த ஒரு விஷயம். சொல்லப்போனால், வேறு கடைகளில் கிடைப்பதைக் காட்டிலும் 12 சதவிகிதம், 15 சதவிகிதம் தள்ளுபடி கிடைக்கின்ற ஒரு நல்ல திட்டம். அதை தமிழகம் முழுவதும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இங்கே L.D. Bank என்று இருந்தது. அதன் பெயர் மாற்றப்பட்டு, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என்று தமிழகத்திலே 180 வங்கிகள் இருந்து வருகின்றன. கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து அது செயல்படாமல், எந்த லோனும் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு நகைக் கடன் மட்டும் அங்கே கொடுத்து வருகிறார்கள். வருங்காலத்திலே எப்போதும் கொடுப்பது போன்று அனைத்துக் கடன்களும் அங்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல் நடைபெறுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைச் சொன்னார்கள். அதிலே நமது அரசு தலையிட்டு, வெகுவிரைவாக உச்ச நீதிமன்றத்திலே பதில் தாக்கல் செய்து, தேர்தலை விரைவிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே அரசு வழக்கு தொடுத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விரைவாக முடித்து, தேர்தல் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டார். அந்த வழக்கினுடைய சாராம்சமே அதுதான். கூட்டுறவுத் துறையில் கூட்டுறவுத் தேர்தல் நடத்துவதற்கு ஓர் அரசு தலையிடுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை, தகுதியான முகாந்திரம் இல்லையென்று பலர் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். ஒரு அரசுத் துறை சார்ந்த நிறுவனத்தில் நடந்த தவறுகளைக் களைவதற்கு, நடந்த முறைகேடுகளைக் களைவதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்பதற்காகத்தான் அந்த வழக்கு அங்கே இருக்கிறது. நிச்சயமாக அந்த வழக்கினுடைய முடிவை அறிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசீலிப்பார்கள்.

2012 ஏப்ரல் 23]

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் வருமான அடிப்படையிலே வகைப்படுத்தப்படாமலேயே அனைத்து பொதுமக்களுக்கும் இங்கே பொது விநியோகத் திட்டம் கொண்டு வந்திருப்பது வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதது என்பதை நான் மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே சுமை தூக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 8,000 பேர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்களில் 80 சதவிகிதம் பேர்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்கள். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் நிரந்தரமாகவே பணிபுரிந்து வருகிறார்கள். அன்றையதினம் வேலைக்குச் சென்றால்தான், அவர்களுக்குக் கூலி கொடுத்து வருகிறார்கள். இந்த அரசும் அவர்களுக்கு பச்சை அட்டை, சிவப்பு அட்டை என்று கொடுத்து வருகிறது. பலமுறை அவர்கள் காலமுறை ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த தேசிய ஆணையம்கூட இவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதேபோன்று, (மணியடிக்கப்பெற்றது) மத்திய அரசின் இந்திய உணவுக் கழகம், அதேபோன்ற சுமைதூக்கும் வேலை செய்பவர்களுக்கு காலமுறை ஊதியமாக 25,000 ரூபாய் வரை கொடுத்து வருகிறது. ஆனால், இவர்கள் அவ்வளவு அதிகமாகக் கேட்கவில்லை. இவர்கள் 10,000 ரூபாய் கொடுத்தால் போதும் என்று கேட்டு வருகிறார்கள். பல

[திரு. பி.வி. கதிரவன்] [2012 ஏப்ரல் 23

ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். அரசு அந்த 8,000 பேருக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. தமிழக அரசு அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. அதுபோன்று ஒரு சட்டம் வந்தால் சில்லரை வியாபாரிகள், பலசரக்குக் கடைக்காரர்கள், தள்ளுவண்டிக்காரர்கள் அனைவரும் பாதிப்படையக்கூடிய நிலை வரும். மாண்புமிகு தமிழக அரசு மத்திய அரசு கொண்டு வரும் அந்தச் சட்டத்தை ஏற்கக்கூடாது என்பதைச் சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறுவது குறித்து வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருப்பதாக கூறி இருக்கிறார்கள். ஆனால் நான் அறிந்த வகையில் ஏற்கெனவே இதுதொடர்பான வழக்குகள் எல்லாம் உச்ச நீதிமன்றத்தில் முடிந்து விட்டன. சென்னையிலே இருக்கிற ஒரு கூட்டுறவு சொசைட்டியில் நடந்த தேர்தல், கடந்த ஆட்சியிலே தவறாக நடந்து அது கலைக்கப்பட்டது. அதை எதிர்த்த வழக்குதான் உச்ச நீதிமன்றத்திலே இருப்பதாக எனக்குத் தெரிகிறதே தவிர, ஒட்டுமொத்தமாக கூட்டுறவுச் சங்கத் தேர்தல் வழக்கு என்பது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலே இல்லை. ஆகவே, இதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்கிறீர்கள். அவர் விரிவாகக் கேட்கிறார். நான் சொல்லிவிடுகிறேன். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் அதன் தொடர்புடைய விதிகளின்படி மாநிலத்தில் உள்ள தொடக்க மத்திய தலைமை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை 2007 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் தேதி முதற்கொண்டு நடத்த முந்தைய அரசு ஆணையிட்டது. அப்படித் தேர்தல் நடக்கும்போது, அந்தத் தேர்தல் நடந்து சில விரும்பத்தகாத சூழ்நிலையால் தேர்தல் நடவடிக்கைகளை முந்தைய அரசு இரத்து செய்தது. அது அரசாணை 2D, எண் 76, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11–07–2007–ல் ஆணை வழங்கியது. இந்த ஆணையை எதிர்த்து ஏறத்தாழ 28 மனுக்கள், இங்கே நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலே 24 மனுக்கள், மதுரையிலே 4 மனுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு மனுக்களும் அங்கே தாக்கல் செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்தத் தேர்தலை இரத்து செய்வதற்கு அனுப்பப்பட்ட நாளிலிருந்து எடுத்துக்கொண்டு, 4 சங்கங்களுக்கும் தேர்தல் இரத்து செய்தது தவறு. அரசு இதிலே தலையிடுவதற்கு சட்ட விதிகளின்படி உரிமையில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இதே ஷரத்தை, இதே கருத்தை வலியுறுத்தி மாண்புமிகு நீதிபதி அவர்கள் மதுரை உயர் நீதிமன்றக் கிளையிலும் சொல்லியிருக்கிறார். அப்படி சொல்லியதன் அடிப்படையில் அன்றைக்கு இருந்த அரசு, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது.

பிற்பகல் 12–55

அதுமட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற வழக்கு இப்போது நிலுவையில் இருக்கிறது, 6–8–2012 அன்று வாய்தா வர இருக்கிறது. இதுதான் உண்மை. ஒரு அரசுத் துறையின் நிர்வாகத்தில் அரசு தலையிடக்கூடாது என்றால் என்ன நியாயம் என்று கேட்பதற்காகத்தான் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த வழக்கிலே என்ன நடக்கிறது என்பதை பார்த்துவிட்டுதான் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

அதே நேரத்திலே இன்னொன்றையும் தெளிவாகச் சுட்டிகாட்ட விரும்புகிறேன். இது சம்பந்தமாக நீங்களும் கேட்கலாம். அடுத்து வருபவர்களும் கேட்கலாம். (குறுக்கீடு) அங்கே மாண்புமிகு உறுப்பினர் பாண்டியராஜன்கூட சொல்கிறார். இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்திலே Bill pass ஆகிவிட்டது. நடத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அரசிதழ் வெளியிட்டுவிட்டார்கள். இருந்தாலும் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஒரு மாநில அரசு இந்தத் தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் நடத்துகின்றபோது, புதிய உறுப்பினர்களும், புதிய சங்கங்களும் இயங்குகின்ற அளவிற்கு சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்காகத்தான் உச்ச நீதிமன்றத்தின் வழக்கு என்ன சொல்கிறது என்று தெரிந்துகொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் வல்லுநர்களை வைத்து அதற்குத் தீர்வு கண்டு, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை எப்படி நடத்தினால் முறையாக இருக்கும், சிறப்பாக இருக்கும் என்பதற்கு ஆய்வு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தலைப் பற்றி சில விளக்கங்களை நான் இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கின்ற நேரத்தில் 1990–1991 காலகட்டத்தில் இந்தக் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட்டது. அப்போதே இந்தக் கூட்டுறவுத் தேர்தலை அவர்கள் முறைகேடாகத்தான் நடத்தினார்கள். அறையில் உட்கார்ந்துகொண்டு, பேரேடுகளை எடுத்து வரச்சொல்லி அங்கே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளையெல்லாம் பட்டியலிட்டு, அங்கேயே கையெழுத்து போட்டு தேர்தலை நடத்தி முடித்து விட்டார்கள். அதற்குப் பின்னாலே அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் உறுப்பினர்களாக வைத்துக்கொண்டு, எல்லாக் கட்சிக்காரர்களையும் நீக்கினார்கள். இது முதல் முறை.

இரண்டாவது முறையாக 1996–ல் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரும்போது அதே முறையைக் கையாண்டு, கூட்டுறவுத் தேர்தலை நடத்தினார்கள். அப்போதும் வேறு யாராவது, மற்ற கட்சிக்காரர்கள்

2012 ஏப்ரல் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தால், அவர்களை நீக்கிவிட்டு அந்தத் தேர்தலையும் முறைகேடாக நடத்தினார்கள். நடத்திவிட்டு என்ன செய்துவிட்டார்கள் என்றால், அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவாளர்கள்—Body, இருந்தால்தான் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தால்தான், அவர்களுக்கு வாக்களிக்கின்ற உரிமை இருக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தினைப் பயன்படுத்தி மீண்டும் அவர்கள் 2007–ல் ஒரு தேர்தலை நடத்தினார்கள். அப்போது அதே முறையைக் கையாண்டார்கள். அப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் மற்றும் அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் எல்லாம் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். எதிர்ப்பு தெரிவித்ததன் அடிப்படையில் மைனாரிட்டி தி.மு.க. முதலமைச்சர் கருணாநிதி அதை இரத்து செய்தார். 23 ஆண்டுக்காலமாக அந்தக் கூட்டுறவுத் துறையை நசுக்கி அதைச் செயல்படாமல் ஆக்கிவிட்டார்கள். கூட்டுறவு, உணவு மற்றும் பால் வளத் துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. ஆக எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் இருந்தது, தி.மு.க.–வின் அத்துமீறிய செயல் நடைபெறுவதற்கு முன்பாக. அதையெல்லாம் நசுக்கி, இன்றைக்கு கூட்டுறவுத் துறையே நசுக்கப்பட்டதற்கு காரணம் மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றத்தில், அந்தச் சட்டத்தில் இருக்கின்ற ஒரு வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, நீக்குவதற்கு உரிமை இருக்கிற நேரத்தில் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நிர்வாகிகளாக வந்த மற்ற கட்சிகாரர்கள் எல்லாம் நான் 1990–91 அதற்கு முன்னால் உறுப்பினராக இருந்தேன். 1996–ல் வரும்போது அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் என் பெயரையும் வரைமுறையின்றி நீக்கி எனக்கு வாக்களிக்க உரிமையில்லாத சூழ்நிலை. அதைப்போன்று தமிழகத்தில் இருக்கின்ற மற்ற கட்சிக்காரர்களை நீக்கி, வைத்திருக்கின்ற சூழ்நிலையை உருவாக்கி, தி.மு.க. உறுப்பினர்கள் மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய சூழ்நிலையை அங்கே உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்றுதான் நாங்கள் கோர்ட்டில் சொன்னோம். அதாவது, உண்மையான கூட்டுறவாளர்களை அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 23

உறுப்பினர்களாக சேர்த்து, கடன் பெற்ற அவர்களையும், தகுதி உள்ளவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்து, தேர்தலை நடத்துங்கள், அந்த வாய்ப்பினைக் கொடுங்கள் என்றுதான் நாங்கள் உயர் நீதிமன்றத்திடமும், உச்ச நீதிமன்றத்திடமும் சொன்னோம். ஆனால், உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர்தான் வாக்குரிமை இருக்கும் என்ற ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் கோர்ட்டில் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன். Now the time is 1–00 p.m. Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) அவர்தான் பதில் அளித்துவிட்டாரே! (குறுக்கீடு) உங்கள் பெயரினை refer செய்துதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு விநியோக முறை சிறப்பாகச் செயல்படுவது குறித்து நான் வரவேற்கிறேன். மனிதன் தன் வாழ்விற்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது. தமிழகத்தில் 500 மக்கள் வசிக்கக்கூடிய இடத்தில் ஒரு நியாய விலைக் கடை கொடுப்பது சரிதான். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு exception கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கன்னியாகுமரி பகுதி, மலையோரம் மற்றும் கடல் சார்ந்த பகுதி. 100 குடும்பங்கள் இருக்கக்கூடிய இடத்தில் ஒரு கடை கொடுப்பது மிகவும் நல்லது, வரவேற்கக்கூடியது. அப்படி செய்திருந்தால், வயோதிக மக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய விலையில்லா அரிசியை எளிதில் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடைகளில் கிடைக்க வேண்டிய அனைத்துப் பொருள்களும் ஒரே நேரத்தில் கிடைக்கவில்லை என்ற வருத்தம்

2012 ஏப்ரல் 23] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

இருக்கிறது. ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரே நேரத்தில் எல்லா கடைகளிலும் எல்லாப் பொருட்களும் கிடைக்கவில்லை. 15 ஆம் தேதிக்கு பிறகு அரிசி கிடைக்கும்; மற்ற பொருட்கள் கிடைப்பதில்லை. இதுகுறித்த வருத்தம் மக்கள் மத்தியில் இருப்பதனால், . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிரின்ஸ் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷன் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எந்தக் கடையில், எந்த இடம், எந்த ஊர் என்று அவர்கள் எழுதிக் கொடுத்தால் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான்கூட நேரில் பல கடைகளுக்குச் சென்றிருக்கிறேன். அங்கே இருப்புப் பலகை நிச்சயமாக வைத்திருக்க வேண்டும். அங்கே இருப்புப் பலகை வைப்பதில்லை. அதுவும் ஒரு குறைபாடுதான். ஆட்சி செய்யும்போது ஏற்படுகின்ற தவறுகளை சரிப்படுத்திக்கொள்ளலாம் என்பதற்காகச் சொல்கிறேன். நியாய விலைக் கடைகளில் பணியாளர்களாக பணி செய்ய அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அவர்கள் எளிதில் வந்து பணி செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும். அவர்கள் குறைந்த ஊதியத்தில்தான் பணியாற்றுகிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஊராட்சிக் கடைகளில் பணிபுரிபவர்கள் குறித்து சில குற்றச்சாட்டுகள் உள்ளன. சிலர் ஊராட்சிக் கடைகளில் பொருட்களை பெற்றுக்கொள்கிறார்கள். அங்கே, மிக்ஸி, கிரைண்டர்

மற்றும் மின் விசிறி கொடுக்கப்படுகிறது. அதே சூழ்நிலையில் ஊராட்சியில் உள்ளவர்கள் பேரூராட்சிகளில் உள்ள கடைகளில் வாங்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அவர்களுக்கு இந்தப் பொருள்கள் கிடைப்பதில்லை. அந்த வருத்தம் மக்களுக்கு இருக்கிறது. எனவே, அதைச் சரி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சியில் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களுக்கு குடும்ப அட்டை இருந்தால் அவர்களுக்கு மிக்ஸி, மின் விசிறி மற்றும் கிரைண்டர் கிடைக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். குடும்ப அட்டை இருந்தால் போதும், அது பேரூராட்சி அல்லது நகராட்சிப் பகுதியில் இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் மிக்ஸி, மின் விசிறி, கிரைண்டர் கொடுக்கவிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு இருந்தால் மிக்க சந்தோஷம். அதாவது, சிற்றூராட்சிக் கடைகளில்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள்தான் பெற்றுக்கொள்கிறார்கள். பிற்காலத்தில் இதுபோல் கொடுக்க வேண்டும் என்று நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். புதிய ரேஷன் கார்டுகள் வழங்குவதற்காக விசாரணைக்குச் செல்கின்ற அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். இதனால் பலருக்கு ரேஷன் கார்டுகள் கிடைக்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதையும் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (குறுக்கீடு)

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடும்ப அட்டையைப் பொறுத்தவரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்தகால ஆட்சியில் 37 இலட்சம் பேருக்கு தமிழகத்தில் குடும்ப அட்டையினைக் கொடுத்து சாதனையைப் படைத்தார்கள்.

பிற்பகல் 1–05

நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே 4 இலட்சத்திற்கும் மேலாக குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலே அப்படிக் கொடுக்கவில்லை என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். 60 நாட்களுக்குள்ளாக குடும்ப அட்டைகள் கொடுக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. அந்த விதியை மீறி எங்கேயாவது இந்த மாதிரிப் பிரச்சினை இருக்கிறது என்று குறிப்பிட்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இவற்றிற்கு அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு வங்கிகளில் போதுமான பணியாளர்கள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** நீங்கள் போய் பார்த்தீர்களா? *(குறுக்கீடு)* **

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ** ஆகவே, அங்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** **Authenticated**–ஆக பேசவேண்டும். உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஏப்ரல் 23

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆனால், நீங்கள் சொல்லிவிட்டால் நிச்சயமாக **

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப தவறான தகவலை இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறார். தயவு செய்து அவர் கூறிய கருத்துகளை குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த இடத்தில் எங்கே என்று உறுப்பினர் சரியாகச் சொல்ல வேண்டும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ** இருந்தாலும் பரவாயில்லை. நல்லது செய்தால் போதும். கூட்டுறவு வங்கிகளில் போதிய பணியாளர்கள் இல்லாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் இடம்பெறாது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: கூட்டுறவு வங்கிகளில் போதிய பணியாளர்கள் இல்லாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன், திரு. எம். ஆறுமுகம் ஆகியோர் என்னைப் பார்க்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு தகவலைச் சொல்கின்றேன். Democracy-ல் Legislature என்பது ஒரு முக்கியமான Forum. இங்கே தகவல்களை நீங்கள் authenticated ஆக கொடுக்கவேண்டும். அது அதிகாரபூர்வமான தகவல்களாக இருக்க வேண்டும். பொத்தாம் பொதுவாக ** சொல்லக்கூடாது. நான் போய் Bank-ல் பார்த்தேன், டெபாசிட் தொகை இவ்வளவு இருக்கிறது, Loan இவ்வளவு கொடுத்திருக்கிறார்கள், further-ஆக தொகை இவ்வளவு தேவை என்று information sufficient ஆக கொடுத்தால் அமைச்சருக்கு பதிலளிக்க அது வசதியாக இருக்கும். நீங்கள் சொல்கின்ற கருத்திற்கும் வலுவாக இருக்கும். அப்படிச் சொல்லுங்கள் நீங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் அரசைக் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி குற்றப்படுத்தி பேசவில்லை. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்றபோது மிக்ஸி, இரைண்டர், மின் விசிறி வழங்குகின்ற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே ஒரு சிறிய திருத்தம். அரிசி வாங்குபவர்களுக்கு மட்டும்தான் அவை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பணியாளர்கள் பற்றாக்குறையையும் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் ஏற்கெனவே பல உறுப்பினர்களும் கேட்டார்கள். நாங்கள் சொல்லியிருக்கிறோம். மாநில அளவிலான தேர்வுக் குழுமம் மற்றும் மாவட்ட அளவிலான தேர்வுக் குழுமம் ஆகியவற்றின் மூலமாக விரைவில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். அதற்கான பணிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதற்கான பணிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் ** சொல்கின்றார். 2001–2006 ஆம் ஆண்டுகளில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த நேரத்தில், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் பணம் இல்லை என்று சொல்லி அந்த வங்கி திவால் ஆகும் சூழ்நிலை இருந்தது. அந்த நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர்கள் அனைவரும் போராடிக்கொண்டிருந்தார்கள். அன்றைக்கு சுற்றுப் பயணம் வந்த மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களிடம் பொதுவுடமைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ம. குணசேகரன்] [2012 ஏப்ரல் 23

கட்சிகளெல்லாம் கேட்கின்றபோது, இது மாநிலத்தினுடைய பிரச்சினை, என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி தமிழகத்திற்கு நிதி வழங்காமல் புறக்கணித்தார், காங்கிரஸ் கட்சியினுடைய மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம். அவர்களே இன்றைக்கு ** பேச என்ன அருகதை இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ் உட்காருங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலோடு கூடுதலாக அன்றையதினம் அந்த சிவகங்கை மாவட்டத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு அரசு மூலமாக நிதி கொடுக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கி திவாலாகும் சூழ்நிலையைத் தடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தனி, மாநில அரசு தனி. மாண்புமிகு மத்திய அமைச்சர் அவையில் இல்லாதவர், அவரைப் பற்றி பேசியது தவறு. பாரபட்சம் இல்லாமல்தான் மத்திய அரசு செயல்படுகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, மத்திய அரசு பாரபட்சம் இல்லாமல் செயல்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி கூடியுள்ள இந்தக் காலகட்டத்தில் . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவையில் பேசுவதற்கு அனுமதியளித்த சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய தலைவர் எங்கள் அண்ணன் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, கடைசியாக பேசுவது எவ்வளவு கடினம் என்பது எனக்குப் புரிகிறது. இருக்கின்ற குறைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும், இந்த அவையிலே ஒரு கருத்தை நான் பதிய வைக்க விரும்புகின்றேன். நியாய விலைக் கடைகளில் கோதுமை கொடுக்கப்படுகிறது. அந்தக் கோதுமையை பெரும்பாலனவர்கள் பயன்படுத்துவதில்லை. (குறுக்கீடு) பயன்படுத்துவதே இல்லையென்று நான் சொல்லவில்லை. பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவதில்லை.

நம்முடைய, தமிழ்நாட்டிலே கிடைக்கின்ற, பயிர் செய்கின்ற கேழ்வரகு, கம்பு ஆகியவற்றை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய வேண்டுமென்று நான் இந்த அவையிலே கோரிக்கையாக வைக்கிறேன். காரணம், ஒரு காலத்தில் கேழ்வரகு ஏழையெளியவர்க்கு மட்டும்தான் பயன்பட்டது. அதாவது, சோறு கிடைக்காமல், அரிசி கிடைக்காமல் உள்ளவர்கள்தான் தங்களின் ஏழ்மை நிலையினைக் கருதி கேழ்வரகைக் கூழாக்கிச் சாப்பிட்டார்கள். ஆனால், இன்றையதினம் பார்த்தால், நகர் பகுதியாக இருந்தாலும், மாநகரப் பகுதியாக இருந்தாலும், இப்போது நீங்கள் walking போனால், எல்லா பூங்காக்களிலும் பார்க்கலாம் கூழ் விற்பனை செய்வதை. இந்த மாதிரியான சூழ்நிலையில் அன்றைக்கு வறுமைக்குக் கூழ் குடித்தார்கள். ஆனால், இன்றைய சூழ்நிலை அப்படியில்லை. இன்றைய சூழ்நிலையில் அது நாகரிகமாகிவிட்டது. வண்டியில் கூழ்வைத்து விற்கிறார்கள். அந்த வண்டியில் ஒரு டம்ளர் கூழ் வாங்கி சாப்பிடலாம் என்கிற நிலை இருக்கிறது. உடல் நிலையைக் கருத்தில்கொண்டு, cholesterol குறைக்கிறோம், sugar குறைக்கிறோம்

என்று சொல்லி உடல் நிலையைக் கருத்தில்கொண்டும் இன்றையதினம் கேழ்வரகால் உருவாக்கப்படுகின்ற கூழ் அவசியமான ஒன்றாகியிருக்கிறது. எனவே, நியாய விலைக் கடைகளில் கேழ்வரகை விற்பனை செய்வதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேசமயம், கேழ்வரகு, கம்பு போன்றவற்றை குறைந்த தண்ணீரில் விவசாயம் செய்யலாம். இது நம்முடைய விவசாயிகளுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தை இந்த அவையில் நான் முன்வைக்கின்றேன்.

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையில் நிறைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் எவ்வளவு பணியிடங்கள் இருக்கின்றன? எவ்வளவு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிட்டிருக்கலாம். அது உறுப்பினர்களுக்கு உதவியாக இருந்திருக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2012 அன்றுள்ளவாறு கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களின் விவரம்: தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 1,225. இதர வகை கூட்டுறவுச் சங்கங்கள்—other types of Co-operative Societies–ல் 639. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் 1,513. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியில் 115. பொது விநியோகத் திட்ட விற்பனைப் பணியாளர்கள் மற்றும் கட்டுனர்கள் 4,879. ஆக 8,371 காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. இத்தனை பணியாளர்கள் தேவை. இந்த பணியிடங்களை நிரப்புவதற்காகத்தான் அரசு விரைவாக எந்த மாதிரியான நடவடிக்கை எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் குழு அமைத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

2012 ஏப்ரல் 23]

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழகத்திலே, உணவுப் பொருட்கள், தேவையான அத்தியாவசியப் பொருட்கள் சீராக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கிறார்கள். தே.மு.தி.க. உறுப்பினரைப் பொறுத்தவரை ஒரு கருத்தை இப்பொழுது சொன்னார், கம்பு, கேழ்வரகு இவற்றை கொடுக்கலாம் என்று. (குறுக்கீடுகள்) அதையும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். கோதுமை, கேழ்வரகைப் பொறுத்தவரை, தமிழகத்தினுடைய, இந்தியாவினுடைய தேவைக்கேற்ப பயிரிடப்படுகின்றனவா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. அவை ஆங்காங்கே, சில இடங்களில் மட்டுமே பயிரிடப்படுகின்றன. ஆகவே, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றை அவ்வாறு கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்பதனை தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: அதாவது, அரசு அதுபோன்றதொரு முயற்சி செய்யுமேயானால், விவசாயிகள் நிச்சயமாக அந்த விளைபொருள்களைப் பயிர் செய்வார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிறுவனங்களிலே 2011–2012 ஆம் ஆண்டில் 1,241 நபர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே 159–வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிறுவனங்களில் இதுவரையில் எத்தனை ஆயிரம் பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்? அவர்களுக்குப் பணிகள் வழங்கப்படுமா, வழங்கப்படாதா? கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிறுவனங்களிலிருந்து பயிற்சி பெற்று வந்திருக்கிறவர்களுக்குக் கூட்டுறவுத் துறை வேலைவாய்ப்பு வழங்குமா, வழங்காதா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மேலாண்மைப் பட்டயப் பயிற்சி வகுப்பை நடத்த மைனாரிட்டி கருணாநிதி அரசு, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை நடந்த ஆட்சியிலே எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் வந்துதான், இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இவ்வளவு பேருக்கு இப்போது பயிற்சி கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் கேப்பை, வரகு, இவற்றையெல்லாம் கூடுதலாக ரேஷன் கடைகளில் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். ** ஆகையால், கேழ்வரகில் என்னென்ன புரதச் சத்துகள் இருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் கேழ்வரகு கஞ்சி தினமும் சாப்பிடுகிறீர்களா, இல்லையா?

திரு. எல். வெங்கடேசன்: கேழ்வரகில் என்னென்ன கிடைக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டுதான் அவையிலே பேசவேண்டுமென்றால், இங்கே இருக்கிற யாருமே, எதைப் பற்றி பேசினாலுமே—எல்லோருக்கும் தெரிந்துவிடாது (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது கேழ்வரகு என்பது நாம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு. எல். வெங்கடேசன், ஒரேயொரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலே humorous–ஆகச் சொன்னார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், குறுக்கிடக்கூடாது. மாண்புமிகு அமைச்சரைப் பொறுத்தவரையில், அவர் humorous–ஆக கேழ்வரகில் என்னென்ன ingredients

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கின்றன என்பதைக் கேட்கிறார். உங்களுக்குத் தெரிந்திருந்தால், தெரியும் என்று சொல்லுங்கள். இல்லையென்றால், நான் சொல்கிறேன். அதில் கால்சியம் அதிகமாக இருக்கிறது; கிட்டத்தட்ட 40% இருக்கிறது. புரோட்டீன் இருக்கிறது; கார்போஹைட்ரேட் இருக்கிறது; மற்ற மினரல்ஸ் இருக்கின்றன. எனவே, அதில் fibre contents மிக அதிகமாக இருக்கின்றன. ஆகையால், கேழ்வரகை விரும்பிச் சாப்பிடுங்கள், தினமும் சாப்பிடுங்கள். (சிரிப்பு)

திரு. எல். வெங்கடேசன்: சரி, நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எல். வெங்கடேசன், ஏற்கெனவே, நீங்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான வகுப்புகள் எடுக்கப்பட்டு, சட்டமன்றம் குறித்த விளக்கங்கள் எல்லாம் தெளிவாகச் சொல்லப்பட்டன. பொதுவாக, நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே நீங்கள் உட்கார வேண்டும். அதுதான் மரபு. நீங்கள் நின்றுகொண்டே இருக்கக்கூடாது. நான் பேசும்போதும் எழுந்து அதற்குப் பதிலளிக்கையில் நீங்கள் உட்கார வேண்டும் என்பதுதான் மரபு. எனவே, வருங்காலங்களிலாவது அதைக் கடைப்பிடியுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விவசாயிகள் பெறும் பயிர்க் கடன்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, AC(L) இடம் அனுமதி பெற்ற பிறகே, வழங்கப் பெறுவதால் குறைந்தது ஒரு மாதக் காலம் பயிர்க் கடன் வழங்குவதற்கு ஆகின்றது. அதேபோன்று . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கொஞ்சமாவது மனசாட்சி இருக்கிறதா? 3,000 கோடி ரூபாய் என்று அறிவித்து, 3,280 கோடி ரூபாய், பத்தே மாதங்களில், இதுவரை வரலாற்றிலே எந்த அரசும் தமிழகத்திலே செய்யாத அளவுக்கு இந்த அரசு வழங்கியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்றால், இந்தத் துறையிலே தவறு ஏற்பட்டிருக்குமா? அப்படி எங்கே நடக்கிறதென்று சுட்டிக்காட்டுவீர்களேயானால் நிச்சயமாக துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 23

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: கடந்த ஆண்டு கூட்டத் தொடரிலேகூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். உதாரணத்திற்காக என்னுடைய தொகுதியிலே பாவந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே திரு. தண்டபாணி என்ற செயலாளர் முறைகேடு செய்த காரணத்தினால் அரசு அவருக்குத் தண்டனை வழங்கியிருக்கிறது, பணி நீக்கம் செய்திருக்கிறது. அரசு ஆணை எண் 55–ன்கீழ் கூட்டுறவுச் சங்கத்திலே பணிபுரிகின்ற செயலாளர்கள் பணிமாற்றம் செய்யப்படுவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை வைத்தேன். பரிசிலிப்பதாகச் சொன்னார்கள், ஆனால் இதுவரையிலே பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் நான் அடுத்த விஷயத்திற்குச் செல்கிறேன். 'தானே' புயல் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அந்த சங்கச் செயலாளர் அவர்களை மாற்ற வேண்டும் என்பதுதான். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிறார். அப்படி மாற்றுவதற்கு வழியில்லை. வைத்தியநாதன் கமிட்டி, அந்தச் சங்கத்தை நிருவகிக்கக்கூடிய திறமை, அனுபவங்கள் அவருக்குத்தான் இருக்கின்றன. அதனால் அவரை மாற்றக் கூடாது என்று ஒரு வழிகாட்டுதல் கொடுத்து இருக்கிறது. தவறு செய்பவர்கள்மீது நிச்சயமாக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று. எனவே, இதுமாதிரி எங்கேயாவது தவறு நடக்குமேயானால் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட வேண்டும், அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

2012 ஏப்ரல் 23]

திரு. எல். வெங்கடேசன்: 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாயிகளுடைய குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக அரசு அறிவித்திருக்கிறது. அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்ட அந்தத் தொகைக்கு விவசாயிகளுக்கு வட்டி இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறுகிய காலக் கடனை மத்திய காலக் கடனாக அரசு மாற்றியிருக்கிறது என்று சொல்கிறார். இப்பொழுது ஏன் திரு. வெங்கடேசன் அவர்கள் வருத்தப்படுகிறார், இப்பொழுது அது தேவையே இல்லையே! இப்பொழுது அந்தக் கேள்வியே எழவில்லையே! அதாவது, என்னவென்றால் மூன்று ஆண்டுகள் கழித்து கட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மாவினுடைய இந்த அரசு 'தானே' புயலின்போது எவ்வளவு தூரம் சிறப்பாகச் செயல்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். பயிர்க் கடனுக்கு இழப்பீடு கொடுத்திருக்கிறது. இப்பொழுது பயிர்க் காப்பீட்டுத் தொகை மூலமாக விவசாயிகளுக்கு அவர்கள் என்னென்ன பயிர்கள் விளைவித்தார்களோ அதற்குரிய இழப்பீடும் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்பொழுது அந்தமாதிரி ஒரு சூழ்நிலை எழவில்லை. இருந்தாலும், இவ்வளவு செய்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள், அதைச் செய்வதற்கு பரிசீலிக்கமாட்டார்களா? எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இப்பொழுது விவசாயிகள் கேட்டதையொட்டி குறுகிய கால பயிர்க் கடனை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் மத்திய காலக் கடனாக அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

[2012 ஏப்ரல் 23

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயலிலே குறுகிய காலக் கடனை நம்முடைய அரசு மத்திய காலக் கடனாக மாற்றியது. ஆனால் குறுகிய காலக் கடனுக்கு 7 சதவீதம் வட்டி, கடனை உரிய காலத்திற்குள்ளே கட்டினால் அதையும் அரசாங்கமே கட்டிவிடுகிறது. இதை மத்திய காலக் கடனாக மாற்றுகிறபொழுது 14 சதவீதமான வட்டி கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, நல்ல நோக்கத்தோடுதான் நீங்கள் மத்திய காலக் கடனாக மாற்றினீர்கள். 14 சதவீதம் வட்டியை சேர்த்துக் கட்டுகிறபோது அந்தச் சலுகை என்பது விவசாயிகளுக்குச் சுமையாக மாறிவிடுகிறது. எனவே, மாற்றப்பட்ட மத்திய காலக் கடனுக்கு வட்டியை இரத்து செய்தால் அந்தச் சலுகை முழுமையாக விவசாயிகளைச் சென்றடையும். அதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் விரிவாகச் சொல்லிவிடுகிறேன். விழுப்புரம் மாவட்டத்தில் இந்த மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 5,627 பேர்கள். இதற்கு அவர்கள் வாங்கிய தொகை 18.22 கோடி ரூபாய். இதை அவர்கள் கட்டவில்லை என்றால் 7 சதவீதம் வட்டி. அதை அவர்கள் உரிய காலத்தில் கட்டியிருந்தால், அம்மாவினுடைய அரசு ஏற்றுக்கொள்வது ரூபாய் 0.69 இலட்சம்.

கடலூர் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின்கீழ் வரக்கூடிய பயனாளிகள் 30,206 விவசாயிகள். அவர்கள் வாங்கிய கடன் 102.3 கோடி ரூபாய். அதாவது, 102 கோடியே 3 இலட்சம் ரூபாய். இதற்கு 7 சதவீதம் வட்டி 2.49 கோடி ரூபாய். அதாவது, 2 கோடியே, 49 இலட்சம். இது என்னவென்றால், இப்பொழுது நீங்கள் கேட்கிற மத்திய காலக் கடனாக மாற்றப்படுவதால், இந்த மத்திய காலக் கடனுக்கான வட்டி செலவினம் எவ்வளவு என்றால், மிகவும் அதிகம் இல்லை. நீங்கள் சொல்கிற மாதிரி எல்லாம் இல்லை. மொத்தமாக இந்த 3 வருடம் என்று எடுத்தால் 5 கோடியே 19 இலட்சம்தான், இது விழுப்புரம் மாவட்டத்திற்கு. கடலூர் மாவட்டத்தில் 30 கோடியே 82 இலட்சம். இப்படி மாற்றப்பட்டு இருப்பதால் இப்பொழுது அம்மா அவர்கள் மேலும்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

இழப்பீடு எவ்வளவு கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் நேரமாகிவிடும். இதை இப்பொழுது மாற்றியிருக்கிறார்கள். இது சம்பந்தப்பட்ட கருத்துரு ஆய்விலே இருக்கிறது. நிச்சயமாக அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள். (குறுக்கீடு) இரண்டு அமைச்சர்களுடைய பதிலுரை இருக்கிறது. திரு. எல். வெங்கடேசன், சீக்கிரம் உரையை முடியுங்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். 4,534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலே வைப்பீடுகள் 4,308.19 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர்களுடைய பங்குத் தொகை எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைசியாக பதில் சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும். அந்தப் பங்குத் தொகையால், ஈவுத் தொகையால் பயனடைந்தவர்கள் எத்தனை இலட்சம் பேர் என்று குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு, வெள்ளம், வறட்சி, சூறாவளி, காற்று, பூச்சித் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படுகின்ற மகசூல் இழப்பை ஈடுசெய்ய தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் பயன்படுத்தப்படுகிறது. இந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் உண்மையாகவே வரவேற்கக்கூடியதுதான். இருந்தாலும் அந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்திலே கடன் பெறுகின்ற விவசாயிகளுடைய கடன் தொகையிலே 1.6 சதவிகிதம் insurance தொகையாக பிடிக்கப்படுகிறது. அதேபோல், மத்திய மாநில அரசுகள் 1.6 சதவிகிதம் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கின்ற சூழ்நிலையிலே பாதிக்கப்படுகின்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில், அதாவது ஒரு பருவத்திற்கு மகசூல் இருக்கிறது என்று சொன்னால், அங்கே வேளாண் துறை, புள்ளியியல் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய மூன்று துறைகளும் சேர்ந்து ஒரு குறுவட்டத்திலே random முறையிலே தேர்வு செய்யப்படுகிறது. அதிலே எந்த முறைகேடும் கிடையாது.

[திரு. எல். வெங்கடேசன்] [2012 ஏப்ரல் 23

இடத்திலே நெல் எவ்வளவு விளைந்திருக்கிறது என்பதை இந்த மூன்று துறைகளையும் சேர்ந்தவர்கள் சென்று ஆய்வு செய்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் சராசரி மகசூல் அளவு நிர்ணயம் செய்யப்படுகிறது. அதிலே அனைத்து விவசாயிகளும் நிச்சயமாக பயனடையமாட்டார்கள் என்பது என்னுடைய கருத்து. ஒரு குறுவட்டம் என்பது 15–20 கிராமங்களுக்கும் மேலேகூட உள்ளடக்கியது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், அந்த 20 கிராமங்களிலே ஓரிடத்திலே ஒரு சர்வே நெம்பரில் போய், ஒரு வயலில் போய், சுமார் பத்திற்கு பத்து அடி அல்லது சுமார் 4 சென்ட் அளவிற்கு எவ்வளவு நெல் விளைந்திருக்கிறது என்று பார்த்தால், அதுதான் அந்தக் குறுவட்டத்தில் இருக்கிற சராசரி என எடுத்துக்கொண்டால். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய வேளாண் துறையின் சார்பாக ஏற்படுத்தப்பட்டது. இப்போது தஞ்சாவூர் டெல்டா பகுதியை எடுத்துக்கொண்டோம் என்றால் அங்கே அதிகமான விளைச்சல் உள்ளது. எனவே, அங்கு ஒரு விலை இருக்கிறது. அதேமாதிரி ஒவ்வொரு இடத்திலும் அந்தப் பயிரினுடைய தாக்கம், அதன் விளையும் தன்மையைப் பொறுத்து – மானாவாரி, நீர்ப் பாசனம் என்று சொல்வதைப்போல் – அந்தந்தத் தன்மையை அந்தக் மாவட்டக் குழுவே பார்க்கிறது. குழு பார்த்து, அந்த இழப்பீட்டைக் கணக்கிட்டு அனுப்புகிறது. அந்த இழப்பீட்டை முழுமையாக அவர்கள் கொடுப்பதில்லை. 50 சதவிகித இழப்பீட்டை மத்திய அரசு கொடுக்கிறது, மாநில அரசு 50 சதவிகித இழப்பீட்டைக் கொடுக்கிறது. இந்தத் துறையில் இதுவரையில் எந்த இழப்பீடும் அளிக்கப்படவில்லை என்று எந்தவொரு குற்றச்சாட்டும் வரவில்லை என்றும், முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையை விவசாயிகள் வரவேற்கிறார்கள். இதில் Insurance Corporation கொடுப்பது வெறும் 10 சதவிகிதம்தான், மீதி 45 சதவிகிதம் மாநில அரசும் மத்திய அரசும் கொடுக்கிறது. மொத்தமாக 100 சதவிகிதம் விவசாயிகளுக்குக் கிடைத்துவிடுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த விளக்கம் போதும் என்று நான் கருதுகிறேன்.

2012 ஏப்ரல் 23]

திரு. எல். வெங்கடேசன்: என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரை, முஸ்குந்தா ஆற்றின் குறுக்கேயும், தென்பெண்ணையாற்றில் அண்றாயநல்லூர் அருகே மலட்டாறு பிரியும் இடத்தின் குறுக்கேயும், தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருக்கோவிலூர் மற்றும் ரிஷிவந்தியம் பகுதி மக்களின் மிகப்பெரும் பிரச்சினையாக உள்ள மின் பற்றாக்குறையைப் போக்க ஜி. அரியூர், மணலூர்பேட்டை ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

மணலூர்பேட்டையில் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்திற்குப் பதிலாக, அந்தப் பகுதி மக்கள் மழைக்காலங்களிலும், வெள்ளம் வருகின்ற காலங்களிலும் போக்குவரத்துக்குத் தடையின்றி பயன்படுத்தும் வகையில் உயர்மட்டப் பாலம் அமைக்கவும், அரும்பராம்பட்டு, ஆர்க்கவாடி இடையேயும், வடன்பொன்பரப்பி, பிரம்மகுண்டம் இடையேயும் பாலம் கட்டி அந்தப் பகுதி மக்களின் குறையைத் தீர்க்குமாறும் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

காட்டு நாயக்கர்களுக்கும், மலைக் குறவர் இனத்திற்கும் சாதிச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

***திருமதி எல். ஜெயசுதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறியாமை, தெளியாமை, புரியாமை, விளங்காமையில் சிக்கித் தவித்து, சிந்தி சிதறி, கந்தல் நிலையில் பந்துபோல் உருட்டிவிடப்பட்ட எந்தையராம், முந்தையராம் நம் மூதாதையர்; யார் அடிமை, யாருக்கு அடிமை, ஏன் அடிமை, எதற்கு அடிமை, எத்தனை நாள் அடிமை என்பதுகூடத் தெரியாமல், திண்ணைப் பேச்சிலே, விண்ணைப் பிளந்து, மண்ணை வார்த்து, உண்ண உணவு இல்லாமல், உடுக்க உடை இல்லாமல், இருக்க இடம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த தமிழக மக்களையும், தடுமாறிக்கொண்டிருக்கின்ற தமிழகத்தையும் காப்பாற்ற நான்

[திருமதி எஸ். ஜெயசுதா] [2012 ஏப்ரல் 23

இருக்கிறேன் என்று தோன்றியவர் போயஸ் தோட்டத்து பொன் மாதா. (மேசையைத் தட்டும் ஒலி) நான் நித்தம் நித்தம் வணங்கும் எனது குல தெய்வம். தமிழக மக்களுக்கு கோமாதா தந்த எங்கள் குல மாதா, பொன் மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

பிற்பகல் 1–30

புரட்சித் தலைவியின் புரட்சிப் படையில் எனக்கும் ஓர் இடம் கொடுத்து, கடமையாற்றுகின்ற வாய்ப்பும் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் மட்டுமல்ல, எனது தலைமுறையே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

சிறகுகளை விரிக்காமல் எப்படிப் பறவையால் பறக்க முடியாதோ, புல்லாங்குழலில் காற்றை நுழைக்காமல் எப்படி கீதம் இசைக்க முடியாதோ, துடுப்புகளே இல்லாமல் எப்படி படகைச் செலுத்த முடியாதோ, இதயத் துடிப்பு இல்லாமல் எப்படி மனிதனால் வாழ முடியாதோ, அதேபோல புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லாமல் தமிழகம் வாழ முடியாது, தமிழக மக்களைக் காப்பாற்ற முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவும், ஆற்றலும், திறமும், தெளிவும், வரலாற்று நுண்ணறிவும், பொருளாதாரப் புரிதலும், பொதுமை உணர்வும் கொண்ட மாட்சிமை மிகுந்த, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைச் சிகரமாக, சரித்திரங்களின் சகாப்தங்களாக, தமிழக சாம்ராஜ்யத்தின் முடிசூடிய முதலமைச்சராக ஆட்சியின் தலைமையை ஏற்று, இன்று தமிழ்நாட்டை வழி நடத்திச் செல்கின்ற, நாளைய பாரதத்தை வழிநடத்திச் செல்லவிருக்கின்ற வாழும் காலத்து வரலாறே! தமிழகம் போற்றும் பொக்கிஷமே, கழகத்தின் பொற்காலமே, இந்தியத் திருநாட்டின் எதிர்காலமே, தென்னகத்துக் குலவிளக்கே, எந்நாளும் நாங்கள் போற்றி வணங்கும் தெய்வத் திருமகளே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது கழகத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து இயம்ப நல்லதோர் வாய்ப்பினைத் தந்த திராவிடத்தின் திருமகளே! எங்களின் குலமகளே, அலைமகள், கலைமகள், மலைமகள் ஆகிய மூவரும் இணைந்த எங்கள் தெய்வத் திருமகளே! தங்கள்

2012 ஏப்ரல் 23] [திருமதி எல். ஜெயசுதா]

பொற்பாதங்களில் எனது சார்பிலும், போளூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பிலும் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, நன்றியோடும், விசுவாசத்தோடும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம், தன்னிகரில்லாத தனித் தலைமை தெய்வம்' என்று எல்லாம் வல்ல இறைவனை வள்ளலார் போற்றுவார். மேலும், அவர் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று ஓரறிவுடைய பயிருக்கும், புல்லுக்கும்கூட வாடினார். பாட்டாளிகளும், பாமரரும் ஆட்சிக் கட்டிலிலே அமரவேண்டும் என்பதற்காக தன் வாழ்நாள் முழுவதும், தன் சக்தி அனைத்தையும், அறிவு அனைத்தையும் அர்ப்பணித்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று நிலைப்பாடுகளை மந்திரமாய் வைத்து, தனது கனவை நனவாக்கியவர் பேரறிஞர் அண்ணா. அவர் வழி நடந்து, புதிய சகாப்தத்தைப் படைத்து, வள்ளல் என்ற சொல்லுக்கு இலக்கணமாய் வாழ்ந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் புதிய வரலாறு கண்டு, ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து, இரக்கத்தையும், தொண்டையும் முன்னிறுத்தி அரசாண்டு, வாழ்நாள் முழுவதும் முதல்வராய், மாற்ற முடியாத முதல்வராய் நின்ற பொன்மனச் செம்மல், கடையேழு வள்ளல்களுக்கும் வள்ளலாக, குறை தீர்க்கும் கொற்றவனாக, ஒட்டிய மார்புகளிலும், ஓலைக் குடிசைகளிலும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒப்பற்ற தலைவர், புரட்சித் தலைவர் கண்டெடுத்த ஒரே தலைவி, சிங்க நிகர் தலைவி, தங்கத்தாரகை அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் அவர்தம் வழி நடந்து, உலக அரசியல் வரலாற்றில் பிரிக்கப்பட்ட இயக்கத்தை ஒன்றிணைத்து, இழந்த சின்னத்தை மீட்டெடுத்து, ஆட்சியில் அமர்ந்து, வாக்குகளை மட்டுமே முன்னிறுத்தி அல்ல, எதிர்காலத் தலைமுறையின் வாழ்வை முன்னிறுத்தி, வாழும்போதே வரலாறாய், சாதிக்கும் ஆற்றலையும், தகுதியையும், ஆளுமைத் திறனையும் பெற்ற துணிச்சல் மிக்க ஒரே தலைவி நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர் மட்டுமே! இம்மாமன்றத்தில் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு நலத் திட்டங்களை எல்லோரும் . .

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள், கேழ்வரகைப் பற்றி ஒரு கருத்து சொல்லும்போது, அவை முன்னவர் அவர்கள் குறுக்கிட்டு ** சொன்னார்கள். ** அவைக் குறிப்பில் இருக்காது. ** அவை முன்னவர் அவர்களுடைய கருத்தாக கேழ்வரகில் என்ன சத்து உள்ளது என்கின்ற ஒரு வினா தொடுத்து, அதன் அடிப்படையிலே அவர் சொன்ன கருத்தும், என்னுடைய கருத்தும் இடம்பெறும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** அந்தக் கேள்விக்கு நான் point of order சொன்னது என்னவென்றால், கேப்பை, கேழ்வரகைப் பற்றி உணவுத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு விளைகிறது என்று கேட்டார்கள். 9 இலட்சம் எக்டேரில் 23 இலட்சம் மெட்ரிக் டன் கம்பு, கேப்பை, கேழ்வரகு விளைவதாக நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அது அவ்வளவு சிறிய விஷயம் அல்ல என்பதை மட்டும்தான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் கம்பு, கேப்பை, கேழ்வரகு என்று சொல்கின்றாரே. கேப்பை, கேழ்வரகு இரண்டும் ஒன்றுதான் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு, இது வேறா? அதுதானா இது, இதுதானா அது? (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

திருமதி எல். ஜெயசுதா: 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற தாயுமானவரின் எண்ணத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23] [திருமதி எல். ஜெயசுதா]

எதிர்காலத் தலைமுறை, குறிப்பாக பெண்ணினம் காக்கப்பட வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம், இரக்கமும் தொலைநோக்கும் கொண்டது. சுனாமி தமிழகத்தைத் தாக்கியபோது சுனாமியின் வேகத்தைவிட வேகமாகச் செயல்பட்டு நிலைகுலைந்த தமிழகத்தை தன்னுடைய அறிவால், ஆற்றலால், ஆளுமைத் திறமையால் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, தலைநிமிரச் செய்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்ற வைர வரிகளுக்கு இலக்கணமாக, துணிச்சலாக சுனாமியின்போது செயல்பட்டதால்தான் உலகமே அம்மாவை வியப்போடும் ஆச்சரியத்தோடும் உற்று நோக்குகிறது. அதனால்தான் வல்லரசே இந்த நல்லரசை நேரில் வந்து பாராட்டிவிட்டுச் சென்றது. நிருவாகத் திறமைமிக்க முதலமைச்சர், பன்மொழி பேசும் வல்லமை பெற்ற முதலமைச்சர், துணிச்சலுக்குப் பெயர்போன முதலமைச்சர், அம்மா அவர்கள் மட்டுமே. ஆம், அம்மாவுக்கு நிகர் அம்மாதான்.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்று உதட்டளவில் பேசிக்கொண்டு மத்திய அரசின் கூட்டணியில் பங்குகொண்டு எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு, வெறும் மௌனப் பார்வையாளராக இருக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு மத்தியில், மாநில உரிமைகளுக்காக மட்டுமில்லாமல், ஈழத் தமிழர் நலன், கச்சத் தீவு, முல்லைப் பெரியாறு அணை விவகாரம், இப்படி ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு உரக்க குரல் கொடுக்கின்ற தலைவராக நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கி வருகின்றார்கள்.

சென்ற ஆளுநர் உரையில் இடம்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம், திட்டங்களை வகுக்கும் சுதந்திரம் மாநில அரசுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதுதான். இன்றைக்கு இந்தியா முழுவதும் பரபரப்பாகப் பேசப்படுகின்ற விஷயம் தேசிய தீவிரவாத தடுப்பு மையம் அமைக்கப்படும் என்று மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், எதேச்சாதிகாரமாக அறிவித்ததை, அம்மா அவர்கள் மிகக் கடுமையாக எதிர்த்திருக்கின்றார்கள் என்பதுதான். அம்மா அவர்கள் முதன் முதலில் உரக்கக் குரல் கொடுத்த பிறகுதான் 10 மாநில முதலமைச்சர்களும் அம்மாவின் குரலையே

[திருமதி எல். ஜெயசுதா] [2012 ஏப்ரல் 23

எதிரொளித்திருக்கிறார்கள். அம்மாவிடம் இருக்கின்ற உறுதி, துணிவு, தொலைநோக்குப் பார்வை போன்றவற்றை அனைத்து தரப்பினரும் வரவேற்று மகிழ்கிறார்கள். மாநில முதலமைச்சர் என்ற எல்லையைத் தாண்டி, இந்திய நாட்டையே பரிபாலனம் செய்யக்கூடிய ஆற்றலும், தகுதியும் அம்மாவிற்கு இருக்கிறதென்று சமூகத்தின் உயர் மட்டத்தில் இருக்கின்ற பல்வேறு தரப்பினரும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கின்றார்கள். இந்த நம்பிக்கைக்கு அம்மாவிடம் இருக்கின்ற தேச பக்தி, தெய்வ பக்தி, மனித நேயப் பண்பாடு, சவால்களை சாதுர்யமாக சமாளிக்கின்ற பிரத்தியேக ஆற்றல், பன்மொழித் திறமை போன்றவை முக்கிய காரணங்களாக விளங்குகின்றன.

ஆட்சிக்கு வருகிறபோதெல்லாம் கஜானாவைக் காலி செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்ட கடந்த தி.மு.க. ஆட்சியின் செயல்பாடுகளை நாடு அறியும். இந்த நாளிலமும் அறியும். தினமும் ஒரு பாராட்டு விழா, கற்ற தமிழை விற்கும் தமிழாக மாற்றி, சதா சர்வ காலமும் பாராட்டு, தாலாட்டு மயக்கத்தில், நாட்டைக் கவனிக்காமல் பட்டி மண்டபம், நடன மண்டபம், 'மானாட மயிலாட' இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், விட்ட குறை தொட்ட குறையாக சினிமா, சினிமாவிற்கு வசனம் என்று கடந்த ஆட்சியில் பரிபாலனம் செய்த பராசக்தியின் மைந்தன் அடித்த கூத்தைத்தான் சொல்லி மாளமுடியுமா?

அரசன் என்பவன் ஆட்சிக் கட்டிலை வழிநடத்துவதற்காகத்தானே தவிர, எந்நேரமும் கலாமண்டபத்தில் மூழ்கியிருந்ததன் காரணத்தினால், (மணியடிக்கப்பெற்றது) முன்னேறிய மாநிலமாக இருந்த தமிழகத்தை எல்லா நிலைகளிலும் பின்தங்கிய மாநிலமாக மாற்றிக் காட்டியதுதான் இவர்களின் மிகப் பெரிய சாதனை. இது தமிழகர்களுக்கு ஏற்பட்ட சோதனை. அந்த இருண்ட கால ஆட்சியை அகற்றி ஒரு பொற்கால ஆட்சியை இன்றைக்கு உருவாக்கி, நடத்திக் கொண்டிருக்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கண் துஞ்சாது, கடமையாற்றுகிற பாங்கைப் பார்த்து நடுநிலையாளர்களும் நல்லவர்களும் வாழ்த்தி, வரவேற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை முடியுங்கள்.

2012 ஏப்ரல் 23]

திருமதி எல். ஜெயசுதா: முடித்துவிடுகிறேன். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழகத்தில் கல்வியில் புரட்சியும், மறுமலர்ச்சியும் அம்மா அவர்கள் ஏற்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவற்கு வாய்ப்பு தந்த கருணை உள்ளமே! கடவுள் இல்லமே! தாயே! தமிழே! தெய்வமே! தென்னகமே! 'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற, இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற; என்றும் நல்லவர்கள் எல்லோரும் உங்கள் பின்னாலே' இன்று ஆள்வது தமிழகம், நாளை இந்தியா என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி பிரச்சினைகளை முன்வைக்கிறேன்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி என்றுமே அம்மாவின் கோட்டை. போளூர் பேரூராட்சியை, நகராட்சியாக தரம் உயர்த்த வேண்டுகிறேன்.

சேத்துப்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டுகிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதியில் அரசின் சார்பில் பொறியியல் கல்லூரி அல்லது வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுகிறேன்.

போளூர் இரயில்வே பாதைக்கு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

போளூர் நகரத்திற்கும், அதன் சுற்றுப்புற கிராமங்களுக்கும், சாத்தனூர் அணை குடிதண்ணீர் கிடைத்திட ஆவன செய்திட வேண்டுகிறேன்.

செண்பகத்தோப்பு அணையை உடனடியாக சீர் செய்து, விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்கிட அணையைத் திறக்க வேண்டுகிறேன்.

போளூர் சட்டமன்றத் தொகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைத்திட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

போளூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட வேண்டுமென்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்பு

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள், மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவது போன்று, இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. இவற்றை சட்டமுன்வடிவு பிரிவு 2-லிருந்து இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.

***திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெள்ளிய அறிவின் மேன்மை, தேர்ந்தவர் தலைவர் அம்மா, புள்ளியை மீறாதாரே புத்தவை தன்னில் வந்தார். பொதுப் பணம் வீணாகாது, புதுப் புதுத் திட்டம் தந்து, பூமிக்கு நன்மை செய்து, கதியிலா ஏழைக்கெல்லாம் கலங்கரை விளக்கம் ஆகி, அதிசயங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் அற்புதத் தாயே! நீங்கள் செய்யும் பணி எல்லாம் செந்தமிழர் வாழ்வதற்கே! மாண்புமிகு

2012 ஏப்ரல் 23] [திரு. கே. பொன்னுசாமி]

தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, எனது கன்னி உரையை இப்பேரவையில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எட்டு கோடி தமிழக மக்களுள் ஒருவனான என்னை, இந்த எளிய தொண்டனை, தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் என்ற அடையாளத்தைக் கொடுத்து, எதைச் செய்தாலும் இதய சுத்தியோடு செய்ய வேண்டும் என்கின்ற அம்மாவின் வைர வரிகளை நெஞ்சிலே நிறுத்தி, உணவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மறுபடியும் எனது நன்றியை பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் வீரத்திலே அர்ச்சுனன், விவேகத்தில் கண்ணன், அறநெறியில் பீஷ்மன், கல்வி வழியில் துரோணன், வாக்கிலே தர்மன், கொடையிலே கர்ணன், மொத்தத்தில் நீங்கள் மகாபாரதம். சத்தியத்தில், தாயே! நீங்களே நாளைய பாரதம்.

அன்பு என்றால் சந்திரனுக்கே 'குளிர்ச்சி' காட்டுவார் அம்மா. ஆனால், வம்பு என்று வந்தால் 'சூரியனுக்கே' வெப்பம் காட்டுவதும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் அன்பை எங்கள் 'தங்கம்' அறிந்திருந்தார், வம்பை உங்கள் 'தகரம்' அனுபவிக்கின்றார். கண்ணீரில் கதறும் தொண்டனை செந்நீரில் மிதக்க வைக்கும் உங்கள் கூட்டம்; ஆனால், கண்ணீரோடு வேண்டும் தொண்டனை பன்னீரில் நனைய வைக்கும் எங்கள் அம்மாவின் தோட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கழகத் தொண்டனுக்கு என்றுமே இல்லை வாட்டம்.

அம்மாவின் சாதனை கண்டு ஏனிந்த ஆத்திரம், வாழ்க்கை அற்றுப் போனதனாலா? அல்லது திஹார் சிறையில் உனது வாழ்க்கைப் பற்று சுண்டிப் போனதனாலா? (மேசையைத் தட்டும் ஒலி) அலைக் கற்றை ஊழலால் தமிழ்ப் பற்று மக்களால் சினம் மேவிட 'புறக்கணிப்பு' அதனால் தானோ இந்தப் 'பரிதவிப்பு'. சொக்கன் வாழ்ந்த ஊரில், மகன் மானம் போனது தேரில், மறுபடியும் கட்டுகிறார் மனக்கோட்டை, இதோ வருகிறது புதுக்கோட்டை.

[திரு. கே. பொன்னுசாமி] [2012 ஏப்ரல் 23

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவனா, வானம் ஏறி வைகுந்தம் காணப் போகிறான்? கோயிலையே தொட முடியாத உனக்கு, கோட்டை என்றுமே இனி மனக் கணக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) சங்கரன்கோவிலையே தொட முடியாத உனக்கு, புதுக்கோட்டை என்றுமே மனக் கணக்கு. செயின்ட் ஜார்ஜ் கோட்டையும் மனக் கணக்கு. ஆனால், எங்கள் அம்மாவுக்கோ செங்கோட்டையே கையருகே கொஞ்சி வரும் இலக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

தெய்வப் புலவர் வள்ளுவர் ஒரு நாட்டைப் பற்றிச் சொல்லும்பொழுது

"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து"

நோயில்லாதிருத்தல், பெருஞ் செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் "தொலைநோக்குத் திட்டம் 2023" மேற்கூறிய குறளின் மொத்தம், மக்களின் தொல்லைப் போக்கும் திட்டம். மாற்றாரை தமிழக எல்லையைவிட்டே ஓட்டும் திட்டம் 'விஷன் 2023' மாற்றுக் குறையாத சிறப்பு. மொழிகிறேன், இதனுடைய தொகுப்பு. அவையாவன:—

சிசு இறப்பு குறைப்பு, கர்ப்பிணிகளின் மரணம் தவிர்ப்பு, மாசற்ற மருத்துவக் காப்பீடு, நோயற்ற வாழ்வின் நிலைப்பாடு, இதுவே வள்ளுவன் பகன்ற நோயில்லாதிருத்தல். தனி நபர் வருமானம் ஆறு மடங்கு உயர்ந்திட கண்கவர் திட்டங்கள் ஏராளம்; இதுவே வள்ளுவன் மொழிந்த செல்வத்தின் அடையாளம். நதி நீர் இணைப்பு, நிலத்தடி நீர் தொகுப்பு, அதனால் அதிகமாகும் விளை நிலங்களின் பரப்பு, விஞ்ஞான ரீதியில் விவசாய கவனிப்பு; இதுவே விளைபொருள் வளம் என்கின்ற வள்ளுவனின் கணிப்பு.

பிற்பகல் 1–45

பொறுப்புள்ள வெளிப்படை நிருவாகம், இதுவும் விஷன் 2023–ன் ஒரு பாகம். இதனால் குறைவது மக்களின் மனபாரம்; பாரம் குறைவதால், காவல் தொட்டுவிடும் தூரம். இதுவும்

2012 ஏப்ரல் 23] [திரு. கே. பொன்னுசாமி]

வள்ளுவனின் ஒரு சாரம். மேற்சொன்ன நான்கும் பாங்காய் அமைவதாலே, இன்ப வாழ்வு என்ற ஐந்தாவது இலக்கு நிச்சயம் சாத்தியம் விஷன் 2023–ஆலே.

தான்தோன்றி வீணர்கள் கூட்டம், ஐந்து வருடம் போட்டனர் ஆட்டம். விடிவெள்ளி அம்மாவால் மறைந்தது மக்கள் வாட்டம்.

பாசம் காட்டும் அம்மாவால் சந்தோஷம் எட்டும் வேளையிலே, தோஷம் வந்ததுபோல் வந்தது 'தானே' என்னும் புயல். (மணியடிக்கப்பெற்றது)

மக்கள் முன் தானே தோன்றி அவர்தம் மனத்திலே ஒன்றி, அழியாத வீடு கட்ட ரூ.1,000 கோடியை வாரி வழங்கி இலட்சம் வீடுகளை கட்டச் சொன்ன நவீன பாரி அம்மா தாங்கள்.

அறிவுரை கேட்டு நடக்கும் கூட்டமா அது? மக்களுக்கு வேட்டு வைக்கும் ஜென்மமே அது. மருத்துவக் காப்பீட்டில் அத்தனையும் நாற்றம். நாற்றம் களைந்து நிதிநிலை அறிக்கையிலே பண ஏற்றம் தந்து, முக்கால் ஆயிரம் கோடியை மற்றவர் மூக்கில் விரல் வைக்க மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை உயிர்க் காப்பீட்டு வட்டமாக்கிய வாழும் தன்வந்திரி அம்மா தாங்கள்.

இலட்சம் கோடி அளவுள்ள ரூபாய்களை லாவகமாய் லவட்டுவோர் மத்தியிலே, 15 இலட்சம் கோடி அளவுள்ள ரூபாய்களை சேவகமாய் கொட்டுவார் அம்மா நல்வேளையிலே. "ஐயகோ இது ஆகாது, ஐயகோ இது நடக்காது" என்போர் புத்தியிலே அறைவதுபோல, நாங்கள் ஒன்று சொல்வோம் அம்மா (மணியடிக்கப்பெறறது) பேரன்கள் இலட்சங்களைக் கொண்டாலும், குபேரனைப் பிடித்து இலட்சியம் கொள்ளும் தெய்வத் திருமகள் அம்மா தாங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: எழுதும் வரலாற்றில் ஏராள பக்கமுண்டு. நாட்டோரே சாட்சி. நல்ல தமிழ்ப் பண்பாளர் எத்தனைபேர் என்பதற்கு இங்கிருக்கும் அவையே சாட்சி.

சாட்சியுடன் சொல்கின்றேன், சத்தியமாய் சொல்கின்றேன், மக்கள் தருகின்றார் மகத்தான ஆதரவு, தக்கதொரு ஆதரவால்,

[திரு. கே. பொன்னுசாமி] [2012 ஏப்ரல் 23

தமிழ்நாட்டில் நல்லாட்சி. ஆயிரமாய் பகைவர்கள்தான் ஆட்டி வைக்கப் பார்த்தாலும், ஆயுள்காலம் முழுவதும் அம்மாவின் அமைச்சரவை மாறாது. கண்ணன் உரைத்தபடி பலனை எதிர்பார்த்துப் பதவியை நீங்கள் பெறவில்லை. அதனாலே அன்னைத் தமிழகத்தார் என்றுமே உங்களுடன் இருக்கின்றார். அதுபோல என்றும் தமிழ்போல தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்க, வாழ்க எனக் கூறி, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை நிறைவு செய்கின்றேன் என்று சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, காசாய் படியளந்தால், கையிரண்டு நோகுமுன்னு, நெல்லாய் படியளந்தால் நெடுநேரம் ஆகுமுன்னு, அரிசியாய் படியளந்தால், ஆக்க நேரம் ஆகுமுன்னு, சோறாய் படியளக்கும் எங்களுக்கெல்லாம் சோறைப் படியளக்கும் எங்கள் காவிரித் தாயே, கருணை உள்ளமே, காக்கும் தெய்வமே, எங்கள் அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் இருக்கும் திசை நோக்கி தங்கள் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய தொண்டனைக்கூட பதவியில் ஏற்றிவைத்து அழகுபார்ப்பவர் இதய தெய்வம் எங்கள் அம்மா அவர்கள். என் தாயின் தயவால் இந்த அவையிலே நானும் அமைச்சராக நின்றுகொண்டிருக்கிறேன்.

உழவுத் தொழிலையே உயிராக நினைக்கும் டெல்டா மாவட்டத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு உணவு அமைச்சர் என்கின்ற வாய்ப்பினை வழங்கி, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கின்ற வாய்ப்பையும் வழங்கியிருக்கும் எங்கள் தாயே, எனக்கு அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் என் தாயின் தொண்டனாகவே பிறக்க வேண்டும். காலமெல்லாம் எங்கள் தாயின் காலடியிலேயே இருக்க வேண்டும் என்று கடவுளை வேண்டி, மீண்டும் மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமாயண காவியத்தில் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம். அறிவார்ந்தவர்கள், ஆன்றோர்கள்–சான்றோர்கள் இராமர் தலையில் மன்னனுக்குரிய மகுடத்தைச் சூட்டுகிறார்கள். இராமர் தலையில் சூட்டப்படுகின்ற மகுடம் தங்கள் தலையிலேயே சூட்டப்படுவதாக எண்ணி, அயோத்தி மக்களெல்லாம் தங்கள் தலையைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக் கொண்டார்களாம். அதேபோலத்தான் தமிழகத்தில் மாண்புமிகு எங்கள் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வரும்பொழுதெல்லாம், தமிழக மக்கள் 'எங்களாட்சி வந்துவிட்டது, எங்களாட்சி வந்துவிட்டது' என்று கொண்டாடி மகிழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மண்ணிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற மணிமேகலையின் வரிகளை மனதிலே வாங்கி, உலகில் எங்குமே இல்லாத, யாருமே செய்யாத சாதனையாக, விலையில்லா அரிசியினை வீடெல்லாம் கொடுத்து, பசிப்பிணி போக்கிய தாய் அல்லவா நம்முடைய தாய். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

"படி அரிசி கிடைக்கின்ற காலத்திலே–நாங்க
படியேறி பிச்சைக் கேக்கப் போவதில்லே
குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே–நாங்க
தெருவோரம் குடியேறத் தேவையில்லே
சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே
எங்க அம்மா சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே
(மேசையைத் தட்டும் ஒலி)
இல்லையென்ற சொல்லே–இனி இருக்கப் போவதில்லே!
இது–அம்மா அவர்களின் ஆட்சியில்"

ஆனால், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் "அரிசி என்றால் கல்லும், புழுவும் கலந்து கொடுப்பார்; அவிந்த காயைக் கனிந்த

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

வாழை என்று கொடுப்பார்" என பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப்போல, கல்லும், புழுவும் கலந்த அரிசியைத்தானே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று விலை வைத்துக் கொடுத்தார்கள். அதிலும் "வேலியே பயிரை மேய்ந்ததுபோல" நடந்த கூத்துக்களையெல்லாம் இந்த நாடு அறியுமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கி ஆணையிட்டார்கள். இத்தத் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 14 ஆயிரம் மெட்ரிக் டன் தரமான அரிசியைத் தமிழக மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் நம்முடைய அட்சய பாத்திரம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், அத்தியாவசியப் பொருட்களை மானிய விலையில் வழங்குவதற்கு, ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 291 ரூபாய் 9 பைசா மானியமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், மத்திய அரசு கொண்டு வருகின்ற ஒரு சிலருக்கு மட்டுமே பயன்படக்கூடிய, குளறுபடி நிறைந்த, தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதாவிலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கழகம், அதாவது F.C.I. விருந்து 'அந்தியோதயா அன்னயோஜனா' திட்டத்தின்கீழ் 1 கிலோ 3 ரூபாய் விலையிலும், BPL எனப்படும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோருக்கான திட்டத்தில், 1 கிலோ 5 ரூபாய் 65 பைசா விலையிலும், A.P.L. எனப்படும் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளோருக்கான திட்டத்தில், ஒரு கிலோ 8 ரூபாய் 30 பைசா விலையிலும் அரிசியைக் கொள்முதல் செய்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அம்மா அவர்களின் அரசு தமிழக மக்களுக்கு விலையில்லாமல் வழங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டுக்கான உணவு

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

மானியத்திற்கு இதுவரை இல்லாத அளவில் 4,900 கோடி ரூபாயை ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியோடும், பெருமையோடும் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும் 950 கோடி ரூபாய் அதிகம் என்பதனையும் இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட 24.5 சதவிகிதம் கூடுதலான நிதியை மாண்புமிகு நம்முடைய அம்மா அவர்கள் உணவு மானியத்திற்காக ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தகுதியான குடும்ப அட்டைதாரர்களுக்குத் தரமான உணவுப் பொருட்கள் தடையில்லாமல் கிடைத்திட, எங்கள் அம்மாவின் அரசு உறுதி பூண்டுள்ளது. அதற்காக உடற்கூறு பதிவு முறையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கவிருப்பதால், 31-12-2011 வரை புழக்கத்திலுள்ள 1 கோடியே 97 இலட்சத்து 82 ஆயிரத்து 593 குடும்ப அட்டைகளைப் புதுப்பித்து, மேலும் ஓராண்டுக்குப் பொருள்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கடந்த ஜனவரி, பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் 1 கோடியே 95 இலட்சத்து 3 ஆயிரத்து 509 குடும்ப அட்டைகள் ரேஷன் கடைகளிலேயே புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், மார்ச் 31 முடிய ஆன்லைன்மூலம் பதிவு செய்யப்பட்ட 85 ஆயிரத்து 159 குடும்ப அட்டைகளில் 62 ஆயிரத்து 159 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 23,000 குடும்ப அட்டைகள் பரிசீலனையில் உள்ளன. இன்னும் 4 இலட்சத்து 16 ஆயிரத்து 925 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படாமல் உள்ளன. கொடுக்கப்பட்ட கால அவகாசத்தில் புதுப்பிக்க இயலாதவர்கள், சென்னை மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையர்களிடமும், பிற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட வழங்கல் அலுவலர்களிடமும் மனு செய்து, புதிய குடும்ப அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

எங்கள் அம்மா அவர்கள் 3-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 4 இலட்சத்து 20 ஆயிரத்து 727 புதிய குடும்ப அட்டைகளை வழங்கி சாதனை படைத்துள்ளார்கள் என்பதனையும் இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, குடும்ப அட்டைகள் வழங்குதல், பராமரித்தல், புதுப்பித்தல் ஆகியன ஒளிவு, மறைவின்றி செயல்படுத்தப்படுகின்றது என்பதனை ஆணித்தரமாக எங்களால் கூற முடியும்.

பிற்பகல் 1–55

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 15 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவு செய்து, 15 இலட்சம் போலி குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டதாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், மேல்முறையீடு மற்றும் புது மனுக்கள் என்ற பெயரில் 10,47,000 குடும்ப அட்டைகளைத் திரும்பவும் வழங்கிவிட்டார்கள். முதலில் போலி என்று அறிக்கை விட்டவர்கள், பிறகு போலி இல்லையென்றார்கள். என்ன கூத்துப் பாருங்கள்! இதற்குச் செலவு என்று எழுதிய 15 கோடியே 80 இலட்சம் ரூபாய் என்னவாயிற்று? எந்தக் கணக்கில் எழுதுவது? அப்படியே சொந்தக் கணக்கிற்குப் போய்விட்டதா? இதைத்தான் தோலிருக்க சுளை முழுங்குவது என்று சொல்வார்களோ!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து இன்றுவரை 150 முழுநேர அங்காடிகள், 371 பகுதிநேர அங்காடிகள், ஆக 521 புதிய நியாய விலைக் கடைகளைத் தமிழகத்திலே திறந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லையோர மாவட்டங்களில், இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளுக்கும், அங்கிருந்து நியாய விலைக் கடைகளுக்கும் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களின் வழித்தடங்களில் G.P.S. உபகரணங்களைப் பொருத்தி, சரியான வழித்தடங்களில் செல்லுகின்றனவா எனக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆட்சியிலே கடத்தப்பட்டது; மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தில் தமிழகத்தின் மண்ணெண்ணெய்யின் மாதாந்திரத் தேவை 65,140 கிலோ லிட்டர் ஆகும். மைனாரிட்டி தி.மு.க.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

ஆட்சியின்போது, அதாவது 2011 ஏப்ரல் மாதத்தில் 52,806 கிலோ லிட்டராக இருந்த மத்திய அரசின் மாதாந்திர ஒதுக்கீடு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், மத்திய அரசால் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இந்த மாதத்தில், அதாவது 2012 ஏப்ரல் மாதத்தில் 39,429 கிலோ லிட்டராகக் குறைந்துவிட்டது. என்ன அநீதி? இது மத்திய அரசு தமிழகத்திற்குச் செய்த மிகப் பெரிய துரோகம் இல்லையா? மத்திய அரசில் அங்கம் வகிக்கிற தி.மு.க.–விற்கு இதில் பங்கு இல்லையா? முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இதற்கு உடந்தையில்லையா? இந்த உண்மையை, சதியை, துரோகத்தை இந்தச் சபையிலே நாங்கள் எடுத்துச் சொன்னால், கேள்வி–பதில் அறிக்கைத் தலைவர் கருணாநிதி அவர்களுக்கு ஏன் உடம்பெல்லாம் எரிகிறது? எங்களைப் பார்த்து, வாதாடி, போராடிப் பெறுவதற்கு வக்கில்லையா என்று வசைபாடுகிறார்.

நாங்கள் மறுபடியும், மறுபடியும் சொல்கிறோம். மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகள் கிடைக்காமல் போவதற்கு மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க.தான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், பாதிக்கப்பட்ட தமிழக மக்கள் "இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்று புரட்சித் தலைவரின் பாடலைப் பாடியவாறு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் யாருமே செய்யாத சரித்திர சாதனையாக டெல்டா மாவட்ட விவசாயத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 6 ஆம் தேதியே தண்ணீரைத் திறந்துவிட்டு, தமிழகத்தில் உணவுப் புரட்சிக்கு வித்திட்ட முதல்வர், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள்தான்! (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால், இந்த ஆண்டு குறுவை, சம்பா ஆகிய பருவங்களில் இதுவரை 1,647 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் 22,60,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொள்முதல் குறியீடு, கடந்த 10 வருடங்களில் இல்லாத சாதனையாக 25 இலட்சம் மெட்ரிக் டன்னைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான சாதனையாகும்.

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

இதுமட்டுமல்லாமல், முந்தைய ஆட்சியாளர்கள் கொள்முதல் செய்யாத டிகேகளம்.9 நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பயனாக 1,20,000 மெட்ரிக் டன் நெல் இந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெரு விவசாயிகள், திருக்கோயில்களில் வசூல் செய்யப்படும் குத்தகை நெல் மற்றும் 300 மூட்டை நெல்லுக்குமேல் வைத்திருப்பவர்கள் வசதிக்கென இருப்பிடத்திற்கே சென்று கொள்முதல் செய்யும் Spot Purchase திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

விவசாயிகளின் நலனில் அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் நெல்லுக்கான ஊக்கத் தொகையாக சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு 70 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு 50 ரூபாயும் வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநில அரசுகள் ஊக்கத் தொகை வழங்குவதேயில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை மட்டுமே வழங்கப்படுகிறது.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில்தான், விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக நடப்பாண்டிலே மட்டும் 140 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"காடு விளைஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்"

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

என்றிருந்த விவசாயப் பெருங்குடி மக்களின் நலனில் அக்கறை கொண்டு, "நானே போடப் போறேன் சட்டம்–அது மக்கள் நன்மை பயத்திடும் திட்டம்" என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தந்த ஆக்கத்தாலும், ஊக்கத்தாலும் விவசாயிகள் அபரிமிதமான விளைச்சலைப் பெற்று, அதற்குரிய நல்ல விலையையும் இன்று பெற்றதனால், 'மகராசி வாழ்க, உங்கள் முகராசி வாழ்க' என்று மனதார விவசாயிகள் இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளுக்கும், சேமிப்புக் கிடங்குகளுக்கும், திறந்தவெளி சேமிப்பு நிலையங்களுக்கும் மற்றும் தனியார் அரைவை முகவர்களுக்கும் உடனுக்குடன் லாரிகள் மூலமாகவும், சரக்கு இரயில் பெட்டிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கேற்ப பச்சரிசியாகவும், புழுங்கல் அரிசியாகவும் அரைவைச் செய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் ரூ.51 கோடியே 10 இலட்சம் செலவில், 1,17,450 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 67 தானிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவதற்கு உத்தரவிட்டார்கள். கடந்த 20 வருடங்களில், தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கிய ஒரே தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் 2012–2013 ஆம் ஆண்டில், இந்திய உணவுக் கழகத்தின் தேவைக்கென தனியார் முதலீட்டுக் கிடங்குகள் கட்டுமானத் திட்டத்தின்கீழ், சின்னசேலம் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் தலா 15,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், அருப்புக்கோட்டை, கோவில்பட்டி மற்றும் மதுராந்தகம் ஆகிய இடங்களில் தலா

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 கிடங்குகளும், ஆக 45,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும் கட்டி முடித்திட, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைக் கட்டுபாடின்றி உயரும்பொழுது, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அத்தகைய பொருட்களை அரசே கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு நியாயமான விலையில் விற்பனை செய்கிறது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 'விலைக் கட்டுப்பாடு நிதியம்' அமைக்கப்பட்டு, 50 கோடி ரூபாய் நிதியுடன் செயல்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிச் சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு ஒரு மூட்டை சிமெண்ட் ரூ.200/- விலையில், வீடு பழுது பார்ப்பதற்காக 50 மூட்டைகளும், 1,000 சதுர அடிக்கு மிகாமல் வீடு கட்டுவதற்கு 400 மூட்டைகளும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்மையற்ற வணிக நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைக் காப்பாற்ற, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் புகார் பிரிவு ஒன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 15–12–2011–ல் துவக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாநில நுகர்வோர் சேவை மையம் ஒன்றும், நுகர்வோர்கள் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விழிப்புணர்வு திட்டங்களைச் செயல்படுத்த, தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகார சங்கம், சமரச மையம் ஆகியவையும் செயல்பட்டு வருகின்றன. புகார் பிரிவில் நுகர்வோர் தங்களது புகார்களைப் பதிவு செய்வதற்கு, ஏழு செல்லிட கைபேசி எண்களும், ஒரு தொலைபேசி எண்ணும் செயல்பாட்டில் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து 31–3–2012 வரை பெறப்பட்ட 1,08,009 புகார்களில், 1,06,974 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதனை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"

என்ற புரட்சிக் கவி பாரதியின் பாடலுக்கு உயிரூட்டிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விலையில்லா அரிசியும், அத்தியாவசியப் பொருட்களும் கடத்தப்படுவது தடுக்கப்பட வேண்டுமென்று உறுதிபட ஆணையிட்டதால், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. கடத்தல்காரர்களின் நடவடிக்கைகள் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டன.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை செயலிழந்து இருந்தது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்களின் உதவியோடு தினமும் 200 லாரிகளில் ரேஷன் அரிசி ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டு வந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய 5 எல்லையோர மாவட்டங்களில், 5 சிறப்புச் சுற்றுக் காவல் படைகள் மீண்டும் உயிரூட்டப்பட்டு, அண்டை மாநிலங்களுக்கு ரேஷன் அரிசி கடத்தப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், பொள்ளாச்சியிலிருந்து திருப்பூருக்கு மாற்றப்பட்ட குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வு அலகு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மீண்டும் பொள்ளாச்சிக்கே மாற்றப்பட்டதால், பல்வேறு வழித்தடங்களில் கேரளாவிற்குக் கொண்டு செல்லப்பட்ட கடத்தல் அரிசியும் தடுக்கப்பட்டது.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் காலமாக அரிசி கடத்தல் தொழில் செய்துவந்த கோடீஸ்வர கடத்தல்காரர்கள்மீது, முந்தைய தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களின் கடத்தல் வாகனங்களைக் கண்துடைப்புக்காக கைப்பற்றியபோது, ஓட்டுநர்களை, கிளீனர்களை கைது செய்தார்களேதவிர, உண்மையான கடத்தல் முதலைகளைக் கைது செய்யவில்லை. இது மைனாரிட்டி தி.மு.க.

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

ஆட்சியாளர்கள் துணையோடுதான் நடந்தது என்பதனை இந்த நாடு அறியும். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையினால், இதுவரை 4,428 நபர்கள், இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களில் 201 நபர்கள் கள்ளச் சந்தை தடுப்புச் சட்டத்தின்கீழ், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி பகுதிகளைச் சேர்ந்த 144 முக்கிய கடத்தல் புள்ளிகளும் கைது செய்யப்பட்டார்கள். அதில் 12 பேர்கள், 6 மாத காலத்திற்குக் கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து ஆந்திர மாநிலத்திற்குப் பயணிகள் இரயில்மூலம் அரிசி கடத்தப்படுவதைத் தடுக்க, 60 பணியாளர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் காவல் படை கம்பெனி அமைக்கப்பட்டு, 216 மெட்ரிக் டன் அரிசி கைப்பற்றப்பட்டது; 566 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்; அதில் 11 பேர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள்.

பொது விநியோகத் திட்ட அரிசியினைக் கடத்திச் சென்று, கோழிப் பண்ணைகளுக்குக் குருணையாக மாற்றியும், மாவாக அரைத்து முறுக்கு, தட்டுவடை செய்து வந்த 113 நிப்பெட் கம்பெனிகளின் முறைகேடான செயல்பாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. கடத்தல்காரர்கள்மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது என்பதால், அதற்குக் காரணமாகயிருந்த திறமையற்ற, குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அதிகாரிகள் இலர்மீது பணியிட மாற்றம், தற்காலிக பணி நீக்கம் போன்ற ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் தொடர்ந்து கடத்தலில் ஈடுபட்டவர்களை கைது செய்யாமலேயே இருந்துள்ளனர். தற்பொழுது கைது செய்யப்பட்டுள்ள அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளும்பொழுதுதான், அவர்கள் தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதும், மைனாரிட்டி முதலமைச்சர் கருணாநிதியின் குடும்பத்திற்கு வேண்டியவர்கள் என்பதும் தெரிய வருகிறது. எனவே, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும்,

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சட்டத்தின் முன்னாலே அவர்களை நிறுத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கருப்பான தலைமுடியும் வெளுக்காமல் இருப்பதற்கு
காக்காவை உயிரோடு முழுங்கச் சொல்லுங்க"

என்று பாட்டுக்கொரு கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சொன்னதுபோல, காக்காவையும் முழுங்கி, அது போதாது என்று, 'யானையும் கருப்புதானே!' என்று யானையையும் முழுங்கியவர்கள்தானே, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

மறதி ஒன்றையே மூலதனமாக வைத்து, அனைத்தையும் மறைத்துவிடலாம் என்று நினைத்தால் மக்கள் விட்டுவிடுவார்களா? அன்றைக்குத் திருவாரூரிலிருந்து சென்னைக்கு டிக்கெட் எடுக்காமல், திருட்டு இரயிலில் வருவதற்கு அன்றைய இரயில் கட்டணமான 1 ரூபாய் 80 பைசாவை ஏமாற்றியவர்கள், இன்றைக்கு 1 இலட்சத்து 80 ஆயிரம் கோடிக்கு வந்தல்லவா நிற்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) மறக்க முடியுமா அந்த 1.80–ஐ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவொரு பக்கம். இன்னொரு பக்கம், ஒற்றையாய் இருந்தவர்கள், எங்கள் தாயின் தயவால் இரண்டு இலக்கத்தைத் தொட்டவுடன் எகிறிக் குதிக்கிறார்கள். அவர்கள் எகிறிக் குதிப்பதைப் பார்த்தால் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. வெள்ளைக்காரர்கள் ஆட்சியில், அவர்கள் இந்தியாவிற்கு வந்து சென்று கொண்டிருந்த காலத்தில், இங்குள்ள கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பது வழக்கமாம். அந்த நேரத்தில் அங்குள்ள கிராம மக்களை அழைத்து, சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்பார்களாம். அப்படி ஒருமுறை சைமன் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது, அதன் தலைவர் சர் ஜான் சைமன் ஆங்கிலம் தெரிந்த தமிழர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு, சென்னைக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றாராம்.

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

அங்கு ஒரு விவசாயியை அழைத்து, "மதராசிலிருந்து உங்கள் ஊருக்கு 18 மைல் தூரம், மதராசில் ரூபாய்க்கு 3½ படி அரிசி விற்கிறது. அப்படியானால், என்னுடைய வயது என்ன?" என்று கேட்டாராம். ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா! ஆனால், அந்த விவசாயி கொஞ்சமும் யோசிக்காமல், "உங்களுக்கு வயது 62" என பட்டென்று சொன்னாராம். "நீ எப்படி சரியாகச் சொன்னாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாராம் சைமன். ஏனென்றால், சைமனுக்கு வயது 62 ஆம். அதற்கு விவசாயி, ** சொன்னாராம். இங்கு சிலர் கேள்வி கேட்கும்பொழுதெல்லாம் எனக்கு சைமனும், அந்த விவசாயியும்தான் நினைவுக்கு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும் (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கதை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், ஒரு நிமிடம், please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளின்படி, ஆட்சேபத்திற்குரிய வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலமெனும் ஆழியிலும், காற்று மழை ஊழியிலும், தேயாது அன்னையிவர் சாதனை – அது தலைமுறைக்கும் எழுதி வைத்த போதனை என்ற கருத்தை நெஞ்சிலே இருத்தி, "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை!" என்ற வைர வரி, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்காவே சொல்லப்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

நம்பிக்கையோடு கோவிலுக்கு செல்லும் பக்தர்களை தெய்வம் கைவிடுவதில்லை! விசுவாசத்தோடு அம்மாவையே நம்பியிருக்கும் எந்தத் தொண்டனையும் அம்மா கைவிட்டதில்லை! எங்கள் அம்மா கைவிட்டதே இல்லை! (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு சில புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. உடற்கூறு முறையிலான மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் முன்னோடித் திட்டம்

உடற்கூறு முறையிலான தேசிய மக்கள்தொகை தகவல் தொகுப்பு அடிப்படையில் குடும்ப அட்டை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தேசிய மக்கள் தொகை பதிவாளர் கணக்கெடுப்பு செய்துள்ள கைவிரல் ரேகை மற்றும் கண் கருவிழி அடையாள முறையிலான பதிவுகளின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில் ரூபாய் 21 கோடியே 69 இலட்சம் செலவில், ஒரு முன்னோடியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்னணு (SMART Card) குடும்ப அட்டைகள் வழங்கவும், இதேபோன்று பிற மாவட்டங்களிலும் விரைவில் உடற்கூறு முறையிலான பதிவுகளின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2. விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகையினை மின்னணு அட்டைமூலம் வழங்குதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை தற்போது ரொக்கமாக வழங்கப்பட்டு வரும் முறையை மாற்றி, ரூபாய் 3 கோடியே 20 இலட்சம் செலவில், 8 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில், அவரவர் வங்கிக் கணக்குகளில், அவர்களுக்கு உரிய தொகையை மின்னணு அட்டைமூலம், நேரடியாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

3. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கென நெல் தூற்றும் இயந்திரங்கள் வழங்குதல்

தற்போது 1,459 நேரடி கொள்முதல் நிலையங்களில், 680 இடங்களுக்கு மட்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நெல் தூற்றும் இயந்திரங்கள் உள்ளன. எனவே, விவசாயிகளின் நலன் கருதி அனைத்து நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் ரூபாய் 2 கோடியே 10 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் நெல் தூற்றும் இயந்திரங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் 1,394 நியாயவிலைக் கடைகளில் 899 நியாய விலைக் கடைகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நடப்பு நிதியாண்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் 100 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

5. மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள்

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சேப்பாக்கம் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கென ரூபாய் 85 இலட்சத்து 31 ஆயிரம் மதிப்பீட்டிலும், பெரம்பூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கென ரூபாய் 98 இலட்சம் மதிப்பீட்டிலும் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

6. உணவு பொருள் வழங்கல் பறக்கும் படை பிரிவுகளுக்கு ஜீப்புகள் வழங்குதல்

சென்னை மாநகரத்தில் ஆணையர் அலுவலகத்திலுள்ள பறக்கும் படை பிரிவிற்கும், காஞ்சிபுரம், பெரம்பலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்ட பறக்கும் படை பிரிவுகளுக்கெனவும் 5 புதிய ஜீப்புகள் வாங்குவதற்கு ரூபாய் 30 இலட்சத்து 34 ஆயிரமும், அவற்றுக்கான ஓட்டுநர் பணியிட செலவினத்திற்கென ரூபாய் 18 இலட்சத்து 74 ஆயிரமும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

7. மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலம் நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நுகர்வோர் உரிமைகள், குறைதீர் வழிமுறைகள் குறித்து, வட்டாரத்திற்கு 30 உறுப்பினர்கள் வீதம் 260 வட்டாரங்களில் 7 ஆயிரத்து 800 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சியளித்து, 900 கிராமங்களில் மக்களிடையே நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்கள் ரூபாய் ஒரு கோடியே 31 இலட்சம் செலவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி செயல்படுத்தப்படும்.

(மேசையைத் தட்டும் ஒலி)

8. மாணவர் நுகர்வோர் மன்றங்களுக்குச் சிறப்புத் தொகை

மாணவர்களிடையே நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்திட ரூபாய் 12 இலட்சத்து 50 ஆயிரம் செலவில், 500 மாணவர் நுகர்வோர் மன்றங்கள் அமைத்திட தலா ரூபாய் 2 ஆயிரத்து 500 வீதம் சிறப்புத் தொகை வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி செயல்படுத்தப்படும்.

9. கிராமப்புற நியாயவிலைக் கடைகளில் நுகர்வோர் சேவை மைய தகவல் பலகை அமைத்தல்

நுகர்வோர் சேவை மையம் குறித்த தகவல்களை விளம்பரப்படுத்தும் விதமாக கிராம பஞ்சாயத்துக்களில் உள்ள 23 ஆயிரத்து 199 நியாயவிலைக் கடைகள் மற்றும் மலைப் பகுதிகளிலுள்ள 294 நியாயவிலைக் கடைகளின் முன்பாக, ரூபாய்

[திரு. இரா. காமராஜ்] [2012 ஏப்ரல் 23

48 இலட்சம் மதிப்பில் நிரந்தர அறிவிப்புப் பலகைகள் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

10. சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குச் சலுகை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில், பத்தாண்டு பணிக் காலத்தை நிறைவு செய்துள்ள, இளஞ்சிவப்பு நிற அட்டை பெற்ற 524 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு, வார விடுமுறை மற்றும் அரசு விடுமுறை நாட்களுக்கு கூலி மற்றும் பணிக்கொடை போன்ற பலன்கள் கிட்டும் வகையில், பச்சை நிற அட்டை வழங்கிடவும், ஓராண்டு பணி முடித்த சுமை தூக்கும் அட்டையில்லாத 3 ஆயிரத்து 537 தொழிலாளர்களுக்கு, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், காப்பீட்டுடன் இணைந்த தொழிலாளர் வைப்பு நிதித் தொகை போன்ற பலன்கள் கிட்டும் வகையில் புதிதாக இளஞ்சிவப்பு நிற அட்டை வழங்கிடவும், இவற்றிற்கென ஆண்டொன்றுக்கு ரூபாய் 3 கோடியே 7 இலட்சம் செலவிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

11. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கென கிடங்குகள் கட்டுதல்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கென புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டத்தில் ரூபாய் 85 இலட்சம் செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் அமைந்த 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்புக் கிடங்கு ஒன்றும், ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கிடங்கு ஒன்றும் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

12. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள்

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ரூபாய் 12 கோடியே 50 இலட்சம் மதிப்பில், 50 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தலா ரூபாய் 25 இலட்சம்

2012 ஏப்ரல் 23] [திரு. இரா. காமராஜ்]

மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

13. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கென கூடுதல் மற்றும் புதிய கிடங்குகள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கென கிருஷ்ணகிரி, ஆத்தூர், வேலூர், நாகப்பட்டினம், மானாமதுரை ஆகிய இடங்களில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கூடுதல் கிடங்குகளும், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, திருவாரூர் மாவட்டத்தில் நன்னிலம், வலங்கைமான், திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு, வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தலா 3,400 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள புதிய கிடங்குகளும் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வலியுறுத்துங்கள்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கைக்கு கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வெட்டுத் தீர்மானங்களுக்கான பதிலை நான் என்னுடைய பதிலுரையிலே சொல்லியிருக்கிறேன் என என்னுகிறேன். அதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டது. எவ்வளவு விரைவாக, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய. . .

[2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே குறுக்கீட்டிலேயே நீண்ட உரையாற்றிவிட்டீர்கள். ஆகவே, எவ்வளவு சீக்கிரம் முடிப்பது என்பது உங்களுடைய விருப்பம்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நான் பதிலுரையை முடிக்கிறேன் என்று உங்களிடம் உறுதி கொடுத்துவிட்டுப் பேச ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவன் வாக்கிலும், பாரதியின் நாக்கிலும் பிறக்கும் தெளிவான சிந்தனை கொண்டு, இன்று உலகமே போற்றும் கழகத்தின் ஆட்சித் தேரை பார்போற்ற செலுத்தும் எங்கள் பார்த்தசாரதியே, எங்கள் தாயே, எங்கள் குல தெய்வமே, நீங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இம்மண்ணையும், மக்களையும் காக்க இறையாகவும், நல்மறையாகவும் பிறந்த எங்கள் தாயே. மனமெல்லாம் இரக்கமும், ஈரமும், மனித நேயமும் கொண்ட புனிதக் கடலே. அம்மா, உங்களை வலம் வந்தால் ஆயிரம் கோடி புண்ணியம் அம்மா.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்பி வந்த கட்சிகளுக்குக்கூட, நன்மைகள் பொழியும் தெய்வம் அம்மா! அம்மா நீங்கள் தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய இந்தியாவின் தலையெழுத்தை நாளை மாற்றப் போகும் தமிழகத்தின் அறிவுப் பெட்டகம் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய இந்தியாவின் தலையெழுத்தை நாளை மாற்றப் போகும் தமிழகத்தின் அறிவுப் பெட்டகம் நம் அம்மா. சித்திரைக்கும், தைக்கும் பங்கம் வைத்தவர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) சித்திரைக்கும், தைக்கும் பங்கம் வைத்தவர்களை சித்தம் தடுமாற வைத்த எங்கள் சித்திரை தெய்வம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, சவால் விட்டவர்களை எல்லாம் இன்று சந்தி சிரிக்க வைத்த எங்கள் வீரத்தின் திருவுருவே, வெற்றியின் மறு உருவே, தங்களின் திருப்பாதங்களை வணங்குகிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேரினிலே தெய்வம் வந்தால், தெருவெல்லாம் பக்தர்கள் வெள்ளம். காரினிலே எங்கள் அம்மா பவனி வந்தால் கடல்போல் மக்கள்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு

வெள்ளம். (மேசையைத் தட்டும் ஒலி) தேரினிலே தெய்வம் வந்தால், தெருவெல்லாம் பக்தர்கள் வெள்ளம். காரினிலே எங்கள் அம்மா பவனி வந்தால் கடல்போல் மக்கள் வெள்ளம்.

சொல்லாமல் அடிப்பது, எங்கள் அம்மாவின் அழகு, 110 விதி. சொல்லாமல் அடிப்பது, எங்கள் அம்மாவின் அழகு. சொல்லி அடிப்பது அம்மாவின் பேரழகு, சங்கரன்கோவில் தேர்தல். சொல்லாமல் அடிப்பது எங்கள் அம்மாவின் அழகு. சொல்லி அடிப்பது எங்கள் அம்மாவின் பேரழகு. வார்த்தைகளை அம்மா அவர்கள் உச்சரித்தாலும் அழகு, எதிரிகளை எச்சரித்தாலும் அழகு. அம்மாவின் மனிதநேயம் பேரழகு. எங்கள் அம்மாவின் சோம்பல் அறியா உழைப்பழகு. அம்மா, பொங்கியெழுந்தால் பேரழகு. எங்கள் அம்மா வாதிடும் திறன் அழகு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அதர்மம் தலை தூக்குகிறதோ, அந்த இடத்தில் தர்மம் வெற்றி பெறுகிறது. எந்த இடத்தில் அதர்மம் தலை தூக்குகிறதோ, அந்த இடத்தில் தர்மம் வெற்றி பெறுகிறது என்று கீதை உரைக்கிறது. அதுவே இன்று எங்கள் மாமதுரைக்கும் பொருத்தமாய் இருக்கிறது. இறைவனே தவறு செய்தாலும், இறைவனே தவறு செய்தாலும் அதைத் தட்டிக் கேட்ட ஊர் எங்கள் மாமதுரை. (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனே தவறு செய்தாலும் அதைத் தட்டிக் கேட்ட ஊர் எங்கள் மாமதுரை. நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபெருமானை, நெற்றிக் கண்ணைத் திறந்த சிவபெருமானை அம்மா இதுவரை நாங்கள் நேரில் பார்த்ததில்லை. ஏன் தெரியுமா? அவன் இறைவன். இறைவன் அம்மா. அம்மா, அந்த சிவபெருமானைப் போல, அம்மா அந்த சிவபெருமானைப் போல நீங்கள் மாமதுரையில் நெற்றிக் கண்ணைத் திறந்தீர்கள். அம்மா! அந்த சிவபெருமானைப்போல மாமதுரையில் நெற்றிக் கண்ணைத் திறந்தீர்கள். அப்பனின் அதிகாரத்தை வைத்து அஞ்சா நெஞ்சன் என்று ஆர்ப்பரித்தவர்கள் இன்று சப்த நாடியும் அடங்கி அலறி ஓடுவதைப் பார்க்கிறோம் அம்மா. அன்று அப்பனுடைய அதிகாரத்தை வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அஞ்சா நெஞ்சன் என்று ஆர்ப்பரித்தவர்கள் இன்றைக்கு சப்த நாடியும் அடங்கி அலறி ஓடுவதைப் பார்க்கிறோம் அம்மா. சாதா அழகிரியை சோதாகிரியாக்கிய எங்கள் சொக்கத் தங்கம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தாதா அழகிரியை சோதாகிரியாக்கிய எங்கள் சொக்கத் தங்கம் எங்கள் அம்மா!

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொழிக்கு ஒரு சங்கம் கண்டு மூவா புகழ் படைத்தது எங்கள் மூதூர் மாமதுரை. எங்கள் தென்பாண்டி நாட்டின் தலைமைப் பீடம் அலங்கரிக்க அந்த தலைமைப் பீடத்தை, மாமதுரையை அலங்கரிக்க, அழகுபடுத்த செப்பனிட்டு சீரமைக்க தாராள மனம் கொண்ட எங்கள் பாராளும் தாயே! நீங்கள் கொடுத்ததோ 250 கோடி ரூபாய். அம்மா, தாராள மனம் கொண்ட இப்பாராளும் தாயே! எங்கள் அம்மா! நீங்கள் அள்ளிக் கொடுத்ததோ 250 கோடி ரூபாய் இன்று. ஆனால் அன்று மாமதுரையைக் கெடுக்க, அலங்கோலப்படுத்த கருணாநிதி கொடுத்ததோ 250 கே.டி. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! அம்மா! நீங்கள் கொடுத்ததோ 250 கோடி. கருணாநிதி கொடுத்ததோ 250 கேடி. இப்படிப்பட்ட மதுரையில் மாற்றத்தை உருவாக்கி இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட மதுரையில் ஒரு மாற்றத்தை உருவாக்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்கிறேன். ஏதோ நான் அவர்களைச் சாட வேண்டுமென்பதற்காக சொல்லவில்லை. அவர்களைக் குறை சொல்வதற்காகவோ, கருணாநிதி கட்சியைப் பற்றி குறை சொல்வதற்காகவோ அங்கு நடந்த சம்பவங்களை மறைக்கவோ இல்லை. இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர்ராஜன் இருக்கிறார், மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை இருக்கிறார், மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயகுமார், இருக்கிறார். என்னுடைய கட்சி உறுப்பினர்கள் மற்றவர்கள் இருக்கிறார்கள். எல்லோரையும் சொல்லிக்கொண்டு போகலாம். இதிலே என்ன காரணமென்றால், அந்தக் கட்சியினுடைய பொருளாளர் மு.க. ஸ்டாலின் துணை முதலமைச்சராக, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அது மட்டுமல்ல, வலுமிக்கவர். கருணாநிதிக்குப் பிறகு இந்தக் கட்சியை நடத்தக்கூடிய வல்லமை படைத்தவர் என்று சொல்லக்கூடியவர். கடந்த கருணாநிதி ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளாகவே ஒரு மேடை போட்டு பேச முடியவில்லை. ஒரு பொதுக் கூட்டத்தில் பேச முடிந்ததா? ஒரு கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடிந்ததா? முடியாது தோழர்களே, அதுதான்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

250 கேடி. என்று சொல்கிறேன். இன்றைக்கு எங்கள் அம்மா ஆட்சியிலே வந்து அவர் பேசுகிறார். அதுவும் தேரோடும் வீதியிலே ஒரு நல்ல இடத்தைக் காவல் துறை கொடுத்து, அங்கு பேசுகிறார். ஆனால், அவர் மனசாட்சிக்குத் தெரியும் அம்மா ஆட்சியிலே எவ்வளவு சுதந்திரம் கிடைத்திருக்கிறது? மதுரைக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்டாலினுக்கு தெரிகிறது. முக. ஸ்டாலினுக்கே தெரிகிறது. அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். இப்படிப்பட்ட மதுரையில் மாற்றத்தை உருவாக்கி ஏற்றத்தைத் தந்த அம்மா, இந்த மண்ணிலே பிறந்து, இந்த மதுரை மண்ணிலே பிறந்த ஏழைத் தொண்டன் என்னை ஒரு சாதாரணப்பட்டவனை, அம்மாவினுடைய பக்தனை, இன்றைக்கு அமைச்சராக்கி அழகு பார்த்திருக்கிறீர்கள். நிச்சயமாக தாயே, இந்தப் பிறவியில் மட்டுமல்ல ஏழேழு பிறவி எடுத்தாலும் எந்தப் பிறவி எடுத்தாலும் உங்களுக்கு விசுவாசமாக (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, என்னுடைய கூட்டுறவுத் துறையின் சார்பாக கூட்டுறவுத் துறையினுடைய மானியக் கோரிக்கை விவாதத்திற்கான பதிலுரையை ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சி நடைபெறும் இந்த வேளையில் கூட்டுறவுத் துறையினை சிறப்பிக்கின்ற வகையில் உலக ஐக்கிய நாடுகள் சபை 2012 ஆம் ஆண்டை அனைத்து உலக கூட்டுறவு ஆண்டாக அறிவித்திருப்பது சாலப் பொருத்தமாகும்.

பிற்பகல் 2–30

கூட்டுறவு அமைப்புகள் மூலமாகத்தான் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க முடியும். எப்படியென்றால், உலகப் பொருளாதாரத்தை, நெருக்கடியிலிருந்து விடுவித்து ஒரு சிறந்த வணிகத்தை வளர்த்து, அதன் மூலமாக உலக மக்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தருவது போன்ற அனைத்து சேவைகளையும் கூட்டுறவால் மட்டுமே சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்ற கருத்தை மக்களிடத்திலே பரப்புவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் இந்த 2012 ஆம் ஆண்டு அனைத்துலக கூட்டுறவு ஆண்டாக அறிவிக்கப்பட்டு, உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதே கருத்தைத்தான் சென்ற ஆண்டு சுதந்திர தின விழாவில் ஆற்றிய பேருரையில் "எல்லாரும் எல்லாம் பெற்று, அவர்களது வாழ்வில் வளம் பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும் என்றும், அப்படிப்பட்ட மக்களாட்சியில்தான் ஏழை, எளியவர்கள், வசதி படைத்தவர்களுக்கு இணையாக வாழ இயலும்" என்று தெரிவித்தார்கள். இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் பார்வையும், ஐக்கிய நாடுகள் சபையின் பார்வையும் ஒன்றாக உள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அறிவீர்கள். இதைத்தான் நாங்கள் சொல்கிறோம், உலகத் தலைவர்களில் ஒப்பற்ற தலைவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி கூறிக்கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம், புளகாங்கிதம் அடைகிறோம். அதனால்தான், அமெரிக்காவின் வெளியுறவுத் துறைச் செயலாளர் திருமதி ஹிலாரி கிளிண்டன் அவர்கள், தமிழ்நாட்டிற்கே வந்து, அம்மா இருக்கும் இடத்திற்கே சென்று, அம்மாவை சந்திக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) சந்தித்த பின்பு அங்கே பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் அவர்களிடத்திலே பேட்டி காண்கிறார்கள். திருமதி ஹிலாரி கிளிண்டன் சொல்கிறார், "ஒரு சிறந்த இந்திய தலைவரை சந்தித்துவிட்டு வந்திருக்கிறேன், எதிர்கால இந்தியாவை ஒரு சிறப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லும் வல்லமை படைத்த ஒரு சிறந்த தலைவரை சந்திக்கிற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) யார் சொல்கிறார் என்றால் அமெரிக்க தேசத்தில் இரண்டாவது மிகப் பெரிய பதவியில் இருக்கும், ஒபாமாவுக்கு அடுத்த பதவியில் இருப்பவர் சொல்கிறார்.

அதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களுக்கு எப்படியெல்லாம் உதவி செய்யலாம் என்பதற்கு அவர்களிடமிருந்து நான் நிறைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டேன், மகிழ்ச்சியடைகிறேன் விடைபெறுகிறேன்" என்று சொன்னார். அவரைச் சந்தித்ததற்கு நிறைய மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னால், அம்மாவின் திறமையைப் பற்றி நாங்கள் சொல்ல வேண்டாம். உலகமே சொல்கிறது.

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த நேரத்தில் கென்டகி கர்னல் என்று எல்லோரும் வால்போஸ்ட்டர் போடுகிறார்கள். உலகத் தலைவரே அம்மாவை வந்து பாராட்டிவிட்டு போய்விட்டார் என்பதை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்க அமைப்புகள் நூறு ஆண்டுகளையும் கடந்து பாரம்பரியம் மிக்க ஒரு அமைப்பாக விவசாயிகளுக்கும், ஏழை, எளிய மக்களுக்கும் தொடர்ந்து சிறப்பான சேவையாற்றி வருகிறது. இந்தக் கூட்டுறவுத் துறையின்கீழ் தற்போது 10,368 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் 6 மாதங்களிலேயே 100 சதவிகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையும், நிர்வாக ஆளுமையினாலும்தான் இச்சாதனைகளை கூட்டுறவுத் துறையால் சாதிக்க முடிந்தது என்பதை இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 2011-2012-ல் கூட்டுறவுத் துறை வரலாற்றிலேயே, முதன் முறையாக, கூட்டுறவுச் சங்கங்களின், மொத்த வியாபார அளவு ரூ.1,05,133 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் 1.63 கோடி மக்கள் பயனடைந்துள்ளார்கள் என்பதையும் இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது சாதனையில்லையா? அம்மாவால்தான் இப்படி சாதிக்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கூட்டுறவுத் துறையினை, எப்பொழுதெல்லாம் கருணாநிதி

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

ஆட்சிக்கு வருகிறாரோ அப்பொழுதெல்லாம் அவரும், அவருடைய கட்சிக்காரர்களும் சிரழித்து, சின்னாபின்னமாக்கி, நிருவாகத்தையே கெடுத்துவிடுகிறார்கள். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் கருணாநிதி ஆட்சியில் நடந்த தவறுகளையெல்லாம் களைந்து, கூட்டுறவுத் துறையை மேன்மைப்படுத்துவதால், கூட்டுறவுச் சங்கங்கள் மீதும், வங்கிகள் மீதும், தமிழ்நாடு மக்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவுத் துறை எண்ணிலடங்கா சாதனைகளை இந்த ஆண்டு புரிந்திருக்கிறது, அளப்பரிய சாதனைகளை நிறைவேற்றியிருக்கிறது. அத்தனையையும் நான் சொல்லவேண்டும் என்று சொன்னால் இன்னும் நேரம் ஆகிவிடும். நீங்கள் ஏற்கெனவே பசியுடன் இருக்கிறீர்கள். இதில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லி சுருக்கமான உரை நிகழ்த்த விரும்புகிறேன். சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் இதுவரை எட்டப்படாத சாதனையாக, கூட்டுறவு வங்கிகளில் மட்டும் 2011–2012 ஆம் ஆண்டில் டெபாசிட் மட்டும் ரூ.30,673.77 கோடி வைப்பு நிதி திரட்டப்பட்டுள்ளது. இது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைக் காட்டிலும் ரூ.4,428.60 கோடி அதிகமாகும் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது கூட்டுறவுத் துறை.

இதேபோல், கடன் வழங்குவதை எடுத்துக்கொண்டாலும், 2011–2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.33,674 கோடி ஆகும். இது மைனாரிட்டி கருணாநிதி ஆட்சியில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையைவிட ரூ.6,318 கோடி அதிகமாகும். இந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு 6 மாதங்களில் ரூ.6,318 கோடி *பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு இந்தத் துறைமூலம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், இந்தச் சாதனை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களைவிட வேறு யாரும் சாதிக்க முடியுமா? அம்மா அவர்கள் வரலாற்றுச் சாதனைமிக்க தலைவர் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிக் காட்டுவேன் என சபதமேற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, விவசாய உற்பத்தியைப் பெருக்கிடும் வகையில், 2011–2012 ஆம் ஆண்டு ரூ.3,000 கோடி அளவுக்கு வட்டியில்லா பயிர்க் கடன்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தார்கள். அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்காக, 20 சதவிகிதம் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையை சிரமேற்கொண்டு இந்தக் கூட்டுறவுத் துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு அளப்பரிய சாதனையாக ரூ.3,280 கோடி அளவுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 3,280 கோடி ரூபாய் வழங்கப்பட்டு இதன்மூலமாக 9 இலட்சம் ஏழையெளிய, வேளாண் பெருங்குடி மக்கள் பயனடைந்துள்ளார்கள் என்றால் இது மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய சாதனை என்பதை இங்கே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.720.46 கோடி மதிப்பிலான 7,43,618 மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் கூட்டுறவுத் துறையின்மூலம் வழங்கப்பட்டுள்ளன. டி.ஏ.பி. உரம் பற்றாக்குறையை கருத்தில்கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூ.130.50 கோடி நிதியுதவி வழங்கினார்கள். இதன்மூலம், மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு டி.ஏ.பி. உரம் சென்ற ஆண்டு தங்குதடையின்றி வழங்கப்பட்டது. விவசாயிகள்மீது எப்போதும் கருணை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த 2012–2013 ஆம் நிதி ஆண்டிற்கும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு டி.ஏ.பி. உரம் கொள்முதல் செய்ய ரூ.150 கோடி தாயுள்ளத்தோடு வழங்கியுள்ளார்கள் எனபதையும் இந்த நேரத்தில் நான் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணுக்கு அதன் இமை பாதுகாப்பு, கடலுக்கு அதன் கரை பாதுகாப்பு, பயிருக்கு வேலி பாதுகாப்பு, பறவைக்கு அதன் இறகு பாதுகாப்பு. ஆனால் விளைந்த பொருட்களைப் பாதுகாக்க இடமின்றி அல்லல்படும் சிறு, குறு விவசாயிகளுக்கு யார் பாதுகாப்பு? நம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் பாதுகாப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு, குறு விவசாயிகள் இரவு, பகல் பாராமல், நாளெல்லாம் உழைத்து விளைவிக்கும் உற்பத்திப் பொருட்களுக்கு அறுவடை காலங்களில் விலை வீழ்ச்சியடைவதை கருத்தில்கொண்டு, அவர்களுக்கு சரியான விலை கிடைக்கவும், விளைந்த விளைபொருட்களைப் பத்திரமாக பாதுகாக்கவும், கிடங்கு வசதிகள் இதுவரை போதுமான அளவுக்கு இல்லை. இதனை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–2012 ஆம் ஆண்டில் மட்டும் 1,55,300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,166 கிடங்குகளை, அரசு மானியத்துடன் ரூபாய் 107.26 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஆணையிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன்படி இந்தக் கூட்டுறவுத் துறை மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறது. 6 மாதங்களில் 1,118 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு, வெகு விரைவில் இதய தெய்வம் அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் பெருத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த நிதி ஆண்டிலும், 1,29,400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,104 கிடங்குகள் கட்டுவதற்கும் ரூபாய் 129.76 கோடியினை தாயுள்ளத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இது சாதனை இல்லையா? அம்மா தானே கருணைத் தாய்; அவர்கள்தான் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் சகோதரர்களே, இந்தக் கிடங்குகளில் வைக்கப்படுகின்ற தானியங்களுக்கு, விவசாயிகளுடைய நிலையை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டில் மட்டும் 10,466 விவசாயிகளுக்கு ரூபாய் 18.19 கோடி தானிய ஈட்டுக்கடனாக வழங்க ஆணையிட்டு அது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை ஏதோ பயிர்க்கடன் வழங்குவதற்கும், ரேஷன் கடை நடத்துவதற்கும் மட்டுமே உள்ள சாதாரண சங்கங்களாக நினைத்தார்கள். இந்த நிலையை மாற்றி தமிழ்நாட்டிலுள்ள குக்கிராமங்களில் எல்லாம் வாழும் ஏழையெளிய மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் ஒரு பல்வகை சேவை மையமாகவே இந்த ஆண்டு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கிருக்கின்ற குக்கிராமங்களில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு, அங்கிருக்கின்ற ஏழையெளியவர்களுக்கு Train Ticket, e–Mail, வங்கிச் சேவை, நில உடைமை ஆவணங்கள் பெறுவது, நகல் எடுப்பது இப்படி பல்வேறு வகையிலே அவர்களுக்கு எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற பன்முக சேவை மையமாகவே உருவாக்கி இந்த ஆண்டிலே இந்தச் சங்கங்களிலே ரூபாய் 238.12 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. ஏறத்தாழ 238.12 இலட்சம் ரூபாய் இதன்மூலம் அந்தச் சங்கங்கள் வருவாய் பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிரிடும் காலங்களில் போதுமான விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காது, சிறு குறு விவசாயிகளின் சிரமங்களை நன்கு உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நவீன உழவு இயந்திரம், நடவு இயந்திரம், கதிர் அறுக்கும் இயந்திரம் போன்றவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதற்கு 2011–2012 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்திற்கு அதிகபட்சம் ரூபாய் 20 இலட்சம் வீதம் மானியமாக 400–க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபாய் 80 கோடி வழங்கியுள்ளார்கள். இதன்மூலம், சிறு, குறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வேளாண் இயந்திரங்கள் கிடைத்ததோடு மட்டுமல்லாமல், நிதி நெருக்கடியில் இருந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.335.31 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. வினர் கூட்டுறவு அமைப்புகளில் அதிகாரத்தில் இருந்தபோது கூட்டுறவுத் துறையில் பல கோடி ரூபாய் அளவிற்கு முறையற்ற வகையில் கடன் வழங்கியது, தேவைக்கு அதிகமான பணியாளர்களை நியமனம் செய்தது, சங்கத்தின் வருமானத்திற்கு மேல் அதிகமாக, அவசியமற்ற, ஆடம்பரச் செலவுகள் செய்தது போன்ற முறைகேடான செயல்களால் கூட்டுறவுத் துறையைக் கொள்ளையடித்து, சீரழித்து, நிருவாகத்தைக் கெடுத்து, நிருவாகம் முடங்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள்தான் கடந்த மைனாரிட்டி தி.மு.கவினர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படிப்பட்ட தவறுகளைக் களைந்து, நலிவடைந்த சங்கங்களைப் புத்துணர்வோடு, சிறப்பாகச் செயல்படுத்தி, இன்றைக்குப் புனரமைத்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் பல அயல்நாட்டு வங்கிகள், வங்கி வணிகத்திற்குள் போட்டியாக நுழைந்தன. அதன்மூலமாக, அவர்கள் புதிய தொழில்நுட்ப உத்திகளுடன் வாடிக்கையாளர்களை கவர்ந்ததன்மூலம் இன்றைய இளைய தலைமுறையினர் உள்ளிட்ட, பொதுமக்கள் அத்தகைய வங்கிகளை நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டு, இன்றைக்கு மக்கள் வங்கியை நாடிச் சென்ற நிலை மாறி, வங்கிகள் மக்களை நாடிச் செல்லுகின்ற நிலை உருவாகிவிட்டது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனை கொண்டு, இப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வங்கிகளையும் நவீனமயமாக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி, 2005 ஆம் ஆண்டே அனைத்துக் கூட்டுறவு வங்கிகளையும் கணினிமயமாக்கி நவீன தொழில்நுட்பத்தைக் கூட்டுறவு வங்கிகளில் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அதற்குப் பின்னால் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்த அற்புதத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தாததோடு, பல குளறுபடிகளைச் செய்து, தகுதியான ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுக்காமல், ஒப்பந்தம் போட்டார்கள். இதனால், எந்தப்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

பணியும் முழுமையாக நடைபெறவில்லை. எனவே, தி.மு.கவின் கடந்த ஐந்தாண்டுகால ஆட்சியில் எதுவுமே நடக்கவில்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இப்படிப்பட்ட நிலையை தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இன்றைக்கு முடங்கிக்கிடந்த கூட்டுறவு வங்கிகளின் கணினிமயமாக்கல் பணிகள் அனைத்தையும் விரைவாகச் செயல்படுத்த ஆணை பிறப்பித்தார்கள். இதனால், இப்பணிகள் விரைவாகச் செயல்படுத்தப்பட்டு, இன்று இணையதளம் வாயிலாக வழங்கப்படும் அதிநவீன வங்கிச் சேவையான e–banking எனப்படும் மின்னணு வங்கியியல் சேவை, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது அம்மாவினுடைய ஆட்சிக்குக் கிடைத்த முத்தாய்ப்பான வெற்றி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன்விளைவாக, தமிழ்நாட்டில் உள்ள ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு இடையேயான பணப் பரிமாற்றங்களை மிகத் துரிதமாகச் செய்துகொள்ள முடியும். இதன்மூலமாக தமிழ்நாட்டில், குக்கிராமங்களில் உள்ளவர்கள்கூட இந்தியாவில் எந்த ஒரு பகுதிக்கும் பணத்தை விரைவில் அனுப்பவோ அல்லது அங்கிருந்து பணத்தைப் பெறவோ முடியும் என்பது இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய கூட்டுறவுத் துறை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். ஒரு மிகப் பெரிய சாதனையைப் படைத்துள்ளது இத்துறை என்பதை நான் இங்கு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பல மாநிலங்களில் தங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பாரத ரிசர்வ் வங்கியின் வங்கி உரிமம் பெற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமங்களைப் பெற்றுள்ளன. நம்முடைய தமிழ்நாட்டில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமங்களைப் பெற்றுள்ளன. இதன்மூலம் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றுள்ள இரண்டாவது மாநிலமாகும் நம் தமிழ்நாடு என்பதை இங்கு பெருமையோடு

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

தெரிவித்துக்கொள்கிறேன். இது அம்மா அவர்களின் ஆட்சிக்குக் கிடைத்த மணிமகுடம் என்றே நான் இங்கு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உள்ளார்ந்த ஒரு கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மாற்றுத் திறனாளிகளுடைய வாழ்க்கையைச் செப்பனிடுவதற்காக, சமுதாயத்தில் அவர்களை உயர்த்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலமாக முதன்முதலாக கடன் கொடுப்பதற்கு வழிசெய்தார்கள்.

பிற்பகல் 2–50

2002 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய அம்மா அவர்கள், அதன் பின்னர், 2011–2012 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டார்கள். இது மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரு முத்தாய்ப்பான திட்டம். மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் கொடுப்பது என்பது இந்தியாவிலே வேறெந்த மாநிலத்திலும் கிடையாது. அதிலும் முத்தாய்ப்பாக மாற்றுத் திறனாளிகளுக்குக் கொடுக்கிற கடனுக்கு, வட்டி ஏதும் இல்லை, அதனை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஒரு கருணை படைத்த தாய். இந்தச் சாதனை இந்தியாவில் எங்குமில்லை என்பதை நான் பெருமையோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட இந்தத் திட்டத்தின்மூலமாக, கூட்டுறவுத் துறையில் இந்த ஆண்டு 17.53 கோடி ரூபாய் அளவிற்கு மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வட்டி எவ்வளவு தெரியுமா? 90 இலட்சம் அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசே ஏற்றுக்கொள்கிறது. அம்மா அவர்கள் அவ்வாறு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அம்மாவினுடைய அரசினுடைய திறமையை நான் இங்கே உங்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் படியளக்கும் ஈசனைப்போல, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் படியளக்கும் ஈசனைப்போல, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் எங்கள் தாய் அன்னபூரணி

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

அவர்கள் இன்றைக்கு விலையில்லா அரிசியை (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடியே எண்பத்தைந்து இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்றால், அந்தச் சாதனையைச் செய்கின்ற மிகப் பெரிய ஒரு புண்ணியம் மாண்புமிகு அம்மாவினுடைய தொண்டனாகிய எனக்குக் கிடைத்திருக்கிறது. அம்மாவினுடைய தொண்டனாகிய எனக்கு அதைச் சிறப்பாக செய்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எப்படியென்றால், கூட்டுறவுத் துறை மூலமாக ஏறத்தாழ 31,089 நியாய விலைக் கடைகள் மூலமாக இன்றைக்கு இந்தத் திட்டத்தைச் சிறப்பாக மக்களிடத்திலே கொண்டு செல்கின்ற மிகப் பெரிய அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலமாக இந்த ஆண்டு 28,58,525 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி, 3,68,307 மெட்ரிக் டன் சர்க்கரை, 1,45,699 மெட்ரிக் டன் கோதுமையும், 5,70,511 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய், இப்படி இத்தனை அத்தியாவசியப் பொருள்களையும் இன்றைக்கு மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் முந்தைய அறிவிப்பிலே சொன்னார்கள். 100 மருந்தகங்கள் தமிழகத்திலே கூட்டுறவுத் துறையின்மூலம் திறக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது, இந்த 6 மாதங்களில் கூட்டுறவுத் துறையின் மூலமாக 103 மருந்தகங்கள் திறக்கப்பட்டு, இன்றைக்கு ஒவ்வொரு குக்கிராமங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் மருந்தகங்கள் சிறப்பாக மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. அதில் என்ன சிறப்பு என்றால், இங்கே மருந்து வாங்குகிறவர்களுக்கு விற்பனை விலையில் 12 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைத்துக் கொடுப்பதோடு, தரமான மருந்து இன்றைக்கு மக்களுக்குக் கிடைக்கிறது. இதைப் பார்த்து தனியார்களும் இன்றைக்கு தங்களுடைய மருந்து வியாபாரம் பாதிக்கப்படும் என்பதால், அவர்களும் இதே நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் இன்றைக்கு ஒரு மருத்துவப் புரட்சி கூட்டுறவுத் துறையின் மூலமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கே பெருத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலனுக்காக ஒவ்வொரு துறையின் மூலமும் பல திட்டங்களை அறிவிப்புகளாக வெளியிட்டுள்ளார்கள். அதைப்போல, கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்காகவும், ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தோடும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்துள்ள அறிவிப்புகளை, 2012–2013 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

1. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் கணினி சேவை (CORE Banking Solutions) செயல்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான சேவை செய்யும் பொருட்டு, மைய வங்கியியல் கணினி சேவை (CORE Banking Solutions) முறை ரூ.8.80 கோடியில் செயல்படுத்தப்படும்.

2. புறநகர் பகுதிவாழ் மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சேவை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நகரமயமாக்கலின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் புறநகரங்களில் உள்ள 10 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றப்படும்.

பிற்பகல் 2–55

3. கூட்டுறவு வங்கிகளில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்துக் கிளைகளிலும், நடப்பு ஆண்டில் ரூ.3.10 கோடி மதிப்பீட்டிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

4. கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, பிற வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 100 கிளைகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்படும்.

5. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கட்டளைக்கிணங்க, மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், நட்டமின்றி ஆதாயத்துடன் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களான தேன், சாமை மற்றும் புளி ஆகியவற்றைப் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் (LAMPS) மூலமாகக் கொள்முதல் செய்து, அவற்றிற்குப் பொதுவான வணிக முத்திரையிட்டு, உறையிலிட்டு மலைவாழ் பழங்குடி மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் விற்பனை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. புதிய கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவக்குதல் மற்றும் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, பெரும்பான்மையான மக்களுக்குச் சேவை புரியும் வகையில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 25 புதிய கிளைகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் 25 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

7. வாழைத்தார் கனியவைக்கும் நிலையம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி, வாழை விவசாயிகள் ஆதாய விலை பெறும்பொருட்டு, கூட்டுறவுத் துறையில் முதன் முறையாக திருச்சி மாவட்டம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் வாழைத்தார் குளிரூட்டிக் கனிய வைக்கும் நிலையம் நபார்டு வங்கியின் கடன் மற்றும் மானிய உதவித் திட்டத்தின்மூலம் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கணினிகள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிருவகித்து வரும் இணைப்புச் சங்கங்களின் வளர்ச்சி நிதியிலிருந்து தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், 1,121 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் கணினிகள் வாங்குவதற்கு நிதி உதவி அளிக்கப்படும்.

9. பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் இந்திய எண்ணெய் கழகத்தின் உதவியோடு கோயம்பேடு வணிக வளாகத்தில் ஒரு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையமும், கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையமும் அமைக்கப்படும்.

10. உலகக் கூட்டுறவு ஆண்டு, 2012 கொண்டாடுதல்

ஐக்கிய நாடுகள் சபை, 2012 ஆம் ஆண்டினை உலகக் கூட்டுறவு ஆண்டாக அறிவித்துள்ளது. பல்வேறு நாடுகளும் இதனைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகளின்படி தமிழகத்தில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள், மாவட்ட மற்றும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள், ஓவியப்

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கியும், கூட்டுறவுக் கருத்தரங்குகள் மற்றும் 16 இலட்சம் மரக் கன்றுகள் நடும் விழாக்கள் போன்றவை நடத்தியும், சிறந்த கூட்டுறவாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களைக் கௌரவப்படுத்தும் விதமாகப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கியும் சிறப்பாகக் கொண்டாடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாநிலத்தில், சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி, மதுரை ஆகிய ஏழு கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கும் பொருட்டு ரூ.255 இலட்சம் மதிப்பீட்டில் கணினிப் படிவம் தயாரிக்கும் மற்றும் அச்சடிக்கும் இயந்திரம் அமைக்கப்படும்.

12. ஆதாய விலையில் உளுந்து கொள்முதல் செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, விவசாயிகள் ஆதாய விலை பெறும் வகையிலும், அதிக விளைச்சலின் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்பட்டு, பொருட்களைக் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் விவசாயிகளிடமிருந்து உளுந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும்.

13. மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாற்றுத் திறனாளிகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூ.15 கோடி வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

பிற்பகல் 3–00

14. வீட்டு அடமானக் கடனை அதிகரித்து வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டு அடமானக் கடன் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்குவதோடு, அதனைத் திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக மாற்றி அமைக்கப்படும்.

15. நலிவுற்ற சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல்

பேராசிரியர் வைத்தியநாதன் குழு பரிந்துரைகளின்படி, இந்திய அரசின் நிதி உதவி பெற இயலாத 41 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வணிகத் திறனை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சங்கம் ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் 5 விழுக்காடு வட்டி மானியத்தில் சிறப்புக் காசுக் கடனாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக வழங்கப்படும்.

16. கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 16 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் ரொக்கம் மற்றும் நகைகளைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்புக் கதவுடன்கூடிய பாதுகாப்பு அறை கட்டத் தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3.30 கோடி நிதி உதவி அளிக்கப்படும். மேலும், 52 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பாதுகாப்புச் சாதனங்கள் நிறுவ தலா 1.33 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.69.16 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

17. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குடும்ப நலத் திட்ட நிதி உதவியை உயர்த்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால், குடும்ப நலத் திட்டத்தில் தற்போது வழங்கப்படும் ரூ.1.50 இலட்சம் நிதியுதவி ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

(மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஏப்ரல் 23] [திரு. செல்லூர் கா. ராஜு]

18. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை நவீனமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, கோவை சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் தலைமையிடத்தில் செயல்பட்டுவரும் சுயசேவைப் பிரிவு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி அமராவதி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் பொன்மலை மற்றும் கைலாசபுரம் சுயசேவைப் பிரிவுகளை தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக விற்பனையை மேம்படுத்தும் வகையில் நவீனமயமாக்கப்படும்.

19. நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இடையூறு இல்லாமல் விநியோகம் செய்யும் வகையிலும், மலைப் பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடைகளாகச் செயல்படவும், 10 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைப் பகுதியில் செல்லக்கூடிய சிறப்பு வாகனங்கள் தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 2012–2013 ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

20. ஆதாய விலையில் வேளாண் விளைபொருட்கள் வாங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான பயறு வகைகள், மிளகாய், வெங்காயம் போன்றவற்றை ஆதாய விலையில் விற்பதற்கும், நட்ட விலையில் (Distress Sale) விற்பதைத் தவிர்க்கும்பொருட்டும், கூட்டுறவு நிறுவனங்களின்மூலம், அரசு தரும் மானிய விலையில் விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்மூலம் விற்பனை செய்யப்படும்.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 ஏப்ரல் 23

21. சென்னையில் மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைகளின்படி, சென்னையில் உள்ள கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் மூன்று அடுக்குக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அறிவு சார்ந்த உறுப்பினர்கள் பலர் நிறைய கருத்துகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துகளுக்கு எல்லாம் இங்கே நான் ஓரளவு பதில் சொல்லியிருக்கின்றேன் எனக் கருதுகிறேன். இந்த நிலையில் ஒரு கருத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். என் உரையை நிறைவு செய்யும்முன், மாண்புமிகு அம்மா அவர்கள், புறாவிற்காக தன் தசையைத் தந்தவன் சிபி சக்ரவர்த்தி, மயிலுக்காக போர்வை தந்தவன் பேகன், முல்லைக்காக தேர் தந்தவன் பாரி இப்படி பிறர் நலன் கருதி தன்னிடம் உள்ளதைத் தந்தவர்கள்தான் கடையேழு வள்ளல் என்றால், தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் இனத்திற்காகவும் தன்னையே அர்ப்பணித்து, இரவு பகல் பாராமல் உழைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய், எங்கள் தாய்தான் வள்ளலுக்கெல்லாம் வள்ளல் என்பதை நான் இங்கே பதிவு செய்து, அம்மா, உங்களின் திருநாமம் எங்களுக்கு வேதம், உங்களின் புகழ் எங்களின் சுவாசம், உங்கள் பாதச் சுவடுகளில் பயணம் செய்யும் பாக்கியத்தை எனக்குத் தந்திட்ட எங்கள் குல தெய்வமே, தங்களின் பொற்பாதங்களை வணங்கி இந்த நேரத்தில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 3–05

அன்பான உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட 6 உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கம் பற்றி விவாதிக்கவும், திரு. அ. சவுந்தரராசன் உள்ளிட்ட 6 உறுப்பினர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்புதல், பதவி உயர்வு வழங்குதல் குறித்தும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே பணியிடங்கள் நிரப்புதல் குறித்து பதில் சொல்லிவிட்டீர்கள். அதனால் வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறுதல் குறித்துச் சொல்லுங்கள்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில், ** மக்கள் என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட மக்கள் என்று திருத்திக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் கேளுங்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய 18 வது அறிவிப்பில், கோயம்புத்தூர், சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையினுடைய தலைமையிடத்தில் செயல்பட்டுவரும் சுய சேவைப் பிரிவு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். கோயம்புத்தூர், சிந்தாமணி பண்டகசாலை என்பது ஆசியாவிலேயே சிறந்த கூட்டுறவு அமைப்பாகச் செயல்பட்டு வந்தது, கடந்த ஆட்சியிலே நலிவுற்ற நிலைக்கு வந்திருக்கின்றது. இப்பொழுது மீண்டும் அதனை செயல்படுத்துவதற்கான முறையில் அனைத்துப் பொருட்களும் வழங்கும் வகையில் செயல்பட சிந்தாமணியைப் புனரமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையின் அடிப்படையில், மஞ்சள் இன்று கடுமையான விலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வீழ்ச்சியடைந்திருக்கிறது. கர்நாடக அரசு ரூ.5,000/– விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்துகொண்டிருக்கிறது. எனவே, அதனடிப்படையில், தமிழகத்திலும் மஞ்சள் கொள்முதல் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன். அதைப்போன்று, கூட்டுறவு வங்கியில் தமிழக அரசின் சார்பில் பல திட்டங்களுக்கு மாவட்ட அளவில் நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த நிதிகளில் குறைந்தபட்சம் 50% நிதியாவது மத்திய கூட்டுறவு வங்கியில் டெபாசிட் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசின் ஒரு அங்கமான கூட்டுறவுச் சங்கங்கள் என்று அமைச்சர் அவர்களுடைய பதிலில் இருந்தது. இது நமது அரசின்மேலுள்ள வழக்கினை வலுப்பெறச் செய்யும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவதாக, ரூ.1 இலட்சம் கோடிக்குமேல் நமது கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 114–இல், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ரூ.95 கோடி குறைவாக வணிகம் செய்து 2,180.98 கோடிதான் வணிகம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் பேசும்போது சந்தோஷப்படும்படியாக அந்தக் கருத்து இருந்தது. அது தவறு. அவ்வாறு ரூ.1 இலட்சம் கோடி என்று இருப்பதை கண்டிப்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாற்றிச் சொல்வார் என்று கருதுகிறேன்.

2012 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத்தையும் சேர்த்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. அதில் என்னென்ன வியாபாரம் செய்யப்பட்டிருக்கின்றனவோ அதன் கூட்டுத் தொகைதான் இந்த ஆண்டு கூடியிருக்கிறது என்பதைத்தான் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் வணிகங்கள் சென்ற ஆண்டைவிட இதில் குறைக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தினைச் சொன்னார்கள். அது தவறான கருத்து என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மூலமாக சென்ற 2010–2011 ஆம் ஆண்டு ரூ.525 கோடியே 82 இலட்சம் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னர் 2011–2012-ல் ரூ.589.91 கோடி அதிகமாக, அதாவது 64 கோடி ரூபாய் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொடக்கக் கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010–2011 ஆம் அண்டில் 234 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சி அமையப்பெற்ற பின் 246 கோடி ரூபாய், அதாவது 12 கோடி ரூபாய் அதிகமாகத்தான் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 23

பிற்பகல் 3–10

அதோடு மட்டுமல்லாமல், 2010–2011–ல், தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் இயங்கிக் கொண்டிருந்தவை மொத்தம் 366. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 366–ல் 340 நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்தன நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். மாண்புமிகு அம்மாவினுடைய நல்லாட்சி ஏற்பட்டதற்குப் பின்னால் 366–ல் 353 இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் பாண்டியராஜன் அவர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டியராஜன், உட்காருங்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்திலே நீங்கள் பேசலாம். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.453,99,52,000/–, மூலதனக் கணக்கில் ரூ.238,15,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.17,93,86,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2012 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 13– உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,995,22,86,000/–, மூலதனக் கணக்கில் ரூ.40,70,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 24–4–2012 (செவ்வாய்க்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

39. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2010–2011 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

42. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

43. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2012 ஏப்ரல் 23]

44. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

96. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

97. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய செயல்முறைத் திட்டம், 2012–2013. (தமிழ்)

98. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2012–2013. (தமிழ்)

99. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

100. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)

101. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012–2013. (தமிழ்)

102. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2011–2012)

103. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2011–2012)

———————

இணைப்பு I

(58 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண்–12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013

முன்னுரை:

தமிழ்நாடு, கூட்டுறவு இயக்க வளர்ச்சியில், இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1904 ஆம் ஆண்டில், வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் திருவள்ளூர் மாவட்டம் திரூரிலும், நுகர்வோர் கூட்டுறவு சங்கம் சென்னை திருவல்லிக்கேணியிலும் முதன்முதலாகத் தொடங்கப்பட்டன. தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொண்டு இதர மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன.

2. பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு தரப்பு மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் 10,368 சங்கங்கள், 1,62,71,779 உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் மொத்த வணிகம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,05,133 கோடியாகும். கடன் மற்றும் பிற இடுபொருட்களை வழங்கி மாநிலத்தின் வேளாண் வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் தொண்டு வந்துள்ளன. மேலும் உறுப்பினர்களுக்குக் கடன் வசதி அளிப்பதுடன், வேளாண் சந்தையை உருவாக்குவதிலும், பொது விநியோகத் திட்டம் உட்பட நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் அளப்பரிய நன்மைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன.

3. ஐக்கிய நாடுகள் சபை 2012 ஆம் ஆண்டை அனைத்து நாடுகளின் கூட்டுறவுகள் ஆண்டாக அறிவித்து கூட்டுறவு இயக்கத்தை மென்மேலும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல சில கோட்பாடுகளைத் தெரிவித்துள்ளது.

2012 ஏப்ரல் 23]

- கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- புதிய சங்கங்களைத் தோற்றுவித்தல் மற்றும் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல்.
- கூட்டுறவுச் சங்கங்களின் நிலைத்தத் தன்மை, துவக்கம் மற்றும் வளர்ச்சிக்கு உதவும் வகையில் உரிய கொள்கைகள், சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு ஒத்துழைப்பு அளித்தல்.

அனைத்து நாடுகளின் கூட்டுறவு ஆண்டில், ஏற்புடைய கொள்கை மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகள்மூலம் வளர்ச்சிப் பாதையை நோக்கி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மேலும் கூட்டுறவு இயக்கத்தில், மகளிர், இளைஞர்கள், மலைவாழ் மக்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கியோர் ஆகியோர் தீவிரமாகப் பங்குபெறவும், முன்னேறவும் கூட்டுறவுத் துறை ஊக்குவிக்கும்.

இயல்–1

கூட்டுறவு வங்கிகள்

4. தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் நீண்டகாலமாக சேவை புரிந்து வருகின்றன. அவற்றின் பரவலான அமைப்புகள்மூலம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வங்கிச் சேவைகள் சென்றடைய உதவுகின்றன. தேவையின் அடிப்படையில் விவசாயிகள் மற்றும் இதர உறுப்பினர்களின் நிதித் தேவைகளை கூட்டுறவு வங்கிகள் அளிக்கின்றன. தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் முப்பரிமாணத்தில் அமைந்துள்ளன. (அ) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் (ஆ) நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் மற்றும் (இ) நகரக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்.

அ. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்

5. தமிழ்நாட்டில் குறுகிய காலக் கடன் நிறுவனங்கள், மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் 4,534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்ட அமைப்புகளாகும்.

[2012 ஏப்ரல் 23

(i) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

6. 1905 இல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாநிலத்தில் இயங்கிவரும் *23* மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாகும். தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னைப் பெருநகரத்திலுள்ள *45* கிளைகள்மூலம் பொது மக்களுக்கு வங்கியியல் சேவைகளை அளித்து வருகிறது. இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பீடுகள், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப்படும் மறு நிதி வசதி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய உடல் ஊனமுற்றோர் மேம்பாட்டு நிதிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் ஆகியவற்றின்மூலம் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் வழங்கும் நோக்கங்களுக்காக இவ்வங்கி மறு நிதி உதவி அளிக்கிறது. கூட்டுறவு வங்கிகளின் சேமிப்பு நிதியைப் பராமரிக்கிறது. மேலும், நிதி மேலாண்மை குறித்து வழிகாட்டுதல் அளிக்கிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, விவசாயக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்தின்மூலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை அளிக்கிறது.

7. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் *31-3-2012* அன்றைய நிதி செயல்பாடு:

	தொகை (ரூ. கோடியில்)
உறுப்பினர் பங்குத் தொகை	*106.44*
மாநில அரசின் பங்குத்தொகை	*0.26*
நிகர இலாப இருப்பு	*747.73*
வைப்புகள்	*6620.09*
திரட்டிய கடன்கள்	*2233.39*
வழங்கப்பட்டுள்ள கடன்கள்	*6648.82*
நிகர இலாபம் *(31-03-2012)* (உத்தேசமாக)	*51.99*

2012 ஏப்ரல் 23]

வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள்

8. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வளர்ச்சிக்கான செயல் திட்டங்கள் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் முக்கியக் கடன் வியாபாரத்தை அதிகரித்தல் மற்றும் பன்முகப்படுத்துதல், சங்கங்களின் செயல்பாட்டிற்கான முன்னேற்றம் மற்றும் செலவுகளைக் குறைத்தல் ஆகியவை குறித்த குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டன. இவ்வாறு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதன் காரணமாக ஒட்டுமொத்த வணிகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

வங்கியியல் சேவையில் தொழில்நுட்பத் தீர்வுகள்

9. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, "மைய வங்கியியல் மென்பொருள் முறை" நடைமுறைப்படுத்தப்பட்டு (CORE Banking Software Solutions) வங்கியுடன் இணைக்கப்பட்ட சங்கங்களுக்கும் மற்றும் அதன் இணைப்புச் சங்கங்களின் வாடிக்கையாளர்களுக்கும் சேவை செய்து வருகிறது. "நிகழ்நேர மொத்தத் தீர்வு" (RTGS) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) போன்ற தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதன்மூலம் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்கள் இந்தியா முழுவதும் மின்னணு வங்கியியல் நிதிப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள இவ்வங்கி உதவி செய்கிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மின்னணு வங்கியியல் சேவைகளையும் இவ்வங்கி அளித்து வருகிறது.

(ii) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

10. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 2011-2012 ஆம் ஆண்டில், வைப்பீடுகள் திரட்டுவதிலும் கடன் வழங்குவதிலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. மாநிலத்தில் உள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி உரிமம் வழங்கியுள்ளது. இச்சாதனையில் ஆந்திர மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இரண்டாவது மாநிலமாகத் திகழ்கிறது.

[2012 ஏப்ரல் 23

23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில், 21 வங்கிகள் நிகர இலாபத்திலும் 2 வங்கிகள் நடப்பு நிகர இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

11. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுச் கிக்கன நாணயக் கடன் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற இணைப்புச் சங்கங்களுக்குக் கடன் உதவிகளையும் பொது மக்களுக்கு நிதிச் சேவைகளையும் செய்து வருகின்றன. தற்போது மத்தியக் கூட்டுறவு வங்கிகள், பெரும்பாலும் வருவாய் வட்டம் மற்றும் வளர்ச்சி வட்டத் தலைமை இடங்களில் 739 கிளைகளுடன் இயங்கி வருகின்றன. பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகை திரட்டுவது மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறும் மறு நிதி உதவி ஆகியவை இவற்றின் நிதி ஆதாரங்களாகும். 2011-2012 ஆம் ஆண்டில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டு விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

	தொகை (ரூ. கோடியில்)
உறுப்பினர்கள் பங்குத்தொகை	1706.47
மாநில அரசின் பங்குத்தொகை	448.45
நிகர இலாப இருப்பு	2568.54
வைப்புகள்	15287.08
பெறப்பட்ட கடன்கள்	5240.36
வழங்கப்பட்டுள்ள கடன்கள்	26793.78

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தானியங்கும் முறை (Automation)

12. பொது வங்கியியல் மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட தொழில்நுட்ப மேம்பாடு, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்து கிளைகளும் கணினிமயமான செயல்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட மத்தியக்

2012 ஏப்ரல் 23]

கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் மென்பொருள் முறையைச் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் செயலாற்றலை அதிகரித்திடும் வகையில், கடன் மதிப்பீடு, நிதி மேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் கடன் வசூல் மேலாண்மை போன்ற இனங்களில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

(iii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

13. தமிழ்நாட்டில் உள்ள 4,534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், 1,033 இலாபத்திலும் 1,654 நடப்பு இலாபத்திலும் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 1,847 சங்கங்களின் வணிகத்தைப் பெருக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 31-3-2011 இல், உறுப்பினர்களுக்கு ரூ.1 கோடிக்கு மேல் கடன் வழங்கிய சங்கங்களின் எண்ணிக்கை 3,854 ஆக இருந்து 31-3-2012 அன்று 4,131 ஆக உயர்ந்துள்ளது. மீதமுள்ள 403 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் 2012-2013 இல் ரூ.1 கோடிக்கு மேல் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

14. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வேளாண் இடுபொருட்களான உரங்கள் மற்றும் விதைகளோடு சிறிய வேளாண் கருவிகளையும் விற்பனை செய்து வருகின்றன. மேலும் அவை கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 16,194 நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடு பின்வருமாறு உள்ளது.

	தொகை (ரூ. கோடியில்)
வைப்புகள்	4308.19
வழங்கிய கடன்கள்	17881.99

15. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை வலுப்படுத்தவும் அவற்றிற்கு உள் கட்டமைப்பு வசதிகளை அளித்திடவும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பங்களிப்புமூலம் உருவாக்கப்பட்டுள்ள "தொடக்கக் கூட்டுறவு

[2012 ஏப்ரல் 23

வளர்ச்சி நிதி" தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தலைப்பின்கீழ் உள்ள ரூ.6.81 கோடி நிதியின்மூலமாக கீழ்க்கண்டவற்றிற்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது:

- தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்டுதல்
- பாதுகாப்பு அறைகள் கட்டுதல்
- பாதுகாப்பு கதவுகள் மற்றும் இரும்புப் பெட்டகங்கள் அமைத்தல்

16. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பங்களிப்புமூலம் "வைப்புத் தொகை உத்தரவாத நிதி" ஏற்படுத்தப்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சேகரித்த இட்டு வைப்புத் தொகைகளை அச்சங்கங்கள் வைப்புதாரர்களுக்குத் திருப்பி வழங்க இயலாத நிலை ஏற்படும்போது வைப்புகளைத் திருப்பி அளிக்க இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. ரூ.46.45 கோடி தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

17. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மின்னணு வங்கியியல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, மாநிலத்திலுள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் இவ்வசதி விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், குறைந்த செலவில் தடையின்றி பணப் பரிமாற்றம் செய்வதற்கு உறுப்பினர்களுக்கு உதவியுள்ளதன்மூலம் இந்த வழிமுறை சிக்கனமானதாகவும் எளிதாகவும் செயல்படுத்தக்கூடிய வசதி என நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வசதி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கடனற்ற சேவைகள்மூலம் வருவாயை ஈட்டவும் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் பெருமளவு உதவிடும் வகையிலும் உள்ளது.

2012 ஏப்ரல் 23]

பயிர்க் கடன்கள்

18. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்களில் முக்கியமானது பயிர்க் கடன் ஆகும். இதுகாறும் கடன் பெறாத ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு பயிர்க் கடன் வழங்குவதன்மூலம் பெருமளவில் பயிர்க் கடன்கள் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

19. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.3,000 கோடி பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 8,99,974 விவசாயிகளுக்கு ரூ.3,280.42 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலே வழங்கப்பட்ட ரூ.3,280.42 கோடியில் ரூ.460.94 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் 1,49,245 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 2% வட்டிக்குறைப்பின்மூலம் ரூ.9.22 கோடி வழங்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் பயிர்க் கடன் 39,050 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 7% வட்டியில் ரூ.4.98 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.4,000 கோடி அளவிற்குப் பயிர்க் கடன்கள் வழங்க அரசின் நிதிநிலை அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் பயிர்க் கடனை திருப்பி அளிக்கும் விவசாயிகளுக்கான வட்டியை வட்டி மானியமாக அரசே வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.160 கோடி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்

20. வாரத்துக்குப் பயிர்செய்வோர், குத்தகைதாரர், சிறு-குறு விவசாயிகள் ஆகியோரை உள்ளடக்கி விவசாயத்தை ஊக்குவிக்க கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிற்கும் சுழல் நிதியாக ரூ.10,000/- மானியமாக வழங்கப்படுகிறது. இந்த நிதி, மருந்து தெளிப்பான்கள் மற்றும் இதர விவசாயக் கருவிகள் போன்ற சொத்துக்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் தற்போது 40,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் 7,176 புதிய குழுக்கள் உருவாக்கப்பட்டு ஏற்கெனவே மானியம் வழங்கப்படாத குழுக்களையும் சேர்த்து மொத்தம் 10,000 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.10 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டது.

[2012 ஏப்ரல் 23

விவசாயக் கடன் அட்டைகள் திட்டம்

21. விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் கடன்களை வழங்கிட விவசாயக் கடன் அட்டைகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் அளவிற்குட்பட்டு தேவையான தொகையினை எப்பொழுது வேண்டுமானாலும் விவசாயிகள் எடுத்துப் பயன்படுத்தலாம்.

தானிய ஈட்டுக் கடன்

22. அறுவடைக் காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்ற நிலையில், விவசாயிகள் அவற்றை இருப்பு வைத்து எதிர்காலத்தில் இலாபகரமான விலை கிடைக்கின்றபொழுது விற்றுப் பயனடைய ஏதுவாக தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக ரூ.105.99 கோடி தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் ஆண்டு ரூ.100 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

23. நிலையான வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்ய வேளாண் துறையில் முதலீடு செய்வது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள், நில மேம்பாடு, வேளாண் இயந்திரமயமாக்குதல் போன்ற முதலீட்டு நோக்கங்களுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் கூட்டுறவுகள் 67,071 விவசாயிகளுக்கு ரூ.281.24 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளன. மேலே வழங்கப்பட்ட ரூ.2,81.24 கோடியில் 4,623 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.16.50 கோடி முதலீட்டுக் கடன் வழங்கியுள்ளதன்மூலம் அவர்களின் வருவாயைப் பெருக்கும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட உதவி புரிந்துள்ளது. 2012-2013 ஆம் ஆண்டுக்கு ரூ.300 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 23]

சிறு வணிகக் கடன்

24. பூ, காய்கறிகள், பழங்கள் விற்பனை மற்றும் பெட்டிக் கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு பிணையம் ஏதுமின்றி சிறு வணிகக் கடன் திட்டம்மூலம் ரூ.10,000/- வரை வழங்கப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.99.97 கோடி சிறு வணிகக் கடனாக 1,04,983 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.125 கோடி வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்

25. சுய உதவிக் குழுக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் தொடர்ந்து உதவி செய்யும். 2011-2012 ஆம் ஆண்டில், 95,233 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.482.70 கோடி வழங்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.500 கோடி வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

26. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள், சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் அமைப்பதை ஊக்குவிக்க ரூ.10 இலட்சம் வரை மகளிர் தொழில் முனைவோர்க்கு கடன் வழங்கி வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் 10,127 மகளிர் தொழில் முனைவோர்க்கு ரூ.32.98 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.40 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கான கடன் திட்டம்

27. மாத வருவாய் பெறும் பணிபுரியும் மகளிருக்கு 36 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் ரூ.100,000 வரையில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் 8,695 பணிபுரியும் மகளிருக்கு ரூ.30.91 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.40 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்

28. மாற்றுத் திறனாளிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காகப் பல்வேறு பொருளாதார மற்றும் வருவாய்

ஈட்டும் தொழில்களை மேற்கொள்ள கூட்டுறவு வங்கிகள் கடன் வசதி அளித்து வருகின்றன. 2011-2012 இல் ரூ. 17.53 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 6,053 மாற்றுத் திறனாளிகளுக்குக் கடன் வழங்குவதால் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகையை அரசே ஏற்கும் வகையில் ரூ.90 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசுப் பங்கு மூலதன உதவி

29. கிராமப்புற மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதி திராவிட/பழங்குடியின மக்கள் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன் அரசால் வழங்கப்படுகிறது. வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடன்கள் வழங்குவதன் மூலம் ஆதி திராவிட/பழங்குடியின இனத்தைச் சார்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் திறன் கூட்டுறவுகள்மூலம் அதிகரிக்கப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்மூலம் 8,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.20 இலட்சமும் நகரக் கூட்டுறவு வங்கிகள்மூலம் 1,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு ரூ.5 இலட்சமும் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கூடுதலாகக் கடன் பெறும் வகையில், அவர்களின் கடன் வாங்கும் சக்தியை உயர்த்த இம்மூலதனம் உதவுகிறது. இத்தப் பங்கு மூலதன உதவி 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களைப் புத்துயிரூட்டுதல்

30. சிறப்புப் பணிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், குறுகிய காலக் கூட்டுறவு நிறுவனங்கள் திறம்படச் செயல்படவும், அவற்றை நன்முறையில் நிர்வாகம் செய்யவும் கிராமப்புற மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நிறுவனங்களாக மாற்றிடவும் குறுகிய காலக் கூட்டுறவு நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் திட்டத்தினை இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.

2012 ஏப்ரல் 23]

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:-

- கூட்டுறவு அமைப்புகளின் நிதி நிலையினைக் குறிப்பிடத்தக்க அளவிற்குச் சீர்படுத்த ஏதுவாக நிதி உதவி அளித்தல்;
- கூட்டுறவு அமைப்புகள் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலும், சுயச் சார்புடனும் திறம்படச் செயல்படவும், சட்டம் மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்;
- கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத் தரத்தை உயர்த்தத் தக்க நடவடிக்கைகள் எடுத்தல்

31. தமிழ்நாடு அரசு, இந்திய அரசு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன், தேவையான சட்டம் மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், மேற்கண்ட மறு சீரமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மறு சீரமைப்புத் திட்ட நிபந்தனைகளின்படி, 31-3-2004 அன்றைய தேதியில் ஏற்பட்ட நட்டங்களின் அடிப்படையில் சுறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு மறு முதலீட்டு நிதி உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசின் பங்காக ரூ.1,078 கோடியும், தமிழ்நாடு அரசின் பங்காக ரூ.313 கோடியும் பெறப்பட்டுள்ளன.

32. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் கடன் வசூல் உட்பட அனைத்து செயல்பாடுகளில் முன்னேற்றம் எய்திட, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் மற்றும் சங்கங்களின் துணை விதிகள் ஆகியவற்றில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவியுடன் ஏற்கெனவே பணியாற்றும் பணியாளர்களின் திறமையை மேம்படுத்தியதின்மூலம், நிறுவனங்களின் வணிக நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் திறமையாகச் செயல்பட ஆரம்பித்துள்ளன.

33. இச்சங்கங்களின் நடைமுறை மற்றும் அதன் மீதான கண்காணிப்புப் பணியினை மேம்படுத்த, பொதுக் கணக்கு முறை மற்றும் மேலாண்மைத் தகவல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

[2012 ஏப்ரல் 23

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்வகைச் செயல்பாட்டு நிறுவனங்களாக மாற்றுதல்

பன்முகப்படுத்துதல்

34. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும் நிறுவனங்களாக மட்டுமே செயல்பட்டு வந்தன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்குப் பிற தொடர்புடைய சேவைகளை அளிப்பதற்கு ஏதுவாக, அவற்றின் செயல்பாடுகளைப் பின்வரும் வகையில் பன்முகப்படுத்த ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

(அ) இடுபொருட்கள் விற்பனையை அதிகப்படுத்துதல்

35. உரம், விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.720.46 கோடி அளவிற்கு உரங்களும் ரூ.24.72 கோடி அளவிற்கு விதைகளும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(ஆ) வேளாண் பாதுகாப்பு மையம்

36. வேளாண் பாதுகாப்பு மையங்கள், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செய்வதுடன் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய பண்ணைச் சாகுபடி முறைகளை வழங்குகின்றன. 190 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து மானியம் ரூ.3 இலட்சம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியம் ரூ.3 இலட்சம் ஆக ரூ.6 இலட்சம் செலவில் வேளாண் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) பொதுச் சேவை மையங்கள்

37. உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்குப் பல்வகை மின்னணுச் சேவைகளை வழங்கிடும் வகையில், பொதுச் சேவை மையங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல், நிலவுடைமைப் பதிவேடு இறக்கம், மின்னணுப் பயணச் சீட்டு, ஒளிப்பட நகல், புகைப்படம் போன்ற சேவைகள்

2012 ஏப்ரல் 23]

அளிக்கப்படுகின்றன. 2010-2011 இல் ரூ.90.91 இலட்சம் வருவாயும் 2011-2012 இல் ரூ.238.12 இலட்சம் வருவாயும் ஈட்டப்பட்டுள்ளன. கிராமப்புற மக்களுக்குச் சேவை செய்வதுடன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வருவாய் ஈட்டும் நடவடிக்கை எடுப்பதும் பொதுச் சேவை மையங்களின் இரட்டிப்பு நோக்கமாகும்.

(ஈ) வேளாண் சேவை மையங்கள்

38. உச்சகட்ட பயிர்ச் சாகுபடி காலங்களில் விவசாயக் கூலிகளின் தேவை அதிகரிப்பதால் ஆள் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே,விவசாயக் கூலியாட்கள் பற்றாக்குறையைக் களைய விவசாயப் பணிகளில் இயந்திரங்களின் பயன்பாடு இன்றியமையாததாகிறது. ஆகவே, வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு அவை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் இயங்கி வருகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நியாயமான வாடகையில் வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் அளித்து வருகின்றன. வேளாண் சேவை மையங்கள் அமைத்திட 2011-2012 ஆம் ஆண்டில் ஒரு சங்கத்திற்கு மானியம் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை அரசால் வழங்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டில் 1,236 வேளாண் சேவை மையங்கள் 1,236 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வேளாண் சேவை மையங்கள் மூலமாக, ரூ.335.31 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

உ) நுண் காப்பீடு

39. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆயுள் மற்றும் பொதுக் காப்பீட்டுத் திட்டங்களின்கீழ் காப்பீட்டுத் தொகை வசூலிக்கவும், கோரிக்கைகளைத் தீர்வு செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. நுண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 1,53,966 கிராம மக்கள் சேர்ந்துள்ளனர். 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.1.01 கோடி காப்பீட்டுத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 23

(ஊ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை கணினிமயமாக்குதல்

40. முதற்கட்டமாக 1,559 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கணினிமயமாக்கல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் படிப்படியாக முழு அளவில் கணினிமயமாக்கப்படும்.

ஆ. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்

41. தமிழ்நாட்டில் நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் நிறுவனங்களாக, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் வருவாய் வட்டம் மற்றும் வளர்ச்சி வட்டார அளவில் 180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இயங்கி வருகின்றன.

(i) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

42. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறு நிதி உதவி பெற இயலவில்லை. இதன் விளைவாக, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், அவற்றின் வாலாயமான கடன் வழங்கும் பணிகளைத் தொடர இயலவில்லை. இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்கும் விதத்தில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, சிறு பாசனத் திட்டங்கள், வேளாண் சார்ந்த பணிகள், நகைக் கடன்கள் போன்ற நோக்கங்களுக்குக் கடன் வழங்கும் வகையில் தனது சொந்த நிதியிலிருந்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதி உதவி அளிக்க ஆரம்பித்தது. 2011-2012 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ரூ.194.93 கோடி அளவிற்கு நகைக் கடன்களை வழங்கியுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.250 கோடி வழங்கிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 23]

(ii) தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

43. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சிறு பாசனக் கடன்கள், நில அபிவிருத்தி செய்தல், பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டப் பயிர், கால்நடை பராமரிப்பு மற்றும் அதனைச் சார்ந்தவைகளுக்குக் கடன்கள் வழங்கும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டன.

44. நீண்டகாலக் கூட்டுறவு நிறுவனம் மறு நிதியுதவி பெறத் தகுதி இல்லாத நிலையில், தவணை தவறியுள்ள பண்ணைசாராக் கடன்களை வசூலிப்பதன்மூலமும் வேளாண் கடன் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தியும், இவ்வங்கிகளைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2011-2012 ஆம் ஆண்டில், ரூ.829.29 கோடி 2,36,399 பயனாளிகளுக்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.900 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

45. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுவதுடன், பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.30.91 கோடி அளவிற்கு பொது மக்களிடமிருந்து வைப்புகள் திரட்டப்பட்டுள்ளன. நீண்டகாலக் கூட்டுறவு நிறுவனங்களில் பொதுவானதொரு வங்கியியல் மென்பொருளைப் பயன்படுத்தி கணினிமயமாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மார்ச் 2013-க்குள் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் அனைத்துக் கிளைகள் மற்றும் அனைத்துத் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கணினிமயமாக்கும் பணி முடிக்கப்படும்.

46. மேலும், வங்கிகளின் சேவைகளைப் பன்முகப்படுத்துதலின் ஒரு பகுதியாக, நீண்டகாலக் கூட்டுறவு நிறுவனங்கள், முன்னோடிக் காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து காப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய புதிய முயற்சிகள் மூலமாக வருமானம் பெருகும்.

[2012 ஏப்ரல் 23

47. நீண்ட காலக் கடன் நிறுவனங்களை, தற்போது புத்துயிரூட்டிச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் வேளாண்மை மற்றும் கிராமப்புற மக்களின் நீண்டகாலக் கடன் தேவைகளை, குறுகிய காலக் கடன் கூட்டுறவு நிறுவனங்கள் பூர்த்தி செய்து வருகின்றன.

நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பினை புத்துயிரூட்டுதல்

48. நீண்ட காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பினை தற்போது புத்துயிரூட்டும் வாய்ப்பாக பேராசிரியர் வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளைத் தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு மத்திய அரசுக்கு இசைவு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் வழிகாட்டுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இ. நகரக் கூட்டுறவு நிறுவனம்

49. தமிழ்நாட்டில் நகரக் கூட்டுறவுக் கடன் நிறுவனம், மாநில அளவில் தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தையும், நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தொடக்க அளவில் நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டுள்ளது.

(i) தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம்

50. நகர்ப்புற மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையம் மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் நகரக் கூட்டுறவுக் கடன் இயக்கத்தின் வளர்ச்சிக்கும், உயர்விற்கும் பாடுபடுவதும், இந்திய ரிசர்வ் வங்கிக்கும் மாநில அரசுக்கும் இடையே பாலமாகச் செயல்படுவதும், வங்கிகளின் நிர்வாகம் மற்றும் வங்கிப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் போன்ற இனங்களில் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்குத் துணை நிற்பதும், இணையத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

(ii) நகரக் கூட்டுறவு வங்கிகள்

51. தற்போது மாநிலத்தில் 120 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவை மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. அவை,

2012 ஏப்ரல் 23]

பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி பெற்று சிறு வணிகர்களுக்கும், கைவினைஞர்களுக்கும் நடுத்தர வருவாய்க் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கும் வீடு கட்டுதல், வணிகம், கல்வி, நுகர்வோர் கடன் மற்றும் வேளாண் சாராக் கடன்கள் போன்ற நோக்கங்களுக்கு கடன்களை அளிக்கின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் நகரக் கூட்டுறவு வங்கிகள் 16,53,267 பயனாளிகளுக்கு ரூ.5,552.77 கோடி கடன்கள் வழங்கியுள்ளன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.6,500 கோடி கடன் வழங்கிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-3-2012 அன்று நகரக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த வைப்புத் தொகை ரூ.4,410.53 கோடியாகும். 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.5,000 கோடி அளவிற்கு வைப்புத் தொகை திரட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன்களில் 60 விழுக்காடு அளவிற்குக் குறையாமல் முன்னுரிமைப் பிரிவினருக்கும், அதில் 25 விழுக்காடு சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்படுகிறது.

52. நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளையும், அவற்றின் கிளைகளையும் கணினிமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்திறனை அதிகரித்து அதன்மூலம் வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை அளிக்க இயலும். இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக மாநில அரசு, நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

53. தமிழ்நாட்டில், 19 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பழங்குடியினருக்கு ஒற்றைச் சாளர முறையில் தானிய உற்பத்திக் கடன் வழங்குதல், இடுபொருட்கள் வழங்குதல், விவசாய விளைபொருள் விற்பனை மற்றும் பொது விநியோகத் திட்டம் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்றவற்றைச் செயல்படுத்தி வருகின்றன. பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 96,332 பழங்குடியினரும், 17,477 ஏனையோர்களும் உறுப்பினர்களாக உள்ளனர்.

[2012 ஏப்ரல் 23

54. 2011-2012 ஆம் ஆண்டில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு பின்வருமாறு உள்ளது:

	(ரூ. இலட்சத்தில்)
கடன் வழங்கியது	7,882.77
விவசாய விளைபொருட்கள் விற்பனை	335.26
விவசாய இடுபொருட்கள் விற்பனை	304.49
கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை	1,474.42
மொத்தம்	9,996.94

2012-2013 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

	(ரூ. இலட்சத்தில்)
கடன் வழங்குதல்	7,800
விவசாய விளைபொருட்கள் விற்பனை	550
விவசாய இடுபொருட்கள் விற்பனை	350
கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை	1,600
மொத்தம்	10,300

2012 ஏப்ரல் 23]

இயல்–2

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

55. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாய உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை ஆதாயமான விலைக்கு விற்க உதவுதல், வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைப் பொருட்களின் ஈட்டின் பேரில் கடன் வழங்குதல், வேளாண் விளை பொருட்களைப் பதப்படுத்துதல், வேளாண் விளைப் பொருட்களின் மதிப்பினைக் கூட்டி விற்பனைச் செய்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அமைப்பு இரண்டடுக்கு அமைப்பாக உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநில அளவிலும், 110 தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்ட அளவிலும் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல அளவிலான இணையமாகச் செயல்படுகின்றது.

அ. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

56. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 1959 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உர விற்பனையிலும், இடு பொருட்கள் விற்பனையிலும் இந்நிறுவனம் தற்போது ஈடுபட்டு வருகின்றது. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடிக்கு அருகில் உள்ள பாமணி என்ற இடத்தில் இந்த இணையத்திற்குச் சொந்தமான உரக்கலவை ஆலை இயங்கி வருகிறது. இக்கலவை உரம் 'பாமணி' என்ற பெயரிலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த இணையத்திற்குச் சொந்தமான 28,640 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 38 கிடங்குகளும், சென்னையில் 3,850 மெட்ரிக் டன் கொள்ளளவில் இரு குளிர்பதனக் கிடங்குகளும் உள்ளன. இந்த இணையம், அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில், ஆதார விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகமையாகச் செயல்பட்டு கொப்பரை, மிளகாய் போன்ற வேளாண் விளை பொருட்களைக் கொள்முதல் செய்கின்றது.

[2012 ஏப்ரல் 23

57. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநிலத்தில் டை அமோனியம் பாஸ்பேட் உரத்தினை விநியோகிக்கும் அரசின் முகமையாகச் செயல்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டிஏபி உரக் கொள்முதலுக்காக விற்பனை இணையத்திற்கு வட்டியில்லாக் கடனை ரூ.90 கோடியிலிருந்து ரூ.130.50 கோடியாக உயர்த்தி வழங்கி உத்தரவிட்டார்கள். இதனால் மாநிலம் முழுவதும் டிஏபி உரம் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வேளாண் பெருமக்களுக்கு எவ்வித இன்னல் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நியாயமான விலையில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்திட இந்த இணையத்திற்கு வழங்கப்படும் வட்டியில்லாக் கடன் வரும் நிதியாண்டில் ரூ.150 கோடியாக உயர்த்தி வழங்க இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையின் வாயிலாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

58. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விதைகள், உயிர் உரங்கள், பூச்சி மருந்துகள், உயிர் பூச்சி மருந்துகள், வேளாண் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றை அதிக அளவில் விற்பனை செய்து வியாபாரத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு விற்பனைத் திட்டம்மூலம் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு, விவசாயிகளின் விளைபொருள்களை ஆதாய விலைக்கு விற்பனைச் செய்ய உரிய நிதி உதவியையும், சந்தையில் விற்பனை செய்வது தொடர்பான உதவிகளையும் வழங்கி வருகிறது.

59. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நடப்பு நிகர இலாபத்தில் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் தேசிய வேளாண் கூட்டுறவு இணையத்தின் முகமையாகச் செயல்பட்டு வருகிறது. இந்த இணையம் பல்வேறு வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்கு ஆவின் நிறுவனத்திற்கு மாட்டுத் தீவனத்தை விற்பனை செய்கின்றது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.907.50 இலட்சம் மதிப்புள்ள 8,380.290

2012 ஏப்ரல் 23]

மெ.டன் மாட்டுத் தீவனம் ஆவின் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் கொப்பரை கொள்முதல் செய்திட 22 கொள்முதல் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இடு பொருள் விநியோகம், வேளாண் பொருட்கள் விற்பனை ஆகியவை தொடர்பான தகவல்களை இணைப்புச் சங்கங்களுடன் இந்த இணையம் பகிர்ந்து கொள்கிறது. பயறு வகையில் ஒன்றான உளுந்தை விவசாயிகள் நட்ட விலையில் விற்று வருவதைத் தடுக்கும் முகமாக கிலோ ஒன்றுக்கு ஆதார விலை ரூ.33/-வுடன் ரூ.5 மானியமாக அளித்து ரூ.38/-க்கு கொள்முதல் செய்ய இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மன்னார்குடியில் உள்ள பாமணி உரக்கலவை ஆலையில் ரூ.32 இலட்சம் மதிப்பில் தானியங்கி எடையிடும் மற்றும் மூட்டையிடும் இயந்திரம் 2011-2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கோயம்பேட்டில் செயல்பட்டுவரும் குளிர்ப்பதனக் கிடங்கின் முதற்கட்ட நவீனமாக்கும் பணியினை நிறைவு செய்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சாதனைகள்

(ரூ. கோடியில்)

	2010-2011	2011-2012
உர விற்பனை	585.82	661.30
பூச்சிக் கொல்லி மருந்துகள்	2.53	3.55
வேளாண் விளைபொருள் விற்பனை	6.79	6.95
மாட்டுத் தீவன விற்பனை	—	9.08

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்

60. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், காவிரி பாசனப் பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. இத்துடன் 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. உர விற்பனையை முதன்மை நடவடிக்கையாக மேற்கொண்டு வரும் இந்த இணையம், தனது செயல் எல்லையில் விதை விற்பனையையும் செய்து வருகின்றது.

[2012 ஏப்ரல் 23

தஞ்சாவூர் இணையத்தின் சாதனை

	(ரூ. கோடியில்)	
	2010-2011	2011-2012
உர விற்பனை	38.29	47.14
விதைகள் விற்பனை	3.27	5.07

ஆ. வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

61. மாநிலத்தில் 110 வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் விளைபொருள் விற்பனை, உரம் மற்றும் வேளாண் இடுபொருட்கள் விற்பனை ஆகியவற்றைத் தலையாய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சங்கங்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் முதன்மைச் சங்கங்களாகவும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்களின் நகர்வுப் பணியையும் மேற்கொண்டு வருகின்றன. இவற்றுள் நீலகிரி வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கம், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

62. நீலகிரி வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நவீனமயமாக்கப்பட்ட தரம் பிரிக்கும் இயந்திரத்துடன்கூடிய ஏல மையத்தைக் கொண்டுள்ளது. இச்சங்கத்தின் மேட்டுப்பாளையம் ஏல விற்பனை மையம், நீலகிரி மாவட்டத்தில் விளையும் மொத்த உருளைக்கிழங்கில் 60 விழுக்காட்டினை தரம் பிரித்து விற்பனை செய்து வருகிறது. நீலகிரியில் விளையும் பயிர்களுக்கு ஏற்ற கலப்பு உரங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்யும் வெள்ளைப் பூண்டினை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கு ஏதுவாக பிப்ரவரி 2012 முதல் மேட்டுப்பாளையத்தில் புதிய ஏல விற்பனை மையம் செயல்பட்டு வருகின்றது. இதன்மூலம் வெள்ளைப் பூண்டினை உற்பத்தி செய்து இம்மையத்திற்குக் கொண்டு வந்து விற்பனை செய்யும் விவசாயிகள் நல்ல ஆதாய விலையைப் பெறுகின்றனர். 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.20.48 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் இச்சங்கத்தின்மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2012 ஏப்ரல் 23]

63. நாமக்கல் மாவட்டத்தில் விளையும் பருத்தி, எள், நிலக்கடலை, அரிசி ஆகிய வேளாண் விளைபொருட்களை ஆதாய விலைக்கு விற்றுத்தரும் முக்கிய நிறுவனமாக திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கம் செயல்படுகிறது. மேலும் இச்சங்கம் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து விவசாய உபகரணங்கள், இரும்பு எஃகு கம்பிகள் மற்றும் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்மூலம் விவசாயப் பெரு மக்களுக்கும், பொது மக்களுக்கும் நியாயமான விலையில் விற்பனை செய்கிறது. இச்சங்கம் பல்பொருள் அங்காடியையும், சமையல் எரிவாயு முகமையையும் நடத்தி வருகிறது. இச்சங்கம் நல்லெண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனையையும் மேற்கொண்டு வருகிறது.

திருச்செங்கோடு விற்பனைச் சங்கத்தின் சாதனை

(ரூ. கோடியில்)

	2010-2011	*2011-2012*
வேளாண் விளைபொருள் விற்பனை	*93.81*	*114.28*
மளிகைப் பொருட்கள் விற்பனை	*13.79*	*16.10*
நல்லெண்ணெய் விற்பனை	*0.34*	*0.77*
மருந்து விற்பனை	*0.13*	*0.62*
சர்வோ ஆயில்	*25.49*	*28.91*
பெட்ரோல் மற்றும் டீசல்	*17.49*	*19.73*
நகைக் கடன்	*78.02*	*93.90*

64. துடியலூர் கூட்டுறவு வேளாண் சேவை நிறுவனம், விதைகள் விற்பனையில் சிறந்து விளங்குகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.2.76 கோடி அளவிற்கு விதைகள் விற்பனை செய்துள்ளது. நிறுவனத்திற்குச் சொந்தமான பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்கும் அலகில் பூச்சிக்கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விற்பனை மேற்கொள்கிறது. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.57.16 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்துள்ளது. விவசாய உபகரணங்களை வேளாண் பெருமக்களுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கி

[2012 ஏப்ரல் 23

வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் அரசு அறிவிப்பின்படி துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவை நிறுவனத்தில் ரூ.19.13 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய நெல் விதை சுத்திகரிப்பு இயந்திரம் தரம் மிக்க நெல்விதைகளை அதிக அளவில் தயாரிக்க நிறுவப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

(i) வேளாண் விளைபொருள் விற்பனை

65. வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய பெருமக்களுக்குச் சேவை புரிந்திட பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றன:

(அ) ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள், கிடங்குகள் மற்றும் தானிய ஈட்டுக் கடன் ஆகிய வசதிகளை அளித்து வேளாண் உறுப்பினர்கள் தங்களது விளைபொருட்களை வெளிப்படையான முறையில் ஆதாய விலைக்கு விற்பனைச் செய்ய உதவி வருகின்றன.

(ஆ) வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய பணிகளுடன், உறுப்பினர்களின் பொருள்களுக்கு மதிப்புக் கூட்டுதல் பணியையும் செய்து வருகின்றது.

(இ) தானிய ஈட்டுக் கடன்கள் வழங்குவதன் மூலமாக விவசாய உறுப்பினர்கள் தங்களது விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்கும் நிலையைத் தவிர்க்க முடிகின்றது.

(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்

66. விற்பனைச் சங்கங்களும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் இணைந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை விற்பனைச் சங்கங்கள்மூலம் ஆதாய விலைக்கு விற்பனை செய்ய ஊக்குவிக்கின்றன. இம்முயற்சிகளால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கடன் தொகை வசூலாவதோடு, வேளாண் உறுப்பினர்களின் விளைபொருட்கள் ஆதாய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

2012 ஏப்ரல் 23]

(iii) விற்பனையுடன் இணைந்த நுகர்வோர் கூட்டுறவு

67. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைந்து செயல்படுகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விளைப்பொருட்களைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விற்பனைச் செய்வதன்மூலம் பண்டக சாலைகளுக்குத் தரமான பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதுடன் விவசாயிகளுக்கும் ஆதாய விலையும் கிடைக்கின்றது.

(iv) தானிய ஈட்டுக் கடன் வழங்குதல்

68. அறுவடைக் காலங்களில் விவசாயிகள் பெரும்பாலும் தங்களது அவசரத் தேவைகளுக்காக வேளாண் விளைபொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் கட்டாயம் ஏற்படுகிறது. இந்நிலையில், விவசாயிகளின் நலன்களைக் காக்கும் பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கி வருகின்றன. இதன்மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களைச் சேமித்து வைத்து சாதகமான சந்தை விலை கிடைக்கும்போது ஆதாய விலைக்கு விற்க ஏதுவாக உள்ளது. தானிய ஈட்டுக் கடன்களுக்கு இந்திய அரசு அளிக்கும் வட்டி மானியத்தினைப் பெற ஏதுவாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் கிடங்குகளுக்கு உரிய அதிகார அமைப்பின் ஏற்பளிப்புப் பெறப்படும். பொருளின் சந்தை மதிப்பில் 60% முதல் 80% வரை தானிய ஈட்டுக் கடனாக வழங்கப்படுகிறது.

வருடம்	*மதிப்பு (ரூ.கோடியில்)*
2010-2011	*57.12*
2011-2012	*75.20*

[2012 ஏப்ரல் 23

(v) பதனிடுதல் மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல்

69. சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி அவற்றின் மதிப்பைக் கூட்ட பருத்தியிலிருந்து கொட்டை நீக்குதல், எண்ணெய் உற்பத்தி, அரிசி ஆலை போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இவ்வலகுகள்மூலம் நியாயமான விலையில் வேளாண் உறுப்பினர்களின் பொருட்களைப் பதப்படுத்தித் தரும் பணியைச் செய்கின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் 4,36,846 மெ. டன் அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

(vi) ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் கொப்பரைக் கொள்முதல்

70. தென்னை பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக அரசு ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் தேசிய வேளாண் விற்பனை இணையத்தின் சார்பாக மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள அடிப்படை ஆதார விலையில் கொப்பரைக் கொள்முதல் திட்டம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தேசிய வேளாண் கூட்டுறவு இணையத்தின் (NAFED) சார்பாக கொப்பரைக் கொள்முதல் செய்கிறது. தற்போது 22 கொள்முதல் மையங்கள் 9 தேங்காய் விளையும் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் ஆண்டில் அரவை கொப்பரைக்கு, அரசு ஆதரவு விலை கிலோ ஒன்றுக்கு ரூ.51/-ம், முழு கொப்பரைக்குக் கிலோ ஒன்றுக்கு ரூ.53.50/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(vii) நெல் கொள்முதல்

71 நெல் கொள்முதல் செய்வதை அதிகரிக்கும் நோக்கத்துடனும் காவிரி பாசனப் பகுதி அல்லாத இடங்களில் உள்ள விவசாயிகளின் நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் மாநில அரசு வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்காக

2012 ஏப்ரல் 23]

நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கியது. அதன் பயனாக விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் காஞ்சிபுரம், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்முதல் பணியில் ஈடுபட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டில் 46,958.666 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

(viii) தரமான விதைகள் விற்பனை

72. தரமான விதைகள் வேளாண் உற்பத்திக்கு மிகவும் முக்கியமான இடுபொருளாகும். மாநிலத்தில் நெல் பயிரைத் தவிர, மற்ற பயிர்களின் விதை மாற்று விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தரனிய வகைகள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளை வழங்க கூட்டுறவு விற்பனை சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.24.72 கோடி அளவிற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்

(i) தேங்காயைக் கொப்பரையாக மாற்றும் அலகுகள் அமைத்தல்

73. தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் முன்னோட்ட அடிப்படையில் கோவை மாவட்டத்தில் 3 கூட்டுறவுச் சங்கங்களில் சூரிய உலர்கலன் வசதியுடன் தேங்காயைக் கொப்பரையாக மாற்றும் வசதிகள் ரூ.18 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன. 2011-12 ஆம் ஆண்டில், 4,68,276 தேங்காய்கள் பதனிடப்பட்டு கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

(ii) புதிய சூரிய கொப்பரை உலர்கலன்கள்

74. 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தென்னை அதிகம் சாகுபடி செய்யும் மாவட்டங்களில் சூரிய கொப்பரை உலர்கலன்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதன்படி 10 மாவட்டங்களில் 22 சூரிய கொப்பரை உலர்கலன்கள் ரூ.129.58 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

[2012 ஏப்ரல் 23

(iii) தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் (ஆர்.ஐ.டி.எப்.) கிடங்குகள் கட்டுதல்

75. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (ஆர்.ஐ.டி.எப்) திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 1,118 கிடங்குகளும், வேளாண்மை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 48 கிடங்குகளும் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு ரூ.105.47 கோடி மானியம் வழங்கியுள்ளது. இக்கிடங்குகளை சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணைக் குழுவிடம் பதிவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் இந்திய அரசு சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள விளைபொருட்களுக்கு வழங்கப்படும் கிடங்கு ரசீதுகளின் அடிப்படையில் விவசாயக் கடன் அட்டை வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் தானிய ஈட்டுக் கடன்களுக்கு இரண்டு விழுக்காடு வட்டிச் சலுகை அறிவித்துள்ளது. இத்திட்டத்தினை 2012-2013 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு நிதி (ஆர்.ஐ.டி.எப்) திட்டத்தின்கீழ் ரூ.129.76 கோடி மதிப்பில் கட்டப்படும் 1,104 கிடங்குகளுக்கும் நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்புதிய கிடங்குகளினால் கூட்டுறவுகளில் சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 1,29,400 மெ. டன் அதிகரிக்கும்.

கூட்டுறவு அச்சகங்கள்

76. தமிழ்நாட்டில் 26 கூட்டுறவு அச்சகங்கள், 12,645 உறுப்பினர்கள் மற்றும் ரூ.2.09 கோடி பங்குத் தொகையுடன் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு அச்சகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. அனைத்துக் கூட்டுறவு அச்சகங்களும் நடப்பு இலாபத்தில் இயங்கி வருகின்றன.

(ரூ.கோடியில்)

	2010-2011	2011-2012
மொத்த வணிகத் தொகை	37.30	41.72

2012 ஏப்ரல் 23]

இயல்–3

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள்

77. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமாகச் செயல்படுகின்றது. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைமை அலுவலகம் சென்னை சாலிக்கிராமத்தில் அமைந்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் 34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் செயல்பட்டு வருகின்றன. மொத்த விற்பனை பண்டகசாலைகள் தரமான நுகர்பொருட்கள் மற்றும் பயன்பாட்டுப் பொருட்களை கொள்முதல் செய்து, நியாயமான விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகின்றன. மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. அனைத்து மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிலும், Enterprise Resources Planning (ERP) தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 366 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளையும், நுகர்வோரையும் இணைக்கும் அமைப்பாகச் செயல்படுகின்றன. மாநிலத்தில் செயல்பட்டு வரும் 2,844 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு சேவை புரிந்து வருகின்றன.

கூட்டுறவு மருந்தகங்கள்

78. 2011-2012 ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவை 103 மருந்தகங்களை நிறுவி உள்ளன. கூட்டுறவு மருந்தகங்கள் பொது மக்களுக்கு மருந்து வகைகளை அதிகபட்ச சில்லறை விலையில் 12 முதல் 15 விழுக்காடு வரை தள்ளுபடி விலையில் விற்பனை செய்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 191 மருந்தகங்கள் கூட்டுறவுகளால் நடத்தப்படுகின்றன.

விலைக் கட்டுப்பாட்டு நிதி

79. கூட்டுறவுகள் சந்தையில் தலையிட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு ரூ.50/-கோடி நிதியினை விலைக் கட்டுப்பாட்டு நிதியாக ஏற்படுத்தி உள்ளது. 2011-2012 ஆம் ஆண்டில் 52,980 கிலோ புளி மற்றும் 22,804 கிலோ மிளகாய் ரூ.53,18,200/-க்கு கொள்முதல் செய்து மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்மூலம் விற்பனைச் செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இயல்–4

தனி வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

(i) பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள்

80. மாநில, மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்களுக்கென பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்குவதும், பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்களின் முக்கிய நோக்கங்களாகும். சங்க உறுப்பினர்களின் பிணையத்தின் அடிப்படையில் ரூ.5 இலட்சம் வரை தனிநபர் கடன்கள் இந்தச் சங்கங்களால் வழங்கப்படுகின்றன. இது தவிர உறுப்பினர்கள் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக ரூ.2 இலட்சம் வரை கல்விக் கடனும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1,814 பணியாளர் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களில் உறுப்பினர் பங்கு மூலதனம் ரூ.1,072.12 கோடியும் வைப்புத் தொகை ரூ.2,543.83 கோடியும் உள்ளன. உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ.8,124.97 கோடியாக உள்ளது.

(ii) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

81. தமிழ்நாட்டில் 90 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 3,388 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் ஒப்பந்தப் பணிகள் பெற்று உறுப்பினர்கள் வாழ்வாதாரம் பெறும் வகையில் வேலைவாய்ப்பை அளித்து வருகின்றன.

2012 ஏப்ரல் 23]

இயல்–5

பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

82. மாநிலத்தில், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் பொது விநியோகத் திட்டம் முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில், நெடுங்காலமாக, கூட்டுறவுகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. 94 முதன்மைச் சங்கங்கள், 4031 இணைப்புச் சங்கங்கள், 437 சுய எடுப்புச் சங்கங்கள் மற்றும் 31,089 நியாயவிலைக் கடைகள் அடங்கிய ஒரு விரிவான விநியோகத் தொடர் அமைப்பை கூட்டுறவுகள் உருவாக்கியுள்ளன. மேலும் 262 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்களை இக்கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றன.

இயல்–6

கூட்டுறவுக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

83. கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வின்மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர், உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் நோக்கத்தை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும், இவை பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் நடத்துகின்றன.

84. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து அவற்றின் நிகர இலாபத்தில் 3 விழுக்காடு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், நிகர இலாபத்தில் 2 விழுக்காடு கூட்டுறவுக் கல்வி நிதிக்கும், வசூலித்து அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவுத் தொடர்பான செய்திகளைப் பரப்புதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுறவுப் பயிற்சி

85. தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் அஞ்சல்

[2012 ஏப்ரல் 23

வழிக்கல்விமூலம் கூட்டுறவு மேலாண்மை பயிற்சியினை நேரடி பயிற்சி பெறாத கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத் துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்துகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் வண்ணம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் 2011-2012 ஆம் ஆண்டில் முழு நேரக் கூட்டுறவு பட்டயப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கியுள்ளது. 1,241 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொழிற்கல்வி

86. தருமபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் மூன்று கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்களும், திருச்சி மாவட்டம் லால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்படுகிறது.

87. மேற்படி கூட்டுறவு தொழிற்பயிற்சி நிலையங்களில் கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி (COPA), தையற்கலை, மின்பழுது பார்த்தல், கைவினைஞர், உணவுப் பொருள் தயாரித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், லால்குடி கூட்டுறவு தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

88. மதுரை மற்றும் சென்னையில், புது டில்லி தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழு நடத்திவரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆதரவு அளித்து வருகிறது. இவை, கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப் பயிற்சி அளித்து வருகின்றன. கூட்டுறவுத் துறை பணியாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி இரு மேலாண்மை நிலையங்களும் வணிக மேலாண்மையில் முதுகலை பட்டப் படிப்பையும் அளித்து வருகின்றன.

2012 ஏப்ரல் 23]

இதர முயற்சிகள்

89. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்புகள் செய்து தனி இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகைமூலம் கூட்டுறவில் ஆராய்ச்சித் செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இது வரையிலும் 20 மாணவர்களின் ஆராய்ச்சி திட்டங்களுக்காக உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

90. ஒன்பது கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் கைவினைப் பொருட்கள் தயாரித்தல், உணவுப் பொருட்கள் தயாரித்தல் போன்ற சான்றிதழ் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இதுவரை 246 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்புகள் ஊக்கமளிப்பதாக உள்ளன. மேலும், அனைத்துக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களிலும் கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மையியல் பட்டப் படிப்பு, வணிக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாட்டில் முதுகலை பட்டப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 777 மாணவர்கள் அஞ்சல்வழிக் கல்வி மூலம் பட்டப் படிப்பு பயின்று வருகின்றனர்.

இயல்–7

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

91. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், மாவட்ட அளவில் உள்ள பலவகையான கூட்டுறவு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் இந்தியா முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் விருதுநகர், கடலூர்,

[2012 ஏப்ரல் 23

விழுப்புரம், திருப்பூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 17 மாவட்டங்களில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது சேலம், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, சிவகங்கை, திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

92. இத்திட்டத்தின் கால அளவு ஐந்தாண்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான நிதியுதவி கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழக அரசால் கடனாகவும், பங்குத் தொகை மற்றும் மானியமாகவும் வழங்கப்பட்டு, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தமிழக அரசு மறு நிதியுதவியாக (Refinance) பெறப்படுகிறது. இணைப் பதிவாளர்/பொது மேலாளர் தலைமையிலான திட்ட செயலாக்கக் குழு இத்திட்டத்தினை மாவட்டங்களில் செயல்படுத்துகின்றது. தொடர்புடைய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி திட்டச் செயலாக்க முகமையாகச் செயல்படுகின்றது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்டக் குழு, இத்திட்டத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்கின்றது.

93. அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், கிடங்குகள் கட்டுதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுக்காக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேவை உள்ள இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1989 முதல் 2011 வரை 17 மாவட்டங்களில் மொத்தம் ரூ.136.46 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2012 ஏப்ரல் 23]

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

94. தற்போது சேலம், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, சிவகங்கை, திண்டுக்கல், கரூர், நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 2008 ஆம் ஆண்டு முதல் மொத்தம் ரூ.300.97 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளவை

95. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், நீலகிரி, திருவள்ளூர், நாமக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டம் மேற்படி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

பயிற்சி

96. ஏனையபயிற்சிகளுடன், கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் இதர மாநிலங்களில் செயல்படும் கூட்டுறவுகளின் சிறப்பான செயல்பாடுகளைக் கண்டு அறிந்துவருவதற்காக அளிக்கப்படும் பயிற்சிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன.

97. "பொருளாதார நிலைப்புத்தன்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை அடைய முடியும் என்பதை கூட்டுறவுகள் உலக சமுதாயத்திற்கு நினைவூட்டுகின்றன."

—பான் கீ-மூன் பொதுச் செயலாளர், ஐக்கிய நாடுகள் சபை.

வேளாண் பெருமக்களுக்கும், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் நலத் திட்டங்களின் பலன்களை அளிப்பதற்கு உகந்த திட்டங்களைச் செயல்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் தமிழகத்தை நாட்டிலேயே முதல் மாநிலமாக்கிட உறுதி ஏற்போம்.

கூட்டுறவு வங்கிகளில் உள்ள
மொத்த வைப்புத்தொகை
(₹ கோடியில்)
30673.77
26245.17
23792.74
20119.02
18182.20
31.03.2008
31.03.2009
31.03.2010
31.03.2011
31.03.2012
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2012 ஏப்ரல் 23]


கூட்டுறவு வங்கிகள் வழங்கிய
மொத்த கடன்
(₹ கோடியில்)
11593.25
14340.80
20831.48
27340.28

[2012 ஏப்ரல் 23

(₹ கோடியில்)
3280.42
2778.54
2163.43
1570.99
1393.97
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12

2012 ஏப்ரல் 23]

கூட்டுறவு வங்கிகள் வழங்கிய
மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி
(₹ கோடியில்)
1.61
2.81
7.82
9.79
17.53
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12

கூட்டுறவு வங்கிகள் வழங்கிய
மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி
(₹ கோடியில்)
1.61
2.81
7.82
9.79
17.53
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2012 ஏப்ரல் 23]

இணைப்பு-II

(59 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண்–13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013

முன்னுரை:

தமிழக மக்கள் ஆரோக்கியமாக வாழத் தேவையான, பாதுகாப்பான், சத்தான உணவு அனைத்து நேரங்களிலும் தேவையான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் உணவுப் பாதுகாப்பை மக்களின் தோழமையான தமிழக அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தி வருகிறது. அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் குறிக்கோள் மாநிலத்தில் அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்கள் அனைவருக்கும் உரிய அளவில் கிடைக்கச் செய்வதேயாகும்.

2. ஏழை மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், "மக்கள் நலனே எனது அரசின் தலையாய குறிக்கோள்" என்று உறுதிபட அறிவித்தார்கள். இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் விதமாக, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அரிசியை விலையின்றி வழங்க ஆணையிட்டார்கள்.

3. மாநிலத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது:—

- உணவுப் பொருட்கள் போதிய அளவில் மக்கள் வாங்கும் விலையில் கிடைப்பதை முறையாக கண்காணிப்பதன்மூலம் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்படுவது உறுதி செய்யப்படுகிறது.

[2012 ஏப்ரல் 23

- ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் பசிப்பிணியை அகற்றுவதற்காகப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் அரிசியை விலையின்றி வழங்குவதன்மூலம் தமிழகம், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

- இயற்கை இடர்ப்பாடு அல்லது அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை காரணமாக வெளிச்சந்தையில் செயற்கையாக ஏற்படும் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாநில அரசு, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றை வழங்குகிறது.

- வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்பாடின்றி உயரும்பொழுது அதனைக் கட்டுப்படுத்துவதற்காக அத்தகைய பொருட்களை அரசே கொள்முதல் செய்து நுகர்வோர்களுக்குக் கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனை மையங்கள் மூலமாக நியாயமான விலையில் விற்பனை செய்கிறது. இதற்காக ரூ.50 கோடி நிதியுடன் விலை கட்டுப்பாட்டு நிதியம் அமைக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் 01-10-2002 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்தின் சார்பாக நெல் கொள்முதல் செய்து வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் நவீன அரிசி ஆலைகள் மற்றும் தனியார் அரைவை முகவர்கள்மூலம் அரைவை செய்யப்படுகிறது. மேற்படி பெறப்படும் அரிசி மைய அரசின் மத்திய தொகுப்பில் ஈடுகட்டப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படுகிறது.

2012 ஏப்ரல் 23]

- பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் சட்ட விரோதமாகக் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேம்படுத்துவதற்கும் முன்பு கலைக்கப்பட்ட மாநில எல்லையோர கண்காணிப்பு சிறப்புப் படைகளை மீண்டும் இவ்வரசு உருவாக்கியுள்ளது. மேலும், புதிய குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை பிரிவு பொள்ளாச்சியில் அமைக்கப்பட்டுள்ளது.

- வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களால் ஏமாற்றப்படுவது குறித்து நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், நுகர்வோர்கள் வணிகர்களால் திட்டமிட்டு ஏமாற்றப்படுவதிலிருந்து பாதுகாக்க சட்டபூர்வமான வழிமுறைகளை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

- புகார் செய்ய வேண்டிய அலுவலர்களின் விவரங்களை அனைத்து நியாயவிலைக் கடைகளில் விளம்பரப்படுத்துதல், நுகர்வோர் குறைகள் களையப்படுவதை நுகர்வோர் சேவை மையம்மூலம் கண்காணித்தல் ஆகியவை நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. களப்பணியாளர்கள், பொதுமக்களுக்கு உரிய பயன்கள் அவர்களைச் சென்றடையும் வகையில் சிறப்பான சேவை புரியவும் நுகர்வோருடன் நல்லுறவு பேணவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- உணவுப் பாதுகாப்பிற்குத் தானியங்களை முறையாகப் பாதுகாப்பது அவசியமாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நவீன யுத்தியுடன் விஞ்ஞான முறையில் 6.41 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளைப் பராமரித்து வருகிறது. நடப்பாண்டில், 2.64 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகள் புதியதாகக் கட்டப்படவுள்ளன.

[2012 ஏப்ரல் 23

இயல்–1

பொது விநியோகத் திட்டம்

4. தமிழக அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு குடும்பங்கள் இம்மாநிலத்தில் வகைப்படுத்தப்படுவதில்லை என்பதால் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் பயன் பெறுகின்றன.

5. தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுவதுடன் மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழை மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் முகமாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியான அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசியை விலையின்றி வழங்க *01-06-2011* அன்று ஆணையிட்டார்கள்.

6. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் பரம ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து, அக்குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு *35* கிலோ அரிசி விலையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

7. மாநில அரசின் பொது விநியோகத் திட்டம் தொடர்பான உணவுக் கொள்கைகளைச் செயல்படுத்தும் செயலாக்கத் துறையாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயல்பட்டு வருகிறது. மேலும் இத்துறை அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்துவதுடன் இவற்றின் செயலாக்கத்தையும் கண்காணிக்கிறது.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பொருள்களை முறையே இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும், ஒப்பந்தப்புள்ளிகள்மூலமும், கொள்முதல் செய்கின்றது. நியாயவிலைக் கடைகள்மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் மேற்கொள்கின்றன.

2012 ஏப்ரல் 23]

9. இம்மாநிலத்தில் செயல்படும் *33,222* நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில் *31,232* நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், *1,394* நியாய விலைக் கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்கள் *596* நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன. இம்மாநிலத்தில் செயல்படும் *33,222* நியாய விலைக் கடைகளில் *25,049* கடைகள் முழுநேரக் கடைகளாகும். *8,173* கடைகள் பகுதிநேரக் கடைகளாகும்.

வ. எண்	நிறுவனம்	முழு நேரம்	பகுதி நேரம்	மொத்தம்
1	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்	*1269*	*125*	*1394*
2	கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படுபவை)	*23109*	*7967*	*31076*
3	இதரக் கூட்டுறவுச் சங்கங்கள்	*124*	*18*	*142*
4	மகளிர் நடத்தும் நியாய விலைக் கடைகள் (சுய உதவிக் குழுக்கள் நடத்தும் கடைகள் உட்பட)	*533*	*63*	*596*
5	கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நடமாடும் நியாய விலைக் கடைகள்	*14*	*0*	*14*
	மொத்தம்	***25049***	***8173***	***33222***

தமிழ்நாட்டில், தனியார் வணிகர் எவரும் நியாய விலைக் கடைகள் நடத்த அனுமதிக்கப்படவில்லை.

10. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழகத்திலிருந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்து மாநிலம் முழுவதும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள *226* கிடங்குகளில் சேமித்து வைக்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுயமாக அத்தியாவசியப் பொருள்களை எடுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து நியாய விலைக் கடைகளுக்கே

[2012 ஏப்ரல் 23

கொண்டு சென்று கடைகள் செயல்படும் இடத்தில் வழங்குகின்றன. இதேபோன்று சர்க்கரையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து எடுத்து அதன் கிடங்குகள்மூலம் நியாய விலைக் கடைகளுக்கு வழங்குகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை நியமிக்கப்பட்ட மத்திய அரசு நிறுவனங்களிலோ அல்லது ஒப்பந்தப்புள்ளிகள்மூலம் வெளிச்சந்தையிலோ கொள்முதல் செய்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் எண்ணெய் நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட மண்ணெண்ணெய்யை மொத்த வணிகர்களிடமிருந்து எடுத்து நியாய விலைக் கடைகள் மற்றும் சில்லறை மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கின்றன.

11. அத்தியாவசியப் பொருள்கள் கிடங்குகளிலிருந்து இயக்கம் செய்யப்படும்போது வழியில் கடத்தப்படுவதைத் தடுக்க முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்கள் அடங்கிய அட்டவணைப்படி அத்தியாவசியப் பொருள்கள் வாகனங்களில் இயக்கம் செய்யப்படுகின்றன. நியாய விலைக் கடைகளில் போதுமான அளவு அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு வைக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் நியாய விலைக் கடைகளின் தேவையைக் கணக்கிட்டு, மாதம் முடிவில் உள்ள அத்தியாவசியப் பொருள்களின் இறுதி இருப்பைக் கணக்கில் கொண்டு நியாய விலைக் கடைகளுக்கான அத்தியாவசியப் பொருள்கள் ஒதுக்கீடு நேரடி தடம் (online) முறையில் வழங்கப்படுகிறது. இதன்மூலம் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்படுவது உறுதி செய்யப்படுவதுடன், இருப்பு விவரமும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைகள்

12. தமிழகத்தில் குடும்ப அட்டைகள் விருப்பத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. அவை அரிசி அட்டைகள் (அரிசி மற்றும் இதர பொருட்கள்), அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைகள், சர்க்கரை அட்டைகள், (அரிசிக்குப் பதிலாக கூடுதல் சர்க்கரை மற்றும் இதர பொருட்கள்), எப்பொருளும்

2012 ஏப்ரல் 23]

வேண்டாதோர் குடும்ப அட்டைகள் (அடையாள ஆதாரமாக பயன்படுத்துவதற்கு) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. காவலர்களுக்கு பிரத்தியேக வண்ணத்தில் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	குடும்ப அட்டை வகை	தகுதியான அத்தியாவசியப் பொருள்கள்	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை
1.	அரிசி அட்டைகள்	எல்லாப் பொருள்களும்	1,67,21,538
2	வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்ட (அந்தியோதயா அன்னயோஜனா திட்ட) அட்டைகள்	எல்லாப் பொருள்களும்	18,62,615
	மொத்த அரிசி அட்டைகள்		1,85,84,153
3	சர்க்கரை அட்டைகள்	அரிசி தவிர இதர பொருள்கள்	10,76,552
4	காவலர் அட்டைகள்	எல்லாப் பொருள்களும்	61,061
5	எப்பொருளும் வேண்டாதோர் அட்டைகள்	எந்தப் பொருளும் இல்லை	60,827
	மொத்தம்		1,97,82,593

வறியவர்களில் வறியவர்களுக்கான உணவு வழங்கும் அந்தியோதயா அன்னயோஜனா திட்ட குடும்ப அட்டைகள் (AAY)

13. இம்மாநிலத்தில், அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைகளை வருமான அடிப்டையில் வகைப்படுத்தவில்லையெனினும், ஏழைகளில் மிகவும் ஏழைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உணவு வழங்கும் திட்ட (அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்) குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைகளின்படி, மத்திய

[2012 ஏப்ரல் 23

அரசால் வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் (அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்) செயல்படுத்தப்பட்டு, பின்னர் விரிவுபடுத்தப்பட்டது. வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்ட (அந்தியோதயா அன்னயோஜனா திட்ட) குடும்ப அட்டைகள் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ அரிசி பெற தகுதியானவை. வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்ட (அந்தியோதயா அன்னயோஜனா திட்ட) பயனாளிகளுக்கு அரிசியை ரூ.3/- என நிர்ணயிக்கப்பட்ட விலையில் மத்திய அரசு வழங்கினாலும், தமிழ்நாட்டில் மட்டுமே வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்ட (அந்தியோதயா அன்னயோஜனா திட்ட) குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி விலையின்றி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் வகையான நபர்கள்/குடும்பங்கள் பயன்பெறுகின்றனர்:-

- விதவைகள் குடும்பத் தலைவர்களாக உள்ள குடும்பங்கள், மனநிலை பாதிக்கப்பட்ட நபர்கள், மாற்றுத் திறனாளிகள், 60 வயதிற்கு மேற்பட்ட வருமானம் இல்லாத சமுதாயத்தின் உதவி கிடைக்காதவர்கள்.
- மலைவாழ் பழங்குடி இனத்தவர் குடும்பங்கள்.
- எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வீடற்ற நகர்ப்புறவாசிகள்.

திருநங்கையர்களுக்குக் குடும்ப அட்டைகள்

14. ஒரே வீட்டில் குழுவாக வசிக்கும் திருநங்கையர்களைக் குடும்பமாகக் கருதி, அவர்களுக்கும் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. 31-03-2012 வரை திருநங்கையர்களுக்கு 1,365 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

காவலர்களுக்குக் குடும்ப அட்டைகள்

15. 31-03-2012 வரை 61,061 காவலர் குடும்ப அட்டைகள் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. காவலர் குடும்ப அட்டைகளுக்கு கீழ்க்கண்ட அளவுப்படி மானிய விலையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன:-

2012 ஏப்ரல் 23]

வ எண்	அத்தியாவசியப் பொருள்கள்	குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் குறைந்தபட்ச அளவு	குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் அதிகபட்ச அளவு	விற்பனை விலை
1	அரிசி	5 கிலோ	20 கிலோ	விலையின்றி பொது விநியோக திட்ட
2	சர்க்கரை	½ கிலோ	2 கிலோ	விநியோக விலையில் 50 சதவிகிதம்
3	கோதுமை	½ கிலோ	2 கிலோ	"
4	பாமாயில்	¼ கிலோ	1 கிலோ	"
5	துவரம் பருப்பு	1 கிலோ	4 கிலோ	"
6	உளுத்தம் பருப்பு	1 கிலோ	4 கிலோ	"
7	மண்ணெண்ணெய்	பொது விநியோகத் திட்ட குடும்ப அட்டைகளுக்கு வழங்குவது போல்	பொது விநியோகத் திட்ட குடும்ப அட்டைகளுக்கு வழங்குவது போல்	பொது விநியோக திட்ட விநியோக விலையில்

குடும்ப அட்டை வழங்கும் நடைமுறைகள்:–

16. இம்மாநிலத்தில் குடும்ப அட்டைகள் வழங்குதற்கான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டை பெறுவதற்கான தகுதி விவரங்கள் வருமாறு:—

(i) விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் இந்திய குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

[2012 ஏப்ரல் 23

(ii) விண்ணப்பதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் தமிழகத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(iii) குடும்பத்திற்குத் தனியாகச் சமையலறை / சமையல் செய்வதற்கு வசதி இருக்க வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இந்தியாவில் எங்கும் குடும்ப அட்டை பெற்றிருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள் இந்தியாவின் வேறு எந்தவிதமான குடும்ப அட்டையிலும் இடம் பெற்றிருக்கக் கூடாது.

(v) விண்ணப்பதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் நெருங்கிய உறவினராக இருத்தல் வேண்டும்.

புதிய குடும்ப அட்டை மனுவுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

(i) மனுதாரர் முன்பு வசித்த இடத்தில் குடும்ப அட்டை பெற்றிருந்தால், அவர் அதனை ஒப்படைத்து குடும்ப அட்டை வழங்கும் அலுவலரிடம் ஒப்புவிப்புச் சான்றிதழ் பெறவேண்டும்.

(ii) மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர் வேறு எந்தக் குடும்ப அட்டையிலாவது இடம்பெற்றிருந்தால், அவர்கள் தங்கள் பெயர்களை நீக்கம் செய்யப்பட்டதற்கான சான்றிதழ்களை குடும்ப அட்டை வழங்கும் அலுவலரிடம் பெறவேண்டும்.

(iii) மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இதற்கு முன்பு குடும்ப அட்டை பெறவில்லை என்றாலோ அல்லது அவர்களது பெயர் வேறு குடும்ப அட்டை எதிலும் இடம்பெறவில்லை என்றாலோ, இதற்கு முன்பு வசித்த இடத்தில் குடும்ப அட்டை வழங்கப்படவில்லை / குடும்ப அட்டையில் பெயர் சேர்க்கப்படவில்லை என்பதற்கான சான்றிதழினை குடும்ப அட்டை வழங்கும் அலுவலரிடம் பெறவேண்டும்.

2012 ஏப்ரல் 23]

(iv) மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் மனுதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்தும் குடும்ப அட்டை பெறவில்லை என்றால், இருப்பிட ஆதாரங்களை அளித்து, குடும்ப அட்டை வழங்கும் அலுவலரிடம் குடும்ப அட்டை பெறவில்லை என்பதற்கான சான்று பெற்று, புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(v) புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் www.consumer.tn.gov.in இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து மனு செய்ய வேண்டும்.

(vi) தகுதியான குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகளை விரைந்து வழங்குவதை உறுதி செய்வதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

(vii) 01-06-2011 முதல் 31-03-2012 வரை 4,20,747 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தல்

17. குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை மேலும் ஓராண்டிற்கு, அதாவது 01-01-2012 முதல் 31-12-2012 வரை நீட்டிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது. குடும்ப அட்டைகளில் இருந்த கூடுதல் உள்தாளில் முத்திரையிட்டு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டன.

18. 01-01-2012 முதல் 28-02-2012 வரை நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. இவ்வாறு குடும்ப அட்டைகளைப் புதுப்பித்தபோது, முகவரி மாற்றம், நபர் சேர்ப்பு, நபர் நீக்கம், எரிவாயு உருளை விவரங்கள் குடும்ப அட்டைதாரர்களிடம் வாய்மொழியாக சேகரிக்கப்பட்டன. மேலும், உடல்நலம் குறைவு, வெளியூர் சென்றிருத்தல் போன்ற காரணங்களினால் நியாய விலைக் கடைகளுக்கு வரமுடியாதவர்கள், அவர்களது குடும்ப அட்டைகளை ஆன்லைன் முறையில் 01-03-2012 முதல் 31-03-2012 வரை புதுப்பித்துக் கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதில், 85,159 நபர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

[2012 ஏப்ரல் 23

19. நடப்பிலிருந்த 1,97,82,593 குடும்ப அட்டைகளில் இதுவரை, 1,93,03,509 குடும்ப அட்டைகள் நியாய விலைக் கடைகளில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 85,159 குடும்ப அட்டைதாரர்கள் நேரடி தடம் (online) முறையில் குடும்ப அட்டையைப் புதுப்பிப்பதற்கு பதிவு செய்தனர். இதில் 62,159 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. எஞ்சிய 23,000 பதிவுகள் பரிசீலனையில் உள்ளன. இன்னும் 4,16,925 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படவில்லை.

உடற்கூறு பதிவு முறையில் குடும்ப அட்டை வழங்குதல்

20. தற்போது உள்ள நடைமுறையில், ஒரே நபர் இருமுறை மற்றும் பலமுறை அவரது பெயரைக் குடும்ப அட்டைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்வதைக் கண்டுபிடித்து தடுக்க சரியான வழிமுறைகள் இல்லை. இத்தகைய பிரச்சினைகளைக்களைய, தற்போது நடப்பிலுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக உடற்கூறு பதிவு முறையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் தொகை பதிவு அமைப்பின் கீழ், கணக்கெடுப்பு செயல்பாட்டு இயக்குநர், மக்களின் 10 விரல் கைரேகைகள் மற்றும் கண்கருவிழியைப் பதிவு செய்து பிரத்யேக அடையாள எண் வழங்கும் கணக்கெடுப்பை நடத்தி வருகின்றனர். இந்த உடற்கூறு முறையிலான கணக்கெடுப்பு முடிவடைந்தவுடன், அந்தத் தகவல் தொகுப்பைப் பயன்படுத்தி மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் போலி குடும்ப அட்டைகளைக் களைய இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.703.21 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசினுடைய நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விநியோக அளவு

21. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விலையின்றி அரிசி விநியோகம் செய்யப்படுகின்றது. கோதுமை, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

2012 ஏப்ரல் 23]

வ எண்	அத்தியாவசியப் பொருள்	விற்பனை விலை (கிலோ/லிட்டர் (ஒன்றுக்கு)	விநியோக அளவு
1	அரிசி	விலையின்றி (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 16-2011 முதல்)	பெரியவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 4 கிலோ, சிறியவருக்கு மாதமொன்றுக்கு 2 கிலோ. குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 12 கிலோ, அதிகபட்சம் 20 கிலோ, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 16 கிலோ அதிகபட்சம் 24 கிலோ. ஏஏஓய் குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ.
2	சர்க்கரை	ரூ.13.50	நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 500 கிராம். குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 2 கிலோ. சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைக்கு அரிசிக்குப் பதிலாக கூடுதலாக மாதம் ஒன்றுக்கு 3 கிலோ.
3	கோதுமை	ரூ.7.50	சென்னை நகரம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ இதர பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ.

4	மண்ணெண்ணெய்	ரூ.13.60 முதல் ரூ.14.20 வரை	குடும்ப அட்டைகளின் இருப்பிடம் மற்றும் எரிவாயு இணைப்பு பெற்றிருப்பதைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 3 லிட்டரிலிருந்து 15 லிட்டர் வரை.
5	துவரம் பருப்பு	ரூ.30	குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ.
6	உளுத்தம் பருப்பு	ரூ.30	குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ.
7	பாமாயில்	ரூ.25	குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 லிட்டர்.

22. பொது விநியோகம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருள்களை மானிய விலையில் வழங்குவதன்மூலம் ஒரு குடும்ப அட்டை மூலம், ஒரு குடும்பத்திற்கு மாதம் ரூ.291.09 அரசு மானியமாக வழங்குகிறது.

(அ) அரிசி

23. அரிசி பெற விருப்பம் தெரிவித்த குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது. 01-06-2011 முதல் அரிசி விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

24. தற்போதைய மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் விற்பனை விலை விவரம்:—

2012 ஏப்ரல் 23]

வ. எண்	வகை	மாதாந்திர ஒதுக்கீடு (மெ. டன்னில்)	இந்திய உணவுக் கழகத்தின் விற்பனை விலை (கிலோ ஒன்றுக்கு)
1	அந்தியோதயா அன்னயோஜனா	65,262	ரூ. 3.00
2	வறுமைக்கோட்டிற்குக்கீழ்	1,04,936	ரூ. 5.65
3	வறுமைக்கோட்டிற்கு மேல்	1,26,255	ரூ. 8.30

மத்திய அரசு வழங்கும் வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் (அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்), வறுமைக் கோட்டிற்குக்கீழ் மற்றும் வறுமைக்கோட்டிற்குமேல் ஆகியவற்றிற்கான ஒதுக்கீட்டு ஆணை மாநில அரசு முழுமையாக எடுத்துப் பயன்படுத்துகிறது.

25. மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் வறியவர்களில் வறியவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் (அந்தியோதயா அன்னயோஜனா) உட்பட இதர நலத் திட்டங்களுக்கு மாதாந்திர அரிசி தேவை 3.82 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். தற்போதைய பொது விநியோகத் திட்ட மாதாந்திர அரிசி நுகர்வு 3.14 இலட்சம் மெட்ரிக் டன்களாக உள்ளது. மத்திய அரசின் மாதாந்திர அரிசி ஒதுக்கீடு 2.96 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். மத்திய அரசு ஒதுக்கீடு மற்றும் பொது விநியோகத் திட்ட மாதாந்திர அரிசி தேவை ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடான 18,000 மெட்ரிக் டன்கள் அரிசி, மத்திய அரசு வழங்கி வரும் இடைக்கால நிவாரண ஒதுக்கீட்டிலிருந்து ஈடுசெய்யப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மூன்று மாத அரிசித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், 11.30 இலட்சம் மெட்ரிக் டன்கள் அரிசி உபரி கையிருப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

26. மாணவர் விடுதிகள், முதியோர் இல்லங்கள், மறுவாழ்வு மையங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றிற்கு மொத்த அனுமதிகள்மூலம் அரிசி கிலோ ரூ.1/- என்ற விலையில் வழங்கப்படுகிறது. மேலும், சர்க்கரை மற்றும் கோதுமை மொத்த அனுமதிதாரர்களுக்கு பொது விநியோகத் திட்ட விலையில் வழங்கப்படுகின்றன.

[2012 ஏப்ரல் 23

ரமலான் மாதத்தில் சிறுபான்மையினருக்கு அரிசி வழங்குதல்

27. ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு மசூதிகளுக்கு அரிசி வழங்குவதற்காகச் சிறப்பு ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

(ஆ) கோதுமை

28. தமிழ்நாட்டிற்கு ஏப்ரல் 2012 முதல் மார்ச் 2013 வரை மாதம் ஒன்றுக்கு குறியிலக்குடன் கூடிய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 13,783 மெட்ரிக் டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இந்த கோதுமை அளவு அந்தியோதயா அன்னயோஜனா / வறுமைக்கோட்டிற்குக்கீழ் / வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள தகுதி வாய்ந்த நபர்களுக்கு வழங்குவதற்காக வழங்கப்பட்டது. மேலும் மத்திய அரசு இம்மாநிலத்திற்குக் குறியிலக்குடன்கூடிய பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு வழங்குவதற்காக கிலோ ரூ.8.45 என்ற விலையில் 34,890 மெட்ரிக் டன்கள் கோதுமை சிறப்புக் கூடுதல் ஒதுக்கீடாகச் செய்தது. மாவட்டத் தலைநகரங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ என்ற நிலையிலும், இதர பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ என்ற நிலையிலும் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது.

(இ) சர்க்கரை

29. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகள் ஒவ்வொரு மாதமும் வழங்க வேண்டிய லெவி சர்க்கரை அளவைக் குறிப்பிட்டு, மாதாந்திர சர்க்கரை ஒதுக்கீட்டை மத்திய அரசு இம்மாநிலத்திற்கு வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் ஒதுக்கீடு மாவட்டங்களுக்கு உப ஒதுக்கீடாக செய்யப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரையை எடுக்கிறது. மத்திய அரசின் மாதாந்திர சராசரி லெவி சர்க்கரை ஒதுக்கீடு 10,833.5 மெட்ரிக் டன்களாகும். ஆனால், மத்திய அரசின் இந்த மாதாந்திர சர்க்கரை ஒதுக்கீடு அட்டைதாரர்களின் முழு தேவைக்குப் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், லெவி அல்லாத சர்க்கரையை வெளிச்சந்தையில் கொள்முதல் செய்கிறது.

2012 ஏப்ரல் 23]

குடும்ப அட்டைதாரர்களுக்கு மாத சராசரியாக (ஏப்ரல் 2011 முதல் ஜனவரி 2012 வரை) விநியோகம் செய்யப்படும் ஒரு மாதத்திற்கான சர்க்கரை அளவு 35,133 மெட்ரிக் டன்களாகும். சமீப காலமாக வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை உயர்ந்துள்ளதைத் தொடர்ந்து, குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் சர்க்கரையை வாங்குவதால், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரையின் நுகர்வும் உயர்ந்து வருகிறது. வெளிச்சந்தையில் கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் விலைக்கும், பொது விநியோகத் திட்ட சர்க்கரையின் விற்பனை விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகையை அரசு உணவு மானியத்திலிருந்து ஈடுசெய்கிறது. லெவி அல்லாத சர்க்கரையை வெளிச்சந்தையில் வாங்குவதற்கு ரூ.538.00 கோடி தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

(ஈ) மண்ணெண்ணெய்

30. ஏப்ரல் 2011 மாதத்தில் 52,806 கிலோ லிட்டராக இருந்த மத்திய அரசின் மாதாந்திர பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, ஏப்ரல் 2012 மாதத்தில் 39,429 கிலோ லிட்டராகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு குறைக்கப்பட்ட மத்திய அரசின் மாதாந்திர மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மாநிலத்தின் பொது விநியோகத் திட்டத்தின் மாதாந்திர தேவையான 65,140 கிலோ லிட்டரில் 60.53 சதவீதம் ஆகும். எனினும், குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையாக மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் கிடைக்காத குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய டோக்கன் பெற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு அடுத்த மாதம் முன்னுரிமை அடிப்படையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. எரிவாயு இணைப்பு விவரங்களை குடும்ப அட்டைகளில் முத்திரையிடும் பணி விரைவுபடுத்தப்பட்டு, இதன்மூலம் ஏற்பட்ட 1,560 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் சேமிப்பினைக் கொண்டு தகுதியான குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

31. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் ஒரு உருளை எரிவாயு

[2012 ஏப்ரல் 23

இணைப்பு வைத்துள்ள குடும்ப அட்டைதாரர்கள் ஆகியோருக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு, மாதம் 3 லிட்டரிலிருந்து 15 லிட்டர் வரை வழங்கப்படுகிறது. ஒரு உருளை எரிவாயு இணைப்பு வைத்துள்ள குடும்ப அட்டைதாரருக்கு அவர்கள் எந்தப் பகுதியில் வசித்தாலும், மாதம் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. எண்ணெய் நிறுவனங்களின் முனையங்கள் உள்ள தூரத்தை அடிப்படையாகக் கொண்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் சில்லறை விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.13.60-லிருந்து ரூ.14.20 வரை உள்ளது.

மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைத்தல்

32. மண்ணெண்ணெய் விநியோகத்தினை முறைப்படுத்த சில்லறை மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் 5,000 முதல் 15,000 வரை குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்கிறது. மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதால், மாதம் முழுவதற்கும் தேவையான இருப்பு மற்றும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சரியான அளவில் மண்ணெண்ணெய் வழங்குவது உறுதி செய்யப்படுகிறது. தற்போது 312 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 269 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுத் துறையின் கீழும், 43 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழும் இயங்கி வருகின்றன. அனைத்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களுக்கும் கையடக்க மின்னணு ரசீதிடும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

33. சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சிறப்புப் பொது விநியோக திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்படும் பொருள்களின் விலை மற்றும் அவற்றிற்கு வழங்கப்படும் மானிய விவரம்:—

2012 ஏப்ரல் 23]

வ எண்	அத்தியாவசியப் பொருள்	வழங்கல் அளவு (குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதமொன்றுக்கு)	விலை ரூ.	மாநில அரசின் மானியம் ஆண்டொன்றுக்கு (ரூபாய் கோடியில்)
1	துவரம் பருப்பு	1 கிலோ	30	314.04
2	உளுத்தம் பருப்பு	1 கிலோ	30	251.81
3	செறிவூட்டப்பட்ட பாமாயில்	1 லிட்டர்	25	449.20

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தை 31-03-2012-க்குப் பிறகும் நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் கையடக்க மின்னணு பட்டியல் இயந்திரம் வழங்குதல்

34. சென்னை நகரில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு கையடக்க மின்னணு பட்டியல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. படிப்படியாக மாவட்டங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு கையடக்க மின்னணு பட்டியல் இயந்திரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உணவு மானியம்

35. பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் ஆகியவற்றின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்வதற்காக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் மானிய செலவின விவரம்:—

பொருள்கள் விவரம்	உணவு மானியம் (ரூ. கோடியில்)
அரிசி	3266.78
சர்க்கரை (லெவி அல்லாத)	538.00
மண்ணெண்ணெய்	42.00
சிறப்புப் பொது விநியோகத் திட்டம்*	1053.22
மொத்தம்	4900.00

*பிற பொருட்கள் உட்பட புகார்கள் மீது தீர்வு

[2012 ஏப்ரல் 23

36. பொது விநியோகத் திட்டம் தொடர்பான புகார்களை தீர்வு செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது.

- மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், அரசுச் செயலாளர், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையம் மற்றும் இதர களப்பணி அலுவலர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி எண்கள் ஆகியவை நியாய விலைக் கடைகளில் அனைவருக்கும் தெரியும் வண்ணம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

- உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் நுகர்வோர் வாங்கும் பொருள்கள் மற்றும் சேவைகள் குறித்து புகார்களை பதிவு செய்வதற்கு 044—28592828 என்ற தொலைபேசி எண் மற்றும் consumer@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மற்றும் 7 செல்லிடத் தொலைபேசிகள் ஆகியவற்றுடன், மாநில நுகர்வோர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது 01-06-2011 முதல் 31-03-2012 வரை பெறப்பட்ட 1,08,009 புகார்களில், 106,974 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 1,035 புகார்களைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனை குழுக்கள் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள், பொது விநியோகத் திட்டம் முறையாகச் செயல்படுவதைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளன. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கும், மேற்கண்ட ஆலோசனைக் குழுக்களில் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆணையாளர் தலைமையில் பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது.

2012 ஏப்ரல் 23]

பொது விநியோகத் திட்டத்தினைக் கணினிமயமாக்கல்

- தேசிய தகவல் மையத்தின் (National Informatics Centre) உதவியுடன் வடிவமைக்கப்பட்ட ஆன்லைன் முறையில் அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு செய்வதற்கான மென்பொருள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் வட்ட வழங்கல் அலுவலர்கள்/உதவி ஆணையாளர்கள் நியாய விலை அங்காடி வாரியாக அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு வழங்குவதற்கு ஒரே சீரான நடைமுறையைக் கடைப்பிடிக்க முடிகிறது. இந்த நடைமுறையின்மூலம் அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீட்டில் ஒளிவுமறைவற்ற நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதுடன், ஒதுக்கீடும் கண்காணிக்கப்படுகிறது. அவ்வப்போது உள்ள விதிமுறைகளின் அடிப்படையிலான தேவைக்கேற்ப இந்த மென்பொருள் மேம்படுத்தப்படுகிறது.

- பொது விநியோகத் திட்டம் குறித்த நுகர்வோர் புகார்/ஆலோசனைகளை ஆன்லைன் முறையில் தெரிவிப்பதற்கு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் www.consumer.tn.gov.in இணையதளத்தில் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், ஒரு குடும்ப அட்டைதாரர் அவரது மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து, ஒரு குறிப்பிட்ட நியாய விலைக் கடையின் ஒதுக்கீடு ஆணை கோரி பதிவு செய்தால், அந்த நியாயவிலைக் கடைக்கான அத்தியாவசியப் பொருட்கள் ஒதுக்கீடு விவரங்கள் மின்னஞ்சல் மூலம் அவருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

- சென்னை மாநகரில் செயல்படும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் மின்னணுப் பட்டியல் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒவ்வொரு கடையிலும் நடைபெறும் விற்பனை மற்றும் கடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றைக் கண்காணிக்க முடிகிறது. இத்திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 23

- திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் ஜி.பி.எஸ். உபகரணத்தைப் பொருத்தி நகர்வினைக் கண்காணிக்கும் திட்டம் பரீட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் அத்தியாவசியப் பொருள்கள் நகர்வின் போது கடத்தப்படுவது தடுக்கப்படுகிறது. இதனைப் படிப்படியாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் நடைபெறும் அனைத்துப் பரிவர்த்தனைகளும் "ஆன்லைன் கிடங்கு கண்காணிக்கும் முறை" மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டம் 226 கிடங்குகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- போலிக் குடும்ப அட்டைகள், போலிப் பட்டியல்கள் மற்றும் இத்தகைய முறைகேடுகளை முற்றிலுமாகக் களைய பொது விநியோகத் திட்டத்தினை முழுவதுமாக கணினிமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது நடப்பில் உள்ள குடும்ப அட்டைகளைப் புதிதாக வழங்குதல் ஆகியவற்றிற்குப் பதிலாக உடற்கூறு பதிவுகளின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகள் வழங்குதல், குடும்ப அட்டைகளில் மாற்றங்களைப் பதிவு செய்தல் ஆகியவற்றை இத்திட்டம் எளிமைப்படுத்துவதுடன், மக்களுக்குச் சிறந்த சேவை அளிப்பதாக அமையும். மேலும் இத்திட்டம் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் இயக்கம் மற்றும் விநியோகத்தைக் கண்காணிக்க உதவுகிறது. இந்திய குடிமக்களின் உடற்கூறு பதிவு விவரங்களை தேசிய மக்கள் தொகை பதிவு அமைப்பு கணக்கெடுப்புக்குப்பின் பெற்று, அதன் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிடையில் தேசிய மக்கள் தொகை பதிவு அமைப்பிடமிருந்து உடற்கூறு தகவல் தொகுப்பு பெறப்படுவதை எதிர்நோக்கி, நடப்பில் உள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலம் 31-12-2012 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 23]

போலிக் குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து களைதல்

37. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கட்டுப்பாட்டில் பணிபுரியும் உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட்டு, போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து களைய வேண்டுமென உத்தரவிட்டார்கள். இந்த அறிவுரைகளைப் பின்பற்றி, போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து களைய உடனடி நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். போலி குடும்ப அட்டைகள் களையும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 31.03.2012 வரை 27,349 குடும்ப அட்டைகள், 'போலி' எனக் கண்டறியப்பட்டு, இரத்து செய்யப்பட்டுள்ளன.

இயல்–2

பொது விநியோகத் திட்டத்தின் செயலாக்கம்

38 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பெரும் மானியத்துடன் குறைந்த விலையில் வழங்கப்படுவதால், அதனை சமூக விரோதிகள் கடத்தி கள்ளச் சந்தையில் விற்க முயலுகின்றனர். எனவே, இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தர வேண்டியது அவசியமாகிறது.

39 பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தலுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, முதுநிலை அதிகாரியான ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவிகரமாக ஒரு காவல் துறைத் தலைவர் பணியில் உள்ளார். குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, மாநில அளவில் 21 அலகுகளைக் கொண்டு, 305 காவல் பணியாளர்களுடன் செயல்படுகிறது. 2012 ஜனவரியில், பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகு, அண்டை மாநிலங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படாமல் தடுக்கும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, காவல் அலுவலர்களைக் கொண்ட சிறப்புச் சுற்றுக் காவல் படைகள் (Special Patrol Teams) கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய ஐந்து எல்லையோர மாவட்டங்களில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோதக் கடத்தல்களைத் தடுக்கும் வண்ணம் திரு சோதனைகளும், ஆய்வுகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன. கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955-ன்கீழ், பொது விநியோகப் பொருட்களைக் கடத்துபவர்கள்மீது தடுப்புக் காவல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் இப்பிரிவால் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் இதர பொருட்கள் கடத்தப்படுவது குறித்த தேவையான புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதிலும் கவனம் செலுத்தி வருகிறது. அனைத்து குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலகுகளுக்கும் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது.

40. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் செயலாக்கப்பணி மேற்கொள்ளப்படுகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையருக்கு, பொது விநியோகத் திட்டச் செயலாக்கப் பணிகளை நிறைவேற்ற, மாநில அளவில் ஓர் உதவி ஆணையர் (ஆய்வு) மற்றும் பறக்கும் படை கண்காணிப்பாளர்கள் உதவிகரமாக உள்ளனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர். சென்னையைப் பொறுத்தவரை, துணை ஆணையர் (வடக்கு) மற்றும் துணை ஆணையர் (தெற்கு) ஆகியோர் செயலாக்கப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும், பொது விநியோகத் திட்டச் செயலாக்கத்தைக் கண்காணிப்பதிலும், அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதிலும், பறக்கும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

41. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நிருவாக இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள விழிப்புப் பணி அலுவலர் தலைமையிலான அலுவலர்கள் குழு, இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக்

2012 ஏப்ரல் 23]

கிடங்குகளுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து, அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்படும்போது, அவை கடத்தப்படாமல் கண்காணிப்பதற்காகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக விழிப்புப் பணிக் குழு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலும், அரவை முகவர்களால் நடத்தப்படும் நெல் அரவை ஆலைகளிலும் மற்றும் நியாய விலைக் கடைகளிலும் திடீர் சோதனைகள் நடத்தி, தேவை ஏற்படின் தவறிழைப்பவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்கிறது.

42 ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழும், மாவட்ட மற்றும் கோட்ட அளவில், பொது மக்களின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டப் பொருட்களின் விநியோகம் முறையாகக் கண்காணிக்கப்படுகிறது. சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் அன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் நியாய விலைக் கடைகளின் கணக்குகள் சமூக தணிக்கைக்குச் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

43. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் செயல்படும் பறக்கும் படைகள் சிறப்பான பணியை வெளிப்படுத்தும் வண்ணம் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கவும், சோதனைகளை முறைப்படுத்தவும், அனைத்து பறக்கும் படை வட்டாட்சியர்களுக்கும் மாதம் ரூ.800/- அளவுக்கு உபயோகிக்கும் வகையில் செல்லிடத் தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர்களுக்கும், அவர்களுடைய பணியை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, செல்லிடத் தொலைபேசி வழங்கப்பட்டுள்ளது. பறக்கும் படைகளின் செயல்பாடு முறையாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, கூடுதலாக பின்வரும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன:—

(அ) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலர்களை ஒருங்கிணைத்து,

[2012 ஏப்ரல் 23

மாநில அளவில், சிறப்புச் செயலாக்கக் குழுக்கள் அமைத்து, திடீர் சோதனைகள் திறம்பட நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு ஏதுவாக, சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் தொலைபேசி எண்கள், பத்திரிகைகள், ஊடகங்கள் மற்றும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) பதுக்கல் மற்றும் கடத்தலில் ஈடுபடும் அத்தியாவசியப் பொருட்களைக் கைப்பற்றும் வகையில் தகவல் தரும் நபருக்கு ரூ.1000/- வீதமும், போலி குடும்ப அட்டைகளைக் கைப்பற்றுதல் மற்றும் இரத்து செய்தல் தொடர்பான தகவல் தரும் நபருக்கு ரூ.250/- வீதமும் வெகுமதி அளிக்கப்படுகிறது.

(ஈ) பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் அனுமதியை இரத்து செய்யவும், ஓட்டுநர்களின் உரிமங்களை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) மானியத்துடன்கூடிய வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு உருளைகளைக் கள்ளச் சந்தையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் வண்ணம் சிறப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஊ) இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, குறிப்பாக அண்டை மாநிலங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் தீவிர, சிறப்புச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அரிசிக் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களும், கடத்தல் அரிசியும் கைப்பற்றப்பட்டு, குற்றவாளிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன.

2012 ஏப்ரல் 23]

இத்தகைய நடவடிக்கைகள், இன்றியமையாப் பண்டங்களைக் கடத்த முற்படும் சமூக விரோதிகளின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

(எ) முறைகேடாகப் பொது விநியோகத் திட்ட அரிசியைப் பெற்று, அவற்றை அரைவை செய்த அரிசி போல் மறு சுழற்சி செய்த சில தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல் அரைவை முகவர்களின் உரிமங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், 28 முகவர்கள் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அரிசி அரைவை முகவர்களது செயல்பாடுகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, முறைகேடுகளில் ஈடுபடும் முகவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குடிமைப் பொருள் வழங்கல் துறையின் அமலாக்கப் பணி

01-06-2011 முதல் 31-03-2012 வரையிலான செயல்பாடுகள் பின்வருமாறு:—

விவரம்	அளவு
கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள்	24,733
கைது செய்யப்பட்டவர்கள்	3,792
கைப்பற்றப்பட்ட வாகனங்கள்	1,372

கைப்பற்றுகை செய்யப்பட்ட பொருட்கள் விவரம்

பொது விநியோகத் திட்ட அரிசி (குவிண்டால்)	52,489
பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய்	1,97,868
டீசல் (லிட்டர்)	697
பெட்ரோல் (லிட்டர்)	1,179
சமையல் எரிவாயு உருளை (எண்ணிக்கை)	11,890
கள்ளச் சந்தைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள்	193

[2012 ஏப்ரல் 23

இயல்–3

நுகர்வோர் பாதுகாப்பு

44. நுகர்வோர்களுக்கு உரிய விலையில் பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு நுகர்வோர் பாதுகாப்பிற்கு இத்துறை முன்னுரிமை அளித்துள்ளது.

தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் (TANSSCOPE)

45. பல்வேறு நுகர்வோர் நல நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக, மாநில அளவில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவல்—வழித் தலைவராக செயல்படக்கூடிய வகையில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் மற்றும் அதிகாரச் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் அரசு மற்றும் அரசு சாரா உறுப்பினர்களை நியமித்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு உண்டாக்கும் நடவடிக்கைகளுக்காக சர்வதேச மற்றும் தேசிய முகமைகளிடமிருந்தும், இந்திய அரசு மற்றும் மாநில அரசிடமிருந்தும் நிதி ஆதாரத்தைப் பெருக்கிட இவ்வமைப்பிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில நுகர்வோர் சேவை மையம், நுகர்வோர் ஆலோசனை மையம் ஆகியவை நடத்தி வருதல், தமிழ்நாடு நுகர்வோர் கவசம் எனும் மாத இதழ் வெளியிடுதல், பயிற்சித் திட்டங்கள், கருத்துப் பட்டறைகள் நடத்துதல் போன்றவற்றை இச்சங்கம் நடத்தி வருகிறது. இந்திய செய்தித்தாள் பதிவாளர் அமைப்பில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ள நுகர்வோர் கவசம் மாத வெளியீடு ரூ.10/- என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இம்மாத வெளியீடு 8,500 சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது.

நுகர்வோர் விழிப்புணர்வுத் திட்டங்கள்

மத்திய அரசு மானியத்துடன் மாநிலத்தில் கீழ்க்காணும் நுகர்வோர் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாநில நுகர்வோர் உதவி மையம்

46. இந்திய அரசின் ஆலோசனையுடன் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர்

2012 ஏப்ரல் 23]

அலுவலகத்தில் நிறுவப்பட்ட மாநில நுகர்வோர் உதவி மையம் எனும் அமைப்பு செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் செயல்பாடு மற்றும் ஆன்லைன் வசதிக்காக இதுவரை ரூ.61,68,232 மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இம்மையம் நுகர்வோர் பிரச்சினைகளுக்கு சம்பந்தப் பட்ட விற்பனையாளர் / சேவையாளரைத் தொடர்பு கொண்டு குறைகளைக் களைவதற்கும் மற்றும் பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்கும் உரிய ஆலோசனை வழங்குதல் உள்ளிட்ட பணிகளை ஆற்றுகிறது.

தொலை பேசி எண்	மின்னஞ்சல் முகவரி	ஆன்லைன் பதிவு சேவை இணைய தள முகவரி
044-2859 2828	schtamilnadu@gmail.com consumer@tn.gov.in sch@tn.gov.in	www.consumer.tn.gov.in

விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

47. மைய அரசிடமிருந்து மானியமாக ரூ.40 இலட்சம் பெற்று, பொது மக்களிடையே குறிப்பாக ஊரக மற்றும் கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், மாத வெளியீடுகள், இரயில் / பேருந்துகளில் விளம்பர வாசகங்கள், சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பலகைகள் உள்ளிட்ட மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக நுகர்வோர் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ள சிறப்பு நடவடிக்கைகளைத் துறை எடுத்து வருகின்றது.

புகார் பிரிவு

48. மாநில நுகர்வோர் சேவை மையத்தின் சேவையினை விரிவுபடுத்தும் வகையில், பொது விநியோகத் திட்டம் தொடர்பாகப் பெறப்படும் புகார்களை உடனுக்குடன் தீர்வு செய்ய புகார் பிரிவு 15-12-2011-ல் துவங்கி செயல்பட்டு வருகின்றது. இந்தப் புகார் பிரிவில் பெறப்படும் குறுஞ்செய்திகள் உடனடியாக சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது. பொது மக்கள் இந்தப் புகார் பிரிவினைத் தொடர்பு கொண்டு விவரங்கள் பெறவும், சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2012 ஏப்ரல் 23

இந்தப் புகார் பிரிவு கீழ்க்கண்ட செல்லிடத் தொலைபேசி எண்களுடன் செயல்பட்டு வருகின்றது:—

வ. எண்	குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய செல்லிடத் தொலைபேசி எண்கள்	இணைப்பு தொலைபேசி எண்கள்
1	94 4546 4748	044-28 59 28 28
2	72 9999 8002	72 9900 8002
3	86 8001 8002	86 8002 8003
4	72 0001 8001	72 0004 8002

சமரச மையம்

49. குறைகளைத் தீர்க்க "சமரச மையம்" எனும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. குறைதீர் மன்றங்களில் பதிவு செய்யாமலேயே உள்ள வழக்குகளுக்கும், நிலுவையிலுள்ள வழக்குகளுக்கும் நுகர்வோர்கள், சமரச மையத்தின் மூலமாக குறை நிவர்த்தி பெறலாம். தற்போது சென்னை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் வழக்குகளையும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் வழக்குகளையும் சமரச மையம் கையாண்டு நுகர்வோர்கள் மற்றும் நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் பளுவைக் குறைக்கிறது.

இயல்–4

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

50. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், சேமித்தல், மேற்படி பொருட்களை பொது விநியோகத் திட்டம், சத்துணவுத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்கு வழங்கும் சேவையில் 40 ஆண்டுக் காலமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. மேலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சந்தைகளிலிருந்து பொருட்களைக் கொள்முதல் செய்து மக்களுக்குத் தேவையான சமயங்களில் நியாயமான விலைக்கு வழங்கி வருகிறது. இந்நிறுவனம் அரசின் தற்போதைய சிறப்புத் திட்டமான மின்விசிறி (Fan), கலந்தரைக்கும் இயந்திரம் (Mixie),

2012 ஏப்ரல் 23]

மின் உரல் (Grinder) மற்றும் மின்காந்த அடுப்பு (Induction Stove) வழங்கும் திட்டத்திற்குப் பொருட்களைக் கொள்முதல் செய்கிறது.

செயல்பாடு

51. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவற்றைப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயம் செய்த விலையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. மேற்கூறிய செயல்பாடுகளைத் தவிர, இக்கழகம் மைய அரசின் மத்தியத் தொகுப்பில் இருந்து பொது விநியோகத் திட்டத்திற்கென ஒதுக்கப்படும் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகிய அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகிறது.

இக்கழகத்தால் நடத்தப்படும்

(அ) மொத்தமுள்ள 369 கிடங்குகளில், 226 பொருட்களை வழங்கும் இயக்கக் கிடங்குகளும், பொருட்களை சேமிக்கும் 143 கிடங்குகளும் அடங்கும். 226 இயக்கக் கிடங்குகளில், 182 சொந்தக் கிடங்குகள் மற்றும் 44 வாடகைக் கிடங்குகளாகும்.

(ஆ) 37 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மற்றும் 3 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்.

(இ) 26 மண்டலங்களில் செயல்படும் 1,394 நியாயவிலைக் கடைகள்.

(ஈ) 4 மாவட்டங்களில் (திருச்சி, திருவண்ணாமலை, நீலகிரி மற்றும் இராமநாதபுரம்) செயல்படும் 5 சமையல் எரிவாயு விநியோக முகமைகள். 22 அமுதம் பல்பொருள் அங்காடிகள் (சென்னை மற்றும் கடலூர்)

நெல் கொள்முதல்

52. 2002-2003 கரீப் கொள்முதல் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசின் அதிகாரபூர்வ முகவராக பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ்

[2012 ஏப்ரல் 23

1-10-2002 முதல் நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த கரீப் பருவம் 2010-2011-ல், 1,503 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் மொத்தம் 23.10 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு கரீப் (2011-2012) கொள்முதல் பருவத்தில், மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் தமிழக அரசால் விவசாயிகளுக்கு வழங்கப் படும் ஊக்கத்தொகை ஆகிய விவரங்கள் வருமாறு:—

குவிண்டால் ஒன்றுக்கு ரூபாயில்

ரகம்	குறைந்தபட்ச ஆதார விலை ஒரு குவிண்டாலுக்கு	மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகை 1-10-10 முதல்	மொத்தம்	கொள்முதல் செய்யப்பட்ட அளவு (டன்னில்) 31-3-2012
	ரூ.	ரூ.	ரூ.	
சாதாரண ரகம்	1,080/-	50/-	1,130/-	8,60,963
சன்ன ரகம்	1,110/-	70/-	1,180/-	12,49,186

53. 2011-2012 கரீப் கொள்முதல் பருவத்தில், அதிகபட்சமாக 1,621 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 31-03-2012 வரையில், 21.10 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த கரீப் பருவத்திற்கு 26 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெல் அரைவை

54. மத்திய அரசின் சார்பில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் 430 தனியார் அரைவை முகவர்களின் அரிசி ஆலைகளில் அரைத்து அரிசியாக்கப்படுகிறது. மேற்கண்டவாறு பெறப்படும் அரிசி, மைய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசித் தொகுப்பில் ஈடுசெய்யப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகிறது. இதற்கான முன் மானியம் பொருளாதார விலை அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

2012 ஏப்ரல் 23]

கிடங்குகள் / நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுமானம்

(அ) 11.08 இலட்சம் மெ. டன் கொள்ளளவு கொண்ட 369 கிடங்குகளில், 6.64 இலட்சம் மெ. டன் கொள்ளளவு கொண்ட 214 கிடங்குகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமானவை. மீதமுள்ள கிடங்குகள் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் / மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தேவைக்கேற்ப தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து பயன்படுத்தப்படுகிறது. மேலும் கிடங்குகளின் கொள்ளளவினை விரிவுபடுத்தும் விதமாக, விஞ்ஞான முறையில் வடசென்னையில் ஒரு கிடங்கும், காஞ்சிபுரம் மாவட்டம், மங்களம் கிராமத்தில் ஒரு கிடங்கும் ரூ.1.10 கோடி செலவில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசால் 1,15,000 மெ. டன்கள் கொள்ளளவு கொண்ட கூடுதல் கிடங்குகளை ரூபாய் 50 கோடியில் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

(ஆ) 1621 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், 250 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 1,371 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தனியார் மற்றும் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 10 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் தடப்பாண்டில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவீன அரிசி ஆலைகள்

55. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 23 நவீன அரிசி ஆலைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் சராசரி அரைவைத் திறன் மாதம் ஒன்றுக்கு 47,000 மெ. டன் ஆகும். இந்நிறுவனத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலைகளுக்குக் கொள்முதல் செய்யப்படும் நெல் அரைவைக்காக முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. மேற்படி 23 நவீன அரிசி ஆலைகளில், 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

[2012 ஏப்ரல் 23

அமுதம் பல்பொருள் விற்பனை அங்காடிகள்

56. அத்தியாவசியப் பொருட்கள் மட்டுமின்றி, பங்கீட்டிற்குட்படாத பொருட்களின் விலையையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமென்ற தமிழக அரசின் கொள்கை முடிவின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அமுதம் பல்பொருள் அங்காடி என்ற பெயரில் பங்கீட்டிற்குட்படாத பொருட்களை விற்பனை செய்யும் அங்காடிகளை 1976 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. தற்போது 22 அமுதம் பல்பொருள் அங்காடிகள் இரண்டு மண்டலங்களில் அதாவது சென்னையில் 19-ம், கடலூரில் 3-ம் ஆக செயல்பட்டு வருகின்றன.

சிமெண்ட்

57. வெளிச்சந்தையில் விற்கப்படும் சிமென்டின் விலையைக் கட்டுப்படுத்தும் விதமாக வீடு பழுதுபார்க்க 50 மூட்டைகளும், வீடு கட்டுவதற்காக (1000 சதுரடிக்கு மேல் மிகாமல்) 400 மூட்டைகளும் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு 1 மூட்டை (50 கிலோ) ரூ.200/- வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

விலையில்லா மின் விசிறி, கலந்தரைக்கும் இயந்திரம் மற்றும் மின் உரல் விநியோகம்

58. தமிழக அரசின் அறிவிப்பின்படி, இக்கழகத்தின்மூலம் மின் விசிறிகள், கலந்தரைக்கும் இயந்திரம் மற்றும் மின் உரல் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைகளைக் கொண்ட மகளிர், இத்திட்டத்தின்மூலம் படிப்படியாக பயன்பெறுவார்கள்.

59. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச் சட்டம், 1998-ன்கீழ் மேற்படி பொருட்களைக் கொள்முதல் செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது.

நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்

60. நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் கீழ்க்கண்ட முறையில் வழங்கப்பட்டு வருகிறது:

(அ) முந்தைய மாதத்தின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் 60 சதவீதப் பொருள்கள் 25-ம் தேதியிலிருந்து 31-ம் தேதிக்குள் முன் நகர்வு செய்யப்பட்டு வருகிறது.

2012 ஏப்ரல் 23]

(ஆ) ஒதுக்கீட்டு ஆணை கிடைக்கப் பெற்றவுடன் மீதம் உள்ள 40 சதவீத பொருட்கள் நகர்வு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் 20-ஆம் தேதிக்குள் அந்த மாதத்திற்குரிய அத்தியாவசியப் பொருள்களின் நகர்வு முடிக்கப்படுகிறது. சில தவிர்க்க முடியாத காரணங்களினால், ஒருசில கடைகளுக்கு பொருட்கள் முழுவதும் போய்ச் சேராமல் மீதம் இருக்கும் நேர்வில், உரிய முன் அனுமதி பெற்று கால நீட்டிப்புச் செய்து, நகர்வு செய்யப்படுகிறது.

கண்காணிப்புப் பணிகள்

61. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கண்காணிப்புப் பணியில் தகவல் தொழில்நுட்ப நுணுக்கங்களைப் புகுத்தியுள்ளது.

(அ) கிடங்குப் பணிகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னையிலுள்ள நியாய விலைக் கடைகளில் பட்டியலிடும் இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்பட்டு அவற்றின் செயல்பாடு இணையதளம்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

(இ) கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மண்டலங்களில் இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து, கழகக் கிடங்குகளுக்கும் மற்றும் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கும் அரிசி நகர்வு செய்யப்படுவது ஜி.பி.எஸ். திட்டத்தின்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

(ஈ) தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, காவிரிப் படுகை மாவட்டங்களில் தீவிரக் கொள்முதல் பருவத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் புகார்களைப் பதிவு செய்து களப் பணிகள் கணினிமூலம் கண்காணிக்கப்படுகிறது.

(உ) நியாய விலைக் கடைகளில் உள்ள பொருட்களின் இருப்பு விவரங்களைக் குறுஞ்செய்தி மூலமாக இணையதளத்தில் பெற்று நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு கண்காணிக்கப்படுகிறது.

[2012 ஏப்ரல் 23

நிதி ஆதாரம்

62. இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.*70* கோடி மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.*52.66* கோடியாகும். *1972-1973*-ல் ரூ.*12* கோடியாக இருந்த மொத்த வணிகம் *2010-2011*-ல் ரூ.*8,220.67* கோடியாக உயர்ந்தது.

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கவும், நெல் கொள்முதல் செய்யவும் ரூ.*4,900* கோடி தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

இயல்–5

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

63. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் வேளாண் உற்பத்தி (மேம்பாட்டு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம் *1956*-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. அதன் பிறகு இச்சட்டத்திற்குப் பதிலாக *1962* ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம் இயற்றப்பட்டது. விஞ்ஞான முறைப்படி விவசாய விளைபொருட்கள், விதை மற்றும் உரங்களைப் பாதுகாப்பது இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடாகும்.

செயல்பாடுகள்

64. இந்நிறுவனம் சந்தை ஆய்வுகளை (Market Survey) மேற்கொண்டபின் நிலத்தை வாங்கி விஞ்ஞான ரீதியில் சேமிப்புக் கிடங்குகளை தேவையான இடங்களில் கட்டி வருகிறது. வைப்பீடுதாரர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் சேமித்து வைத்த பொருட்களை எடுப்பதற்காகவும், சரக்குகளை ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரத்துப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்நிறுவனம் அதன் சேமிப்புக் கிடங்குகளிலும், அரசு மற்றும் தனியார் கட்டடங்களிலும் பூச்சித் தடுப்புப் பணிகளையும், பூச்சிக்கொல்லி நடவடிக்கைகளையும் விரிவாக்கப் பணிமூலம் மேற்கொண்டு வருகிறது. விவசாயிகள் மற்றும் பயனீட்டாளர்களுக்கும், மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்குப் பற்றுச்சீட்டுகளை வழங்கி, வங்கிகளில் இருந்து கடன் வசதியைப் பெற ஏற்பாடு செய்து வருகிறது.

2012 ஏப்ரல் 23]

65. இந்நிறுவனத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் மேலாண்மைப் பணிகளை 10 இயக்குநர்களைக் கொண்ட இயக்குநர் குழுமம் மேற்கொண்டு வருகிறது. இதில் ஐவர் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும், ஐவர் தமிழ்நாடு அரசாலும் நியமிக்கப்படுகின்றனர். இந்நிறுவனத்தின் தலைவர் தமிழக அரசால் நியமிக்கப்படுகிறார்.

66. இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகள் தகுதி வாய்ந்த தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற சேமிப்புக் கிடங்கு மேலாளர்கள் மற்றும் இதர பணியாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. சேமிப்புக் கிடங்குப் பணிகளை மேற்பார்வையிட முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர்கள் காலமுறையில் நேரடியாக ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். மேலும் கிடங்குகளின் பணிகளைத் திறம்பட கண்காணிக்க ஏதுவாக, காலமுறையில் திடீர் ஆய்வுகள் மற்றும் வாலாயமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். அலுவலகத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மேலாண்மை இயக்குநர் மற்றும் தொழில்நுட்பப் பிரிவாலும் முறைப்படி ஆய்வு செய்யப்படுகிறது.

கிடங்கு கொள்ளளவு மற்றும் அதன் பயன்பாடு

67. தமிழ்நாட்டில் இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக உள்ள 57 சேமிப்புக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 6.41 இலட்சம் மெட்ரிக் டன். இந்நிறுவனத்தின் சேமிப்பு இடவசதியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கனிமம் மற்றும் உலோகங்கள் வர்த்தக் கழகம் மற்றும் தனியார் சரக்கு வைப்பாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிறுவனத்தின் சொந்த சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு 6.33 இலட்சம் மெட்ரிக் டன்களாகும். இதில் 0.08 மெட்ரிக் டன்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டவை ஆகும். மார்ச் திங்கள் வரை கிடங்குகளின் பயன்பாடு 92 விழுக்காடு ஆகும்.

[2012 ஏப்ரல் 23

புதிய மற்றும் கூடுதல் கிடங்குகள்

68. 2010-2011 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட விவரப்படி சேமிப்புக் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டன:

இடம்	கொள்ளளவு மெட்ரிக் டன்னில்
ஆத்தூர் சேமிப்புக் கிடங்கு	*3,400*
நாமக்கல் சேமிப்புக் கிடங்கு	*3,400*
பட்டுக்கோட்டை சேமிப்புக் கிடங்கு	*3,400*
மொத்தம் ..	*10,200*

69. 2012-2013 ஆம் ஆண்டில் இந்திய உணவுக் கழகத்தின் (FCI) தேவைக்காக தனியார் முதலீட்டுக் கிடங்குகள் (PEG) *2008* முறையில் *45,000* மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகள் சின்னசேலத்தில் *15,000* மெட்ரிக் டன்னும், காரைக்குடியில் *15,000* மெட்ரிக் டன்னும், அருப்புக்கோட்டை, கோவில்பட்டி மற்றும் மதுராந்தகம் ஆகிய இடங்களில் தலா *5,000* மெட்ரிக் டன் கொள்ளளவும் கொண்ட கிடங்குகள் கட்டப்பட உள்ளன.

கடன் வசதிகள்

70. 2011-2012 ஆம் ஆண்டில் ஏப்ரல்-*2011*-லிருந்து செப்டம்பர் *2011* வரை பல்வேறு சரக்கு வைப்பாளர்கள் *2,012* சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை அடமானம் வைத்துப் பல்வேறு வங்கிகள்மூலம் ரூ.*123.49* கோடி கடன் பெற்றுள்ளனர்.

பூச்சித் தடுப்புப் பிரிவு (Pest Control Division)

71. இந்நிறுவனப் பூச்சித் தடுப்புப் பணியினை தொடர்ந்து பயன்படுத்திவரும் பொதுத் துறை நிறுவனங்களில் தமிழ்நாடு மின்சார வாரியமும் ஒன்றாகும். மேலும் இந்நிறுவனம் உயர் நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரைக் கிளை, தலைமைச் செயலகம், அரசுத் துறை கட்டடங்கள், அரசினர் விடுதி, ஆதி திராவிடர் நல விடுதி மற்றும் அனைத்துக் கூட்டுறவு வங்கிகளில் பூச்சித் தடுப்புப் பணியினை செய்து வருகிறது. மேலும், மண்டல அலுவலகங்கள் அளவில் பூச்சி தடுப்புப் பணியை ஒப்பந்த

2012 ஏப்ரல் 23]

அடிப்படையில் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள மகாத்மா காந்தி மருத்துவ விஞ்ஞான நிறுவனம், திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் மேற்கொண்டுள்ளது. இப்பணியின் அவசியத்தைக் கருதி, உபயோகிப்போர் எண்ணிக்கை நாளுக்குநாள் கணிசமான அளவு கூடிக்கொண்டு வருகிறது.

மூலதனம் மற்றும் நிதி நிலைமை

72. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.800 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் (Paid-up Share Capital) ரூ.761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் 50:50 என்ற விகிதத்தில் பங்குதாரர்களாக உள்ளனர்.

73. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின்படி, இந்நிறுவனத்தின் வருமானம் ரூ.3614.56 இலட்சமாகும். அதற்கு முந்தைய ஆண்டான 2009-2010-ல் வருமானம் ரூ.3269.51 இலட்சமாக இருந்தது. இந்த நிறுவனம் ஆரம்பித்த நாளிலிருந்து வரிக்கு முந்தைய அதிகபட்ச இலாபமாக (Profit before tax) ரூ.517.10 இலட்சத்தை 2010-2011 ஆம் நிதியாண்டில் ஈட்டியுள்ளது. பங்குதாரர்களுக்கு 2010-2011 ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகையாக (Dividend @ 10.5%) அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இயல்–6

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

நுகர்வோர் குறைதீர் ஆணையம்

74. 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளில் கீழ்க்கண்ட நீதிமுறைச் சார்புடைய குறைதீர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:—

1 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

2 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும்

3 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

[2012 ஏப்ரல் 23

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

75. இவ்வாணையம் அனைத்து மாநிலங்களிலுமுள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களுக்கும் மேல் முறையீட்டு ஆணையமாக புது தில்லியில் செயல்படுகிறது. இவ்வாணையத்தில், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் மதிப்புள்ள நிவாரணங்களுக்கு நுகர்வோர் நேரடியாக வழக்குத் தொடரலாம். அனைத்து மாநில ஆணையங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் மற்றும் மாநில ஆணையங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரம் கொண்டது தேசிய ஆணையமாகும்.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

76. இவ்வாணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. ரூபாய் இருபது இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடி வரை நிவாரணம் வேண்டும் நுகர்வோர் இவ்வாணையத்தில் முறையிடலாம். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகவும் மற்றும் நான்கு உறுப்பினர்களையும் கொண்ட நீதிசார் அமைப்பாகும். அதில் பெண் உறுப்பினர் ஒருவர் அவசியமாகும். தமிழ்நாட்டில் உள்ள முப்பது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் முடிவுற்ற வழக்குகளின் மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மற்றும் மாவட்ட மன்றங்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யும் அதிகாரமும் படைத்ததாகும். மாநில ஆணைய நிருவாகத்தைக் கவனிக்கத் துறைத் தலைவராக செயல்பட பதிவாளர் உள்ளார். மாநில ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மார்ச், 2012 வரை 23,599 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 21,675 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவீதம் 91.84% ஆகும்.

2012 ஏப்ரல் 23]

ஜனவரி 2011 முதல் மார்ச் 2012 வரையிலான காலத்திற்குரிய மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவு செயப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம்:—

	மேல்முறையீட்டு மனுக்கள்					நுகர்வோர் வழக்குகள்				
மாதங்கள்	மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்	இம்மாதத்தில் பதிவான வழக்குகள்	மொத்தம்	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள்	மாதத்தின் துவக்கத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள்	இம்மாதத்தில் பதிவான வழக்குகள்	மொத்தம்	முடிவு செய்யப்பட்ட வழக்குகள்	மாத இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள்
ஜனவரி 2011	2225	111	2336	110	2226	390	.	390	5	385
பிப்ரவரி 2011	2226	101	2327	144	2183	385	6	391	5	386
மார்ச் 2011	2183	150	2333	196	2137	386	10	396	12	384
ஏப்ரல் 2011	2137	61	2198	164	2034	384	5	389	10	379
மே 2011	2034	115	2149	134	2015	379	3	382	4	379
ஜூன் 2011	2015	70	2085	234	1851	378	15	393	17	376
ஜூலை 2011	1851	113	1964	197	1767	376	5	381	15	366
ஆகஸ்டு 2011	1767	67	1834	177	1657	366	12	378	10	368
செப்டம்பர் 2011	1657	115	1772	128	1644	368	11	379	11	368
அக்டோபர் 2011	1644	59	1703	110	1593	368	2	370	17	353
நவம்பர் 2011	1593	81	1674	111	1563	353	16	369	7	362
டிசம்பர் 2011	1563	117	1680	107	1573	362	6	368	8	360
ஜனவரி 2012	1573	73	1646	156	1995	360	13	373	7	366
பிப்ரவரி 2012	1509	63	1572	140	1432	366	9	375	10	365
மார்ச் 2012	1432	64	1496	60	1436	365	6	371	5	366

[2012 ஏப்ரல் 23

77. நிலுவையில் உள்ள தென்மாவட்டத்தைச் சார்ந்த வழக்குகளை விரைந்து முடிக்கவும், மேலும் தென் மாவட்ட நுகர்வோர்கள் தங்கள் வழக்கிற்காகச் சென்னை வந்து செல்லும் செலவினம் மற்றும் கால விரயத்தினைத் தவிர்க்கும் பொருட்டும் மதுரையிலேயே தங்கள் வழக்குகளை நடத்தி முடித்திட, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சுற்றுக் இளை (Circuit Bench) மதுரையில் அரசால் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்

78. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986-ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் ஏற்படுத்த வேண்டும். மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் முப்பது மாவட்டங்களில் செயல்படுகின்றன. இவற்றில் தனது எல்லைக்குட்பட்ட நுகர்வோர் ரூபாய் இருபது இலட்சம் வரையிலான மதிப்புள்ள நிவாரணங்களுக்கு வழக்குகள் தொடரலாம். இம்மாவட்டத்தின் தலைவர், ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதியாவார். இதில் ஆண் மற்றும் ஒரு பெண் ஆக இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர். மாவட்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து மார்ச் 2012 வரை 1,00,353 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் 95,441 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் சதவிதம் 94.93% ஆகும்.

79. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம், சென்னை (தெற்கு), சென்னை (வடக்கு), கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசால் ரூ.1,96,79,047/- முதல் தவணையாகவும் மற்றும் மாநில அரசால் ரூ.62,55,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2012 ஏப்ரல் 23]

இயல்–7

2012–2013 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களின் விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்	திட்டத்தின் பெயர்	மொத்த செலவு	2012-2013-ல் செலவு
I	**உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**		
(அ)	உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, உதவி ஆணையாளர் அலுவலகம்-சேப்பாக்கம் மண்டல அலுவலகத்திற்குப் புதியதாக சொந்தக் கட்டடம் கட்டுதல்.	85.31	85.31
(ஆ)	உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, உதவி ஆணையாளர் அலுவலகம்-பெரம்பூர் மண்டல அலுவலகத்திற்குப் புதியதாகச் சொந்தக் கட்டடம் கட்டுதல்.	98.00	98.00
II	**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்**		
	மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாநில ஆணையத்தின் சுற்றுக் கிளை, மதுரை மற்றும் அனைத்து மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்குப் புதிய கணிப்பொறிகள் மற்றும் தளவாடச் சாமான்கள் வழங்குதல்	9.00	9.00

[2012 ஏப்ரல் 23

III தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

(அ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டத்தில், 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் புதிய செயல்முறை கிடங்கு கட்டுதல்.	10.00	10.00
(ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் புதிய செயல்முறை கிடங்கு கட்டுதல்.	10.00	10.00

IV குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகத்திற்குக் கணினி வாங்குதல்.	21.76	21.76
மொத்தம்	234.07	234.07

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் ஆணையின்படி, தமிழக மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. அத்தியாவசியப் பண்டங்களைக் கடத்துவோர்மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை எடுத்தும், நவீன தகவல் தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டு நுகர்வோர் மனநிறைவு அடையத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதுடன், ஏழை எளிய மக்கள் விலையேற்றத்தினால் துயருறா வண்ணம் காக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை எடுத்து வருகிறது.

2012 ஏப்ரல் 23]

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் செயலாக்கம்
(தடுப்புக்காவல் கட்டத்தின்கீழ் கைது நடவடிக்கை)
68
59
135
116
113
45
193
2006
2007
2008
2009
2010
2011-12
31.03.2012

[2012 ஏப்ரல் 23


ஈரல் கொள்முதல்
கொள்முதல் (முதல்)
(இரண்டாம் கொள்முதல்)
1430
1100
1050
1050
825
650
600
590
580
580
26.00
23.10
18.63
17.92
14.49
16.07
13.81
9.72
3.09
1.59
125
(தற்காலிக விலை)
2011-2012 2004-2005 2005-2006 2006-2007 2007-2008 2008-2009 2009-2010 2010-2011
03 04 05 06 07 08 09 10 11 12

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS